வைரவிழா மலர்

சிவானந்தயுகம்

பழைய மாணவர் சங்கம்

சிவாநந்தா தேசிய பாடசாலை

கல்லடி – உப்போடை, மட்டக்களப்பு

2018

வைரவிழா மலர்
சிவாநந்தயுகம்

பிரதம பதிப்பாசிரியர்

கலாநிதி துரையப்பா பிரதீபன்

பதிப்பாசிரியர்கள்

முருகேசு முருகவேள், காசுபதி நடராஜா

வெளியீடு

பழைய மாணவர் சங்கம்

சிவாநந்த வித்தியாலயம் (தேசியபாடசாலை)

கல்லடி – உப்போடை, மட்டக்களப்பு

2018

நூற்தரவு

நூல் : சிவாநந்தயுகம்

வகை : வைரவிழா மலர்

பிரதம பதிப்பாசிரியர் : கலாநிதி து. பிரதீபன்

பதிப்பாசிரியர்கள் : மு. முருகவேள், காசுபதி நடராஜா

பதிப்பு : 2018

பதிப்புரிமை : சிவாநந்தா பழைய மாணவர் சங்கம்

வெளியீடு : சிவாநந்தா பழைய மாணவர் சங்கம்

பக்கங்கள் : 186

வடிவமைப்பு : த.சங்கர்

அச்சுப்பதிப்பு : வணசிங்கா அச்சகம், மட்டக்களப்பு,
தொ.பே. 065 2227170

Bibliography

Book Name : Shivananthayugam

Category : Diamond Jubilee Publication

Editor in - chief : Dr. T. Pratheepan

Editors : M. Murugaverl, Kasupathi Nadarajah

Year of Publication : 2018

Copy Rights : Shivananda Past Pupils' Association

Publisher : Shivananda Past Pupils' Association

Pages : 186

Book Design : T.Shankar

Printers : Wanasinghe Printers, Batticaloa

ISBN : 978-955-1824-47-1

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாசிரியர்களின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்புச் செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமர்சனம் மற்றும் உசாத்துணை மூலப் பயன்பாடுகளுக்கு இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள்காட்ட அனுமதிக்கப்படுகிறது.

OUR FOUNDER SWAMI VIPULANANDAR

OUR BENEFACTORS

Mr. Kanthapperumal Kathirkamathamby Odayar

Mr. Kumaravel Sabapathipillai Odayar

Mr. Kathirkamathamby Odayar Velupillai



ஈசன் உவக்கும்
இம்மலர்கள்

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளலடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது

காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர் மலர்த் தொடையோ
மாப்பிளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பிய கைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது

பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிலில்லாக் கற்பகமோ
வாட்டமுறாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ
பாட்டளிசேர் கொன்றையல்ல பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது

- சுவாமி விபுலாநந்தர்

பாடசாலைக் கீதம்

ஆனந்தமான சிவாநந்தசாலை
அன்புடன் வாழ்த்தி வணங்குதுமே

தானமறங்கலை ஞானமுயர்க
சாதனவாழ்வு தலைநிமிர்க

மானமுயர்ந்து நம் மாணவர்கள் தாம்
வானமுயர்ந்து புகழ் பெறுக

இராமகிருஷ்ண மணிமொழி வழியே
சகல மதம் புகல் ஒன்றினையே

பராவி வளரும் நம் பல்கலை நிலையே
பாரினில் ஓங்கிட வாழியவே.

வாழ்க! வாழ்க! பாரினில் ஓங்கிட வாழியவே

பண்டிதர் வீ.சி.கந்தையா

School Prayer

Where the mind is without fear and the head is held high

Where knowledge is free

Where the world has not been broken up into fragments

By narrow domestic walls

Where words come out from the depth of truth

Where tireless striving stretches its arms towards perfection

Where the clear stream of reason has not lost its way

Into the dreary desert sand of dead habit

Where the mind is led forward by thee

Into ever-widening thought and action

Into that heaven of freedom, my Father,

let my country awake

Rabindranath Tagore

(Gitanjali)



பாடசாலைப் பிரார்த்தனை

எங்கு மனம் அச்சமற்றிருக்கின்றதோ
எங்கு தலை நிமிர்ந்தேயுள்ளதோ
எங்கு அறிவுக்குத் தடையில்லையோ
எங்கு குறுகிய சுவர்களால் உலகம்
துண்டாடப் படவில்லையோ
எங்கு சத்தியத்தின் ஆழத்திலிருந்து
சொற்கள் ஊற்றெடுக்கின்றனவோ
எங்கு சலியாத முயற்சி செம்மையை நோக்கித்
தன்கைகளை நீட்டுகின்றதோ
எங்கு பகுத்தறிவு என்னும் தெளிந்த நீரோடை
உயிரற்ற பாரம்பரியம் என்ற பாடலை மணலுள்
வழிதவறிப் போகவில்லையோ
எஞ்ஞான்றும் விரிந்து செல்லும்
சிந்தனையையும் செயலையும் நோக்கி
எங்கு மனம் உன்னால் வழிநடத்தப்படுகின்றதோ
அந்த விடுதலைச் சுவர்க்கத்தினுள்
என் ஆண்டவனே!
என் நாடு விழிப்படைவதாக!

இரவீந்திரநாத்தாகூர்

சங்கத்தின் தூரநோக்கு

உயர்தரங்கொண்ட விழுமியக் கல்விக்கூடாக
சிறந்த பண்புடைய நற்பிரஜைகளை உருவாக்குதல்.

பணிக்கூற்று

சகல சிவாநந்தியர்களும் ஒன்றிணைந்து, வலுவடைந்து உத்வேகம் மிக்க வலையமைப்பினூடாக, பாடசாலையினை இராமகிருஷ்ண மிஷனின் விழுமியத்தையும் பாரம்பரியத்தையும் அடிப்படையாகக் கொண்ட, ஒரு முழுமையான கல்வியினை வழங்கும் உயர்திறன்மிக்க கல்வி மையமாக அபிவிருத்தி செய்யும் படிமுறையில் பங்குபற்றல்.

நோக்கங்கள்

» இராமகிருஷ்ண மிஷன் பாரம்பரியத்தில் தோற்றம் பெற்ற, எமது பாடசாலையின் நற்பெயரும், உயரிய பண்பாடும் தொடர்ச்சியாகப் பேணப்படுவதினை உறுதிசெய்வதோடு அதற்கான நடவடிக்கைகளில் பங்கேற்றல்.

» பாடசாலை நிர்வாகத்தோடு ஆரோக்கியமான, சிறந்த உறவினை வளர்ப்பதன் மூலம் பாடசாலைக்கும் அதன் பழைய மாணவர்கட்குமிடையே நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய நெருக்கமான தொடர்பையும், உறவையும் வளர்த்தல்.

» பாடசாலை விவகாரங்கள் மற்றும் நலன்புரிச் செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்கான ஆர்வத்தினையும் விருப்பத்தினையும் சங்கத்தின் அங்கத்தவர்களிற்கிடையில் வளர்த்தல்.

» பாடசாலை வளர்ச்சித் திட்டங்களில் அதியுன்னத மேம்பாட்டை கல்வி அபிவிருத்தியில் வெளிப்படுத்து வதற்கான செயற்திறனானதும் வினைத்திறனானதுமான திட்டங்களை முன்மொழிவதோடு அவற்றை நடைமுறைப்படுத்துவதில் பங்குபற்றல்.

» பாடசாலையால் முன்னெடுக்கப்படும் கல்வி, ஒழுக்கம், விளையாட்டு, கலை கலாசாரம், பௌதீகவளம், தகவல் தொடர்பாடல் மற்றும் தொழிநுட்பம் சார்பான மேம்பாட்டுத் திட்டங் களிற்குப் பாடசாலை நிர்வாகத்துடன் ஒன்றிணைந்து சங்கத்தாலான சேவைகளை வழங்கி அந் நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்றல்.

» சங்க உறுப்பினர்களின் சுகதுக்க மற்றும் நலன்புரி விடயங்களில் பங்குதாரர்களாதல்.

» பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்தவர்களுக்குத் தொழில்வழிகாட்டல் மற்றும் பொருத்தமான உயர்கல்வி நெறியை தெரிவு செய்தல் விடயங்களில் ஆலோசனை வழங்கி உதவிசெய்தல்.

உள்ளே...

11-14	ஆசிச் செய்திகள்
15-17	சங்கத் தலைவரின் வைர வரிகள்
18-25	வாழ்த்துச் செய்திகள்
26	சங்கச் செயலாளரின் சிந்தனையூற்று
27	Message from the President –PSA- UK
28	கனடா சங்கத் தலைவரின் சிந்தனை
29-30	பிரதம பதிப்பாசிரியரின் சிந்தனை.....
31	நிர்வாக சபை குழு புகைப்படம்
32-33	பழைய மாணவர் சங்கத் தோற்றம்
34-36	சங்க மீள்கட்டமைப்பு
38-42	அறுபது அகவை நிகழ்வுகள்
43-47	சிவாநந்தாவின் ஸ்டீபன் ஹோக்கிங் நேர்காணல் து.பிரதீபன்.....
48-52	மீளும் நினைவுகளினூடாக... வே. விவேகானந்தராஜா
53	வைரவிழா காண்போம் கே.எஸ்.பவன்
54	A Man of charisma A.L.Ibralebbe
55-61	ஈழத்துச் சாந்தி நிகேதம் வி. ரி. சகாதேவராஜா
62-63	Origin of Cricket in Shivananda S.Sivalingkam
64-68	சிவாநந்தாவில் எனது அனுபவங்கள் பா.இளையதம்பி
69-70	தகவலுக்கான உரிமை - பொது
71-72	A Personality with great sense ..... A.L.Ibralebe
73-81	ஒரு காலத் தேவையின்..... நேர்காணல் து. பிரதீபன்
82-83	விபுலாநந்தர் பிறந்தார் மு.கணபதிப்பிள்ளை
84-85	பெருமைக்குரிய சிவாநந்தா மா.செல்வராஜா
86-87	My life at Shivananda K.Kandasamy
88-92	கட்டார் தேசத்தைக் களமாக்கி..... சீ.கந்தசாமி
93	பாடசாலையில் பற்றும்..... க.தியாகராஜா
94-96	உள்ளகத்துணர்வாயுள்ள..... இ.தேவதாஸ்
97-98	விடுதியின் முதுகெலும்பு திரு.செ.பிறேமானந்தன்
99	தன்னலமற்ற சேவை பொ.ஆனந்தராஜா
100	அறிவின் சிகரம் சிவாநந்தா முத்துமாதவன்
101-106	ஆழுமைகளை வளர்த்துவிட்ட..... செ.இராமச்சந்திரன்
107	பாடசாலையின் உயர்வுக்கு..... க.குருநாதன்
108-114	சர்வமதக் கோட்பாட்டின்..... மஹ்றூப் ஹரீம்
115	Proud to be a Shivanandian
116	வைரப்பூவே வாசம் வீசக க.முரளிதரன்
117-118	Lest we forget S.Ambalavaner
119	சிறந்த பணிகளை ஆற்றும்... மா.செல்வராஜா
120-121	An Exemplary man of the soil Meerasahib
122-124	தகவல் அறியும் உரிமை
125-126	A great leader with clear vision A.L.Ibralebbe
127-129	பெண்களின் கல்வி..... திலகவதி ஹரிதாஸ்
130	பாடசாலை வளர்ச்சிக்கு.... வே.தவராஜா
131-136	ஆன்மீக அனுபூதி பெற்ற .... க.மதிவண்ணன்
137	Being a Shivanandian M.Thanikaichelvan
138-139	ஆன்மீக ஒளியூட்டும் ஆலயம் சோ.சிவலிங்கம்
140-143	ஆகுதலின் வழி திசேரா
144	உலகெலாம் புகழ்பரப்பும்.... தே.ரவீந்திரமூர்த்தி
145-147	மூலாதாரமாக ஆன்மீக வழிப்படுத்தல் வே.யோகிதாஸ்
148	பன்மொழித்திறன் சச்சிதானந்தம்
149-153	தமிழ்ப் பனுவல்களின் பாயிரங்களும்... கோ. குகன்
154	Dear Shivananda!.....
155	சிவாநந்தாவைச் சிகரம்..... கதிர்காமநாதன்
156-157	பல்துறைப் புலமையின்..... சோ.சிவலிங்கம்
158	சிவாநந்தாவின் விழுதுகள் கே.மனோராஜ்
159-160	தொழில் முயற்சியாண்மையின்.... எம். மங்களேஸ்வரன்
161	சிவாநந்தியனுக்கு எங்கு சென்றாலும்.... த. அனந்தரூபன்
162-164	Electronic Noses..... M.Thanihaichelvan
165-168	A Winning Formula.... Sinnathamby Vijayapala
169-173	கல்வி முகாமைத்துவம்..... சி.சிறீதரன்
174-179	மீண்டும் வசந்தம் நாவலூர் நம்பி
180----	புகைப்படங்களின் தொகுப்பு

இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவரின்

ஆசிச் செய்தி

பழைய மாணவர் இயக்கம் கல்வி நிறுவனங்களில் இன்றி அமையாத ஒரு அமைப்பாகும். பாடசாலையின் வளர்ச்சிக்குத் தேவையான வேலைகளை தொண்டாகச் செய்து அதனை பலப்படுத்துவது பழைய மாணவர் சங்கத்தின் பொறுப்புகளில் ஒன்று.

மட்டக்களப்பு சிவாநந்த வித்தியாலய பழைய மாணவர் சங்கம் அறுபது ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது மிகவும் பாராட்டப்பட வேண்டியது. ஒரு நிறுவனத்தை நடத்துவது என்பது சாதாரண வேலை அல்ல. பல்வேறு கருத்துக்களைக் கொண்ட உறுப்பினர்களை ஒன்று சேர்த்து, அவர்களுடைய ஒத்துழைப்பையும் பெற்று குறிக்கோளை நோக்கிச் செல்வது உண்மையிலேயே ஒரு சாதனைதான்.

பழைய மாணவர் இயக்கம் கல்வி நிறுவனங்களில் இன்றி அமையாத ஒரு அமைப்பாகும். பாடசாலையின் வளர்ச்சிக்குத் தேவையான வேலைகளை தொண்டாகச் செய்து அதனை பலப்படுத்துவது பழைய மாணவர் சங்கத்தின் பொறுப்புகளில் ஒன்று.

பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்குமிடையில் ஒரு தொடர்பாளராகச் செயற்படவேண்டியது இன்னுமொரு பொறுப்பு. மாணவர்களுடைய வளர்ச்சியில் பெற்றோருடைய பங்கு தேவையானது. அதை பழைய மாணவர்கள் நிறைவேற்றலாம்.

தற்போது கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டிய கடமையும் பழைய மாணவர்களுக்கு இருக்கிறது. இந்த மூன்று பொறுப்புக்களையும் பழைய மாணவர் சங்கம் செவ்வனே நிறைவேற்ற எனது வாழ்த்துக்கள்.

சுவாமி விபுலானந்தரால் தொடங்கப்பட்டு சுவாமி விஞ்ஞானானந்தரின் ஆசியைப் பெற்ற சிவாநந்த வித்தியாலய பழைய மாணவர் சங்கம் வைரவிழாக் கொண்டாடும் வேளையில் அவர்களது எல்லையற்ற ஆனந்தத்தில் நானும் பங்கேற்கிறேன். இந்த இயக்கம் மென்மேலும் வளர குருதேவர் அருள்பாலிப்பாராக.

இறை பணியில்

சுவாமி அக்ஷராத்மானந்த

தலைவர், இராமகிருஷ்ண மிஷன், இலங்கை

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது மேலாளரின்

ஆசிச் செய்தி

"உதவு சண்டையிடாதே, ஒன்றுபடுத்து அழிக்காதே,சமரசம் வேண்டும் வேறுபாடு வேண்டாம்" என்று முழங்கி மனித குல ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் வித்திட்டார் சுவாமி விவேகானந்தர்.

மட்/சிவானந்தா பழைய மாணவர் சங்கத்தின் அறுபதாவது ஆண்டு வைரவிழா மலருக்கு வாழ்துரை வழங்குவதில் மகிழ்ச்சி.

இராமகிருஷ்ண மிஷன் விழுமியங்களைத் தாங்கி அதன் சர்வமதக் கோட்பாடுகளுக்கமைய சுவாமி விபுலானந்தரின் உன்னத நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையில் படித்த பண்பாளர்களால் ஆக்கப்பட்ட பழைய மாணவர் சங்கம் இன்று 60வது ஆண்டைக் கடந்துள்ளது.

அன்புக்குரிய சிவானந்தியர்களே! இற்றைக்கு 125 ஆண்டுகளுக்கு முன்பு 1893 செப்ரெம்பர் 11இல் சிகாக்கோ சர்வ சமயப் பேரவையில் "உதவு சண்டையிடாதே, ஒன்றுபடுத்து அழிக்காதே,சமரசம் வேண்டும் வேறுபாடு வேண்டாம்" என்று முழங்கி மனித குல ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் வித்திட்டார் சுவாமி விவேகானந்தர். அவர்காட்டிய வழியைப் பின்பற்றி சிவானந்தா பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகள் தொடரவும், சுவாமி விவேகானந்தரின் வீர உரைகளை மக்களிடையே கொண்டு சேர்க்கவும் அனைவருக்கும் இறைவன் அருள்புரிய வேண்டுமெனத் தெய்வத் திருமூவரின் நல்லாசிகளை வேண்டிக் கொள்கின்றோம்

நன்றி.

என்றும் இறைப்பணியில்

சுவாமி தக்ஷஜானந்த

பொது மேலாளர்

இராமகிருஷ்ண மிஷன், மட்டக்களப்பு

மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயரின்

ஆசிச் செய்தி

ஆத்திகனைப் படைத்தவரும் நாத்திகனைப் பராமரிப்பவரும், எண்ணங்களைக் கொடுத்தவரும் வண்ணங்களை உண்டாக்கியவரும், மண்ணை உருவாக்கியவரும், விண்ணை அமைத்தவரும், உன்னைப் படைத்தவரும் வேறு யாருமல்ல ஒரே பரம் பொருள்தான்.

மீன் பாடும் தேனாடாம் மட்டுமா நகருக்கு பெருமை சேர்க்கும் காரணிகளுள் ஒன்றாக போற்றப்படுவது முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் சிவாநந்தா தேசிய பாடசாலையாகும். ஒருவருக்கு அழிவல்லாத சிறந்த செல்வமாகிய கல்விச் செல்வத்தை வழங்க ஏற்படுத்தப் பட்டவைதான் பாடசாலைகளும் கல்லூரிகளும் ஆகும். அந்த கல்விச் செல்வத்தை மாணவர்களுக்கு வழங்கும் ஆசிரியப் பெருமக்களை ஒரு படி உயர்வாகக் கருதி வணங்கியவர்கள் தமிழர்கள். அதனாலதான் "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்ற ஆன்றோர் வாக்கும் பழக்கத்தில் வந்தது.

சிவாநந்தா தேசிய பாடசாலையானது 1929ம் ஆண்டு தாபிக்கப்பட்டு தனது நூற்றாண்டு விழாவை கொண்டாட வீறு நடை போடுகின்றது. இக் கால கட்டத்தில் மாபெரும் வளர்ச்சி அடைந்திருக்கின்றது. பல துறை களிலும் தேர்ச்சி பெற்று இன்று சமூகத்தில் பாரிய பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கும் மேன்மை மிக்க பழைய மாணவர்களை சமூகத்திற்கு உவர்ந்தளித்துள்ளது. இத்தகைய உயரிய நோக்கம் கொண்ட பண்பாளர்கள் சிலரால் 1958இல் ஆரம்பிக்கப்பட்ட சிவாநந்தா பழைய மாணவர் சங்கம் தனது வைர விழாவைக் கொண்டாடும் இத்தருணத்திலே வெளியிடப்படும் வைர விழாச்சிறப்பிதழுக்கு ஆசியுரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆத்திகனைப் படைத்தவரும் நாத்திகனைப் பராமரிப்பவரும், எண்ணங்களைக் கொடுத்தவரும் வண்ணங்களை உண்டாக்கியவரும், மண்ணை உருவாக்கியவரும், விண்ணை அமைத்தவரும், உன்னைப் படைத்தவரும் வேறு யாருமல்ல ஒரே பரம் பொருள்தான். அத்தகைய இறைவன் படைத்த ஒவ்வொருவரிலும் ஆற்றல் உண்டு. திறமை உண்டு. அவர் தம் புதிய சிந்தனைகள், புதிய கருத்துக்கள் புதியதோர் உலகை உருவாக்க வழி வகுக்கும். அதன் பலனாக இருள் நிறைந்த மனங்கள் ஒளி பெறவும், இருள் சூழ்ந்த பிரதேசம் ஒளி மயமாக மாறிடவும் வழிவகுக்கும் என்பது எனது நம்பிக்கை. உலகில் உருவான பல புரட்சிகளில் மனித சமூதாயத்தின் தலையெழுத்தையே மாற்றி எழுதிய புரட்சி கல்விப்புரட்சி என்றால் அது மிகையாகாது.

இத்தகைய எண்ணங்களுடன் ஒன்றிணைந்து செயல்படும் சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தினரைப் பாராட்டுவதோடு அவர் தம் உயர்ந்த நோக்கும் ஒற்றுமையும் எதிர் காலத்தில் சிவாநந்தா வித்தியாலயத்திற்கும், பழைய மாணவர் சங்கத்திற்கும் சிறந்ததொரு விளைச்சலைத் தரும் என இறையாசீர் வேண்டி நிற்கின்றேன்.

பேரருட் தந்தை யோசப் பொன்னையா
மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர்

காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அறபுக் கல்லூரிச் செயலாளரின்

ஆசிச் செய்தி

பாடசாலைகள் எதிர்காலச் சந்ததியினரைப் போற்றத்தகு புனிதவான்களாகப் புடம்போட்டு எடுக்கின்றன. அவற்றில் கற்போர் வளமிக்க சமுதாயத்தை உருவாக்கும் நலன்மிக்க சேவையைச் செய்கின்றனர்.

"ஒரு கல்வி நிலையத்தை திறந்து வைப்பவர் ஒரு சிறைக் கூடத்தை மூடி வைக்கிறார்" என்பது அரேபியப் பழ மொழி. கல்வி நிலையங்கள் நாட்டுக்கு நற்பிரஜைகளைத் தருகின்றன. கல்வி நிறுவனங்கள் சிறைக் கூடங்களை நிறைக்கும் குற்றவாளிகளை இல்லாமற் செய்கின்றன. இந்த வகையில் கல்வி நிலையங்களின் பணி மிகவும் மகத்தானது.

பாடசாலைகள் எதிர்காலச் சந்ததியினரைப் போற்றத்தகு புனிதவான்களாகப் புடம்போட்டு எடுக்கின்றன. அவற்றில் கற்போர் வளமிக்க சமுதாயத்தை உருவாக்கும் நலன்மிக்க சேவையைச் செய்கின்றனர். கற்கும் மாணவர்கள் தமது வாழ்வை ஒளிமயமானதாக அமைக்கின்றனர். இவ்வாறான சிறப்பான ஒரு கல்விக் களஞ்சியமாக மட்டக்களப்பு கல்லடி-உப்போடை சிவானந்தா வித்தியாலயம் விளங்குகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் முதற்தரமான ஒரு பாடசாலையாக எல்லோராலும் இது கருதப்படுகின்றது.

இராமகிருஷ்ண மிஷன் என்னும் ஒரு சமய நிறுவனத்தின் அனுசரணையோடு செயற்படும் இவ்வித்தியாலயம் கல்வியுடன் சேர்த்து சமய விழுமியங்களையும் வழங்குவது முக்கியமான ஓர் அம்சமாகும். மாணவர்களை சமய நெறிமுறைகளுடாக வழிநடத்துவது இவ்வித்தியால யத்தின் பணியாக அமைகின்றது. தற்காலத்தைப் பொறுத்தவரை இது வரவேற்கத்தக்க ஒரு பணியாகும். ஏனெனில் தற்கால இளைஞர்கள் சமய நெறிமுறைகளிலிருந்து விலகிச் சென்று சமூகத்திற்கும் பெற்றாருக்கும் பெரும் தலையிடியாக இருக்கின்றனர் என்று எல்லோரும் மிகவும் கவலைப்படுகின்றனர்.

இந்த இழி நிலையிலிருந்து இளைஞர்களைப் பாதுகாப்பதற்கு கல்வியுடன் சேர்த்து சமய நெறிமுறைகளையும் போதிப்பது பாடசாலைகளின் அவசியப் பணியாகும் .

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அவர்களது உன்னத நோக்கில் இக்கல்லூரி உருவாக்கப்பட்டது என்ற வகையில் இது மேலும் சிறப்பு பெறுகிறது.

"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளலடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"

என்று சுவாமி விபுலானந்தர் அவர்கள் கூறுவது தூய உள்ளத்தையும் அதன் மூலம் பெறப்படும் தூய வாழ்கையையும் வலியுறுத்துவதாக அமைகின்றது.

இந்தக் கல்விக்கூடத்தில் பயின்று பல்வேறு துறைகளிலும் உயர்ந்து விளங்கும் பழைய மாணவர்கள் தமது சங்கத்தின் வைர விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதும் அதையொட்டி சிறப்புமலர் ஒன்றை வெளியிடுவதும் பாராட்டுக்குரியவையாகும். இந்தச் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வுறுகிறேன்.

எல்லா நலமும் எல்லார்க்கும் என்றென்றும் கிடைக்கட்டும்

அல்ஹாஜ் மௌலவி எம்.எச்.எம். புஹாரி (பலாஹி)
செயலாளர், ஜாமிஅதுல் பலாஹ் அரபுக்கல்லூரி, காத்தான்குடி

சிறந்த சிவாநந்தியன் தான் அடையப்போகும் பயனைப்பற்றி சற்றும் சிந்திக்காமல் அனைவரும் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு சேவை செய்பவன். அவன் அனைவரும் தெளிவுபெற ஒற்றுமையோடு இருக்கவேண்டும் என்பதற்காக மட்டுமே பகட்டில்லாமல் தெளிவாகவும் உண்மையாகவும் பேசுபவன்.

சங்கத் தலைவரின் வை வரிகள்

வாழ்க்கையில் எத்தனை உயர்ந்த நிலைக்குச் சென்றாலும், எவ்வளவு வளமான வாழ்க்கை அமைந்தாலும் கூட பாடசாலை நாட்களில் நாம் அடைந்த மகிழ்ச்சியும், மனதுக்கு பிடித்தமான அந்த சுதந்திரமும் கோடிகளைக் கொட்டிக் கொடுத்தாலும் நமக்குத் திரும்பக் கிடைக்காது. படிப்பிற்குப் பின் வேலை, திருமணம், பொறுப்புக்கள் என நம்மை பரபரப்புக்கள் ஆக்கிரமித்துக் கொள்ளும் போதும், பட்டாம் பூச்சிகளைப்போல் நண்பர்களுடன் சுற்றித்திரிந்த பசுமையான அந்த இளமை நாட்களும், அப்போது நம்மோடு இருந்த நட்புக்களும் அடிக்கடி நமக்குள்ளே வந்து போகும். மனதில் பாரமில்லாமல் சந்தோசமே சிறகுகளாக நண்பர்களுடன் வலம் வந்த நாட்கள் மீண்டும் வராதா என்ற ஏக்கம் நம்மில் பலருக்கும் இருக்கும். இதற்கும் மேலாக முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் ஆரம்பித்த பாடசாலையான எமது சிவாநந்த வித்தியாலயத்தின் பண்புகளும், விழுமியங்களும் கூடிய வாழ்க்கையும் அந்த வாழ்க்கையில் சந்தித்த உறவுகளும் என்றென்றும் மனதில் இருக்கும் நினைவுகளேயாகும்.

எங்கள் பாடசாலை எங்களுக்குள் விதைத்த சிவாநந்தியன் எனும் உணர்வு பல பரிமாணங்களைக் கொண்டது. யார் இந்த சிவாநந்தியன்? சிறந்த சிவாநந்தியன் என்பவன் தண்ணீரை போன்றவன். தண்ணீரைப்பற்றி சற்று சிந்தித்துப்பாருங்கள். தண்ணீர் திண்மம் திரவம் வாயு என மூன்று நிலைகளில் இருந்தாலும் அதன் அடிப்படை கூறில் மாறுவதில்லை. அதே போன்றுதான் சிவாநந்தியர்களும் சூழ்நிலைக்கேற்ப யுக்தியர்களாக இருந்தாலும் அடிப்படை பண்புகளில் மாறுவதில்லை. தண்ணீர் தெளிவானது எல்லாருக்கும் சமமானது. அதேபோல் சிறந்த சிவாநந்தியர்கள் எல்லா உயிரினங்களையும் பாரபட்சமின்றி கருத்துவேறுபாடில்லாமல் தூய்மையுடன் அணுகுபவர்கள்.

சிறந்த சிவாநந்தியன் தான் அடையப்போகும் பயனைப்பற்றி சற்றும் சிந்திக்காமல் அனைவரும் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு சேவை செய்பவன். அவன் அனைவரும் தெளிவுபெற ஒற்றுமையோடு இருக்கவேண்டும் என்பதற்காக மட்டுமே பகட்டில்லாமல் தெளிவாகவும் உண்மையாகவும் பேசுபவன். இவ்வாறாக ஒரு சிறந்த சிவாநந்தியன் நேர்மை, தெளிவு, உறுதி, அர்ப்பணிப்பு, துணிவு போன்ற சிறப்பியல்புகளை கொண்டிருப்பான். சிவாநந்தயர்களான நாங்கள் இந் நற்பண்புகள் கொண்ட ஒரு பிரஜையாக எமது சமூகத்திற்கும், நாட்டிற்கும், சர்வதேசத்திற்கும் ஒரு முன்னுதாரணமாக திகழ வேண்டும் என்பதே சிவாநந்த வித்தியாலத்தின் கனவாகும். பல சிவாநந்தியர்கள் சிவாநந்த வித்தியாலயத்தின் கனவை

நனவாக்கியுள்ளனர் என்பது நம் அனைவருக்கும் மகிழ்ச்சியையும் பெருமை யையும் கொடுக்கும் விடயமாகும். எங்கள் சிவாநந்த வித்தியாலயத்தில் சிறப் பியல்புகளையும் அனுபவங் களையும் கற்றவர்கள் அரசதுறையில் மிக உயர்ந்த பதவிகளை அலங் கரித் திருக் கிறார்கள். பலர் அலங்கரித்துக்கொண்டிருக்கின்றனர். மக்கள் பிரதிநிதிகளாகவும் இருந்தனர். இன்னும் இருக்கின்றனர். எனவே தான் இத்தனை மதிப்பான வாழ்க்கையை தந்த எங்கள் சிவாநந்த வித்தியாலயத்தை நினைவு கூறும் வகையில் முன்னாள் மாணவர்கள் 1958இல் பழைய மாணவர் சங்கம் ஒன்றை தொடங்கி கடந்த 60 ஆண்டுகளாக மிகவும் திறம்பட நடாத்தி வருகின்றனர்.

எங்கள் பழைய மாணவர் சங்க மானது சிவாநந்த வித்தியாலத்திற்கு பிரமாணிக் கமாக திகழ்ந்து கொண்டிருக்கும் சிவாநந்தி யர்களின் தலமைத்துவத்தின் கீழ் உயரிய பண் புகளையும், விழுமியங் களையும் கட்டுக்கோப்பு கலையாது முன்னெடுத்து வருகின்ற தென்றால் அது மிகையாகாது. இந்த பழைய மாணவர் சங்கமானது உலகம் பூராவும் வாழும் முன்னாள் மாணவர்கள் பலரை ஒன்று சேர்த்து, சங்கத்திற்கும், பாடசாலைக்கும் பலம் சேர்க்கும் வகையில் பணியாற்றி, இவ்வாண்டில் வைரவிழாக் காண்பது எங்கள் முன்னாள் மாணவர்கள் அனைவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியாகும். ஒரு சங்கம் தனது தனித்தன்மையை தக்கவைத்துக்கொள்ள முதலில் தாங்கள் யார் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். தொடக்கத்திலிருந்தே எமது சங்கம் நேர்மையான அணுகுமுறையை கடைபிடித்து ஒரு சிறந்த பாடசாலையையும், சமூகத்தையும் உருவாக்குவதில் பொருள் வடிவிலும், தார்மீக அடிப்படையிலும் பங்களிக்க முடியும் என்பதில் நம்பிக்கை கொண்டிருக்கின்றது. இந்த அணுகுமுறையில் கடந்த காலங்களில் எங்கள் சங்கத்திற்கு பல்வேறு சவால்கள் இருந்திருக்கின்றன. ஆனால் நாங்கள் எங்கள் சிறப்பம்சங்களைத் தக்க வைத்துக் கொள்வதில் வெற்றியடைந்துள்ளோம். தற்போதைய எங்கள் அணுகுமுறை அறத்தின் அடிப்படையிலானது என்பதால் தவறுகள் நடந்தாலும் அவற்றைத் திருத்திக் கொள்வதற்கு எப்போதும் வாய்ப்புக்கள் உண்டு. இதற்கு முக்கியம் தவறுகளை அடையாளம் காணுதலும், ஏற்றுக் கொள்ளுதலும் திருத்துவதற்கான அர்ப்பணிப்புடன் கூடிய செயல்திறன் மிக்க ஆளுமையுமே காரணமாகும்.

பொது வாழ்வின் தன்னலமற்ற அடிப்படைத் தன்மையில் ஆக்கபூர்வமாக சிந்திக்கும் திறனால் சட்டபூர்வ கடமைகள் மற்றும் பொறுப்புக்களை முழுமையாக புரிந்துணர்வதும் ஏற்றுக்கொள்ளலும் போன்ற முக்கிய தன்மைகளை பாதுகாப்பதுடன் வருங்கால தலைமுறையினருக்காக மேம்படுத்துவதும் அவசியம்.

இந்தச் சிவாநந்தியன் எனும் ஆளுமைகள் இச்சங்கத்தின் தூண்கள். எங்கள் சங்கத்தின் பரிணாமவளர்ச்சியில் முழுப்பங்காற்றிய இத்தூண்கள் இன்றும் என்றும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இத்தூண்களுடன் சேர்ந்து சிவாநந்த வித்தியாலயம் உருவாக்கிக் கொண்டிருக்கும் இளம் ஆளுமைகள் மிகவும் உத்வேகத்துடன் இச்சங்கத்திற்கு வலுச்சேர்த்துத் தொடர்ந்தும் சிவாநந்த வித் தியாலயத் தின் பண் புகளையும், விழுமியங்களையும் அடுத்த கட்டத்திற்கு நகர்த்திக்கொண்டிருக்கின்றனர். இது ஒரு காலத்தின் தேவையும், எமது சங்கத்தின் பரிணாமவளர்ச்சியின் ஒரு புதுயுகமும் ஆகும்.

இந்தச் சிவாநந்த யுகத்தின் புதிய யுகமாகப் பயணிக்கும் இவ்வேளையில், கடந்த காலங்களில் கற்றுக் கொண்ட பாடங்களிலிருந்து சில விடயங்களைப் நான் இங்கு பரிந்துரைக்க விளைகின்றேன். அதன்படி, காந்தியின் அறங்காவலர் எண்ணக்கருவை அடிப்படையாக கொண்டு எமது தூர நோக்கங்களை முன்னெடுக்கும் நடை முறையை பின்பற்ற வேண்டும். அறங்காவலர் தன்மை என்பது அடிப்படையில் பல்வேறு பாரம்பரியங்களிலிருந்து பெறப்பட்ட ஒரு கருத்தாக்கம் என்றபோதிலும் அது ஒரு புரட்சிகரமான கருத்தாக்கமாகும். நம்மைச் சுற்றியிருக்கும் உலகில் நாம் அனைவரும் அறங்காவலராக நடந்து கொள்வது என்பதுதான் அறங்காவலர் தன்மையின் முக்கியமான கொள்கை. பொது வாழ் வின் தன் னலமற்ற அடிப் படைத் தன் மையில் ஆக்கபூர்வமாக சிந்திக்கும் திறனால் சட்டபூர்வ கடமைகள் மற்றும் பொறுப்புக்களை முழுமையாக புரிந்துணர்வதும் ஏற் றுக் கொள் ளலும் போன்ற முக் கிய தன் மைகளை பாதுகாப் பதுடன் வருங் கால தலைமுறையினருக் காக மேம்படுத்துவதும் அவசியம். சமூகத்திற்கு உதவி செய்வது போலவே இயற்கையைப் பாதுகாப்பதிலும் முனைப்பு காட்டுவது மிகவும் முக்கியமானது. இவ் அடிப்படைக் கொள்கைகள் எமது சங்கத்தின் நிறுவன கலாசாரமாக மாற்றப்பட வேண்டும். சங்கத்தை விரிவடையச் செய்வதில் அக்கறை காட்டும்போது சங்கத்திற்கென பிரத்தியேக கலாசாரத்தையும் உருவாக்க வேண்டும். சரியான கலாசாரம் இல்லையெனும் பட்சத்தில் சங்கத்தை பெரிதாக வளர்க்க முடியாது. ஒருவேளை வளர்த்தாலும் பிரச்சினையில் சிக்க வேண்டும். சிக்கலில் இருக்கும் சங்கங்கள்

மீண்டு வரலாம் ஆனால் சரியான கலாசாரத்தை உருவாக்கி கடைப்பிடிக்கவில்லையெனில் காலாகாலத்துக்குமான சிறந்ததொரு சங்கமாக நிலைதிதிருக்க முடியாது.

நாம் நமது பலத்தைப் பார்க்கும் அதே வேளையில் நமது பலவீனத்தையும் அறிந்து நம்மை ஒரு சிறந்த சங்கமாக வலுப்படுத்த வேண்டும். ஒரு சங்கிலியின் உண்மையான பலம் அதன் அதிக பலவீனமான இணைப்பில்தான் இருக்கின்றது. அதன் மற்ற அனைத்து இடங்களும் எவ்வளவு உறுதியாக இருந்தாலும் அறுந்து போககூடிய இணைப்பின் பலத்தைப் பொறுத்தே அதன் பயன் அமையும். அதே போன்று எமது சங்கத்தின் பலமும் எமது முக்கிய பங்குதாரர்களுடன் நாம் வைத்திருக்கும் இணைப்பில்தான் தங்கியுள்ளது. நாம் பல்வேறு விடயங்களில் பலமாக இருந்தாலும் சிவாநந்த வித்தியாலயத்துடனும் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனுடனும் நாம் வைத்திருக்கும் உறவின் பலத்தினால்தான் எமது சங்கத்தின் உச்ச பயன்பாட்டை அடையமுடியும். ஆகவே நாம் எமது சிவாநந்த வித்தியாலயத்துடனும் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனுடனும் இருக்கும் உறவை வலுப்படுத்துவது மட்டுமல்லாது சிவாநந்த வித்தியாலயத்திற்கும் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனுக்கும இடையே உள்ள உறவையும் மேம்படுத்தி வலுவூட்டுதல் அவசியமானதும் எதிர்காலத்தில் எமது பாடசாலையின் ஒட்டுமொத்தமான அபிவிருத்திக்கு இன்றியமையாததுமாகும்.

இவற்றின் அடிப்படையில் எமது கொள்கைகளை விருத்தி செய்து சங்கத்தின் எதிர்கால திட்டங்களை வடிவமைத்து எமது பாடசாலையின் அபிவிருத்தியிலும் எமது சமூக மேம்பாட்டிலும் முக்கியமானதொரு பங்குதாரராக செயற்படுவதன் மூலம் மிகவும் வளமானதொரு எதிர்கால சமூதாயத்தை உருவாக்குவோம். இந்த அர்ப்பணிப்பை யதார்த்தமாக்க எங்கள் சிவாநந்தியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் "

(அதிகாரம்: இறைமாட்சி குறள் எண்:388)

ஒரு சங்கம் தனது தனித்தன்மையை தக்கவைத்துக்கொள்ள முதலில் தாங்கள் யார் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்

மு.முருகவேள்,
தலைவர்,
சிவாநந்தா பழைய மாணவர் சங்கம்

வலயக் கல்விப் பணிப்பாளரின்

வாழ்த்துச் செய்தி

சிறந்த மனிதர்களை உருவாக்கும் சிவாநந்தா

எனது வயதையொத்த சிவாநந்த வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வைரவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பழைய மாணவன் என்ற வகையில் மிகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகின்றேன். அத்துடன் இது இறைவன் திருவருள் எனவும் மனம் நெகிழ்கின்றேன்.

சிவாநந்த வித்தியாலய பழைய மாணவர்கள் உலகம் பூராகவும் பரந்து பேரும் புகழுடனும் வாழ்கின்றனர். இலங்கையில்கூட சிறந்த மனிதர்களாகவும் உயர் நிலைப் பதவிகளை வகித்துக்கொண்டும் பாடசாலைக்குப் புகழ் சேர்க்கின்றனரென்றால் இது குருதேவரின் அருள் அன்றி எதுவும் இருக்க முடியாது.சுவாமி விபுலானந்தர் தனது குருவின் பெயரை தான் ஆரம்பித்த பாடசாலைக்குச் சூட்டி மகிழ்ந்தார். இன்று சிவாநந்தா மாணவர்கள் சுவாமி விபுலானந்தரின் பெருமையையும் சேவையையும் உலகெங்கும் பறைசாற்றிக்கொண்டிருக்கின்றனர்.

பாடசாலையின் பெயரைக் கூறி தங்களது பெயரை வெளிப்படுத்தும் சங்கமாக இல்லாமல் பழைய மாணவர்களின் பெருமையினால் பாடசாலை புகழ் அடைகின்றது என்பதை நினைத்துப் பூரிப்படைகின்றேன்.

1970 ஆண்டு காலப்பகுதியில் மாணவர் சங்க பொதுக் கூட்டம் பிற்பகல் வேளையில் ஆரம்பித்து இரவு உணவுடன் நிறைவடையும். இந் நிகழ்வில் கலந்துகொள் வோருக்கு உணவு பரிமாறும் சிறுவனாக அப்போதைய விடுதி மேற்பார்வையாளர் திரு. சீனித்தம்பி (Brother) அவர்களினால் அழைத்துக்கொண்டு சென்றபோது ஏற்பட்ட அனுபவங்கள் மறக்கமுடியா நினைவுகளாக தற்போதும் வருகின்றன. சாதாரணமாக 20 தொடக்கம் 25 பேர் கூட்டத்தில் கலந்து கொள்வர். கூட்டம் சுவாரசியமாவும் கலகலப்பாகவும் நடைபெறும். கூட்டத்திற்கு திரு.க.தியாகராசா அப்போதைய அதிபர் தலைமை தாங்குவார். சுவாமி ஜீவனானந்த ஜு மகராஜ் அவர்கள் ஆசியுரை வழங்குவார்கள். கூட்டத்தில் தமிழ் முஸ்லிம் சகோதரர்கள் பாகுபாடின்றிக் கலந்து கொள்வார்கள்.

1958இல் ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்படும் பழைய மாணவர் சங்கம் மெதுவாகவும் உறுதியாகவும் வளர்ச்சியடைந்து 1985ம் ஆண்டு அப்போதைய அதிபரும் தற்போதைய பேராசிரியருமாகிய மா.செல்வராசா அவர்களின் தலைமையில் கூடியபோது ஏறக்குறைய 500 பழைய மாணவர்கள் ஒன்று கூடி ஒரு வரலாற்றைப் பதிவுசெய்திருந்தமையும் இங்கு நினைவுகூரத்தக்கது.

பின்னர் முன்னைநாள் அரச அதிபர் திரு.செ.புண்ணியமூர்த்தி அவர்கள் தலைமையில் பழைய மாணவர்கள் சங்கம் நீண்ட காலம் இயங்கியது. பின்னர் காணி ஆணையாளர் திரு.மு.மு.ஏ.குருநாதன் தலைமையிலும் பிரதேச செயலாளர் திரு. வீ.தவராசா அவர்களின் தலைமையிலும் இயங்கி பின்னர் பொது வைத்திய நிபுணர் தெ.சுந்தரேசன் அவர்களின் தலைமையில் பெருமையுடன் சேவையாற்றியது. தற்போது, இலங்கையிலுள்ள பிரித்தானியப் பேரவைத் திட்ட முகாமையாளராகப் பணியாற்றுகின்ற திரு. மு.முருகவேள் தலைமையில் சிறந்த முறையில் இயங்கிக்கொண்டிருக்கிறது. அறுவதாவது அகவையில் பயணிக்கும் சங்கத்தின் செயற்பாடுகள் மேலும் வளரட்டும். பாடசாலையின் பெயரைக் கூறி தங்களது பெயரை வெளிப்படுத்தும் சங்கமாக இல்லாமல் பழைய மாணவர்களின் பெருமையினால் பாடசாலை புகழ் அடைகின்றது என்பதை நினைத்துப் பூரிப்படைகின்றேன். இச் சங்கமானது பாடசாலைக்கு மட்டுமல்ல சமூகத்துக்கும் சேவையாற்றும் ஒரு சங்கமாக மிளிரவேண்டும் என வாழ்த்தி குருதேவரின் அருள் வேண்டி நிறைவு செய்கின்றேன்.

க. பாஸ்கரன்

வலய கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், மட்டக்களப்பு

பாடசாலை அதிபரின்

வாழ்த்துச் செய்தி

பல்துறை ஆற்றல் படைத்த சிவாநந்தியர்கள்

பார்போற்றும் புகழ் பூத்த கிழக்கின் அறிவொளி வீசும் கலைக்கூடமாம் கல்லடி சிவாநந்த வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம் தனது 60வது அகவை நிறைவை கொண்டாடும் முகமாக வெளியிடும் வைரவிழா மலரிற்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் அகமகிழ்வடைகின்றேன்.

சிவாநந்த தேசிய பாடசாலையானது இராமகிருஷ்ண மிஷனின் விழுமியங்களைப் பின்பற்றி முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரால் 1929 அன்று ஸ்தாபிக்கப்பட்டது. இவ் வித்தியாலயத்தில் கல்வி கற்ற மாணவர்கள் கல்வித்துறையில் மட்டுமன்றி ஏனைய துறைகளிலும் பிரகாசமாக மிளிர்கின்ற பல்துறை ஆற்றல் படைத்தவர்களாவர்.

இம் மாணவர்களினால் உருவாக்கப்பட்ட பழைய மாணவர் சங்கம் இவ்வாண்டு தனது 60வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதை முன்னிட்டு வெளிவரும் இவ் வைரவிழா மலரானது பல்வேறு ஆக்கங்களை தன்னகத்தே கொண்டமைந்துள்ளது.

பழைய மாணவர் சங்கமானது எமது சிவாநந்த வித்தியாலய வளர்ச்சியில் தோளோடு தோள் நின்று எமக்கு பல்வேறு வழிகளிலும் உதவுகின்ற பாடசாலை வளர்ச்சியே முதன்மையானது என்னும் நோக்கினைக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

நான் பாடசாலைக்கு அதிபராக கடமையேற்று ஒருவருடம் கூட நிறைவடைய வில்லை. ஆனாலும் குறுகிய காலத்திற்குள் அவர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் சேவைகள் உண்மையில் பாராட்டப்படவேண்டியவை. இத்தகு அர்ப்பணிப்புள்ள பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவு மற்றும் அனுசரணையோடு கடமையாற்றக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தினை ஒரு பாக்கியமாகக் கருதுகிறேன். இத்தகைய செயற்பாடுகள் எதிர்வரும் காலங்களிலும் இப்பாடசாலை வளர்ச்சியில் தொடர்ந்து இருக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்வதுடன் இவர்களின் 60வது ஆண்டு நிறைவு விழா சிறப்பாக அமைய வேண்டும் என வாழ்த்து தெரிவிக்கின்றேன்.

அர்ப்பணிப்புள்ள பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவு மற்றும் அனுசரணையோடு கடமையாற்றக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தினை ஒரு பாக்கியமாகக் கருதுகிறேன்.

திரு.த.யோதரன்
அதிபர், மட்/சிவாநந்த வித்தியாலயம்,
(தேசிய பாடசாலை),
கல்லடி உப்போடை,
மட்டக்களப்பு.

ஆலோசகர் வைத்திய கலாநிதி வே. விவேகானந்தராஜா அவர்களின்

வாழ்த்துச் செய்தி

உயர் சிந்தனைக்கு வழி செய்கிறது

வைரவிழாக் காணும் பழைய மாணவர் மன்றம் அதன் உருவாக்கத்திற்குக் காரணமான சிவாநந்தா, அதனை உருவாக்கிய சுவாமி விபுலானந்தர், கல்வி போதித்த ஆசான்கள் என்று ஒரு கல்வி அபிவிருத்தி வரலாற்றுப் பட்டியல் உள்ளது. இதில் பழைய மாணவர்கள் உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் பல்வேறு பதவிகளையும் சிறப்புக்களையும் பெற்றுச் சிறந்த பண்பாளர்களாக வாழ்ந்து வருவதைப் பார்கின்றோம்.

இம் மன்றம் கடந்த 60 ஆண்டு காலத்தில் செய்த பணிகள் மற்றும் அதற்கு உதவி புரிந்தவர்கள் வரிசையில் கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக நானும் இணைந்து செயற்பட்டு வருவதை உண்மையில் பெரும்பேறாகவே பார்க்கின்றேன். ஏற்றங்களும், தளர்வுகளும் கடந்து ராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளாலும் அரசினாலும் மற்றும் நலன் விரும்பிகளாலும் முன்னெடுக்கப்படும் பாடசாலைத் திட்டங்களில் வித்தியாலய அபிவிருத்திச் சங்கம், அதிபர், ஆசிரியர்கள், பொது மக்கள், நிறுவனங்கள் முதலான அனைவரையும் ஒரு சந்தியில் இணைய வைத்து குறிப்பிடத்தக்க பங்கினை நல்கிவரும் இப் பழைய மாணவர் மன்றத்தின் செயற்பாடுகளை நான் நன்கு அறிவேன் .

ஆளுமையுடன் செயற்பட்ட என் மூத்த பழைய மாணவத் தோழர்கள் பலர் அமரத்துவம் பெற்றுவிட்டனர். ஆயினும் இன்றைய இளம் தலைமுறையினர் முன்னெடுக்கும் முயற்சிகளையும் அவர்களின் திறமை மற்றும் செயற்பாடுகளையும் நான் அறிவேன். சமகாலத் தேவைகளைக் கருத்தில் ஏற்றுச் செயற்படும் இளம் தலைமுறையினரின் அர்ப்பணிப்புள்ள முயற்சிகளைப் பாராட்டுகிறேன்.

இன்றைய இளம் தலைமுறையினர் முன்னெடுக்கும் முயற்சிகளையும் அவர்களின் திறமை மற்றும் செயற்பாடுகளையும் நான் அறிவேன். சமகாலத் தேவைகளைக் கருத்தில் ஏற்றுச் செயற்படும் இளம் தலைமுறையினரின் அர்ப்பணிப்புள்ள முயற்சிகளைப் பாராட்டுகிறேன்.

சிவாநந்த வித்தியாலய பழைய மாணவர் மன்றம் தனது 60ஆவது அகவை கடந்து விழாவெடுப்பதும் மலர் வெளியிடுவதும் மகிழ்ச்சியளிக்கிறது. மன்றத்தின் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் தொடர்புபட்ட அனைவரையும் நான் வாழ்த்துகிறேன். இந்த நிகழ்வுகள் அனைத்தும் இனிதே நிகழ்ந்து புகழ் பரவவும் மன்றத்தின் நிலைபேறான அபிவிருத்திப் பயணம் வெற்றி பெறவும் குருதேவரைப் பிராத்திக்கின்றேன்.

“நம்பிக்கை இழந்து விடாதே
பாதை கத்தி முனையில் நடப்பது போல
மிகவும் கடினமானதுதான் - எனினும்
எழுந்திரு விழித்துக்கொள் மனம் தளராதே
நீ அடைய வேண்டிய உனது இலட்சியமாகிய
குறிக்கோளைக் கண்டுபிடி.

சுவாமி விவேகானந்தரின் இக்கூற்று நம் பழைய மாணவர்களுக்கும், இச் சங்கத்திற்கும், எதிர்காலத்திற்கும் வாழ வழிகாட்டுகிறது.

வைத்திய கலாநிதி **வேல்முருகு விவேகானந்தராஜா,**
பல்கலைக்கழக வேந்தர்,
கிழக்குப் பல்கலைக் கழகம். வந்தாறுமூலை, செங்கலடி.

ஆலோசகர் செ. புண்ணியமூர்த்தி அவர்களின்

வாழ்த்துச் செய்தி

எங்கள் மாணவர் சங்கத்தின் வைர விழாவை வாழ்த்துகிறேன்

"எத்தகைய கல்வி நல்லொழுக்கத்தை உருவாக்குமோ, மன வலிமையை வளர்க்க செய்யுமொ, விரிந்த அறிவை தருமோ, ஒருவனை தன்னுடைய சுய வலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்வி தான் நமக்குத் தேவை"

-சுவாமி விவேகானந்தர்-

இக் கோட்பாட்டை அடியொற்றி சுவாமி விபுலாநந்தரால் ஆக்கப்பட்டது சிவாநந்தா வித்தியாலயம். அக்கால கிழக்கிலங்கையில் அறிவும் ஆன்மீகமும் சார்ந்து கட்டியெழுப்பப்பட்டது இந் நிறுவனம். இது 1929 இல் ஆரம்பிக்கப்பட்டது. அடுத்த வருடம் அதன் 90 வது அகவையைப் பூர்த்தி செய்யவுள்ளது.

இவ் வேளையில் 1958 இல் ஆரம்பிக்கப்பட்டதாக அறிய முடியும் எமது பழைய மாணவர் சங்கம் தனது வைரவிழாவை இவ்வாண்டு கொண்டாடுவதும் அதன் நினைவு படிகமாக வரலாறு ஆவணப்படுத்தப்பட்ட மலர் ஒன்று வெளியிடுவதும் பெரு மகிழ்ச்சியைத் தருகிறது. எனது இடைநிலைக் கல்வியும், பல்கலைக்கழக நுழைவுத் தேர்வும் இங்கிருந்தே பூர்த்தி செய்யப்பட்டது. அவ் வகையில் இவ் வித்தியாலயத்தை நன்றியுடன் நினைவுகூருகின்றேன். இங்கு எங்களுக்கு அர்ப்பணிப்புடன் வேலை செய்த ஆசிரியர்களை போற்றாமலிருக்க முடியவில்லை.

இந் நாட்டின் பல பாகங்களிலும் அரச பணியாற்றிய நான், அழுத்தங்கள் நிறைந்து காரிருள் சூழ்ந்து நின்ற ஒரு கால கட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட செயலாள ராகவும் அரச அதிபராகவும் பணியாற்றியுள்ளேன். இதற்கான அறிவும் ஆற்றலும் இங்கிருந்தே உருவானவைகள்.

சுவாமி விபுலானந்தரால் தொடங்கப்பட்டு சுவாமி விஞ்ஞானானந்தரின் ஆசியைப் பெற்ற சிவாநந்த வித்தியாலய பழைய மாணவர் சங்கம் வைரவிழாக் கொண்டாடும் வேளையில் அவர்களது எல்லையற்ற ஆனந்தத்தில் நானும் பங்கேற்கிறேன்.

குருவருளும், திருவருளும் சேர்ந்து கிடைத்த ஆசீர்வாதத்தால் ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக இவ் வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் ஆரம்ப கால உறுப்பினராக பதவியேற்றுத் தலைவராகப் பணியாற்றும் பெரும் பேறும் கிடைத்தது. இக் காலங்களில் என்னோடிருந்து ஒத்துழைத்து இக்கல்லூரியின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு அமரத்துவம் பெற்றவர்களும் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களுமான பழைய மாணவத் தோழர்களை நினைத்து நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடர் கல்வி அபிவிருத்திக்காக 'சிவாநந்தா நம்பிக்கை நிதியம்' ஒன்றை ஆரம்பித்து அதனூடாக நிதித் தேவைகளை மாணவர்களுக்கு வழங்கவும் ஏற்பாடாகியிருந்தது. சமகாலத்தில் செயற்பாடுகள் அடுத்த பரிணாமத்தை அடைந்து மேலும் விரிவடைந்து புதுப்புதுப் பணிகளை சங்கமானது இவ் வித்தியாலயத்துக்குச் செய்துகொண்டிருகிறது. ஸ்ரீராமகிருஷ்ண மடத் துறவிகளால் ஆரம்பிக்கப்பட்டு அரசினரால் பொறுப்பேற்கப்பட்டு பல்வேறு கால கட்டங்களிலும் பல்வேறு அபிவிருத்திகளைப் பெற்றுயர்ந்த இவ்வித்தியாலயம் அதற்கு அணிசேர்த்துக் கொண்டு செயற்படும் இப்பழைய மாணவர் மன்றம் சம காலத்தில் இவைகளை முன்னெடுக்கும் நிருவாகிகள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

செ. புண்ணியமூர்த்தி,
ஓய்வுபெற்ற அரச அதிபர், மட்டக்களப்பு.

ஆலோசகர் க.பாஸ்கரன் அவர்களின்

வாழ்த்துச் செய்தி

ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் சிவாநந்தியர்கள்

சிவாநந்த வித்தியாலய பழைய மாணவர் மன்றத்தின் அறுபதாவது வைரவிழா மலருக்கு வாழ்துச் செய்தியொன்றை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி. மாணவர்களின் கல்விப் பாதையை ஒரு இலட்சிய நோக்குடனும் அபிவிருத்திக் கருத்திட்டங்களை வகுத்து செயற்படுத்தி கொண்டிருக்கும் நமது பழைய மாணவர் மன்றத்தினரை இதய பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

சிவாநந்த வித்தியாலயம் ஒரு உன்னதமான சாந்திகேதனம். இங்கு கல்வி கற்றவர்கள் எல்லாம் மிகவும் சிறந்த நிலைகளில் சிறப்பாக வாழ்ந்த , வாழும் வரலாறு உண்டு. இதன் கற்றல், கற்பித்தல், கல்வித் தரத்தை வளர்ப்பதற்காக 1958ம் ஆண்டு அமரர் திரு கணபதிப்பிள்ளை அதிபர் அவர்களால் நன்நோக்குடன் ஒரு வகுப்பறையில் அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டதுதான் நமது பழைய மாணவர் மன்றம். இந்த ஆரம்பக் கூட்டம் தொடக்கம் ஒரு உறுப்பினராக, உப செயலாளராக, செயலாளராக, உப தலைவராக, ஆலோசகராக வெவ்வேறு பதவி நிலைகளில் இருந்து இன்று வரை பணியாற்றுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த மன்றம் ஆரம்பம் தொடக்கம் சிறந்த ஆளுமை மிக்க தலைமைத்துவப் பண்புகளை கொண்ட திறமையான கல்வியியலாளர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு நான்கு முக்கிய காரணிகள் அவசியம். தியாக சிந்தனையுள்ள ஆசிரியர் குழாம், பற்றுறிதி கொண்ட மாணவர் சமூகம், நல்வழிகாட்டும் பெற்றோர், மற்றும் உறுதுணையான பழைய மாணவர் / பாடசாலை அபிவித்தி சபைகள் போன்றவைகளாகும். இந்த நான்கு அமைப்புகளும் பாடசாலையின் புகழ் பூத்த வளர்ச்சிக்கு முக்கிய பங்காளிகளாகும்.

நமது இம்மன்றம் சகல பழைய மாணவர்களையும் அன்போடு அரவணைத்து சிறப்பாக செயலாற்றிக்கொண்டிருக்கின்றது. இப்பாடசாலையில் கற்றல், கற்பித்தல், ஒழுக்கம், புறக்கிருத்திக நோக்கு, விழையாட்டுத்துறை, ஆன்மீக வளர்ச்சி முறைமைகளைக் கருத்தில் கொண்டு சிறப்பாக செயற்படுகின்றது.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் நேரடிச் சீடர்களால் ஆசீர்வதிக்கப்பட்ட இப்பாடசாலையில் சதாகாலமும் பகவானின் அருளொளியும் நல்லொழியும் வீசிக்கொண்டிருக்கும்.

லண்டன் கனடா அவுஸ்திரேலியா போன்ற வெளி நாடுகளிலும் கிளைகளை அமைத்துச் செயற்படுகின்ற இம்மன்றம் மென்மேலும் வளர்ந்து கல்விப் பணிகளைச் சிறப்புறச் செய்ய மனமார வாழ்த்துகின்றேன்.

க.பாஸ்கரன்

ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர், மக்கள் வங்கி, மட்டக்களப்பு.

ஆலோசகர் கலாபூஷணம் கா.கணேசானந்தத்தம் அவர்களின்

வாழ்த்துச் செய்தி

திருவுரு அழகிய தீவகம் தன்னில்
மருவுரு செந் நெற்களனிகள் சூழ்ந்து
வாழையும் கமுகும் வன்பலா மாவும்
தாழையும் சேர்ந்து தன்கனி உதவி
தாவின் வளத்தால் தனிப்புகழ் பெற்று
வாவியில் மீன்கள் இன்னிசை பாடிட
வண்டினங்கள் வண்ண மலர்களில்
தேன் பருகி ரீங்காரம் செய்ய
'மீன்பாடும் தேன் நாடு' எனப் புகழ் பெற்ற
மட்டிலா அழகு மட்டுமா நகரில்
வானவளமும் வயல்வளமும்
நீர் வளமும் நில வளமும்
நிறைவாய் பெற்று தென்றல் தாலாட்டத்
தெம்மாங்கு இசைபாட
செல்வம் தழைத் தோங்கும்
கல்லடி உப்போடையில்
முத்தமிழ் வித்தகன்
யாழ் நூல் தந்த பாவலன்
சைவமும் தமிழும் வாழ
சங்கம் பல அமைத்து பாரில்
மெய்யனாய் கிழக்கு ஈன்ற
மேதையாம் விபுலானந்த அடிகளால்
அகவை ஆயிரத்து தொள்ளாயிரத்து
இருபத்தி ஒன்பதில
ஆரம்பித்த ஆங்கில அறிவுக்கூடமாம்
சிவாநந்த வித்தியாலயம்,
ஆழமான கடல் போல்
ஆர்பரிப்பின்றி, ஆரவாரமின்றி
அமைதியாக ஆன்மிகத் துறவிகளின்
ஆசீர்வாதத்தோடு நூற்றுக்கணக்கான
கல்விமான்களையும், வைத்தியர்களையும்
எந்திரிகளையும், சட்டத்தரணிகளையும்
கணக்காளர்களையும் உருவாக்கி
புகழ்பூத்த இவர்கள்
வெளிநாடுகளுக்குச் சென்று
தவறாது பணிபுரிந்து
இக்கல்விக் கூடத்தின் பெருமையை
அக்கறையோடு நினைந்து
உதவிகளைச் செய்துகொண்டு
பாடசாலையின் பங்குதாரராகின்றார்கள்
இங்கு சிவாநந்த வித்தியாலயத்தில்
பழைய மாணவ மன்றத்தினை
ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தி எட்டில்
அங்குரார்ப்பணம் செய்து
அன்றுமுதல் இன்று வரை
பாடசாலையின் தேவைகளைக் கேட்டறிந்து
கல்லூரியின்,வளர்ச்சியிலும்,உயர்ச்சியிலும்
பெரும் பங்களிப்பு நல்கின்றனர்
பழைய மாணவ மன்றத்தினர் வருடந்தோறும்
பரந்து விரிந்து வாழும்
பழைய மாணவர்களை ஒன்றுகூட்டி
புதிய மன்றத்தினை அமைத்து
புதுப் பொலிவோடும், உணர்வோடும்
உற்சாகத்தோடும், உத்வேகத்தோடும்
பாடசாலையின் நலனில் அக்கறை கொண்டு
மாணவர்களுக்கு பயிற்சி வகுப்புக்களை
நடாத்தியும் பயிற்சி அளித்தும்
விளையாட்டுத் துறையில்
உபகரணங்களை பெற்றுக் கொடுத்தும்
அற்பணிப்போடு பணியாற்றுகின்றனர்.
இவர்களது பணி சீரும் சிறப்பும் பெற
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்தித்து மாணவ மன்றத்திற்கு
நீண்ட ஆயுளை நல்க வேண்டுமென
மனம் நிறைந்த மகிழ்வோடு
மலர் சொரிந்து வாழ்த்துகின்றேன்.

கலாபூஷணம் கா.கணேசானந்தம்
அகில இலங்கை சமாதான நீதவான்



ஆலோசகர் வைத்திய கலாநிதி தெ.சுந்தரேசன் அவர்களின்

வாழ்த்துச் செய்தி

மனிதத்துவம் விளையும் மகத்துவமான மண் சிவாநந்தா

சிவாநந்தாவின் தனித்துவமே அந்த மண்ணின் மகத்துவந்தான். இலங்கையில் எந்தப் பாடசாலையும் பெற்றிராத ஆன்மீக அத்திவாரமே அதற்கான காரணம். பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நேரடிச் சீடர் சுவாமி விஞ்ஞானாநந்தரின் புனித பாதம் பட்டதோடு அவரின் அருளாசிகளையும் தன்னகத்தே கொண்டதாய் ஆன்மீகப் பேறுபெற்ற அறிவாலயமாக அறிவைப் பரப்பிக்கொண்டிருக்கிறது சிவாநந்தா.

சிவாநந்தாவின் தனித்துவமே அந்த மண்ணின் மகத்துவந்தான். இலங்கையில் எந்தப் பாடசாலையும் பெற்றிராத ஆன்மீக அத்திவாரமே அதற்கான காரணம்.

எமது பாடசாலையானது கல்வியுடன் பழைய பாரம்பரியங்களையும் பேணி ஆத்மீகச் சிந்தனைகளை விதைக்கும் உன்னதமான இடமாகவே இருந்து வருகின்றது. எனினும் உலகளவில் வளர்ந்துகொண்டிருக்கின்ற, மனிதத்துவத்திற்கு சவால்விடுகின்ற பண்பாடுசார் பாதிப்பு எமது மாணவர்கள் மத்தியிலும் படர்ந்துகொண்டிருப்பதை வேதனையான விடயமாகவே நான் உணர்கின்றேன். கல்வி, திறமை என்பவற்றிற்கு அப்பால் பண்பாடு, ஒழுக்கம் என்பவற்றினூடாக உருவாக்கப்படும் மாணவ சமூகமே எமது இன்றைய தேவை என்பதை ஒரு சிவாநந்தியனாக, பாடசாலைச் சமூகத்தின் சிந்தனைக்கு விடுகின்றேன். மனிதனைப் பரிபூரணப்படுத்துகின்ற நெறிமுறையினை தன்னகத்தே கொண்டுள்ள கல்வியினூடான வளர்ச்சியே எமது இளைஞர்களின் உண்மையான தேவை. இத்தகைய நெறிமுறைகளையும் தங்களது செயற்பாடுகளில் இணைத்துச் சேவையாற்றிக்கொண்டிருக்கும் சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தின் சேவை பாராட்டப்படவேண்டியதே. இந்த உன்னதம் மிக்க பணிகளில் தன்னை ஈடுபடுத்தியிருக்கும் சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக கடந்த இரு வருடங்கள் சேவையாற்றியதை பெரும்பேறாக நினைத்துப் பெருமை கொள்கின்றேன்.

தெய்வத் திருமூவர்களான பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகாநந்தர், அன்னை ஸ்ரீ சாரதாதேவியார் ஆகியோர்களின் கருத்துக்களை உள்ளத்தில் உள்வாங்கி வளர்ந்தவர்களே நாம். அந்தக் கருத்துக்கள்தான் இன்றும் பல சிவாநந்தியர்களை சிறந்த பண்பாளர்களாக வழி நடாத்திக்கொண்டிருக்கின்றது. ஆனாலும், இன்றைய நிலை சற்று தடம்மாறிப் போயுள்ளமை கவலையளிப்பதாகவே உள்ளது. ராமகிருஷ்ண மிஷனின் வழிப்படுத்தல் மற்றும் சுவாமிகளின் அறிவுரைகள் இந்த துர்பாக்கியமான நிலைமைக்கு அருமருந்தாக அமையும் என்பதனையும் குறிப்பிட விரும்புகின்றேன். இதற்கு பழைய மாணவர் சங்கத்தின் காத்திரமான பங்களிப்பு அத்தியாவசியமானது என்பதை வலியுறுத்துகின்றேன்.

பற்றுள்ள பல இளம் சிவாநந்தியர்களைக் கொண்டு பயணித்துக்கொண்டிருக்கும் சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தின் வைரவிழா மலர், சிறந்த ஆவணமாக வெளிவருவதோடு அது தாங்கிவரும் கருத்துக்கள் எதிர்கால மாணவ சமூகத்தின் சிந்தனைகளுக்குச் சிறந்த அமிர்தமாக இருக்கட்டும் என வாழ்த்துகின்றேன்.

வைத்திய கலாநிதி தெ.சுந்தரேசன்
சிரேஸ்ட விரிவுரையாளர், மருத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக் கழகம்.

பாடசாலை அபிவிருத்திக் குழுச் செயலாளரின்

வாழ்த்துச் செய்தி

உயரிய சேவைக்கு இலக்கணமான சிவாநந்தியர்கள்

முத்தமிழ் வித்தகர் விபுலானந்தரின் உன்னத சிந்தனையில் உதித்து, தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக பல கல்விமான்களை, பண்பாளர்களை, சமூக சேவையாளர்களை உருவாக்கிய சிவாநந்த வித்தியாலயத்தின் வளர்ச்சிப்பாதையில் பெரும்பங்காற்றிக் கொண்டிருக்கும் சிவாநந்த வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் அறுபதாவது ஆண்டு வைரவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மனம் நிறைந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

பழைய மாணவர் சங்கமானது தனது நீண்டகாலப் பயணத்தில் சிவாநந்த வித்தியாலய மாணவர்களின் கல்வி, விளையாட்டு, கலாசாரம், நலன்புரி போன்ற விடயங்களின் மேம்பாடு கருதி பல்வேறுபட்ட பாராட்டத்தக்க செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது. அந்த வகையில் சிவாநந்த பழைய மாணவர் சங்கத்தின் ஒரு அங்கத்தவர் என்ற வகையிலும் கௌரவமடைகின்றேன்.

சிவாநந்த வித்தியாலயத்தின் அபிவிருத்தித் தேவைகளை உடனுக்குடன் உணர்ந்து அதற்குத் தேவையான வளங்களை சர்வதேச ரீதியாக பரந்து வியாபித்துள்ள கிளைகளினூடாகவும் தனிப்பட்ட கொடையாளிகள் ஊடாகவும் திரட்டி, பாடசாலையின் தேவைகளை பூர்த்திசெய்யும் அமுதசுரபியாகவே சிவாநந்த வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினை நான் பார்க்கின்றேன். இத்தகைய உயரிய சேவையை அறுபது வருடங்களாக ஆற்றுவதென்றால் இதன் அங்கத்தவர்களின் அர்ப்பணிப்பையும் பாடசாலையின் மீது கொண்டுள்ள பற்றையும் நன்றியுணர்வையுமே வெளிக்காட்டுகின்றது. இத்தகைய அங்கத்தவர்கள் அனைவரும் இச்சந்தர்ப்பத்தில் கௌரவம் பெறுகிறார்கள்.

பாடசாலையின் தேவைகளை பூர்த்திசெய்யும் அமுதசுரபியாகவே சிவாநந்த வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினை நான் பார்க்கின்றேன்.

சிவாநந்தா பழைய மாணவர் சங்க வளர்ச்சிப் பாதையின் அறுவதாவது அகவையில்,காலத்தின் தேவை கருதி வெளிவரும் வரலாற்றுச் சிறப்புமிக்க வைரவிழா மலர் எனும் மொட்டு மலர்ந்து இப்பாடசாலையின் வரலாற்று ஆவணப்பதிவாக அமையும் என்றால் மிகையாகாது. இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய இம்மலர் வெளிவர உந்துசக்தியாக செயற்பட்ட பதிப்பாசிரியர் குழுவிற்கும், சங்கத்தின் செயற்குழுவினருக்கும் எனது நன்றிகளும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும்.

சிவாநந்த வித்தியாலயத்தின் அபிவிருத்திப்பாதையில் இன்றியமையாததாகக் காணப்படும் இச் சங்கத்தின் பணி தொடர வேண்டும், மேலும் சிறக்க வேண்டும் என உள்ளத்தால் வேண்டுகின்றேன்.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்”
- திருக்குறள்

தவராசா குணராசா
செயலாளர், பாடசாலை அபிவிருத்திக் குழு.
சிவாநந்த வித்தியாலயம் (தேசிய பாடசாலை)

சங்கத்துச் பொதுச் செயலாளரின்

சிந்தனையூற்று

ஜீவநதியில் ஓடிக்கொண்டிருக்கும் சிவாநந்தம்

எப்போதும் எங்களோடு ஓர் ஜீவநதி ஓடிக் கொண்டிருக்கின்றது. எல்லாவற்றிற்குமான ஆசீர்வாதமாய் இச் "சிவாநந்தம்" எங்களோடு பயணித்துக் கொண்டேயிருக்கின்றது. எமது பழைய மாணவர் சங்கத்தின் 60வது ஆண்டு நிறைவு மலரும் அதில் ஓர் அங்கமே.

59வது பொதுக்கூட்டத்தின் போது சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைக் கடிதத்தின் மூலம் கருக்கொண்ட இம்மலர் எண்ணம், இன்று உங்கள் கைகளில் வாசமாய் புரள்கின்றது. எமது சங்கத் திட்டங்களை செயல் வடிவமாக்குவதில் உள்ள சவால்களின் எல்லைகள் எப்போதும் தாண்டப்படக்கூடியவைகளாக எங்களை "சிவாநந்தம்" வழிநடத்தியதுண்டு. இச் சிறப்பு மலர் வெளியீட்டில் "மலர் பதிப்பாக்கக் குழு" அப்படியான ஓர் ஆசீர்வாதமாய் எமது பழைய மாணவர் சங்கத்துக்காக அமைந்தது. சொந்த வேலைப்பழு, தூரம், பல்வேறுபட்ட அங்கத்தவர்களுடனான தொடர்பாடல் போன்ற எத்தனையோ சவால்களைத் தாண்டியதாகவே இம் "மலர் பதிப்பாக்கக் குழுவிற்கான" பயணம் அமைந்திருந்தது. இத்தகைய ஆளுமைகளைப் பெற்றது எமக்கு என்றுமே பெருமை.

எமது சங்கத் திட்டங்களை செயல் வடிவமாக்குவதில் உள்ள சவால்களின் எல்லைகள் எப்போதும் தாண்டப்படக் கூடியவைகளாக எங்களை "சிவாநந்தம்" வழிநடத்தியதுண்டு.

புகைப்படங்களும், காணொளிகளும் நிமிடங்களில் காலாவதியாகும். இக்காலத்தில் எழுத்துருவான இம்மலர் நிச்சயமான ஓர் வரலாற்றுப் பதிவு. 60வது ஆண்டு காலம் எமது சங்கத்தின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும் பங்காற்றிய அனைத்து உறுப்பினர்களும் இவ் வரலாற்றுக்குச் சாட்சியாகின்றனர், பெருமையடைகின்றனர். "சிவாநந்தயுகம்" எனும் சிறப்பான நாமத்தோடு வெளிவரும் இம்மலர் காலம் கடந்தும் தடயமாக எமது பயணங்களில் இருக்கும்.

இந்நிறைவு மலரின் பக்கங்களை அலங்கரித்த அனைத்து ஆக்கியோருக்கும், நினைவுப் பகிர்வுகளைத் தந்த அனைத்து உறுப்பினர்களுக்கும் பழைய மாணவர் சங்கமானது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது. குறிப்பாக எமது மூத்த உறுப்பினர்களினது பங்களிப்பு, ஆர்வம், அவர்களின் அனுபவம் பகிர்வுகள் என்பன பற்றிய பதிப்பாக்கக் குழுவின் பரவசமான கூற்றுக்கள் எம்மை இன்னும் உற்சாகமாக்கியது. அவர்களுக்கும் எமது வணக்கங்கள்.

ஆனந்தமான சிவாநந்த சாலையில் இச் சிறப்பு மலர் வாசம் மிக்க வரலாறாக இருக்கும் என்பதில் பழைய மாணவர் சங்கம் பெருமை கொள்கின்றது.

நன்றி

சு.பவானந்தராஜா

பொதுச் செயலாளர், சிவாநந்தா பழைய மாணவர் சங்கம்

சிவானந்த தேசிய பாடசாலை.

From the Heart of the President,

PSA (UK Branch)

A holistic approach to human development

It gives me great pleasure to send this message of best wishes and warm felicitations on behalf of PSA Shivananda UK Branch to Shivananda National School, an ancient institution established in Batticaloa, at this prestigious moment when the OBA is celebrating its Diamond Jubilee. We are filled with nostalgic memories of our school that has fulfilled almost 90 years of service to our community, promoting a holistic approach to human development. Looking back, our school has been filled with the blessings of most of the RKM Sanyasis. Although I have had the chance to be part of the school as a student for a short period, I am thankful that God gave me the opportunity to be a member of the teaching staff in the past for which I was uniquely privileged.

I also thank the god for the outstanding students of all walks of life, especially those who have been recognised and honoured nationally and internationally for their contributions and our professional teaching staff who are motivated and passionate of Shivananda National School. The school has been cultivating in our students the seeds of spiritual and ethical growth, and is keen to pass on knowledge to the next generation. We all endeavour to equip our students with all-round abilities in order that they can contribute to society in the future, serve others and glorify swami, our founder.

We have every reason to be proud of the school's past and excited about its future. I am certain that Shivananda will continue its vocation of preparing students to engage successfully with the world for many years to come.

In the future, we have yet to face many challenges. Dear friends, what you see today, is the culmination of massive, continuous efforts put in by the concerted effort of staff and students, the SDS, OBAs including the ones established abroad. What was once planted as a sapling by Swami Vipulananda has now grown into a large tree. I believe that with God's guidance and Swamiji's blessings we need to scale new heights and continue to provide quality education to the students and produce generations of Shivanandian fellows, who aspire to pursue knowledge, academic excellence and lifelong development. When the standards are raised and you see the school flag flying, it fills your heart with cherished memories of the past.

"This milestone offers a fabulous opportunity to reflect upon the history of Shivananda and the important contributions it has made to the personal and academic development of over thousands and thousands of students, past and present. We have every reason to be proud of the school's past and excited about its future. I am certain that Shivananda will continue its vocation of preparing students to engage successfully with the world for many years to come."

Finally, Planing an event of this nature and magnitude requires a lot of time and effort. To this, I must commend the dedication and the untiring efforts of everyone who is making this celebration a success.

E.Indrakumar.
President, PSA,UK

கனடா பழைய மாணவர் சங்கத் தலைவரின்

சிந்தனையூற்று

ஆலவிருட்சமான சிவாநந்தம்

முத்தமிழ் வித்தகர், பேராசிரியர் சுவாமி விபுலாநந்தரால் ஆரம்பிக்கப்பட்ட இ.கி.மி சிவாநந்த வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம், தனது வைரவிழாவை வெகுசிறப்பாக கொண்டாடுவதையிட்டு எமது கனடா பழைய மாணவர் சங்கம் புளகாங்கிதமடைகின்றது. மேலும் வைரவிழா நினைவாக வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எமது சங்கத்தின் சார்பாக வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழன்னை உலகிற்கு அளித்த ஞானத்தின் சின்னமாக விளங்கியவர் சுவாமி விபுலாநந்தர். முத்தமிழ் வித்தகர், அறிஞர், ஆராட்சியாளர், பன்மொழி விற்பன்னர், சமூகசேவையாளர் எனப் பன்முக ஆளுமையுடையவர். பாடசாலை அதிபர், பேராசிரியர் எனப் பல பதவிகளை வகித்தவர். அன்பும், அறமும் கலந்த பண்புக்கும், சாண்றாண்மைக்கும் உயர் எடுத்துக்காட்டாக விளங்கியவர். வேதாந்த சித்தாந்த வித்தகரான சுவாமி அவர்கள் சமுதாயத்தில் மண்டிக்கிடந்த மாசு அகற்றும் செயல் வீர்ராக செயல்பட்டவர். கிழக்கிலங்கையில் தனது கல்விப்பணியாலும், சமூகப்பணியாலும் ஏழைமக்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பெருந்தகை.

சுவாமி விபுலாநந்தரால் 27 மாணவர்களுடன் ஒளியேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்ட எமது சிவாநந்த வித்தியாலம் இன்று ஆலவிருட்சமாக வளர்ந்துள்ளது.

1929ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதி சுவாமி விபுலாநந்தரால் 27 மாணவர்களுடன் ஒளியேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்ட எமது சிவாநந்த வித்தியாலம் இன்று ஆலவிருட்சமாக வளர்ந்துள்ளது. கடந்த ஒன்பது தசாப்தங்களாக கல்வி வழங்கும் எமது பாடசாலை மூலம் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி கற்றுத் தேறியுள்ளனர்.

சிவாநந்தியர்கள் அனவரும் ஒட்டுமொத்தமாக தமது ஆசிரியர்கள், அதிபர்கள் வழங்கிய அறிவுரைகளையும் வழிகாட்டுதலையும் முதலீடாகக் கொண்டு தாய் நாட்டிலும், பிறநாடுகளிலும் நன்கே இல்லறமும், சமுகப்பணியும் செய்து மேலும் பல்துறை விற்பன்னர்களாகவும், தொழில்சார் நிபுணர்களாகவும், கல்விமான்களாகவும் அரிய பணியாற்றி சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் அனைவரும் இணைந்து கொண்டாடும் இவ் வைரவிழா சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் அமைய எனது நல்லாசியையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என்றும் அன்புடன்

க.குமரகுரு

தலைவர்

சிவாநந்த வித்தியாலய பழையமாணவர் சங்கம்

கனடா.

பிரதம பதிப்பாசிரியரின்

சிந்தனைத் தூறல்கள்

சிவாநந்தயுகத்திற்கு சிறப்பும்
சிவாநந்தாவின் சிறப்பும்

புத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் ஆத்மார்த்த சிந்தனையின் வடிகாலாக அமைந்தது சிவாநந்த வித்தியாலயம். ஆன்மீகப் பண்பாடுகள் கலந்த பாரம்பரியத்தோடு ஒளிர வேண்டும் என்ற நோக்கத்திற்காக வித்தகரால் ஸ்தாபிக்கப்பட்டதே இப் பாடசாலை. இத்தகைய உயரிய நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட சிவாநந்தாவின் பழைய மாணவர்கள் சிலரால் உருவாக்கப்பட்டதே எமது சங்கம். இச் சங்கத்தின் அறுபதாவது அகவையைச் சிறப்பிக்கும் முகமாக வெளிவரும் "சிவாநந்தயுகம்" எனும் வைரவிழா மலரின் பிரதம பதிப்பாசிரியர் என்ற வகையில் சில கருத்துக்களை உங்கள் முன் வைப்பது எனது தலையாய கடமையாகும்.

சிவாநந்தயுகமாய் மலரும் மொட்டு

முதுமையில் அறுவடை செய்வது இளமையில் விதைத்ததைத்தான். அன்று விதைக்கப்பட்ட விதைகள் விருட்சங்களாகி யுகம் கடந்து கதைசொல்லக் களம் கேட்ட வேளையிலே கருக்கொண்டதுதான் சிவாநந்தயுகமெனும் சிறப்பு நூல் ஆவணம். "நல்லதோர் வீணை செய்தே அதை நலம் கெடப் புழுதியில் எறிவதுண்டோ? என்று கேட்டார் பாரதியார். வெற்றிக்கான வாழ்க்கையின் அரும் பெரும் பொக்கிஷத்தை தன்னகத்தே தாங்கி நிற்கும் வித்தகன் செய்திட்ட வீணைதான் சிவாநந்தா. நமக்காக நமக்கு முன்பிருந்த பண்பாளர்கள் வளர்த்தெடுத்த சிந்தனைக் கூடம்தான் சிவாநந்தா எனும் அறிவாலயம். தற்போதுள்ள அதன் நிலையைக் காணும்போது பாரதியின் மேற்கூறிய வரிகள்தாம் நினைவில் நிழலாடுகின்றன. ஆனாலும் சிவாநந்தயுகம் சுமந்துவரும் சுபாஷிதங்கள் சிவாநந்த சமூகத்தோடு உலாவரும் உறவுகளுக்கு அருமருந்தாக அமையும் என்றே கூறுவேன்.

"மூலையிலோர் சிறுநூலும் புது நூலாயின்
முடிதனிலே சுமந்து வந்து தருதல் வேண்டும்"

என்ற புரட்சிக் கவியின் வைரவரிகள் ஒரு சமுதாயம் புதுப்புது நூல்கள் மூலம் உயர்வடைய வேண்டும் என்ற தணியாத தாகத்தின் வெளிப்பாடாகும். அந்த உயர்ந்த நோக்கத்தை அடைய சிவாநந்தயுகத்தின் சிறுபங்கேனும் இருக்கும் என நம்புகிறேன். இன்று அறுபதாவது அகவையில் பயணிக்கும் சங்கத்தின் தார்மீக கடமைகளில் ஒன்றாய், அழகிய ஆவணக் கருவூலமாய் வெளியிடப்படுவதுதான் இந்தச் சிவாநந்தயுகம் எனும் வைரவிழா மலர். இன்று எம் கைகளில் மலர்ந்து, நறுமணம் கமழ்ந்து நிற்கின்றது இந்த மலர். இந்த மலர் தாங்கிவரும் அருளடியவர்களின் ஆசிச் செய்திகளும், மதிப்பிற்குரியோரின் வாழ்த்துக்களும் இப் பாடசாலைக்கும், அதன் பழைய மாணவர் சங்கத்திற்கும் புத்துயிரளிக்கும் நறுமணமாக அமைகின்றது. மேலும் இம் மலரின் இதழ்களாக விரியும் சிவாநந்த ஆளுமைகளின் அனுபவக் கட்டுரைகள் அறிவுப்பசிக்கு அருமருந்தாகின்றன. ஆழமான ஆய்வுப் பார்வையாய் உள்ள ஆளுமைகளின் முத்தான ஆக்கங்கள் பாடசாலையின் மகுட வாக்கியத்தை மெய்ப்பிக்கும் சான்றுகளாக மிளிர்கின்றன. சமுதாய மறுமலர்ச்சிக்கான பாதையில் பயணித்த சிவாநந்தியர்களின் விந்தைமிகு சிந்தனைகள் மற்றும் சாதனை நாயகர்களின் வெற்றிச் சூத்திரங்கள் சமகாலச் சந்ததியினரின் தேவைக்கு மிகவும் பொருத்தப்பாடானதாக, அருமையான வரிகளாய் சிவாநந்தயுகத்தை அலங்கரித்துள்ளன.

"அணுகுண்டு கூட ஒரு முறைதான் ஓசையுடன் வெடிக்கும் - ஆனால் புத்தகங்கள் திறக்கும் போதெல்லாம் வெடிக்கும்" என்ற ஜெயகாந்தனின் வரிகள் இங்கு நினைவு கூரத்தக்கன. ஆவணப் பொக்கிஷமான "சிவாநந்தயுகம்" கொண்டுள்ள பக்கங்கள் மனக்கதவை திறக்கின்ற மகா வல்லமை படைத்தவை. சிந்தனைகளை சிறகடித்துப் பறக்கச் செய்யும் பலம் பொருந்தியவை. அவ்வாறான பொக்கிஷங்களைக் கொண்டுள்ள பெட்டகம்தான் சிவாநந்தயுகம் எனும் சிறப்பு மலர்.

சிவாநந்தயுகத்தின் உள்ளே உறைந்துள்ள ஆக்கங்கள் அனைத்தும் உயிர்புள்ளவையாகவே அமைந்துள்ளன. 90வது அகவையைத் தொடப்போகும் சிவாநந்த வித்தியாலயத்திற்கு அறுபதாவது அகவையைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் பழைய மாணவர் சங்கத்தின் வைரவிழா மலர் ஒரு முக்கிய ஆவணப் பொக்கிஷமாகத் திகழும். இராமகிருஷ்ண மணிமொழி வழியில் செதுக்கப்பட்ட சிவாநந்தியர்களின் 89 வருட அனுபவத்தைத் தாங்கிவரும் ஆவணமாகவும், சிவாநந்தப் பண்பாட்டுப் பாரம்பரியத்தைச் சுமந்து வரும் முக்கிய ஏடாகவும் நான் இதைப் பார்க்கின்றேன். ஆன்மீகத்தோடு இணைந்த வாழ்க்கை முறைதான் இலட்சியத்தை நோக்கிய பயணத்தின் அடிப்படை அம்சம் எனக் கூறும் வரிகள் சிவாநந்தயுக ஆக்கங்களில் சிறந்து விளங்குகின்றன. இராமகிருஷ்ண மிஷன் கோட்பாடுகளை அடியொற்றிய விடுதி வாழ்க்கை முறையும், தனி மனித மேம்பாட்டிற்கு அவை கற்றுக்கொடுத்த விடயங்களும் ஆக்கங்களில் அருமையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பண்பாடுமிக்க மனித சமூகத்தின் உருவாக்கம் எவ்வாறு அமையவேண்டும் எனும் கருத்து அனுபவத்தின் வாயிலாக வெளிப்படுத்தப் பட்டுள்ளமையானது சமகாலத்தில் நாம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கான தீர்வாகவும் பயன்படலாம். ஆசிரியத்துவத்தின் அடிப்படைகளாக விளங்கும் உயரிய பண்புகள், கற்பித்தல் மீதான அர்ப்பணிப்பு, மாணவர் மையக் கல்வியின் மூலங்கள், அவைகள் மூலம் வெளிப்படும் வெற்றிக்கான பாதைகள் என அனைத்தும் இவ் ஆவணத்தின் அடிப்படைகளாக அங்கம் வகிக்கின்றன. பாடசாலை முகாமைத்துவ முன்மாதிரிகளிடமிருந்தான பகிர்வுகள், கட்டுக்கோப்பான நிர்வாகத் திறன் கற்றுத் தந்த படிப்பினைகள், நேர முகாமைத்துவ மூலங்கள் என்பன சிவாநந்தயுகத்தை சிகரம் தொடவைக்கும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளன. சிவாநந்தியர்களின் சிந்தனைகளாய் துளிர்விட்டுள்ள ஆக்கங்கள் அனைத்தும் ஓயாத அலையாய் ஒலித்துக்கொண்டே இருக்கும் என்பது எனது திடமான நம்பிக்கை.

இராமகிருஷ்ண மணிமொழி வழியில் செதுக்கப்பட்ட சிவாநந்தியர்களின் 89 வருட அனுபவத்தைத் தாங்கிவரும் ஆவணமாகவும், சிவாநந்தப் பண்பாட்டுப் பாரம்பரியத்தைச் சுமந்து வரும் முக்கிய ஏடாகவும் நான் இதைப் பார்க்கின்றேன்.

சிவாநந்தயுகத்தின் பங்குதாரர்கள்

சிவாநந்தயுகம் எனும் வைரவிழா மலர் நம் கைகளில் கிடைப்பதற்குக் காரணர்களாக இருந்தவர்கள் பலர். சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தின் 59வது வருடாந்த பொதுக்கூட்டத்தில் திருவாளர் காசுபதி நடராஜா உட்பட்ட அங்கத்தவர்களால் முன்வைக்கப்பட்ட சிறப்புப் பிரேரணையுடன் வைரவிழா மலருக்கான விதை இடப்பட்டது. அதன் முக்கியத்துவத்தின் அடிப்படையில் சங்கத்தின் தலைவர் மு.முருகவேள் அவர்களின் முனைப்பில், நிர்வாக சபை உறுப்பினர்களின் சம்மதத்துடன் பதிப்பாசிரியர் குழு அமைக்கப்பட்டது. சங்கத்தின் தலைவரும் பதிப்பாசிரியர் குழுவில் இடம்பெற்றமை வைரவிழா மலருக்குச் சிறப்பினை உண்டுபண்ணியது. குறிப்பாக சங்கத் தலைவரின் தொடர்ச்சியான உந்துதல், ஊக்கப்படுத்தல், உற்சாகமான செயற்பாடு, அதீதமான அர்ப்பணிப்பு, சீரிய தலைமைத்தவம் மற்றும் கடமையுணர்வு இவைகளே சிவாநந்தயுகம் வெளிவர பிரதான காரணங்களாகின்றன. தொண்டுநோக்கில் செயற்படுகின்ற அமைப்புகளில் பயணிப்பது ஒரு சவாலான விடயமே. சிவாநந்தயுகத்தின் பயணத்திலும் இது துலங்கியது. பல்வேறுபட்ட தடைகள் மற்றும் சவால்கள் அவ்வப்போது வந்துசென்றன. துவண்டு விடாத மன உறுதியுடன் வீரகர்ஜனையோடு வீறுநடை போட்டதன் விளைவே சிவாநந்தயுகம் சிகரம் ஏறக் காரணமாயிற்று.

வைரவிழா மலர் வெளியிட நிதி மூலம் பெரும் சவாலாகவே பார்க்கப்பட்டது. ஆனாலும் முதன்மை நிறுவனமொன்றில் நிறைவேற்றுப் பணிப்பாளர் நிலையில் கட்டாரில் பணிபுரியும் உன்னத சிவாநந்தியனான பா. கெங்கேஸ்வரனின் உதவிக்கரம் நிதிமூலத்தில் இருந்த சவாலை இல்லாதொழித்தது. சிறந்த தரத்தில் வைரவிழா மலர் வெளிவர பூரண அனுசரணை வழங்கிய பெருந்தகையான திருவாளர் பா. கெங்கேஸ்வரனுக்கு எமது நன்றிகள் உரித்தாகட்டும். மற்றும் ஆசியுரை வழங்கிய அருளாளர்கள், வாழ்த்துரை வழங்கியவர்கள், ஆக்கங்களைத் தந்தவர்கள், ஆலோசனைகளை வழங்கியவர்கள், தட்டச்சு வேலைகளில் பங்கேற்றவர்கள், ஆவணங்கள் புகைப்படங்கள் மற்றும் தகவல்களைத் தந்தவர்கள் அனைவருக்கும் நன்றிகள் சேர்வதாகட்டும். சிவாநந்தியன் பட்டமுன் மாணவர்களுக்கு சிறப்பான நன்றி. இவை தவிர நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவிய அன்புள்ளங்களுக்கு நன்றி கூறி ஆக்கங்களின் பக்கம் உங்களை அழைத்துச் செல்கின்றேன்.

கலாநிதி. து. பிரதீபன்
பிரதம பதிப்பாசிரியர்

Shivananda Past Pupils' Association

Executive Commitee - 2017/2018

(From left – Standing) S.Vijayakumar , S.Elankeeran , T.Pratheepan, G.Gireeshan , S.Kugathasan, G.Muralitharan, N.Thineskumar, J.Jeyarajan, K.Nilakshan, S.Vimalathasan, T.Gunaraja, M.Ariyathas, Mr.E.Muhunthan

(From left- Sitting) Mrs.T.Harithas, J.Sairajan (Treasurer), A.Meerasahib (Vice President), M.Murugaverl (President) T.Yasotharan (Principal), S.Bawanantharaja (Secretary), S.Chandrakumar(Vice President), S.Raveendran (Vice Secretary), Mrs. J.Kalinkeswaran.

சிவாநந்த வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் தோற்றம்

ஆன்மீகப் பண்பாடுகள் கலந்த பாரம்பரியத்தோடு ஒளிர வேண்டும் என்ற நோக்கத் துடன் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரால் ஆரம்பிக்கப்பட்ட தனித்துவம் வாய்ந்த பாடசாலையே மட்டுநகர் சிவாநந்தா தேசிய பாடசாலை. கிழக்கிலங்கையில் புகழ்பூத்த பாடசாலைகளில் ஒன்றாய் வீறுநடைபோட்டுக் கொண்டிருக்கிறது எமது வித்தியாலயம். அதன் பரிணாம வளர்ச்சிப் படியில் பங்குகொண்டோர் வரிசையில் சிவாநந்தா பழைய மாணவர் சங்கம் பிரதான வகிபங்கை வகிக்கின்றமை யாவரும் அறிந்ததே. உயர் பண்பாடுகளுடன் கூடிய மாணவர்களை சிறந்த மனிதர்களாக சமுதாயத்திற்கு வழங்கிய பெருமையும் சிவாநந்தாவையே சாரும். அதனால் இங்கு படித்து பண்பாளர்களாக மிளிர்பவர்கள் தங்களைச் சிவாநந்தியர்கள் எனக்கூறி பெருமிதம் கொள்கின்றார்கள்.

இத்தகைய பண்பாட்டு விழுமியங்களுடன் சமூகத்தில் வலம்வந்த பண்பட்ட சிவாநந்தியர்கள் பலரின் தூரநோக்குப் பார்வையின் பலனாய் உதயமானதே சிவாநந்தா பழைய மாணவர் சங்கம். இது 1958 இல் நிர்வாகக் கட்டமைப்புடன் கூடிய அமைப்பாக தனது கால்தடத்தை பதித்து சேவையைத் தொடங்கியது. பழைய மாணவர் சங்கத்தின் தோற்றத்திற்கு அக்கால கட்டத்தில் அதிபராக விளங்கிய அமரர் க.கணபதிப்பிள்ளை ஐயா அவர்களின் வகிபங்கு பிரதானமானது. சங்கத்தை உருவாக்குவதில் அதீத ஆர்வத்தினைக்

காட்டியவர் சங்கத்தின் முதலாவது தலைவராகவும் செயற்பட்டு சிறந்த அடித்தளத்தை இட்டார். இன்று லண்டன், கனடா, மற்றும் அவுஸ்திரேலியா முதலான நாடுகளிலுள்ள கிளைகள் மற்றும் தேசிய, சர்வதேச ரீதியாக இருக்கின்ற தனிப்பட்ட சிவாநந்தியர்களின் உதவிகளுடன் பல்வேறுபட்ட மேம்பாட்டு நடவடிக்கைகளை ஆற்றி வருகின்றது சிவாநந்தா பழைய மாணவர் சங்கம். கட்டார் நாட்டிலுள்ள நூற்றுக்கணக்கான சிவாநந்தியர்களின் பங்களிப்பு அண்மைக்காலமாக அதிகரித்துள்ளமையும் இங்கு குறிப்பிடப்படவேண்டியதே. உன்னதத்தை நோக்கிய உயர் குறிக்கோளுடன் அன்று ஆரம்பிக்கப்பட்ட பழைய மாணவர் சங்கம் இன்று அதன் அறுபதாவது அகவையினைப் பெரு விழாவாகக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது. இந்த நீண்ட பயணத்தின் பாதையில் பங்காற்றிய பலரும் இவ்விடத்தில் போற்றுதற்குரிய வராகின்றனர். சங்கத்தின் சாதனைப் பயணத்திற்கு இதுவரை பன்னிரெண்டு தலைவர்கள் தங்களின் அர்ப்பணிப் பான சேவையினைச் செய்துள்ளனர். அந்தவகையில் அவர்களின் பெயர்களை பட்டியலிடுவது மிகவும் பொருத்தமானதே.

» K.கணபதிப்பிள்ளை
(ஓய்வுபெற்ற அதிபர்)
» K.தியாகராஜா
(ஓய்வுபெற்ற அதிபர்)
» பேராசிரியர். M.செல்வராசா
(முன்னாள்அதிபர், முன்னாள் பேராசிரியர், கிழக்குப் பல்கலைக்கழகம்)
» K.குணரெட்ணம் **(ஓய்வுபெற்ற அதிபர்)**
» K.O.V.கதிர்காமதம்பி
(ஓய்வு பெற்ற உபதபால் அதிபர்)
» கலாநிதி.சந்தானம்
(உபவேந்தர், கிழக்குப் பல்கலைக்கழகம்)
» டாக்டர் V. சிவலிங்கம்
(ஓய்வு பெற்ற பதிவாளர், கிழக்குப் பல்கலைக்கழகம)
» C.நடராஜா
(ஓய்வு பெற்ற பதிவாளர், கிழக்குப் பல்கலைக்கழகம)
» C. புண்ணியமூர்த்தி
(முன்னாள் அரசாங்க அதிபர்)
» K.O.V.K.குருநாதன்
(முன்னால் காணி ஆணையாளர்)
» V. தவராஜா **(பிரதேச செயலாளர்)**
» வைத்திய கலாநிதி தெ.சுந்தரேசன்
(முன்னாள் பீடாதிபதி, மருத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்)

அறுபதாவது அகவையினைக் கொண்டாடும் சங்கத்திற்கான தலைமைத்துவத்தை ஏற்றுள்ளவர் திருவாளர். மு.முருகவேள் அவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டியதே.

இன்று சமகாலத் தேவைகளை மையப்படுத்தியதாக பாடசாலையின் அபிவிருத்தியில் பங்கெடுத்துக் கொண்டு சிறந்த சேவையினைச் செய்கிறது பழைய மாணவர் சங்கம்.

வைரவிழா மலர் பதிப்பாக்கக் குழு

சிவாநந்தா
பழைய மாணவர் சங்க மீள்கட்டமைப்பு

மீள் கட்டமைப்பிற்கான மூலம்

சமூக மீள்கட்டமைப்புச் செயற்பாடுகள் காலத்தின் தேவைக்கேற்ப்ப சமுதாயக் குழுக்களால் முன்னெடுக்கப்படுவது இயற்கை நியதியாகவே பார்க்கப்படுகிறது. ஒரு அமைப்பின் அல்லது நிறுவனத்தின் பயணத்தில் பல்வேறுபட்ட காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவை உள்ளக மற்றும் வெளியகக் காரணிகளாகக் குறித்த நிறுவனத்தின் வளர்சிப் பாதையில் தாக்கத்தை உண்டு பண்ணக கூடியவை. குறிப்பாக ஒரு அமைப்பின் சமகாலப் போக்குகள், அதன் செயலாக்கத் திறன், மாறிவரும் உலகில் நிலைத்து நிற்கக்கூடிய செயற்றிறன் வெளிப்பாடு, கட்டமைப்பின் இயலுமைத் திறன், மற்றும் வெளியகக் காரணிகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். மேலும், அமைப்பிற்குள்ளும் வெளியிலும் ஏற்படும் எல்லை மீறிய முரண்பாடுகள் மற்றும் பிணக்குகள் முதலானவையும் மீள்கட்டமைப்பின் அவசியத்தை வலியுறுத்துவனவாய் அமைந்து விடுகின்றன. இவற்றின் பின்னணியிலேயே சிவாநந்தா பழைய மாணவர் சங்கமும் மீள் கட்டமைக்கப்பட்டது.

காலச் சூழல் சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தின் 56வது பொதுக்கூட்டம் 2014ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5ம் திகதி பாடசாலையில் இடம்பெற்றது. ஆனால், பொதுக்கூட்டத்தின் நோக்கம் நிறைவுறாமல் இடை நடுவிலேயே முற்றுப்பெற்றது. சங்கத்தின் 56 வது பொதுக்கூட்டத்திற்கு அப்போதைய தலைவர் திருவாளர் வி.தவராஜா தலைமை தாங்க சங்கத்தின் பொதுச் செயலாளராக திருவாளர் எஸ். ரவீந்திரன் அவர்கள் அங்கத்தவர்களுக்கான அழைப்பை விடுத்திருந்தார். நிகழ்ச்சி நிரலின்படி நிகழ்வுகள் நடந்து கொண்டிருந்தன. அங்கத்தவர்களின் கருத்துக்களும் சபையோரிடத்தில் பரிமாறப்பட்டன. ஆனாலும், இடைநடுவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட முரண்பாட்டு நிலை பொதுக் கூட்டம் இடைநடுவில் நிறுத்தப்படுவதற்கு ஏதுவாக அமைந்துவிட்டது. இந் நிலையில், சங்க ஆலோசகர்களின் கருத்துகளிற்கமைய சங்கத்தின் கட்டமைப்பு கலைக்கப்பட்டு பாடசாலை அதிபர் திருவாளர் மனோராஜ் அவர்களிடம் அனைத்து அதிகாரங்களும் கையளிக்கப்பட்டன. சங்கத்தின் இடைக்காலத் தலைவராகவும் பாடசாலை அதிபரே இருப்பார் என ஆலோசகர்களால் முன்வைக்கப்பட்ட பரிந்துரை சபையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பொதுக்கூட்டத்தின் நோக்கம்

நிறைவேறாமல் இடைநடுவே முற்றுப்பெற்றது. இவ் வேளையில்தான் சங்க மீள்கட்டமைப்பின் அவசியம் பற்றிய கருத்தாடல்கள் தோற்றம்பெற்றன. எனவே, சங்க மீள்கட்டமைப்பு நடவடிக்கைக்கான காலச் சூழலைத் தோற்றுவித்த நிகழ்வாகவும் சங்கத்தின் 56வது பொதுக்கூட்டதினைப் பார்க்கலாம்.

முற்போக்குச் சிந்தனையில் சிவாநந்தியர்கள்

சங்கத்தின் அதிகாரங்கள் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டு சுமார் ஒரு மாதம் கடந்து விட்ட போதிலும் சங்கம் சார்பாக எதுவித முற்போக்கு நடவடிக்கைகளையும் அவதானிக்க முடியவில்லை. இந்த துர்பாக்கிய நிலையினை உணர்ந்துகொண்ட சில இளம் சிவாநந்தியர்கள் காலத்தின் தேவை கருதி பல சிவாநந்தியர்களை ஒன்றிணைத்து கலந்துரையாடல் ஒன்றினை நிகழ்த்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். இந்த வைரவிழா மலரின் பிரதம பதிப்பாசிரியரான கலாநிதி து.பிரதீபன் இதற்கான ஆரம்பகட்டச் செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்தினார். அவரின் முயற்சிக்கு வலுச்சேர்க்கும் வகையில் சிவாநந்திய நண்பர்களான வி பூபாலராஜா மற்றும் சு. பவானந்தராஜா ஆகியோர் கைகோர்த்துக்கொண்டனர். இவர்கள் மூவரின் அயராத முயற்சி மற்றும் தூரநோக்குச் சிந்தனை சுமார் 75 இற்கும் மேற்பட்ட சிவாநந்தியர்களை ஒன்றிணைத்து ஒரு முற்போக்கான கலந்துரையாடலுக்கான களத்தை அமைத்துக் கொடுத்தது. இந்தக் கலந்துரையாடலானது 2014ம் ஆண்டு நவம்பர் 8ம் நாள் காலை 9.30 மணிக்கு நாவற்குடா இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

எதுவித கட்டமைப்பு மற்றும் அதிகார ஏற்றத் தாழ்வுகள் இன்றி உயரிய நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட கலந்துரையாடலில் அனைவரும் தங்களது கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர். ஆனாலும், சங்கத்தின் சமகாலத் தலைவரான திருவாளர் மு.முருகவேளின் ஆக்கபூர்வமான கருத்தியல் அனைவரினதும் கவனத்தை ஈர்த்தது. அவர் தன்னுடைய கருத்திலே சங்கத்தின் யாப்பு மறுசீரமைப்பதன் தேவைப்பாடு மற்றும் அதனூடான சங்க மீள்கட்டமைப்பு என்பவற்றை வலியுறுத்தினார். மேலும், இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகள் சங்கத்தில் அங்கம் வகிக்கின்ற அனைவரினதும் அங்கீகாரத்தைப் பெறும் வகையிலேயே அமைய வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறியிருந்தார். மேற்படி கருத்தினை அனைவரும் ஏக மனதாக ஏற்றுக்கொள்ள அதனை நடைமுறைப்படுத்தும் பணியில் விருப்பமுள்ளவர்கள் பங்கேற்கலாம் எனும் முடிவு எடுக்கப்பட்டது. ஆனாலும், இச் செயற்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுமாறு சபையோர் விடுத்த வேண்டுகோளை திருவாளர் மு.முருகவேளும் ஏற்றுக்கொண்டார். இதற்கு பக்கபலமாக இருந்து செயற்படுதாக சங்கத்தின் தற்போதயை செயலாளர் சு.பவானந்தராஜா மற்றும் கலாநிதி து.பிரதீபன் ஆகியோர் தாமாகவே முன்வந்தனர். இந் நோக்கத்தை அடைய பல கலந்துரையாடல்களை பல தரப்பினருடன் மேற்கொள்வதன் தேவைப்பாடு பற்றியும் சபையோருக்கு தெளிவுபடுத்தப்பட்டு, சபைபோரின் அங்கீகாரம் பெறப்பட்டது.

பாடசாலை அதிபர், சங்கத்தின் ஆலோசகர்கள், சங்கத்தின் முன்னாள் தலைவர்கள், செயலாளர்கள், மூத்த உறுப்பினர்கள் என அனைவருடனும் பல சந்திப்புக்கள் இடம்பெற்று சங்க மீள்கட்டமைப்பின் தேவைப்பாடு பற்றிய கருத்தியல்கள் பரிமாறப்பட்டன. அனைவரினது கருத்துக்களையும் உள்வாங்கிக் கொண்டு சங்கத்தின் யாப்பினை திருத்தியமைப்பதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. திருவாளர். மு.முருகவேள், கலாநிதி து.பிரதீபன், திருவாளர் சு.பவானந்தராஜா,பொறியியலாளர். எம். மங்களேஸ்வரன், ஆகியோர் இச் செயற்பாட்டில் தங்களைப் பூரணமாக அர்ப்பணித்தனர். திருவாளர் என்.தினேஸ்குமார், இ.முகுந்தன், ஜி.கிரீசன் மற்றும் த.குணராஜா ஆகியோர் இச் செயற்பாட்டிற்கான தங்களின் ஒத்தழைப்பினை நல்கினர். மு. முருகவேள், து. பிரதீபன், சு. பவானந்தராஜா ஆகியோர்களின் உழைப்பில் திருத்தப்பட்ட யாப்பின் முன் வரைபு தயாரானது. ஆனாலும், அதன் உள்ளடக்கம் பற்றிய கலந்துரையாடலின் முக்கியத்துவம் கருதி பாடசாலை அதிபர், வலயக் கல்விப்பணிப்பாளர், சங்கத்தின் பங்குதாரர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்த விசேட கலந்துரையாடல் 2015ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8ம் திகதி பாடசாலையில்

இடம்பெற்றது. இதில் திருத்தப்பட்ட யாப்பு அளிக்கை செய்யப்பட்டு அனைவரிற்கும் விளக்கம் அளிக்கப் பட்டது. தொடர்ந்து இடம்பெற்ற ஆக்கபூர்வமான கருத்தாடல்கள் திருத்தப்பட்ட யாப்பினை மேலும் வலுப்படுத்தியது. இறுதியாக, சங்கத்தின் இடைக்காலத் தலைவராயிருந்த பாடசாலை அதிபரின் தலைமையில் விசேட பொதுக்கூட்டத்திற்கு அழைப்பு விடுத்து அனைவர் முன்னிலையிலும் யாப்பு வாசித்தளிக்கப் படல் வேண்டும் எனவும், அது சபையின் அங்கீகாரத்தைப் பெறும் பட்சத்தில் திருத்தப்பட்ட யாப்பின் பிரகாரம் சங்கத்திற்கான புதிய கட்டமைப்பைத் தெரிவுசெய்து சங்க நடவடிக்கைகள் மீளவும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற முடிவு டனும் கலந்துரையாடல் நிறைவுக்கு வந்தது.

திருத்தப்பட்ட யாப்பும் விசேட பொதுக் கூட்டமும்

சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் 01.03.2015 ஞாயிற்றுக் கிழமை மு.ப.10.00 மணிக்கு சங்கத்தின் இடைக்காலத் தலைவராகச் செயற்பட்ட பாடசாலையின் அதிபர் திரு.கே.மனோராஜ் தலைமையில் நடைபெற்றது. மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது மேலாளர் ஸ்ரீமத் சுவாமி சதுர்புஜானந்தஜீ மஹராஜ் அவர்களின் ஆசியுரை மற்றும் பாடசாலை அதிபரின் வரவேற்புரையுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டதன் நோக்கம், நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்த யாப்புச் சீர்திருத்தம் மற்றும் சங்க மீள் கட்டமைப்பு படிமுறை முதலானவை பற்றிய ஒரு அறிக்கையை திருவாளர் மு.முருகவேள் அவர்கள் சபைக்கு வழங்கியிருந்தார். மேற்கொண்டு கலாநிதி து.பிரதீபன் அவர்கள் சீர்திருத்தப்பட்ட யாப்பினை சபையோர்க்கு அளிக்கை செய்திருந்தார். அதனைத் தொடர்ந்து சீர்திருத்தப்பட்ட யாப்புப் பற்றிய பின்னூட்டல்களை வழங்குவதற்கு சபை யோர்க்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. சிறிய திருத்தங்களுடன் அனைவரினதும் ஒருமித்த ஆதரவுடன் சீர்திருத்தப்பட்ட யாப்பு சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டது. தொடர்ந்து, சீர்திருத்தம் செய்யப்பட்ட யாப்பின் பிரகாரம் புதிய நிர்வாகக் கட்டமைப்பைத் தேர்வு செய்வதற்கான அறிவித்தல் சபையோரிடம் விடுக்கப்பட்டது. சீர்திருத்தப்பட்ட யாப்பின் பிரகாரம் புதிய நிர்வாகக் கட்டமைப்பின் தலைவராக வைத்திய கலாநிதி தெ.சுந்தரேசன் தெரிவுசெய்யப்பட்டார். சங்கத்தின் பொதுச் செயலாளராக திருவாளர் என்.தினேஸ்குமார் அவர்களும், பொருளாளராக திருவாளர் ஏ.முகுந்தன் அவர்களும் தெரிவுசெய்யப்பட ஏனை உறுப்பினர் களின் தெரிவோடு சங்கத்தின் செயற்பாடுகள் சமகாலத் தேவைக்கேற்ற பாதையில் பயணிக்கத் தொடங்கின.

Shivananda Past Pupils' Association
Executive Commitee - 2017/2018

Mr.M.Murugaverl
President

Mr. S.Bawanantharaja
Secretary

Mr.J.Sairajan
Treasurer

Mr.S.Chandrakumar
Vice President

Mr.A.Meerasahib
Vice President

Mr.T.Yasotharan
Principal

Mr.S.Raveendran
Vice Secretary

Mr.S.Elankeeran
Coordinating Secretary (Education)

Mr.M.Ariyathas
Coordinating Secretary (Sports)

Mr.J.Jeyarajan
Coordinating Secretary (Infrastructure)

Dr.T.Pratheepan
Coordinating Secretary (International Relations)

Mr.S.Vijayakumar
Coordinating Secretary (Culture)

Mr.G.Gireeshan
Coordinating Secretary (Fund Raising)

Mrs.T.Harithas
Member

Mrs. J.Kalinkeswaran
Member

Mr.S.Kugan
Member

Mr.G.Muralitharan
Member

Mr.N.Thineskumar
Member

Mr.K.Nilakshan
Member

Mr.S.Vimalathasan
Auditor

Mr.T.Gunaraja
Auditor

Mr.E.Muhunthan
Member

சிநேகபூர்வ கிரிக்கெட் திருவிழா

சிவாநந்தா பழைய மாணவர்களுக் கிடையிலான உறவினை வலுப்படுத்தி சங்கத்தின் செயற்பாடுகளில் ஆர்வத்தினை உண்டு பண்ணு வதை நோக்காகக்கொண்டு கடந்த வருடம் நவம்பர் மாதம் 04ம் திகதி அணிக்கு 06 பேர் கொண்ட மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி சங்கத்தின் விளையாட்டுத் துறைச் செயலாளரால் முன்னெடுக்கப்பட்டது. 1986ம் ஆண்டு பாடசா லையில் படித்த மூத்த உறுப்பினர்கள் முதல் 2016ம் ஆண்டு வரை பாடசாலையில் படித்த இளம் உறுப்பினர்கள் வரை சுமார் 24 அணிகள் இச் சினேகபூர்வ கிரிக்கட் திருவிழாவில் பங்கேற் றிருந்தனர். சகோதரத்துவமும், பங்காற்றலும் நிறைந்த ஓர் நிகழ்வாக இது அமைந்திருந்தது. உறுப்பினர்களுடனான உறவு மீள் கட்டுமானம் பெறுவதற்கான சந்தர்ப்பமாகவும் இந்நிகழ்வு இருந்தது.

பசுமை மரநடுகைத் திட்டம்

சிவாநந்தா பழைய மாணவர் சங்க அறுவதாவது அகவையின் சிறப்புச் செயற்பாட்டுகளில் ஒன்றான "பசுமை யூட்டல்" மரநடுகைத் திருவிழா கடந்த வருடம் டிசம்பர் மாதம் எட்டாம் நாள் பாடசாலை முன்புற வீதியின் மத்திய பகுதியில் கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. பாடசாலைப் பிராந்தியத்தை பசுமைப்படுத்தல் எனும் எண்ணக்கருவின் கீழ் சங்கத் தலைவர் திருவாளர் மு.முருகவேள் மற்றும் உறுப்பினர் களின் அயராத முயற்சியின் பலனாக சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மரங்கள் நடப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரம் மற்றும் உடன்படிக்கையுடன் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. மாநகர சபையின் ஆரம்பகட்ட பங்களிப்பு மட்டுமின்றி தொடர்ச்சியான பராமரிப்பும் உறுதிப் படுத்தப்பட்டுள்ளமையானது குறிப்பிடத்தக்க விடயம். சிவானந்தா பழைய மாணவர் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட இத்திட்டத்திற்கு சங்க உறுப்பினர்கள் மட்டுமன்றி பல இயற்கை நேசிகளும் , அப் பகுதிவாசிகளும் நிதிசார் பங்களிப்பினை நல்கியுள்ளனர். வெளிநாடுகளில் குறிப்பாக கட்டார் தேசத்திலுள்ள உள்ள பழைய மாணவர்கள் மற்றும் ஆர்வமுள்ள சமூகத்தினர்கள் கணிசமான பங்களிப்பை வழங்கி இத்திட்டத்தின் வெற்றிக்கு பங்காற்றியுள்ளனர். சமூக முற்போக்கு நடவடிக்கையாக அமைந்த இந் நிகழ்வில் சிவாநந்தா தேசிய பாடசாலை மற்றும் விவேகானந்தா பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள் ,மாணவர்கள், பழைய மாணவர்கள், மாநகரசபை நிர்வாகிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், சமூகப் பிரதானிகள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். .

பாடசாலைப் படத்துடனான அப்பியாசக் கொப்பிகள் மலிவு விற்பனை

சங்கத்தின் நிதி சேகரிப்புச் செயற்பாடாகவும் பாடசாலை மேம்பாட்டையும் நோக்காகக் கொண்டு பாடசாலைப் புகைப்படம், பாடசாலைக் கீதம் என்பவற்றைப் உள்ளடக்கிய அப்பியாசக் கொப்பிகள் அச்சிடப்பட்டு எமது பாடசாலை மாணவர்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டன. 2006ம் ஆண்டு உயர்தரம் மற்றும் 2003ம் ஆண்டு சாதாரண தரம் பிரிவு மாணவர்களின் அனுசரணையில் இத் திட்டம் சிறந்த முறையில் நடைபெற்றது.

விளையாட்டு மைதான வீதியோர மேம்பாட்டுத் திட்டம்

எமது மைதானத்துக்கு முன்னால் உள்ள வடிகான்களை மூடுவதற்கான Concrete Slabகளினைப் பெற்று அதனை பொருத்து வதற்கான வேலைத்திட்டமானது ப. மா. சங்கத்தலைவர் மற்றும் உறுப்பினர்களின் முயற்சியின் பேரில் முன்னெடுக்கப்பட்டது.

நிதிசேகரிப்புக்கான விசேட நிகழ்வு (Car Wash)

நிதி சேகரிப்பு வேலைகளில் ஒன்றாக பழைய மாணவர் சங்கத்தால் இந்நிகழ்வு கடந்த வருடம் டிசம்பர் 2ம் திகதி ஒழுங்குபடுத்தப்பட்டு சிறப்பாக இடம்பெற்றது. பல சிவாநந்தி யர்கள் இதில் ஆர்வமுடன் பங்கேற்றிருந்தனர். 2015 க.பொ.த உயர்தர மாணவர்கள் இந்நிகழ்வினை ஒழுங்கு படுத்துவதில் முதன்மையாக செயற்பட்டனர்.

பாடசாலையில் இடம்பெற்ற சிரமதானம்

எமது சங்க அங்கத்தவர்களினால் பாடசாலை சுற்று வளாகத்தில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சங்கத்தின் பிரதான திட்டங்களில் ஒன்றாக இடம்பெற்ற இந் நிகழ்வு சுமார் 03 நாட்கள் நடைபெற்றது. பல சிவாநந்தியர்கள் இதில் பங்குபற்றி தங்கள் சேவைகளை வழங்கியிருந்தனர். இவ்வருடம் ஜனவரி 28ம் திகதியிலிருந்து மூன்று சனிக்கிழமைகள் இச் சிரமதானப் பணிகள் இடம்பெற்று உரிய நோக்கத்தை அடைந்தது.

தலைமைத்துவப் பயிற்சி

இருபத்தி ஐந்தாவது "பொன் அணிகளின் போர்" கிரிக்கட் போட்டியில் பங்குகொள்ளும் மாணவர்களின் திறமையை ஊக்குவிக்கும் பொருட்டு விசேட தலைமைத்துவப் பயிற்சி சங்கத்தின் தலைவர் மு.முருகவேள் தலைமையில் வெற்றிகரமாக நடைபெற்றிருந்தது. சங்கத்தின் விளையாட்டுத் துறைச் செயலாளர் ம.அரியதாஸ் அவர்களின் இணைப்பாக்கத்தில் ஏப்ரல் மாதம் நடைபெற்ற நிகழ்வுகள் மாணவர்களின் உள மற்றும் உடல் சார் மேம்பாடுகளுக்கு சிறந்த உந்துசக்தியைக் கொடுத்திருந்தது.

சிவாநந்த நாமத்தைச் சிகரம் தொட வைத்த "ஆற்றல்" கல்விக் கண்காட்சி

சிவாநந்த நாமத்தை சிகரம் தொடவைத்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக "ஆற்றல்" எனும் பெயரில் அமைந்த கல்விக் கண்காட்சி முத்திரை பதித்தது. சுமார் ஒரு தசாப்த காலத்திற்கு பிறகு சிவாநந்தா தேசிய பாடசாலையில் இடம்பெற்ற மகத்தான நிகழ்வாக வரலாற்றை பதிவு செய்துள்ளது "ஆற்றல' கல்விக் கண்காட்சி. சிவாநந்தா தேசிய பாடசாலையின் ஆரம்பப் பிரிவுடன் சிவாநந்தா பழைய மாணவர் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்த ஆற்றல் கல்விக் கண்காட்சியானது மே மாதம் 2 மற்றும் 3 திகதிகளில் இடம் பெற்றது.

மாணவர்களின் முயற்சியில் உருவாக்கப்பட்ட கைவினை மற்றும் கைப்பணிப் பொருட்களாலும் மாணவர்களுக்கான பயன் தரு காட்சிப் பொருட்களாலும் நிறையப்பெற்ற கண்காட்சிக் கூடத்தை சுமார் 5000 க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பார்வையிட்டுச் சென்றமை சங்கத்தின் உயரிய நோக்கிற்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும். மட்டக்களப்பு கல்வி வலயத்திற்கு உட்பட்ட சுமார் 33 பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கண்காட்சியினை கண்டுகளிக்க வருகை தந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். பாடசாலை அதிபர் திருவாளர் ரி.யசோதரனின் பூரண ஆதரவு நிகழ்வின் வெற்றிக்கு உறுதுணை அளித்திருந்ததோடு பாடசாலையின் பெயரை பல வழிகளிலும் உயர்தியிருந்தமை குறிப்பிடப்படவேண்டிய விடயம். சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் திருவாளர் முருகவேள், தேர்வுத் தலைவர் பொறியியலாளர் மங்களேஸ்வரன் மற்றும் உறுப்பினர்களின் இரவு பகல் பாராத கடும் உழைப்பும் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் இணைந்து மேற்கொண்ட திட்டமிடலும் நிகழ்வின் வெற்றிக்கு அடிப்படையாக அமைந்திருந்தமை பலராலும் பாராட்டப்பட்டது. திருவாளர் ஐங்கரன் தலைமையிலான பழைய மாணவச் சாரணர் படையணியினரின் பாசறைக் கட்டமைப்பு கண்காட்சிக் கூடத்திற்கு வலுச்சேர்த்ததோடு சாரணியத்தின் மீது மாணவர்களை ஊக்குவிப்பதற்கான பொறிமுறையையும் கொண்டமைந்தமை சிந்திக்கத் தக்கது. 'ஆற்றல்' எனும் அருமையான தொனிப்பொருளில் அமையப்பெற்ற கண்காட்சி ஒழுங்கமைப்பானது சமூகத்திற்கு பல்வேறுபட்ட படிப்பினைகளை போதிப்பதாய் அமைந்திருந்ததோடு தற்காலத்திற் கேற்ற நிகழ்ச்சி முகாமைத்துவ செயற்பாட்டிற்கு முன்னுதாரணமாய் அமைந்திருந்தமையும் கவனிக்கற்பாலது. பாடசாலையும் பழைய மாணவர் சங்கமும் இணைந்து ஒரு நிகழ்வை எவ்வாறு வெற்றி கரமாக ஒழுங்கமைக்கலாம் என்பதற்கு சிறந்த முன்மாதிரியாகவும் இந்த நிகழ்வைப் பார்க்கலாம்.

ஒரு பாடசாலை பழைய மாணவர் சங்கம் வெறுமனே அனுசரணையாளராக மாத்திரம் அல்லாது எவ்வாறு தாங்களும் பங்குதாரராக இருந்து, பாடசாலை முன்னேற்றச் செயற்பாடுகளில் பங்குபற்றலாம் என்ற முற்போக்குக் கருத்தூட்டலை இந்நிகழ்வு வலுவடையச் செய்துள்ளமையும் கண்கூடு. இது அபிவிருத்தியடைந்த நாடுகளில் இருக்கின்ற பாடசாலை முன்னேற்றத் திட்டங்களோடு ஒத்துப்போகின்றமை அவதானிக்கப்படவேண்டியது. பொதுப்படையில், மகத்தான நிகழ்வாக அதன் உயரிய நோக்கின் வெற்றியோடு இனிதே நிறைவடைந்தது.

தளபாடங்கள் திருத்தும் செயற்றிட்டம்

பாடசாலையின் அடிப்படைப் பிரச்சினையாக இருந்துவரும் தளப்பாடப் பற்றாக்குறைப் பிரச்சினைக்குத் தீர்வாக முன்னெடுக்கப்பட்ட இத் திட்டம் இரண்டு கட்டங்களாக நடைபெற்றது. அதில் 1990 இல் க.பொ.த உயர்தரம் படித்த சிவாநந்தியர்களின் முழு அனுசரணையில் இடம்பெற்ற நிகழ்வில் சுமார் 100 கதிரைகள், 100 மேசைகள் என்பன பாவனைக்கு ஏற்ற வகையில் திருத்தியமைக்கப்பட்டன. மேலும் பழைய மாணவன் சு.சந்திரசேகரத்தின் தனிப்பட்ட அனுசரணையின் மூலம் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட தளபாடங்கள் திருத்தம் செய்யப்பட்டு, வர்ணம் பூசப்பட்டதாக பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

சிவாநந்தியன் விருது விழா

சிவாநந்த வித்தியாலய மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 2017ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சிவாநந்தியன் விருது விழா இவ்வருடமும் சிறந்த முறையில் இடம்பெற்றது. சங்கத்தின் அறுபதாவது அகவையை யொட்டி மிகவும் கோலாகலமாக இடம்பெற்ற நிகழ்வானது, சிவாநந்த நாமத்தை சிகரம் தொட வைத்தது என்றே சொல்லலாம். அந்த வகையில் செப்டெம்பர் 29ம் நாள் சனிக்கிழமை பி.ப 5.30 மணிக்கு ஆரம்பமான விருது விழா, சங்கத்தின் தலைவர் திருவாளர் மு.முருகவேள் தலைமையில் கலை நிகழ்வுகளின் சங்கமிப்போடு மிகவும் திறம்பட நடாத்தி முடிக்கப்பட்டது.

சிவாநந்தியன் விருது – விழா 2018இல் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான 27 மாணவர்களுக்கும் தேசிய ரீதியில் விளையாட்டில் சாதனை படைத்த ஒரு மாணவனுக்குமாக மொத்தம் 28 மாணவர்களுக்குப் பெறுமதியான விருதும் பணப்பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இராமகிருஷ்ண மிஷன் பொது மேலாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷஜானந்தஜீ மஹராஜின் ஆசீர்வாத உரையுடன் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. சிவாநந்தாவில் இன்றும் உணரக் கூடியதாய் இருக்கின்ற ஆன்மீக உணர்வு பற்றிய சுவாமிகளின் கருத்து அனைவரையும் மனங்கவர வைத்து சிந்திக்கத் தூண்டியது.

சங்கத்தின் தலைவர் மு.முருகவேள் தனது உரை யில் சிவாநந்தியன் எனும் நாமத்தின் தனித்துவம் பற்றி ஆழமான கருத்துகளை சிறந்த உதாரணங்களுடன் விளக்கிக் கூறியதோடு வளர்ந்து வரும் சிவாநந்தியர்கள் சமூகத்தின் முன்னோடி களாக மிளிர எவ்வாறான பண்பியல் புகளை கொண்டிருக்க வேண்டும் என்ற கருத்துக்கு அதீத முக்கியத்துவம் கொடுத்தமை அனைத்து சிவாநந்தியர்களுக்கும் சிறந்த உள்ளீட்டினைக் கொடுத்தது.

பாடசாலை அதிபர் திருவாளர் ரி.யசோதரன் தனது உரையில்

மாணவர்களுக்கு அவசியமான சிறந்த அறிவுரைகளைக் கூறியதோடு பாடசாலை வளர்ச்சியில் சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தின் மகத்தான பங்களிப் புக்கள் மற்றும் ஆதரவுச் செயற்பாடுகளைப் பேருவகையுடன் பகிர்ந்து கொண்டார். நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த மட்டக்களப்பு மாநகர முதல்வர் கௌரவ சரவணபவான் சிவாநந்தாவின் வரலாற்றுக் கருத்துக்கள் சிலவற்றை கூறினார். சிவாநந்தியன் விருது விழாவுக்கான அறிமுக உரையினை வழங்கிய கலாநிதி து. பிரதீபன் இலங்கைப் பல்கலைக் கழக மாணவர் உள்ளீர்ப்புச் செயன்முறை பற்றிய விளக்கத்தினை புள்ளிவிபரங்களுடன் தெளிவுபடுத்தினார். சிவாநந்தியன் விருதில் கௌரவிக்கப் பட்ட மாணவர்களின் சுயவிபரங்கள் மற்றும் கருத்துக் களைத் தாங்கிய பிரமாண்டமான காணொலி சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தின் அலகாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற சிவாநந்தியன் பட்டமுன் மாணவர் சங்கத்தின் நெறியாழ்கையில் காண்பிக்கப்பட்டு சிறந்த வரவேற்பைப் பெற்றது. இன்னிசையும் நர்த்தனமும் இணைந்த அரங்க நிகழ்வுகள் சிவாநந்தியன் விருது விழாவிற்கு புத்துணர்வையும் புதுப்பொலிவையும் அழித்திருந்தமை கண்கூடு. சிவாநந்தாவின் நடன மற்றும் சங்கீத ஆசிரியைகளின் மகத்தான பங்களிப்பு மற்றும் செயற்பாடு கலை நிகழ்வுகளின் சங்கமிப் புக்கு அத்திவாரமிட்டது. இவற்றுக்கப்பால் இளம் சிவாநந்தியன் பிரதீபன் சிற்சபேசன் நடுவண் வகித்து வீணை மற்றும் வயலின் மீட்ட சிவாந்தியர்களான கலாநிதி தெ.பிரதீபன் மற்றும் யூட் நிரோசன் இணைந்து வளங்கிய பல்லிசைக் கதம்பம் ஓர் இன்னிசை இரவாய் பார்வையாளர்களை வசப்படுத்தியது. சிவாநந்தியன் விருது விழா -2018 க்கு பல சிவாநந்தியர்கள் மற்றும் சிவாநந்த சமூகத்தினர் பண உதவி, புலமைத்துவ உதவி, சரீர உதவி மற்றும் ஆலோசனைகளை வழங்கியிருந்தார்கள். சங்கத்தின் பொதுச் செயலாளர் திருவாளர் சு.பவாநந்தராஜா நன்றியுரை ஆற்றினார். பாடசாலைக் கீதத்துடன் நிகழ்வுகள் முடிவுக்கு வர இராப்போசனத்துடன் கூடிய விருது விழாவாக நிறைவிற்கு வந்தது சிவாநந்தியன் விருது விழா.

ஆவணப் படம்

சிவாநந்தா பழைய மாணவர் சங்க அறுபதாவது ஆண்டு சிறப்புத் திட்டத்தில் பாடசாலை வரலாற்று ஆவணப் படம் வெளியிட எடுக்கப்பட்ட தீர்மானம் மிகவும் முக்கியமானது. சங்கத்தின் தலைவர் மு.முருகவேள் அவர்களின் கருதியல் மூலம் கருக்கொண்ட இம் முயற்சி 60வது ஆண்டு சிறப்பு நிகழ்வில் வெளியிடப்படுவது சங்கத்தின் பயணத்தில் ஓர் மைல்கல் என்றே சொல்லலாம். பாடசாலைக்கு வரலாற்று ஆவணப் படம் இல்லாதிருந்த குறையை இது நீக்கியுள்ளது. சிவாநந்தா பட்டமுன் மாணவர் சங்கத்தின அர்பணிப்புமிக்க சேவை இத் திட்டத்தின் வெற்றிக்கு பாரிய பங்காற்றியிருந்தது.

உறுப்பினர்கள் விலாசக் கையேடு

சங்கத்தின் 60வது ஆண்டை முன்னிட்டு சங்க உறுப்பினர்களின் விலாசம் மற்றும் தொடர்பாடல் மூலங்கள் அடங்கிய கையேடு ஒன்றை வெளியிட வேண்டும் என்ற சங்கத்தின் நோக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது. அங்கத்தவர்களைத் தொடர்பு கொள்வதில் இருந்த நீண்ட காலப் பிரச்சினைக்கு சிறந்த தீர்வை இது கொடுத்துள்ளது. சங்கத் தலைவரின் அர்பணிப்பு மிக்க தலைமைத்துவம் மற்றும் சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தின் இணைப்பாளர் நிதுஷின் பங்குபற்றல் என்பன விலாசக் கையேடு வெளியிடப்படுவதற்கு பிரதான காரணங்களாகின்றன. மேலும் பல இளம் சிவாநந்தியர்களின் அர்பணிப்பும் குறிப்பிடத்தக்கது.

சிவானந்தாவால் சிகரம் தொட்ட சிவானந்தாவின் ஸ்டீபன் கோகன்ஸ்

நேர்கண்டவர்கள் கலாநிதி **து.பிரதீபன்,** திருவாளர் **மு.முருகவேள்,** திருவாளர் **கோ.குகன்**

நேர்கண்ட இடம் : மண்டூர் (வதிவிடம்) திகதி : 28.04.2018 நேரம் : மு.ப. 10.30- பி.ப. 1.00 மணி வரை.

விருட்சமான விதை

எட்டு வயதில் சுவாமி விபுலானந்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர். சுவாமிகளாலேயே சிவானந்தாவிற்கு அழைக்கப்பட்டு, பத்து வயது முதல் சிவானந்தியனாக வளர்ந்து, கணித நுட்பங்கள் பலவற்றை சுவாமி விபுலானந்தரிடமிருந்தே பெற்றவர். சுவாமி விபுலானந்தரால் ஆற்றுப்படுத்தப்பட்ட மாணவர்கள் வரிசையில் முக்கியமானவர். பல் துறையிலும் பாண்டித்தியம் பெற்று, சர்வதேச அளவில் கணிதத் திறமையை வெளிப்படுத்தி, பன்னாட்டுப் பல்கலைக்கழகங்களில் பணியாற்றி, பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்குகளில் தனது ஆய்வுப் புலமையை நிரூபித்தவர். கணிதப் புலமை மட்டுமல்லாது, ஆங்கிலத்திலும் தேர்ச்சிபெற்று விளங்கியவர். பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கியவர் ஓய்வுபெற்ற பேராசிரியர் எனும் நிலையிலிருந்து எம்மைவிட்டுச் சென்றவர். உலக வல்லரசான அமெரிக்காவில் அதிக காலம் கழித்திருந்தாலும், தன் சொந்த நாட்டில் வாழ்ந்து மடியவேண்டும் எனும் வேட்கையோடு இருந்தவர். கடைசிவரை கல்வியிலேயே தன்னை அர்ப்பணித்தவர். ஆய்வுக் கட்டுரைகள், நூல் களை எழுதியவர். வல்லாதிக்க நாட்டில் வாழ்ந்திருந்தாலும் எளிமையான வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர். தேசிய கல்வித்துறை வளர்ச்சிக்கு தனது புலமைப் பங்கை வழங்கியவர். கணிதப் பேராசிரியராக இருந்ததோடு கல்வித்துறைப் பேராசிரியராகவும் பணியாற்றியவர். கொழும்புப் பல்கலையில் பலகாலம் பணியாற்றியவர். பொட்சுவானாப் பல்கலைக் கழகத்தில் கணிதப் பேராசானாகக் கடமையாற்றியவர். ஆசிரியப் பணியை அர்ப்பணிப்போடு செய்தவர். சிவானந்தாவில் மாணவனாக மட்டுமன்றி ஆசிரியராகவும் கடமையாற்றியவர். தமிழ்ச் சமூகத்தின் உயர்வு, விஞ்ஞான அறிவு வளர்ச்சியில் மிகவும் தங்கியுள்ளது என நம்பியவர். சமூகம் பற்றிய பார்வையில் சுவாமி விபுலானந்தரின் முற்போக்கான சமூக நோக்கத்தின் தகுதி வாய்ந்த வாரிசு என்றும் தைரியமாகக் கூறலாம். நூல்களை நேசிப்பவர். அவற்றை அக்கறையுடன் வாசித்துப் பிறருக்கும் அறிமுகப்படுத்துபவர். உண்மையில் அவர்

ஓர் மனித நூலகம். இப்பேர் பட்டவரை சிவாநந்தாவின் ஸ்டீபன் ஹோக்கிங் என வர்ணிப்பது சாலப் பொருத்தமே.

பன்மைத்துவ ஆளுமைகொண்ட இந்தச் சிவாநந்தியன் இவ்வுலகை விட்டுச் செல்வதற்கு சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்புதான் அவரை நேர்காணல் செய்வதற்காக சிவாநந்தா பழைய மாணவர் சங்கத் தலைவர் திருவாளர் மு.முருகவேள் தலைமையிலான குழுவினர் சென்றிருந்தனர். அறிவே வடிவான அந்த ஆளுமையை சந்தித்துப் பெற்ற விடயங்கள் இங்கு பிரசுரிக்கப்படுவது உண்மையில் சமகால சமூகத் திற்கு அத் தியாவசியமான தொன்றாகவே பார்க்கப்படுகிறது. சித்திரை மாதம் 28இல் நேர்காணல் இடம்பெற, அடுத்து வந்த வைகாசி மாதம் 15ம் நாள் இவ்வுலகைவிட்டு இறை யுலகையடைந்தார் இப் பெருமைகளுக்குச் சொந்தக் காரரான அமரர் கலாநிதி கோணாமலை கோணேச பிள்ளை. இந்த சிறப்பு அறிமுகத்துடன் விருட்சமான விதையை நோக்கிய நேர்காணல் பக்கம் செல்வோம்.

நேர்காணல் மூலம்

21ம் திகதி சித்திரை மாதம் 2018, காலை 9.30 மணியளவில் அலைபேசியில் ஓர் அறிமுக மில்லாத அழைப்பு, கனகனத்த ஆனால் கம்பீரமான குரலில், "ஹலோ..." எனத் தொடங்கி, "நான் கோணேசபிள்ளை கதைக்கிறேன்" எனத் தொடர்கிறது. வீரகேசரியில் "சிவாநந்தா பழைய மாணவர் சங்க வைரவிழா மலருக்காக கட்டுரை கேட்டுப் பிரசுரித்த செய்தியைப் பார்த்தேன். ஆனால் எழுத முடியாத நிலையில் உள்ளேன்" என்று சொல்லியவரிடமிருந்து சிரிப்பொலி கேட்டது. சிறந்த அறிமுகம், நிறைந்த சொல்வளத்துடன் தொடங்கிய உரையாடலை செவிமடுத்த மறுகணமே, அவர் பேராசிரியர் கோணசபிள்ளை என்பதை அறிந்துகொண்டேன். அவருடைய சாதனைகள், திறமைகள மற்றும் புலமைத்துவம் என்பனவற்றை பத்திரிகைகள், வலைத்தளங்கள மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் அறிந்து கொண்டமையினாலும், நம்மவர்கள் சொல்லக் கேட்டதினாலும் அவர் மேல் இயல்பாகவே இருந்த அதீத மரியாதையினாலும் அவர் தனது கருத்தை தொடர்வதற்கு முன்பாகவே "நாங்கள் அடுத்த சனிக்கிழமை உங்களை நேர்காணல் செய் வதற்காக வருவோம்" என்று கூறி, "அதற்கு நேரம் ஒதுக்கித் தருவீர்களா?" என்று கேட்டேன். அதீத மகிழ்ச்சி அடைந்தவராய் தனது பொக்கை வாயைத் திறந்து சிரித்து "எப்போது வேண்டுமானாலும் வாருங்கள்" என்று தனது சம்மதத்தைத் தெரிவித்தார். மேற்படி விடயம் சங்கத்தின் தலைவர் திருவாளர் மு.முருகவேள் அவர்களிடம் தெரிவிக்கப்பட, அவ ரும் தனது காரிலேயே நேர்காணலை மேற்கொள்ளச் செல்வோமெனச் சொன்னார். அதன்படி 28.04.2018 அன்று முற்பகல் 9.30 மணியளவில் பேராசிரியரின் சொந்த ஊரான மண்டூரை நோக்கிப் புறப்பட்டோம். எங்கள் இருவருடன் எமது பாடசாலைப் பழைய மாணவனும் கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை விரிவுரையாளருமான கோ.குகன் அவர்களும் இந்த நேர்காணல் பயணத்தில் பங்குகொண்டிருந்தார். சரியாக 10.30 மணிபோல் அவருடைய வீட்டைச் சென்றடைந்தோம். எங்கள் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த பேராசிரியரின் தோற்றம் உண்மையில் நவீன காலத்தின் தலைசிறந்த விஞ்ஞானியாக இருந்து மரணித்துவிட்ட ஸ்டீபன் ஹோக்கிங்கை நேரில் பார்ப்பது போன்ற மனப்பதிவை எம்மில் உண்டுபண்ணியது. சக்கர நாற்காலியில் அமர்ந்திருந் தவாறே "உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்" எனப் பேசியவாறு வரவேற்றார். மண்டூர் வாசனைக்கேற்ப சிறந்த உபசாரம், தேநீர் அருந்தியவாறே நேர்காணலை தொடங்கினோம். வயது 89 ஆக இருந்தாலும் பேச்சிலே இருந்த தெளிவும் அவரது ஞாபக சக்தியும் எம்மை வியப் படையவே செய்தன. எங்களைப் பற்றி விசாரித்தவர் மிகவும் சந்தோசமடைந்ததோடு தனது வீட்டிற்கு வருகை தந்தமைக்காக நன்றியையும் தெரிவித்துக் கொண்டார். சமகால விடயங்கள் பற்றிப் பேசியவாறே எங்களது நோக்கத்தை மையப்படுத்திய உரையா டலைத் தொடர்ந்தோம்.

சிவாநந்தாவில் படித்து உயர்ந்தவர்களில், உங்களைப் பற்றியும் நிறையப்பேர் பேசுவதை கேட்டிருக்கின்றோம். சிவாநந்தாவிற்கும் உங்களிற் குமான ஆரம்பத் தொடர்பு பற்றிக் கூறமுடியுமா?

சிவாநந்தாவுக்கும் எனக்குமான தொடர்பை உண்டு பண்ணியவர் விபுலானந்த சாமிதான். நான் மூன்றாம்

ஆண்டு படித்துக்கொண்டிருக்கும் போது விபுலானந்த சாமி மண்டூரிற்கு வந்திருந்தார். அப்போது மண்டூரில் நான் படித்த பாடசாலை இராமகிருஷ்ண மிஷன் நிர்வாகத்தின் கீழ்தான் இருந்தது. அவ்வேளை பாடசாலைகளிற்கான முகாமையாளராக இருந்தவர் விபுலானந்த சாமி. அதனால் பாடசாலையைப் பார்ப்பதற்கு சாமி வந்திருந்தார். எங்களது வகுப்பறைக்கு வந்தவர் எங்களோடும் கதைத்தார். பிறகு என்னைப் பார்த்து "ஆறாம் வகுப்புக்கு சிவாநந்தாவுக்கு வா" என்று அழைப்பு விடுத்துச் சென்றுவிட்டார். இந்த அழைப்பு தான் சிவாநந்தாவிற்கு நான் போவதற்கு பிரதான காரணம். 1940இல் ஐந்தாம் ஆண்டு ஸ்கொலஷிப் பரீட்சை எழுதி அதில் பாஸ் பண்ணி விட்டேன். விபுலாநந்த சாமியின் அழைப்பிற்கிணங்க 1941 இல் எனது அப்பா என்ன சிவாநந்தாவில் சேர்த்து விட்டார். அவ்வேளை விபுலானந்த சாமி இந்தியாவுக்குச் சென்று விட்டதாக அறிந்தேன். நான் போயிருந்த வேளை நிஷ்கமானந்த சாமிதான் பாடசாலை மற்றும் விடுதி நிர்வாகத்திற்கு பொறுப்பாக இருந்தவர்.

> பத்து வயது முதல் சிவாநந்தியனாக வளர்ந்து, கணித நுட்பங்கள் பலவற்றை சுவாமி விபுலானந்தரிடமிருந்தே பெற்றவர். சுவாமி விபுலானந்தரால் ஆற்றுப் படுத்தப்பட்ட மாணவர்கள் வரிசையில் முக்கியமானவர்.

ஊர்ச் சூழலை விட்டு வித்தியாசமான அதுவும் விடுதிச் சூழல், அது உங்களுக்கு எப்படி இருந்தது?

எனக்கு அது சாதாரணமாகத்தான் இருந்தது. அதற்கு ரெண்டு காரணம். ஒன்று விடுதி நிர்வாகத்திற்கு பொறுப்பாயிருந்த நிஷ்கமானந்த சாமியின் அன்பு கலந்த நிர்வாக முறைமை. அடுத்தது ஏற்கெனவே மண்டூரிலிருந்து சிவாநந்தாவில் படித்துக்கொண்டிருந்த எனது உறவினர்களான சிவசுப்ரமணியம் (என்ஜினியர்) பத்தகுட்டி சந்திரசேகரம் (முன்னாள் கல்வித்துறை விரிவுரையாளர்). இதனால் விடுதி வாழ்க்கை எனக்கு பெரியளவிலான இடைவெளியைக் காட்டவில்லை. காலையில 4.30 மணிக்கு எழும் பினாலும் அது ஒருவகை இனிமையான அனுபவமாகத்தான் இருந்தது. அதிகாலை எழும்பியதிலிருந்து உடற்பயிற்சி, பிரார்த்தனை என இடம்பெறும் தொடர் நிகழ்வுகள் உள்ளத்து உணர்வாய் இன்றும் உள்ளன.

நீங்கள் சிவாநந்தாவில் படித்த காலத்தில் ஆசிரியர் மற்றும் அதிபர்களின் கற்பித்தல் மற்றும் தலைமைத்துவம் பற்றி..?

சிவாநந்தாவில் முருகுப் பிள்ளை சேர்தான் எனக்கு முதன்முதலில் கற்பித்தவர். அவர் ஓர் ஆங்கில ஆசிரியர். எனது ஆங்கிலப் புலமைக்கு அடித்தள மிட்டவர். அதுக்குப் பிறகு கணபதிப்பிள்ளை சேர் ஆங்கிலம் படிப்பித்தார். இவரிடம் இருந்த அதீத ஆங்கிலப் புலமையும், தகைமையும் என்னை ஆங்கிலப் புலமையுள்ளவனாக மாற்றியதை மறக்க முடியாது. அடுத்து தமிழ் பண்டிதர் வீ.சி.கந்தையா. இவர்தான் தமிழ்மொழிப் பாண்டித்தியத்திற்குக் காரணமாயிருந்தவர். பெயர்போன இவரின் தமிழ்ப் புலமை என்னைத் தமிழிலும் பாண்டித்தியம் பெறக் காரணமாயிற்று. நான் படித்த காலத்தில் பாடசாலைக்கு அதிபராய் இருந்தவர் அம்பலவாணர் சேர். பல துறையிலும் புலமை பெற்றவர். கணிதம், விஞ்ஞானம் இரண்டையும் சிறப்பாகக் கற்பிக்கும் வல்லமை படைத்தவர். அவர் அதிபராக இருந்து சிறந்த நிர்வாகம் நடத்தியதோடு, கற்பிப்பதிலும் தன்னை ஈடுபடுத்தி இருந்தார். பாடசாலை முடிந்த பின்னர் ஆச்சார்ய மந்திர்க்கு எங்களை வரவழைத்து

> சமூகம் பற்றிய பார்வையில் சுவாமி விபுலானந்தரின் முற்போக்கான சமூக நோக்கத்தின் தகுதி வாய்ந்த வாரிசு என்றும் தைரியமாகக் கூறலாம்.

விசேட வகுப்புக்களையும் எடுத்திருந்தார். எனது விஞ்ஞான அறிவு மேம்பாட்டிற்கு இவர்தான் காரணமாக இருந்தவர். நான் 7ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தவேளை அம்பலவாணர் சேருடன் கல்லடியிலிருந்து கால்நடையாக கணித ஆசிரியர் தேடி அரசடிக்குச் சென்ற சம்பவம் இன்னும் ஞாபகத்தில் உள்ளது. அப்போது கணித ஆசிரியர் பற்றாக்குறை பாடசாலையில் பெரும் பிரச்சினை யாகவே இருந்தது. அரசடியில் இந்தியாவைச் சேர்ந்த திருநாவுக்கரசு எனும் ஒருத்தர் இருப்பதாகவும் அவர் சிறந்த கணிதமேதை என்பதையும் கேள்விப் பட்டு, அவரை பாடசாலைக்கு அழைத்து வரும் பொருட்டே இருவரும் அரசடிக்கு நடந்து சென்றிருந் தோம். அம்பலவாணர் சேரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட திருநாவுக்கரசு மாஸ்ரர் சிவாநந்தா விற்கு கணித ஆசிரியராக நியமனம் பெற்றுக் கொண்டார். அம்பலவாணர் சேர் மாணவர்களோடு கண்டிப்புடன் நடந்துகொண்டாலும் அதீத அக்கறை கொண்டவராக விளங்கினார். கிழக்கு மாகாணத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் பெற்றிருந்த ஒரேயொருவராக அவர் இருந்தமையினால், கிழக்கு மாகாணத்தில் சிவாநந்தாவிலிருந்தே முதன்முதலான எஸ்.எஸ்.சி. விஞ்ஞானப் பிரிவில் மாணவர்கள் சித்தியடைந்திருந்தார்கள். அதற்கு காரணமாக இருந்தவர் அம்பலவாணர் சேர்தான்.

உங்களது சாதனைப் பயணத்தில் சிவாநந்தாவின் வகிபாகம் எப்படி இருந்தது என்பதைச் சொல்ல முடியுமா?

எனது வெற்றிகளுக்கும், சாதனைகளுக்கும் அடிப்படைக் காரணமாக இருந்தது சிவாநந்தாதான். நான் சிவாநந்தாவில் 1941 தொடக்கம் 1947 வரை படித்தேன். இந்தக் காலகட்டத்தில்தான் நான் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் பெற்றுக்கொண்டேன். எனக்குக் கிடைத்த பட்டங்கள், பதவிகள், வேலைவாய்ப்பு அனைத்துமே சிவாநந்தா வின் மூலமும் விபுலானந்த சாமியின் வழிகாட்டல் மற்றும் ஆசீரவாதம் மூலமுமே கிடைத்தன. பல்துறையில் பாண்டித்தியம், பல்மொழிப் புலமை, நல்ல பண்புகளோடு வாழ்தல் முதலிய அனைத்தை யுமே நான் சிவாநந்தாவிலிருந்தே கற்றுக்கொண்டேன்.

பாடசாலை அனுபவங்கள் உங்கள் பிரத்தியேக அல்லது தொழில் வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்தியிருந்தால் அது பற்றிச் சொல்ல முடியுமா.?

பாடசாலையில் கற்றவைகள், ஆசிரியர்கள் அதிபரினால் சொல்லப்பட்ட அறிவுரைகள், விடுதி வாழ்க்கை கற்றுத் தந்த வாழ்க்கை முறை, சாமிமார் களின் அறிவுரை இவைகள் அனைத்துமே எனது தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி, உயர்கல்வி படிக்கும் போதும் சரி, ஏன்? எனது தொழில் வாழ்க்கையிலும் அதிகூடிய செல்வாக்கினைச் செலுத்தியிருந்தன. சிறுவயதில் கல்வி கற்கக் தொடங்கியதிலிருந்து இன்றுவரை அந்த அனுபவங்கள்தான் எனது ஒவ்வொரு படியிலும் செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருக்கின்றன.

சரி இவற்றில் ஏதாவது மறக்கமுடியாத சம்பவத்தைச் சொல்லுவீர்களா?

நான் சிவாநந்தாவிற்குப் போய்ச் சேரக்குள்ள விபுலாநந்த சாமி சிவாநந்தாவில் இருக்கவில்லை. அவர் பிரபுத்தபாரத பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்று இந்தியாவிற்குச் சென்றுவிட்டார். ஆனால் விபுலாநந்த சாமி இருந்த காலத்தில் அவர் பல தடவைகளில் சில வகுப்புகளுக்குச் சென்று கணக்கு மற்றும் விஞ்ஞானப் பாடங்களைச் சொல்லிக் கொடுத்ததாகக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அதனால் எனக்கும் என்னுடைய வகுப்பு நண்பர்களுக்கும் அவரிடம் ஒருதரமாவது படித்து விடவேண்டும் என்ற ஆசை இருந்தது. மூன்று வருடங்கள் கழித்து அவர் இலங்கை வருவதாகக் கேள்விப்பட்டோம். அதேபோன்று இலங்கை வந்தவர் மட்டக்களப்பிற்கு வந்து பழைய படி தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இக் காலகட்டத்தில்தான் அவரிடம் கணக்குப் படிப்பதற்கான சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. சாமிக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் எங்களது வகுப்புக்கு வந்து பாடம் எடுப்பார். கணிதத்தில் மிகுந்த வல்லவரான சுவாமிகள் அதனை ஏனையோர்க்குக் கற்றுக்கொடுப்பதிலும் தலைசிறந்தவர் என்பது அப்போதுதான் எங்களுக்குக் தெரிந்தது. உயர் கணிதம், பிரயோக கணிதத்தில் உள்ள இலகு சுருக்க வழிகள் பலவற்றை தனக்கே உரிய பாணியில் மிகவும் தெளிவாகவும் இலகுவாகவும் கற்றுத் தந்தார். இந்த கற்பித்தல் முறையால் பிற்காலத்தில் எனக்கு கிடைத்த அனுபவம்தான் இன்றும் மறக்க முடியாதுள்ளது.

கணிதத்தில் பி.எச்.டி செய்துகொண்டிருந்த காலம். எனது பேராசிரியர் கணிதத்தில் உள்ள சுருக்க முறைகள் பற்றி விளங்கப்படுத்திக் கொண்டிருந்தார். என்னுடன் பல பி.எச்.டி மாணவர்கள் வகுப்பில் இருந்தார்கள். பேராசிரியர் பல கேள்விகளைக் கேட்டார். அவர் கேட்ட கேள்விகளுக்கு நான்தான் விரைவாக விடைகளைச் சொன்னேன். எனது திறமையைக் கண்டவர் என்னைப் புகழ்ந்து பாராட்டினார். இந்தப் பாராட்டை நான் பெறுவதற்குக் காரணமாக இருந்தவர் விபுலாநந்தசாமிதான். ஏனெனில், பாடசாலைக் காலத்திலேயே விபுலாநந்த சாமி இந்தக் கணிதச் சுருக்க முறைமைகள், கோட்



பாடுகள் பற்றி ஆழமான அறிவைத் தந்திருந்தார். எனவே பாடசாலைக் காலத்தில் பெற்ற அறிவு அதனூடான தெளிவு என்பவைதான் உயர்கல்வி கற்கும்போதும் பாராட்டைப் பெறக் காரணமாக இருந்தது. அந்த அளவிற்கு ஆழமான கல்வியூட்டலுக்கான இடமாக சிவாநந்தா இருந்தது.

சிவாநந்தா உங்களுக்குக் கொடுத்த படிப்பினைகளில் குறிப்பிடும்படியானவை

சிவாநந்தா எனக்குக் கொடுத்த படிப்பினைகள் என்று பலவற்றை நான் பட்டியலிடலாம். அதில் முதலாவதாக நான் சொல்வது, கல்வியை காசுக்குக் கொடுக்கக் கூடாது. அதாவது காசெடுத்துப் படிப்பிக்கக்கூடாது. இன்றுவரை நான் பல மாணவர்களுக்குப் படிப்பித்துக்கொண்டிருக்கின்றேன். ஆனால், ஒரு நாளும் யாரிடமிருந்தும் பணம் பெற்றதில்லை. அடுத்தது, தொடர்ச்சியாகப் படித்துக் கொண்டிருக்க வேண்டும் எனும் படிப்பினை. வயது கடந்து நடக்க முடியாது விட்டாலும் படித்துக் கொண்டிருப்பதை பழக்கமாக்கிக் கொண்டுள்ளேன். இதுவும் சிவாநந்தாவில் இருந்து பெற்ற படிப்பினைதான். அடுத்தது எளிமையுடன் வாழ்வது. வெளிநாட்டில் நிறைய சம்பாதித்துக்கொண்டு பல்லாண்டுகள் அங்கு வாழ்ந்திருந்தாலும் எளிமையுடன் சொந்த ஊரில் வாழும் வாழ்க்கைக்கு அது நிகராகாது என்பதற்கான புரிதலும் சிவாநந்தாவில் இருந்து பெற்றுக்கொண்ட படிப்பினைதான்.

வைத்திய கலாநிதி **வேல்முருகு விவேகானந்தராஜா,**
பல்கலைக்கழக வேந்தர், கிழக்குப் பல்கலைக் கழகம்.
வந்தாறுமூலை, செங்கலடி.

ஆனந்தமான சிவாநந்தசாலை மீளும் நினைவுகளினூடாக...

சிவாநந்தத்தின் சிறப்பு

காலத்தின் தேவையறிந்து சுவாமி விபுலாநந்தரால் வடிவமைக்கப்பட்ட கல்விக் கூடம் சிவாநந்த வித்தியாலயம். இது சுவாமி விபுலாநந்தருக்கு ஞானதீட்சை வழங்கிய சுவாமி சிவாநந்தரின் நாமம், மற்றும் சுவாமி விவேகாநந்தரின் கீழைத்தேச கல்விக் கோட்பாடு அத்துடன் அக்கால இலங்கைப் பாடசாலை களுக்கு முன்மாதிரியான வடிவமைப்பு இவைகளுடன் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் நேர் சீடர்களில் ஒருவரான சுவாமி விஞ்ஞானாநந்தர் இக் கல்லூரிக்கு விஜயம் செய்து ஆசீர்வதித்தது - என்று பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது இவ் ஆனந்தமான சிவாநந்தசாலை.

எண்ணம் -

" நேரம் கிடைக்கும்போதெல்லாம் தூயவர்களின் துணையை நாடு அத்தகைய தொடர்பு கிடைக்கவில்லையென்றால் நல்ல நூல்களைப்படி. மகான்களின் வாழ்க்கையைச் சிந்திக்கும்தோறும் மனம் தூய்மை பெறுகிறது.

தண்ணீர் எப்போதும் பள்ளத்தை நோக்கியே பாய்கிறது. ஆனால் சூரியனின் தொடர்பு பெற்றால் அதே தண்ணீர் ஆகாயத்தை நோக்கி எழுகிறது மலைகளின் உச்சியில் பனியாகத் தங்குகிறது. மழை, அருவி என்றெல்லாம் வந்து உயிர்களுக்கு எவ்வளவோ நன்மை செய்கிறது."

தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் அருள்வாக்கு இது. தூயவர்களின் ஆசியையும் நல்ல நூல்களின் வாசிப்பையும் நான் பெற்றுக்கொள்வதற்குக் கால்கோளிட்டது சிவாநந்த வித்தியாலயமே என்பது எப்பொழுதும் என்னுள் எழும் எண்ணப்பாடாகும்.

தொடர்வு -

என்னை உருவாக்கிய அடிப்படைப் பங்கு பெற்றோருக்குரியது. அடுத்து ஆரம்பக் கல்வியையும் உயர் கல்வியையும் தந்த கல்வி நிறுவனங்களைச் சார்ந்தது. எனினும், இடை நடுவில் சிவாநந்தாவும்

அதன் விடுதி வாழ்வும் தந்த கல்வி அனுபவங்கள் அடிப்படை நிலைபேறானவையாகும்.

இவ் வித்தியாலயத்திற்கு அக்காலம் முகாமையாளராக இருந்த சுவாமி நடராஜானந்த மகராஜ் அவர்களின் அறிவுரைகளும் நல்லாசிகளும் என்னை நெறிப்படுத்தியது. மேலும் கல்வியறிவுடன் நல்லறிவை அன்புடனும் கண்டிப்புடனும் கலந்தளித்து என்னை உருவாக்கியவர்கள் இவ் வித்தியாலய ஆசிரியர்கள் மற்றும் பெரியோர்கள்.

தர்க்கிப்பு

நான் பிறந்து வளர்ந்த பழுகாமத்தைச் சிங்காரச் கண்டி என்பர். அக்காலம் பெயர் பெற்ற மாட்டு வண்டிப் பாதையொன்று இக்கிராமத்தினூடாகக் கண்டி இராசதானிக்குச் சென்றதாகவும் கூறுவர். மருதமும் நெய்தலும் கலந்து, வயலும் நீர் நிலைகளும் சூழ்ந்த அழகிய பிரதேசம். சிறுவனாயிருந்த எனக்கு இவ்வூர், எனது பள்ளித் தோழர்கள் இவைகளுக்கும் மேலாக எனது அம்மா அப்பா சகோதரர்களைப் பிரிந்து அறிமுகமில்லாத தொரை தூரத்திற்குச் சென்று தங்கியிருந்து கல்வி கற்பது என்பது ஜீரணிக்க முடியாத ஒன்றாகவே இருந்தது. எனினும் தந்தை விடாப்பிடியாக நின்றார்.

எனது தந்தை கடமையும் கட்டுப்பாடும் மிக்க ஒரு பாடசாலை அதிபராகவிருந்தவர். மாணவர், பெற்றோர் மற்றும் ஊர் மக்கள் மத்தியில் செல்வாக்கும் சொல்வாக்கும் பெற்றவர். தன் மக்களை அவையத்து முந்தியிருக்கச் செய்ய ஊரிலுள்ள கல்வி புகட்டும் நிறுவனங்கள் போதாது என்பதை உணர்ந்தவர். இயல்பாகவே ஸ்ரீராம கிருஷ்ண சங்கத் துறவிகளின் தொடர்பும் ஆசியும் பெற்றவராக அவ் வாழ்க்கைப் பேற்றைக் கைக்கொண்டவராக இருந்தவர். எனக்குச் சூட்டிய குழந்தைப் பெயர் மூலமும் இதனை உணர முடியும் இவரது அனுபவத் திறமையினால் சிவாநந்த வித்தியாலயத்தையே தன் குழந்தைகள் கற்பதற்குத் தகுந்த இடமாக தெரிவு செய்து, அப்போது அங்கிருந்த சுவாமிநடராஜாநந்தஜியிடம் என்னையும் அண்ணா சிவாநந்தராசாவையும் கூட்டிச் சென்று அவரின் ஆசிபெற்று சிவாநந்த வித்தியாலயத்தில் சேர்த்து விட்டார்.

> **என்னுடைய வாழ்க்கைப் பயணத்தில் அதீத ஈர்பை ஏற்படுத்தி, என்னுடைய உயர்ச்சிக்கு உற்சாகத்தை உண்டு பண்ணியவர் வரிசையில் மகாசமாதியடைந்துவிட்ட ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தர் முதன்மையானவர் என்பேன். மனிதநேயத்தின் மகிமையை எனக்குள் உண்டு பண்ணியவரும் அவரே. அனாதை என்ற சொற்பதத்தை அகராதியில் இருந்தே அகற்ற வேண்டுமென்று அர்ப்பணிப்புடன் பணிபுரிந்தவர் சுவாமி ஜீவனானந்தஜீ அவர்கள்.**

பட்டறிவு

சுவாமி விவேகானந்தர் மேலைத் தேசக் கல்வி முறைமையையும் இந்திய தத்துவ ஞானத்தையும் உள்ளடக்கியதான சுய ஆளுமைக் கல்விக் கட்டமைப்பை அறிமுகம் செய்தவர். அவர் வழிநின்ற சுவாமி விபுலாநந்தரும் சிவாநந்த வித்தியாலயத்தை இம்முறையில் ஒரு முன்மாதிரிக் கல்விக் கூடமாக வடிவமைத்திருந்தார். இது சுய ஆளுமை மிக்க மாணவர் சமுதாயம் உருவாக வழி செய்தது. விடுதி வாழ்வும் வித்தியாலயக் கல்வியும் குருதேவரின் பிரார்த்தனை மண்டபமும் எம்மை மெருகூட்டி வளர்த்து விட்டவைகள்.

என்னுடைய வாழ்க்கைப் பயணத்தில் அதீத ஈர்பை ஏற்படுத்தி, என்னுடைய உயர்ச்சிக்கு உற்சாகத்தை உண்டுபண்ணியவர் வரிசையில் மகாசமாதியடைந்துவிட்ட ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தர்

முதன்மையானவர் என்பேன். மனிதநேயத்தின் மகிமையை எனக்குள் உண்டுபண்ணியவரும் அவரே. அனாதை என்ற சொற்பதத்தை அகராதியில் இருந்தே அகற்ற வேண்டுமென்று அர்ப்பணிப்புடன் பணிபுரிந்தவர் சுவாமி ஜீவனானந்தஜீ அவர்கள். அவரின் இந்த உயரிய பண்பு என் மனதை விட்ட கலாமல் என்னை இன்றும் வழிநடாத்திக் கொண்டி ருக்கின்றது.

அறிவியல்

சுவாமி விபுலாநந்தர் சிவாநந்தாவில் ஆன்மீகம் கலந்த அறிவியலுடன் மாணவ சமுதாயம் உருப்பெறவேண்டும் எனும் உயர் நோக்கிற்கான அடித்தளத்தை இட்டார். ஒரு பறவையானது வானில் பறப்பதற்கு இரண்டு சிறகுகள் எங்ஙனம் அவசியமானதோ அதே போன்று மனிதன் பூரண வாழ்வு வாழ்வதற்கு அறிவியலும் ஆன்மீகமும் அவசியமாகிறது. சுவாமி விபுலாநந்தரின் இக் கருத்தை அடியொற்றியதாகவே அங்கு யாம் பெற்ற கல்வியால் பெரும் பயனடைந்தோம்.

முற்சான்று

சுவாமி விபுலாநந்தரின் கல்விமுறைபற்றி அக்காலம் எங்கள் அதிபராயிருந்த மகான் க.கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள், 1959 இல் கலைமதி சஞ்சிகையில் வெளியிட்ட கட்டுரையி லிருந்து அவர் கூற்றை நானும் என் அனுபவக் கூற்றாக வழிமொழி கின்றேன்.

"செயலின் மூலமே கல்வி ஊட்டப்படல் வேண்டும் என்னும் கருத்தைக் கொண்டுள்ள விபுலாநந்த அடிகள், கல்வி ஊட்டலின் ஒவ்வொரு படியிலும், செயலுக்குப் பிரத்தியேகமான இடமளித்தார். காலையில் 5.00 மணிக்கு நித்திரை விட்டெழுந்த மாணவன் மாலை 9.00 மணிவரை செயல் புரிந்தவனாகவே அவனது நாளாந்தக் கல்வியூட்டும் திட்டத்தில் காட்சியளிக்கின்றான். காலையில் எழுந்தவுடன் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு யோகாசனம், தியானம் மற்றும் பஜனை முதலியவற்றுடன் கடமைகளைத் தொடங்குகிறான் மாணவன்.

சிவாநந்தாவில் சமய ஒழுங்கு முறைகளை மாணவர்களே நிருவகிக்கின்றனர். பஜனை, பூஜை ஒழுங்கு, ஊர்வலத் திட்டம், தேர் அலங்கரிப்பு முதலிய யாவும் மாணவர் மன்றத்தால் ஒழுங்கு செய்யப்படுவன. மாணவர் இல்லத்தைச் சுத்தம் செய்தல், உணவு சமைத்தல், தோட்டம் செய்தல் மற்றும் உணவு பரிமாறல் ஆகிய செயல்கள் யாவும் மாணவர்கள் பொறுப்பில் நடைபெற்று வந்தன. மரம் நடுதல், மரக்கறித் தோட்டம் உண்டாக்கல், கிணறு தோண்டுதல், கட்டிடம் எழுப்புதல் யாவும் மாணவர் நிருவகிப்பில் நடந்து வந்தன. தலை முடியெடுத்தல், துணி தோய்த்தல் முதலிய வேலைகள் சனிக்கிழமை காலையில் நடைபெற்று வந்தன. இச் செயல்களும்கூட மாணவர் களால் நடைபெற்றுள்ளன. ஆங்கில மொழியில் "Snobbery" - என வழங்கப் படும் போலி முறைகளுக்குச் சிவாநந்தாவில் இடமே இல்லை. பணக்காரப் பிள்ளை, அனாதை, இனப் பாகுபாடு, மத பேதம், சாதி பேதம் ஆகிய போலிக் கட்டுப் பாடுகளுக்கு சிவாநந்தா இடம் கொடுத்ததில்லை. "யாதும் ஊரே யாவரும் கேளீர்" எனும் கோட்பாட்டைத் தனது குறிக்கோளாகக் கொண்டுள்ள சிவாநந்தாவை நான் சுவாமி விபுலாநந்தரின் செல்லக் குழந்தை எனக் கூறுகிறேன். சுவாமிகளின் செல்லக்

"செயலின் மூலமே கல்வி ஊட்டப்படல் வேண்டும் என்னும் கருத்தைக் கொண்டுள்ள விபுலாநந்த அடிகள், கல்வி ஊட்டலின் ஒவ்வொரு படியிலும், செயலுக்குப் பிரத்தியேகமான இடமளித்தார். காலையில் 5.00 மணிக்கு நித்திரை விட்டெழுந்த மாணவன் மாலை 9.00 மணிவரை செயல் புரிந்தவனாகவே அவனது நாளாந்தக் கல்வியூட்டும் திட்டத்தில் காட்சியளிக்கின்றான்.

குழந்தையாகிய சிவாநந்தாவின் பழைய மாணவர்களாக நாங்கள் இணைந்தது உண்மையில் பெரும்பேறே.

அனுபவம்

இங்கு எங்களுக்குக் கல்வி புகட்டிய ஆசிரியர்களில் திருவாளர்கள் வீ.கணபதிப்பிள்ளை, நல்லரெத்தினம் சதாசிவம்பிள்ளை, தியாகராசாக் குருக்கள், தம்பிராசா, சி.வேலுப்பிள்ளை, எஸ். வேலுப்பிள்ளை, பத்மானந்தவடிவேல், சாக்கோ சிவலிங்கம், செபஸ்தியான், கே.குணரெத்தினம், குகதாஸன் விசுவாசம் மற்றும் தொடர்புபட்ட பண்டிதர் வீ.சி.கந்தையா, ரூபசிங்கம் முதலானோர்களுடன் என் மனதில் இடம்பிடித்து பெயர் வராத ஆசிரிய சிரோமணிகள் பலர் உள்ளனர். இவர்களது கண்டிப்பும் பாச உணர்வு முள்ள அர்பணித்த சேவையினாலேயே நாங்கள் புடமிடப்பட்டோம். மேலும் அதிபர் க.கணபதிப்பிள்ளை ஐயாவின் ஆளுமைத் திறன், சேவைப்பாங்கு இவைகளும் சேர்ந்து எனது திடமான இடைநிலைக் கல்வியை நிலை நிறுத்தியது என்பேன்.

சமூகத்தின் சாபக்கேடான சாதிபேதம், தாழ்ந்தவன் - உயர்ந்தவன், ஏழை-பணக்காரன் போன்ற வேற்றுமைகளையகற்றி எல்லோரும் மனிதர்களே என்ற உணர்வை நிலை நிறுத்தியது எனது விடுதி வாழ்க்கை. இதை என் இதயத்தில் ஏற்றி வைத்தவர் சுவாமி நடராஜானந்தாஜீ அவர்கள். சமயம் ஒரு பாடநெறியல்ல அது வாழ்க்கைத் தத்துவம் என்று உணர்த்திய மகான்தான் சுவாமி அவர்கள்.

பிற்காலத்தில் என்னைப் பயிற்றுவித்த மட்டக்களப்பு அரசினர் கல்லூரி, இலங்கைப் பல்கலைக் கழகம் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு கல்வி நிறுவனங்கள் என்று நீண்டு செல்லும் பட்டியல் உள்ளது. எனினும் எனது கல்லூரி வாழ்க்கையில் சிவாநந்தாவில் பயின்றது ஒரு முக்கிய அங்கம். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, சமயநெறி, ஆத்மிகப் பண்புகள் அனைத்தையும் இங்கிருந்துதான் உணர்ந்தேன், படித்தேன், பயன்பெற்றேன்.

விடுதி வாழ்வு

இவ் வித்தியாலய விடுதி வாழ்வு கல்வியை மட்டுமின்றிப் பல பண்புகளையும் எம்மிடம் வளர உதவியதை எமது அதிபர் க.கணபதிப்பிள்ளை ஐயாவின் கூற்றினூடாக நினைவு கூருகின்றேன். சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தப்பட்டுவரும் பொதுச் சுத்தம், உடுப்புக்கள் கழுவுவதற்காகச் செய்யப்படும் கொதியம் என்பன நினைவை விட்டகலா உணர்வுகள் என்றே சொல்வேன். மாமரங்களிலும் முந்திரிகை மரங்களிலும் பழங்கள் பறிக்கும் நேரங்களில் பிடிபட்டு சுவாமிஜீயினால் தண்டிக்கப்பட்டது, கண்டிக்கப்பட்டது - இவையெல்லாம் சிறந்த அனுபவங்களே.

மின்சார வசதியின்றிய காலத்தில் படிப்பதற்கு அரிக்கன் லாம்பு தந்த வெளிச்சத்தில் நண்பர்களுடன் சுற்றியிருந்த நாட்களும் அவற்றிற்கு அருகில் இடம்பிடிப்பதற்கு அதிகாலை 2.00 மணிக்குக் கூட துயிலெழுந்த நாட்களும் இன்றும் நெஞ்சை விட்டகலாதிருக்கின்றன.

அவ்வக்கால விடுதிக் கட்டுப்பாடு மற்றும் கடமை அட்டவணை தந்த நினைவுகள் என்றும் மறக்க முடியாதவை. என் சார்ந்த நிறுவனக் கட்டமைப்பை முகாமைத்துவப்படுத்துவதற்கு அவை இன்றும் பேருதவியாய் அமைந்துள்ளமை கண்கூடு.

மாதிரி வாழ்வு

சமூகத்தின் சாபக்கேடான சாதிபேதம், தாழ்ந்தவன் - உயர்ந்தவன், ஏழை-பணக்காரன் போன்ற வேற்றுமைகளையகற்றி எல்லோரும் மனிதர்களே என்ற உணர்வை நிலை நிறுத்தியது எனது விடுதி வாழ்க்கை. இதை என் இதயத்தில் ஏற்றி வைத்தவர் சுவாமி நடராஜானந்தாஜீ அவர்கள். சமயம் ஒரு பாடநெறியல்ல அது வாழ்க்கைத் தத்துவம் என்று உணர்த்திய மகான்தான் சுவாமி அவர்கள். ஒரு மனிதனுக்கு மூன்று சோடி உடுப்புகள் போதும் ஒன்று இடையில் மற்றது கொடியில்

இன்னொன்று பெட்டியில் என்று எழிமைக்கு இலக்கணமாகத் திகழ்ந்து வாழ்ந்து காட்டிய மகான். அன்னாருக்கு ஒத்துழைப்பு வழங்கிய சுவாமிகளான அவ்வையானந்தஜீ, சர்வாதீதானந்தஜீ ஆகியோர் களும் நினைவுகூரப்பட வேண்டியவர்களே.

இந்த நேரத்தில் எனது உயர்விற்கு மிக முக்கிய பங்காற்றிக்கொண்டு, கடந்த இரண்டு தசாப்தங்களாக எனது ஒவ்வோர் அசைவிற்கும், நிகழ்விற்கும் காரணகர்த்தாவாக விளங்கியவராக, எனது மனதில் நீங்கா நிலைகொண்டிருப்பவராக அண்மையில் மகா சமாதியடைந்துவிட்ட சுவாமி ஜீவனாநந்தஜீ மஹராஜ் அவர்களைக் குறிப்பிட் டேயாக வேண்டும். விஷ்ணு பரமாத்மா வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு இடங்களில் தேவைக்கேற்ப அவதரிப்பார் என்பர். எனது வாழ்வில் விஷ்ணு பரமாத்மாவின் மறு அவதாரமாக என்னை வழி நடத்திக் கொண்டிருந்தவர் சுவாமி அவர்களே. அவர் தனது திருவாயால் எனக்குச் சொன்னவைகள் நிறைவேறின. அவர் தொட்டதெல்லாம் பொன்னாயின. அவரது தொடர்பு தெய்வீகமானது.

உள்ளிடை

"குற்றங்களையே கண்டும் பேசியும் பொழுது போக்கிறவன்தான் உலகத்திலேயே குற்றத்தை மிகுதிப்படுத்துபவர்களுள் முதல்வனாகிறான். குற்றத்தைக் கண்டுபிடிப்பவர்களுள் மிகச் சிலர்தாம் அதனைப்போக்க முயல்பவர்களாகத் தெரிகிறார்கள். நன்மையை மாத்திரம் தேடிக்காண்பவர்கள் எப்போதுமே உலகத்தை நல்வழிப்படுத்திக் கொண் டிருக்கின்றரர்கள்."

சுவாமி விபுலாநந்தர் "மனதின் பிரதிவிம்பம்" – எனும் கட்டுரையில் எழுதியதைப் பார்க்கும்போது சிவாநந்தாவின் வரலாற்றில் உருவான பழைய மாணவர்கள் பலரும் இக் கோட்பாட்டைப் பின்பற்றி யுள்ளனர். சிவாநந்தாவின் கல்விக்கூட வாழ்க்கை, காலந்தோறும் இங்கு வருகை தந்து ஆசீர்வதித்த துறவிகளின் பசுமை நினைவுகள், அனைத்தும் நிஜத்தை விட்டு நிழலாடுகின்றன. மீண்டும் தோன்றாச் சகாப்தம்.

விவசாயி ஒருவர் 25 ருபாவுக்கு வெண்ணெயை ஒரு பேக்கரிக்காரருக்கு விற்று வந்தார். ஒரு நாள் அந்த பேக்கரிக்காரர் விவசாயி கொடுக்கும் வெண்ணெய் ஒரு பவுண்டு அளவு சரியாக உள்ளதா? என்று எடை போட்டு பார்த்தார். அப்போது அளவு குறைவாக இருந்தது என்பதை தெரிந்து கொண்ட அந்த பேக்கரிக்காரர் விவசாயி மீது கடுங்கோபம் கொண்டார். அதனால் ஆத்திரம் அடைந்த அவர் அந்த விவசாயியை நீதிமன்றத்திற்கு அழைத்து சென்றார். அப்போது நீதிபதி விவசாயிடம் "வெண்ணெயை அளந்து பார்க்க எந்த எடை மிசினை உபயோகிக்கிறாய்" என்று கேட்டார். அதற்கு அந்த விவசாயி 'நியாயம்' என்று பதிலளித்தார். பின் நீதிபதியிடம் "நான் பழங்காலத்தவன் என்னிடம் சரியான எடை மிசின் இல்லை. ஆகவே நான் ஒரு அளவுகோல் கொண்டு அளவு செய்வேன்" என்றார். உடனே நீதிபதி 'வேறு எப்படி வெண்ணெயை எடை செய்தாய்?' என்று கேட்டார். அதற்கு விவசாயி நீதிபதியிடம் "ஐயா! பேக்கரிக்காரர் என்னிடம் நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே வெண்ணெய் வாங்குவது வழக்கம் நானும் அவரிடமிருந்து 25 ருபாவுக்கு ரொட்டியை வாங்கி வருவேன். ஒவ்வொரு நாளும் பேக்கரிக்காரர் 25 ருபாவுக்கு ரொட்டியை கொண்டு வந்த அதே சமயம் நானும் அதே அளவில் வெண்ணையை வெட்டி கொடுப்பேன். ஆகவே குறை குற்றம் சொல்ல வேண்டுமெனில் அது என் தவறு இல்லை, அது முற்றிலும் பேக்கரிக்காரரை சார்ந்தது' என்று சொன்னார்

"நாம் மற்றவர்களுக்கு என்ன செய்கிறோமோ அதே தான் நமக்கும் விதிக்கப்படும்"

கே.எஸ்.பவன்
கனடா

வைரவிழா காண்போம்

முத்தமிழ் வித்தகர் மூச்சென உதித்தது
முழுமதி ஒளியென முனைப்புடன் வளர்ந்தது!
முறையான பண்புகள் முழுவதும் தந்தது
முதன்மைகள் கண்டுமே முன்னேறிச் சிறந்தது!

இராமகிருஷ்ண சுவாமிகள் நிழலில்
இறைமை என்பதன் உயரிய பொருளில்!
இயங்கி ஒற்றுமை ஆன்மீக ஒளியில்
எமக்குக் கிடைத்தது சிவாநந்த வடிவில்!

கல்வியும் கலையும் நல்விளை யாட்டும்
கலந்து பயின்றது வாழ்வுக்கு வலுவாம்!
கருத்துடன் யாவிலும் கவனங்கள் தெளிவாம்
கண்டநல் வெற்றிகள் வரலாற்றுப் பதிவாம்!

மஞ்சவண்ணா மாவேப்பை கொஞ்சுகின்ற நிழல்கள்
மிஞ்சுகின்ற அழகுதரும் வம்மிமரப் பூக்கள்!
வஞ்சமின்றித் தென்றல்வரும் மணற்றரையில் நாங்கள்
வாஞ்சையுடன் பயின்றதுவோ பசுமைமிகு நாட்கள்!

ஆற்றல்கள் போற்றுதற் குரியதாய் நீளும்
அவைகளில் அடக்கமும் தனிச்சிறப் பாகும்!
மாற்றங்கள் எத்தனை வந்திட்ட போதும்
மாறாத பண்புகள் எம்மையே சாரும்!

சமூகத்தில் அடையாளம் சிவாநந்தா தந்தது
சாதிக்கப் பலவழி சரமாக அமைந்தது!
சாரணர் தொண்டுகள் சமத்துவம் சொன்னது
சாதனை படைத்துமே நேர்வழி சென்றது!

அதிபர்கள் ஆசான்கள் ஆற்றிய பணிகள்
அனைவரின் நெஞ்சிலும் உயரிய நிலைகள்!
அழியாது நிலைபெறும் அவரவர் திறன்கள்
அவையெங்கு வாழ்ந்தாலும் மனதிற்கு இதங்கள்!

அனுபவப் பகிர்வுக்கு அழகினைச் சேர்ப்பது
அதுதான் சிவாநந்தா விடுதிதிவாழ் வென்பது!
அனுதினம் ஆனந்தம் அன்பாலே கிடைத்தது
அங்குதான் நட்புடன் இறுக்கமும் இணைந்தது!

தேசிய பாட சாலையாய் மிளிரும்
தேனகச் சிவாநந்தா தேடலுக் குதவும்!
தேடியும் கிடைக்காத அனுபவம் குவியும்
தேன் மழையாக இதயமும் நனையும்!

வித்தகன் விபுலாநந்தன் அமைத்த கல்விக்கூடம்
விருத்திபெறத் துணையாகும் பழைய மாணவச் சங்கம்!
விதைமுளைத்து அரவணைத்து ஆண்டறுப தென்போம்
வினைத்திறனை வாழ்த்தியிங்கு வைரவிழா காண்போம்!

Deshamanya Al-haj A.L Ibralebbe
Rtd.Divisional Secretary
Addalaichenai.

A man of charisma

The late Mr. K. Thiyagarajah was an intimate friend and a classmate of mine at Batticaloa Shivananda Vidyalaya which was an English medium school from its inception up to the implementation of the official language act. I joined this college in January 1944 and was there with Mr. Thiyagarajah up to the end of December 1952 where we both passed the Senior School Certificate (S.S.C) examination creditably well.

Mr. Thiyagarajah was a student with full of humour and jokes. He was never without a smile. Even in the darkest hours there was sun-shine amongst the students if only Thiyagarajah was there. He has brought much prestige to his collage – Shivananda by his excellent work wherever he went.

He secured a B.A. (Hon) degree at the University of Peradeniya and also the Diploma in Education in the same university. He was first appointed as a Graduate teacher at Shivananda Vidyalaya his alma mater, where he served for quite a long time. Subsequently he became the Principal of the same collage to which he was very much devoted. He spared no pains in working for the betterment of this collage. He took keen interest in re-organizing the Past Students Association of the Vidyalaya.

He was a strong supporter of late Mr. Rajan Selvanayagam who was the S.L.F.P. member of Parliament for the Batticaloa electorate at that time with his assistance and support Mr. Thiyagarajah contested the Batticaloa Municipal council election and became the Mayor of Batticaloa M.C – Several development activities were successfully carried out by him during his tenure of office as Mayor of Batticaloa.

Then again after a long lapse of time, he was appointed as the Principal of the Ramakrishna Mission Vidyalaya at Akkaraipattu where he served from 1977 up to 1983. He did a good job of work in the educational development of this area. He also started

தேசமான்ய, விபுலமாமணி
வி.ரி. சகாதேவராஜா
உதவிக்கல்விப்பணிப்பாளர், காரைதீவு.

ஈழத்துச் சாந்திகேதனம் சிவாநந்தா

அறிமுகம் :

தமிழ் மாமுனியாய் வரலாறு படைத்த உலகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராம் தவத்திரு விபுலாநந்த அடிகளார் தனது குருநினைவாகத் தோற்றுவித்த கல்விக் கலாசாலைதான் சிவாநந்த வித்தியாலயம். ஒவ்வொருவருடைய பாடசாலைக் காலமென்பது கனாக் காணும் சுதந்திரமான காலகட்டமாகும். 13 வருட காலப் பகுதியில் கற்றுக்கொண்ட பாடங்கள், அனுபவங்கள் ஆளுமைக்கு வித்தாகின்றன. சிவாநந்தாவில் கற்பதற்கு மாதவம் செய்திருக்க வேண்டும் என்பார்கள். அந்தப் பாக்கியம் எனக்கும் கிடைத்தது.

நான் சிவாநந்தாவில் 1976ஆம் ஆண்டு தொடக்கம் 1983வரையான 08 வருடங்கள் கல்வி கற்றதோடு விடுதியிலுமிருந்தேன். 1984 - 1986களில் விடுதி உதவி மேற்பார்வையாளராக பணியாற்றியதோடு தொண்டராசிரியராகவும் சிவாநந்தா வித்தியால யத்தில் சேவையாற்றியுள்ளேன்.

எனது பின்புலம் :

சுவாமி விபுலாநந்தர் பிறந்த காரைதீவு மண் எனது தாயகம். எனது தாய் மாமன் சிவாநந்தா வித்தியாலயத்து முன்னாள் அதிபர்களுள் ஒருவரான

கை.கணபதிப்பிள்ளை(F.R.G.S). எனது தந்தையார் வே.தம்பிராஜா சிவாநந்தாவில் 10வது ஆசிரியராகப் பணியாற்றியவர். எனது மூத்த சகோதரன் த. மகேந்திரராஜா சிவாநந்தாவில் கல்வி கற்று பின்னர் விடுதி மேற்பார்வையாளராக இருந்தவர். ஏனைய சகோதரர்களான த.சிவானந்தராஜா, த.கணேசராஜா, சகோதரி த.நிர்மலாதேவி சிவாநந்தாவில் கற்றவர்களாவர்.

ஒரு சிவாநந்தியன் என்ற காரணத்தால் பாடசாலை வாழ்வு பற்றியும் விடுதி வாழ்வு பற்றியும் சில பதிவுகளை அனுபவ வாயிலாக பகிரலாமென விளைகின்றேன்.

சிவாநந்தாவில்....

சுவாமி விபுலாநந்த அடிகளார், சுவாமி நடராஜானந்த அடிகளார், சுவாமி ஜீவனானந்தா போன்ற இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளின் ஆசீர்வாதத்தால் சிவாநந்தா வித்தியாலயம் என்றென்றும் பிரகாசித்துக்கொண்டிருக்கும். அந்த வகையில், அங்கு பயின்றதால் பெற்ற அனுபவங்கள் பிற்காலத்தில் சமுதாயத்தில் பல வகிபங்குகளை செவ்வனே வகிப்பதற்கு கால்கோளாகவிருந்தன என்பதை அறுதியிட்டுக் கூறமுடியும்.அது தலைமைத்துவப் பண்புடன் கூடிய பல ஆளுமைக் கூறுகள், பணிவு, அடக்கம், சகிப்புத்தன்மை, நேர்மை, கருணை, விசுவாசம் போன்றவை என்னுள் வளர்வதற்குக் காரணமாகின. ஆறாம் வகுப்புத் தொடக்கம் க.பொ.த உயர்தரம் வரை கல்வி கற்ற காலப் பகுதியில் அங்கு கற்றுக் கொண்ட பாடங்கள், அனுபவங்கள் இன்றும் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்திருப் பதையிட்டு உண்மையில் புளகாங்கித மடைகின்றேன். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவராகத் திகழ்வதற்கு அடிநாதமாக விளங்கியது சிவாநந்த அனுபவங்களே. ஊடகத் துறையில் பெயர் குறிப்பிட்டுச் சொல்லுமளவிற்கு உயர்ந்து பல விருதுகள் பெறுவதற்கும் ஆணி வேராகத் திகழ்ந்தது சிவாநந்தாவே.

கிழக்கு இந்து ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவராகவும் இலங்கைக்கான சமாதானத்திற்கும் சகவாழ்விற்குமான அமையத்தின் அம்பாறை மாவட்டச் செயலாளராகவும், அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கத்தின் உபதலைவராகவும், ஊரிலே பல அமைப்புக்களில் குறிப்பாக சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றத்தின் தலைவராகவும், இந்து சமய விருத்திச் சங்கத்தின் தலைவராகவும், விபுலாநந்த மத்திய கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராகவும், காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் நீண்டகாலத் தலைவராகவும் விளங்கியதற்கு அடிப்படைக் காரணம் சிவாநந்தா கற்றுத்தந்த பாடமெனலாம். எங்கு சென்றாலும் ஒரு சிவாநந்தியன் இருப்பார்.

முதல் நாள் நினைவு :

எனது தந்தையார் வே.தம்பிராஜா (ஆசிரியர்) என்னை அழைத்துக் கொண்டு றங்குப் பெட்டி சகிதம் முதல் நாள் பாடசாலைக்குச் செல்கிறார். அங்கு திரு.க.தியாகராஜா அவர்கள் அதிபராகவிருக்கிறார். உப அதிபராக திரு. ஜி. சிவநேசன் அவர்கள். ஆரைப்பற்றைச் சேர்ந்தவர். கிளாக்கர்.

அங்கு ஆசிரியராகவிருந்தவர் என்ற அடிப்படையில் அனைவருக்கும் நன்கு பரிச்சயமானவர். ஆதலால் அவருக்கு மதிப்பு மரியாதை. அவை என்னில் ஒரு நம்பிக்கையை ஊட்டியது. அங்கு சென்ற காலம் தொடக்கம் என்னுள் பலவித மாற்றங்களை அவ்வப்போது உணரக்கூடியதாயிருந்தது. அந்த ஆளுமை விருத்தி பிற்காலத்தில் என்னை பல சமூக, சமய பணிகளில் ஈடுபடவைத்தது எனலாம்.

அதிபர்களாக திருவாளர்கள் க.தியாகராஜா, பண்டிதர் வீ. சீ. கந்தையா, க.குணரெத்தினம், எஸ். மகேஸ்வரன் பேராசிரியர் எம். செல்வராஜா ஆகியோரை எனது காலத்தில் கண்டவன். "ஆனந்தமான சிவாநந்தசாலை" அன்புடன் வாழ்த்தி' எனும் பண்டிதர் வீ. சீ. கந்தையாவின் வரிகளும் 'Where the mind is without fear....." எனும் தாகூரின் வரிகளும் என்றும் மறக்கமுடியாத முதுசங்களாகும். அன்று எமது வகுப்புகளை ஆர், கே, எம், எஸ் என 4 ஆக வகுத்தார்கள். நாம் 'எம்' வகுப்பைச் சார்ந்தவர்கள். ஆறாம் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்பு வரை எனது வகுப்பில் தொடர்ந்து 1ஆம் பிள்ளையாக வந்த பெருமையும் கூடுதலான பாடங்களில் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பரிசுகள் வாங்கிக் குவிப்பதும் நானாக இருந்ததையெண்ணி இன்றும் பெருமைப் படுவதுண்டு. மகிழ்ச்சியடைவதுண்டு.

ஒரு தடவை பரிசளிப்பு விழா. மலையகத் தலைவர் தொண்டமான் அவர்களின் பாரியார் கோதை அம்மணி பிரதம அதிதி. அதிபர் தியாகராஜா அவர்கள் விசேட கோர்ட் சூட் அணிந்து சிவாஜி கணேசன் போன்று ஆஜானுபாகுவாக மேடையில் தோன்றி பேசியதும் இறுதியாக பிரதம அதிதி பேசியதும் நான் வரிசையில் நின்று எனது வகுப்பிற்குரிய அத்தனை பாடங்களிலும் தனியொருவனாகப் பரிசுகள் பல பெற்றதும் பசுமரத்தாணி போன்று இன்றும் மனக்கண் முன் நிழலாடுகின்றது.

> **சிவாநந்த விடுதி கற்றுத்தந்த பாடம், அனுபவம் என்பது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் உதவிக் கொண்டிருக்கின்றது என்றால் அது மிகைப்பட்ட கூற்றல்ல.**

ஒரு தடவை முற்றவெளியில் இலங்கைத் திருநாட்டின் சுதந்திர தினவிழா, நாம் அணி வகுப்பிற் காக அப்போதைய சாரண ஆசிரியர் திரு. தேவராஜன் அவர்களால் பயிற்சி வழங்கப்பட்டு காலையில் கொண்டு செல்லப்பட்டோம். அங்கு அணிவகுப்பில் கலந்துகொண்டிருந்தபோது யானும் இன்னுமொரு மாணவனும் மயங்கி வீழ்ந்தோம். காலைச் சாப் பாடின்றி சென்ற காரணத்தால் அது நிகழ்ந்ததாகப் பின்னர் கூறினர். அதுவும் ஒரு பதிவு.

சிவாநந்தா வித்தியாலயத்தின் பொன்விழாக் காலத்தில் நாம் அங்கு பயிலக்கிடைத்தது பாக்கியமே...

எமது காலத்தில்தான் அதாவது 18.11.1979இல் பொன்விழா நிகழ்வின் வரிசையில் தபால்தந்தி தொலைத்தொடர்புகள் அமைச்சர் கௌரவ டி. பி. விஜேதுங்க அவர்கள் வருகைதந்து சுவாமி விபுலாநந் தரின் ஞாபகார்த்த முத்திரையை வெளியிட்டு வைத்ததோடு முதல்நாள் உறையும் வெளியிட்டு வைத்தார். அவற்றை நாம் வாங்கி பத்திரப்படுத்தி வைத்திருந்தோம். பொன்விழா மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

விடுதி வாழ்க்கையில்....

சிவாநந்த விடுதி கற்றுத் தந்த பாடம், அனுபவம் என்பது வாழ்வின் ஒவ்வொரு கட்டத் திலும் உதவிக் கொண்டிருக் கின்றது என்றால் அது மிகைப் பட்ட கூற்றல்ல. அங்குள்ள விஞ் ஞானந் தா விடுதி, விவேகானந் தா விடுதி, கமலாலாயம், ஏ. பி. விடுதிகள், ராமகிருஷ்ணா விடுதி, சாரதா விடுதி என அத்தனை விடுதி யிலும் இருந்த பெருமை எனக்குள்ளது. ஏன் சூறாவளி யில் எம் அனைவரையும் காத்த பெருமை எனது தாய் மாமன் க. கணபதிப்பிள்ளை கட்டிக்கொடுத்த ரத்னாலயம் என்ற நிருவாகக் கட்டிட மென்பதை நினைவு கூர்வதில் பெருமையடைகின்றேன்.

திரு. பெ .சீனித்தம்பி அவர்கள்தான் பிரதான மேற்பார்வையாளராக பலகாலமிருந்தவர். அவரை "பிறதர்" என அழைக்கும் பண்பு இருந்தது. பிற்கூற்றிலே அவருக்கு உதவி மேற்பார்வையாளனாக இருந்த பாக்கியமும் எனக்குக் கிடைத்தது. ஒரு சில மாதங்கள் அவருக்குகேற்பட்ட ஒரு சத்திர சிகிச்சை காரணமாக மேற்பார்வையாளராக இருந்த சந்தர்ப்பமுமுண்டு.

விடுதி நடைமுறை

அதிகாலையில் அங்கு சமையற்கூடத்திற்கும் சித்ரகூடத்திற்கும் இடையிலுள்ள வேம்பு மரத்தில் தொங்க விடப்பட்டிருக்கும் தண்டவாளத்தின் ஒலி எம் அனைவரையும் 4.30க்கு நித்திரையைக் கலைக்கும். தாமதித்தால் பிரம்புடன் பிறதர் வருவார் என்ற பயம். இதனால் அதிகாலையில் எழும் பழக்க வழக்கம் அன்றே உருவானது.

துவாயை எடுத்துக்கொண்டு ரம் மற்றும் வக்மோட்டரை நாடிச்செல்வோம். அங்கு வரிசையில் நின்று காக்காய் குளிப்பு குளிப்போம். பின்னர் வந்து விடுதி வளாகத்திலுள்ள அலறி மற்றும் மஞ்சள் பூக்களை ஆய்ந்து படிப்பு மண்டபத்திற்கு அருகில் பிரதான வீதிக்கருகிலிருந்த பிள்ளையார் ஆலயத்திற்குச் சென்று பூக்களைச் சாத்தி வழிபடுவோம். படிப்பறையில் எமக்கென தரப்பட்ட லொக்கரினுள் உள்ள சாமி படங்களுக்கும் பூக்களை வைத்து வழிபடுவோம். இதனால் சுத்தமாக வாழ

வழி வகுத்ததும், சமய ஒழுக்க நெறி சார்ந்த ஆன்மீக வாழ்க்கை வாழ்வதற்கும் இங்கு நினைவில் கொள்ளத் தக்கது. அங்குள்ள 'ரப்'புகளில் அதிகாலையில் தண்ணீரைக் குடிப்போம். அந்தப்பழக்கம் இன்றும் அதிகாலையில் எழுந்ததும் தண்ணீர் அருந்தும் பழக்கத்திற்கு வித்திட்டது. இது பல நோய்களுக்கு மருந்தாக மாறியதை பின்னர்தான் உணரக்கூடிய தாயிருந்தது.

பின்னர் விரும்பியவர் சுயபடிப்பு படிக்கலாம். 5.30 மணியளவில் தேநீருக்காக மீண்டும் தண்டவாளம் (அசாதாரண சூழலில் இத்தண்டவாளம் கழிவுநீர்த் தொட்டிக்குள் வீசப்படும் சம்பிதாயமும் இருந்தது.) ஒலிக்கும். நாம் கப்பை எடுத்துக்கொண்டு சென்று வரிசையில் நின்று தேனீரைப் பெற்றுக் குடித்துவிட்டு காலைப் படிப்பிற்குச் செல்வோம். காலைப்படிப்பு எத்துணை இதமானது என்பதும் எளிதாக மனனம் செய்வதற்கு உதவியாயிருந்தது என்பதும் பழக்கத்திற்கு வந்தது. 7 மணியாகியதும் மீண்டும் தண்டவாளம் ஒலிக்கும். அனைவரும் அன்றைக்குப் பாடசாலை செல்வதற்கான புத்தகங்களை அடுக்கி எடுத்துக் கொண்டு விடுதிக்குச் சென்று சீருடை அணிந்து கொண்டு சாப்பாட்டுக் கோப்பையுடன் சாப்பாட்டு மண்டபத்திற்கு வருவோம். அங்கு பகிர்பவர்கள் உணவைப் பகிர்வார்கள். ஆனால் அனைவருக்கும் பகிர்ந்து முடியும் வரை காத்திருந்து "வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி..." என்று தொடங்கும் பாடலைப் பாடிய பின்னரே உணவருந்து வோம். நேரத்திற்கு இயங்குகின்ற பழக்கத்தை மட்டுமல்ல ஆகாரத்திற்கு உதவிய இறைவனை நினைந்து நன்றி கூறும் பழக்கத்தையும் அது ஏற்படுத்தியிருக்கு எனலாம்.

சாப்பாடு முடிந்ததும் 7.30க்கு பாடசாலை செல்வதற்காகத் தயாராகி விடுதி நுழைவாயிலை அண்டிய பிரதேசத்தில் வரிசையாக நிற்போம். பிறதர் வந்து சரி என்றதும் பாடசாலை செல்வோம். தலைமைக்கு கட்டுப்படுகின்ற பக்குவம் இங்கு வெளிப்படுகின்றது. பாடசாலை விட்டதும் வந்து முகம், கை, கால் அலம்பி சாப்பாட்டுக் கோப்பையுடன் சென்று மதியபோசனம் உண்போம். பின்னர் விடுதி சென்று சற்று ஓய்வெடுப்பதும் தமக்கென ஒதுக்கப் பட்ட பகுதியை கூட்டிப் பெருக்குவதும் பழக்கமாக இருந்தது. தானாகவே இயங்கும் சக்தி கிடைத்தது. பின்பு அனைவரும் மைதானத்திற்கு விளையாடச் செல்லவேண்டும். பிரதானமாக காற்பந்து, கரப்பந்து, கிரிக்கட் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபடுவோம். மாலைமுழுதும் விளையாட்டு என்று பாரதி கூறிய வார்த்தைக்கிணங்க விளையாட்டு தேகாப்பியாசம் அவசியமென்பது அன்றே கற்றுக்கொள்ளப் பட்டிருந்தது.

மாலை 6.00 மணிக்கு மணி ஒலித்ததும் மீண்டும் விடுதி திரும்பி கை கால் அலம்பி விபூதி தரித்து 1வது படிப்பிற்காக படிப்பு மண்ட பத்திற்குச் செல்வோம். அங்கு 7.30வரை தரமான படிப்பு நடக்கும். மேற்பார்வையாளர்கள் விடுதியில் தங்கியுள்ள ஆசிரியர்கள் கண்காணிப்பார்கள். 7.30க்கு இரவுச் சாப்பாடு நடக்கும். அதன் பின்னர் ஓய்வு. 9ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட வர்கள் 2ஆம் கட்டப் படிப்புக்குச் செல்வார்கள். ஏனையவர்கள் நித்திரைக்குச் செல்லலாம். கல்வி கற்பதென்பது கட்டாயம் என்பதை இந்த படிப்பு நேரங்கள் உணர்த்தி நிற்கின்றன.

விசேட தினங்கள்

வெள்ளிக் கிழமை மாலை அனைவரும் வேட்டி அணிந்து சால்வையுடன் பாடசாலைக்கு அப்பாலுள்ள இராமகிருஸ்ண மிஷன் குருகுலத்திற்குச் செல்வோம். அங்கு பஜனை, தேவாரம் இடம்பெற்று சுவாமி ஜீவனானந்தாஜீயின் கரகரத்த குரலில் அடித் தொண்டையிலிருந்து எழும் அன்பான சொற்பொழிவு இடம்பெறும். அவை எம் வாழ்க்கையில் பலவித மாற்றங்களை ஏற்படுத்தியவை எனலாம். ஆன்மீக வாழ்க்கைக்கும் மிஷனுடன் ஈடுபடுவதற்கு வித்திட்டதும் சுவாமியின் அருளுரைகளே.

மாதமொருமுறை கடலுக்குச் செல்ல வாய்ப் பளிக்கப்படும். அதேபோல சினிமாவுக்குச் செல்லவும் வாய்ப்பளிக்கப்பட்டது. ஒருதடவை களவாக சினிமா பார்க்கச்சென்ற வேளை மகிழடித்தீவைச் சேர்ந்த சற்குருலிங்கம் என்ற நண்பனுக்கு இடம்பெற்ற அசாதாரண சம்பவத்தையும் மறப்பதற்கில்லை. அதே வேளை அந்தச் சம்பவத்தை எழுதியே எனது பத்திரிகை வாழ்க்கையை ஆரம் பித்தேன். அன்று எழுத ஆரம்பித்து இன்று 30 வருடங்களைக்

கடந்தும் எழுதிக் கொண்டிருக்கின் றேன் என் றால் அதற்கும் சிவாநந்தாதான் காரணம். இவைகூட ஒரு சீரான முறையிலே ஒருவரின் வழிகாட்டலில் தலைமைத்துவத்திற்குக் கட்டுப்பட்டு நடக்க வழிவகுத்தது எனலாம்.

அதேபோன்று வீட்டிற்குச் சென்றுவரவும் வாய்ப்பளிக்கப்படும். செல்லாதவர்கள் சனி ஞாயிறு தினங்களில் சற்று இலகுவானதொரு நேரசூசியினடிப் படையில் இயங்குவார்கள். ஞாயிறு பாடசாலைக்குச் செல்வதும் அங்கு ஆன்மீகப் போதனைகளை கேட்பதும் தேவாரங்களை பண்ணுடன் இசைப்பதும் பழக்கமாகி விட்டது. இன்று அறநெறிப் பாடசாலை என்ற நடைமுறை அன்று எமக்கு ஞாயிறு பாடசாலை என்று திணிக்கப்பட்டது. சனி ஞாயிறு தினங்களில் விடுதி வளாகத்திலுள்ள நாவல் மரங்களை பதம் பார்ப்பதும் முந்திரிகை மரங்களில் ஏறி பழம்பறிப் பதும் அவற்றின் விதைகளை எடுத்து விடுதிக்கு பின்னால் வைத்து சூடேற்றி கையைப் புண்ணாக்கி பருப்பை உண்பதும் ஒருவித சந்தோசமே.

இராமகிருஸ்ண மிஷன் குருகுலத்திற்குச் செல்வோம். அங்கு பஜனை, தேவாரம் இடம் பெற்று சுவாமி ஜீவனானந்தாஜீயின் கரகரத்த குரலில் அடித் தொண்டையிலிருந்து எழும் அன்பான சொற்பொழிவு இடம்பெறும். அவை எம் வாழ்க்கையில் பலவித மாற்றங்களை ஏற்படுத்தியவை எனலாம்.

இன நல்லிணக்கம்

நாம் விடுதியிலிருந்த காலத்தில் சுமார் 750 பேரளவிலிருந்தோம். சுமார் 40வீதமானோர் இஸ்லாமிய சகோதரர்களாவர். எம்முடன் பொத்துவில் சாஜகான் நைனாமுகம்மட், நிந்தவூர் அன்வர்டீன் ஜாபீர், சம்மாந்துறை முசம்மில் நாசர், மருதமுனை மஆரிப் மனாப் ஜெசீல் அனஸ் சுபைர் ஜெமீல் எனப் பலர் விடுதியிலிருந்து கல்வி கற்றவர்கள். வெள்ளிக்கிழமைகளில் அவர்கள் வெள்ளைச் சாறனுடுத்து அருகிலுள்ள பள்ளிவாசலுக்குச் சென்று வருவார்கள். அன்று எள்ளளவும் இன்றுள்ள இனவாதம் இருந்ததில்லை. ஒருவருக்கொருவர் எவ்வித வேறுபாடுமின்றியே பழகினோம். சிலவேளை அடிபிடி வந்தாலும் இனபேதம் அணுவளவும் பார்த்ததில்லை. இது சமுக நல்லிணக்கத்திற்கு வழிவகுத்தது. சகோதரத் துவத்தையும் சகிப் புத் தன் மையையும் வளர்த்தது. இன்று அவர்களெல்லாம் மிகவும் உயர்ந்த ஸ்தானத்திலுள்ளனர். அன்று எப்படி பழகினோமோ அப்படி இன்றும் பழகுவதென்பது சிவாநந்தா கற்றுத்தந்த பாடமே.

விடுதியில் ஓர் ஏணிப்படி :

1985 காலப் பகுதியில் விடுதி உதவி மேற்பார்வையாளனாக விருந்தேன். என்னுடன் முனைக்காட்டைச் சேர்ந்த பொறியியலாளர் துரைராஜசிங்கமும் தோழமையுடனிருந்தார். அவரும் ஆன்மீக விடயங்களிலும் ஆங்கிலம் கற்பதிலும் நாட்டமுடையவர். கமலாலயம் பி விடுதி சூறாவளிக்குப் பின்னர் படிப்பு மண்டபமாகப் பயன்பட்டது. அந்த விடுதியிலிருந்த அத்தனை வளைகளிலும் திருக்குறளை அழகாக என்னைக் கொண்டு எழுதுவித்தவர் அவர். தினமும் டெயிலிநியுஸ் பத்திரிகையில் வரும் சொற்களில் ஒரு அந்நியமான பெயர்ச் சொல்லையும் வினைச் சொல்லையும் கொப்பியொன்றில் எழுதும் பழக்கத்தை பழக்கிய வரும் அவரே. அது எனது ஆங்கில சொல்லாட்சியை வளர்க்கப் பெரிதும் உதவியதை இன்றும் நினைத்துப் பார்க்கின்றேன்.

விடுதியில் ஒரு துன்பியல் சம்பவம் :

1985 காலப் பகுதி நாட்டில் யுத்தச் சூழல். நான் அங்கு உதவி மேற்பார்வையாளனாக காலம் கடத்தியதற்கு அதுவும் ஒரு காரணம். அதன் புண்ணியத்தினால் இதுவரை ஒரு சுற்றிவளைப்புக்கோ தண்டனைக்கோ படையினரின் அடிதடிக்கோ இலக்காகவில்லை என்பதை எண்ணி இறையருளை வியக்கின்றேன். செய்தி கேட்பதில் அதிக ஈடுபாடு. அதிலும் பி.பி.சி. செய்தி.

ஏனைய செய்திகளில் நடந்தது ஒன்று சொல்வது வேறொன்று என்பதால், இரவில் பி.பி.சி. கேட்போம். விடிந்தால் சுற்றிவளைப்பு, படைமுகாம் தாக்குதல், அவருக்கு மின்கம்பத் தண்டனை என பல செய்திகள் உலாவரும்.

ஒரு நாள் சனிக் கிழமை. காலை 10 மணியிருக்கும். மாணவர்கள் தத்தம் உடுப்புகளை துவைப்பதிலும் பாடுவதிலும் விளையாடுவதிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். நானும் காலையுணவைச் சுவைத்து விட்டுப் பத்திரிகை பார்த்த வண்ண மிருந்தேன். திடீரென பாரிய சத்தம். குண்டு வெடிக்கும் சத்தம். அது வேறெங்கும் நிகழவில்லை. எமது விடுதியின் பிரதான வாயிலில் இடம்பெற்றது. காத்தான்குடியிலிருந்து மட்டுநகரை நோக்கி வந்து கொண்டிருந்த பொலிஸ் ஜீப்பொன்றை இலக்கு வைத்து அந்த கிரனைட் வீசப்பட்டிருக்க வேண்டும்.

உடனே அனைவரும் அதிர்ந்து போனோம். பிள்ளைகள் செய்வதறியாது பயத்தில் கலங்கினார்கள். ஏனென்றால் அன்றைய காலகட்டத்தில் ஒரு இடத்தில் இப்படிப்பட்ட சம்பவம் இடம் பெற்றால் மறுகணம் அந்தப் பிரதேசம் அழியும். ஆதலால் என்ன செய்வதென்றறியாமல் பதட்டத்திலிருந்த வேளை எமது மேற்பார்வையாளர் சீனித்தம்பி பிறதர் என்னை அழைத்து தம்பி நீங்களெல்லாம் இளம் பிள்ளைகள் எமது மாணவர்களை அழைத்துக்கொண்டு விடுதிக்குப் பின்பக்கமாக சிவாநந்தாவின் பின்வழியாகச் சென்று சாமியின் ஆச்சிரமத்திற்குச் செல்லுங்கள். அதுவே பாதுகாப்பு. அங்கு சிறைன் (வழிபாட்டிடம்)க்குள் இருங்கள். நான் அங்கு வருவேன் என்றார்.

நானும் வேறுவழியின்றி விடுமுறை நாளாகையால் குறைந்த மாணவர்களே இருந்தனர். அவர்கள் அனைவரையும் அழைத்துக்கொண்டு பயத்துடன் சிவாநந்தாவின் பின் வழியாகச் சாமியிடம் சென்று சிறைன் உள்ளிருந் தோம். சற்றுநேரத்தில் படையினர் அங்கு சீற்றத்துடன் வந்தனர். எனினும் சுவாமி ஜீவனானந்தாவின் கனிவான பார்வை, பழக்கம் என்பவற்றால் எம்மை ஒன்றுமே செய்யாமல் திரும்பிவிட்டனர்.

ஒருமணிநேரம் தாமதித்து விடுதிக்குத் திரும்பினோம். அங்கு கண்ட காட்சி. கேள்வியுற்ற சம்பவம். ஒரு பக்கம் பரிதாப உணர்ச்சி. மறுபக்கம் ஆத்திரம்.

என்ன நடந்தது? நாம் சென்ற பின்னர் பிறதர் சீனித்தம்பி சமையலறைப் பக்கம் நின்றிருந்த போது படையினர் வந்திருக்கின்றனர். அவரை துப்பாக்கி முனையில் இங்கு குண்டு எறிந்தவர் யார்? எங்கே? என கடுமையான தொனியில் வினவ அவரோ அப்படி எவரும் இல்லை எனக்கூற அவரை படையினர் அழைத்துக் கொண்டு ஒவ்வொரு விடுதியாகக் காண்பிக்கச் சொல்ல, அவரும் வேறு வழியின்றிக் காட்டிவிட்டு சாரதா விடுதியை நோக்கிச் செல்லும் போது பிரதான கிணறொன்றிருந்தது. அதற்குள் எட்டிப்பார் யாராவது இருப்பார் எனப் படையினர் கூற மறுகணம் என்ன நடக்கப் போகின்றது என்பதையறியாத பிறதர் எட்டிப் பார்க்கவும் அவர்கள் காலைத்தூக்கிக் கிணற்றுக்குள் போடவும் சரியாகவிருந்தது. தலைகீழாக கிணற்றுக்குள் சென்றவர் அங்கிருந்த பைப்பைப்பிடித்துக் கொண்டு தத்தளித்தார்.

இந்தச் சம்பவத்தை விடுதியின் பின்புறமாகவுள்ள பேமர் என்பவர் அவதானித்திருக்கக்கூடும். படையினர் அந்த இடத்தை விட்டகன்றதும் அவரே ஏணிகொண்டு பிறதரை வெளியில் எடுத்ததாக அறிந்தோம். தலையிலும் சில இடங்களிலும் காயங்களோடு பிறதர் சமையலறையில் நின்ற காட்சி எம்மை தூக்கி வாரிப்போட்டது. நாங்கள் நின்றிருந்தால் இன்று இந்தக்கட்டுரை எழுதுவதற்கும் ஆளில்லாமல் இருந்திருக்கலாம்.

மற்றுமொரு சம்பவம் :

நாம் அன்று 1978 கமலாலயம் 'பி' விடுதியிலிருந்தோம். பாடசாலை சென்ற நாம் நேர காலத்துடன் விடுதி வந்தோம். மழை மூட்டம் வானம் இருண்டிருந்தது. வழக்கம் போல நால்வர் சேர்ந்து எமது 8 வெட்சீற்றுக்களை எடுத்து அறைபோன்று பிரித்துக்கட்டி அதற்குள் இருந்து விளையாடினோம்.

அருகில் சாப்பாட்டு மண்டபம். முற்று முழுதாக தகரத்தினாலானது. பகல் போசனத்தை மழைக்கு மத்தியில் முடித்தோம். பின்புவந்து எமது பிரிக்கப் பட்ட அறைக்குள் இருந்த போது மின் தடைப்பட்டது. காற்று வீச ஆரம்பித்தது. இரவுச் சாப்பாட்டுக்குத் தயாராகவிருந்தவேளை காற்று பலமாக வீச ஆரம்பித்தது. ஊ.....ஊ.... என்ற சத்தம்

மாத்திரமே. கும்மிருட்டு. அரிக்கன் லாம்பொன்றுதான் இருந்தது. எம்மைப் போன்று அத்தனை விடுதிகளிலும் மாணவர்கள் பயபீதியுடன் இருந்ததை பின்னரறிந்தோம்.

முதல் சுற்று முடிந்து ஒரு இடைவெளி விடப்பட்டது போன்ற பிரமை. அந்த இடைவெளியில் பிறதர் வந்து அனைவரும் முன்னாலுள்ள கட்டிடத்திற்கு வருமாறு அழைத்தார். மழைபெய்து கொண்டிருக்கிறது. விடுதியை விட்டு வெளியேறியதும் அருகிலிருந்த சாப்பாட்டு மண்டபத்தைக் காண வில்லை. அதன் தகரமெல்லாம் வீசப்பட்டு கிடந்ததை அரிக்கன்லாம்பு வெளிச்சத்தில் காணமுடிந்தது. காலில் தகரம் வெட்டிய சிலர்... வெட்டாத சிலர்... ஒருவாறாக போய் ரத்னாலயத்தை அடைந்தோம். அங்கு ஏனைய விடுதி மாணவர்களும் இருந்தனர். நெருக்கம், மாலையுணவாக பாண் பகிரப்பட்டது. சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் அடுத்த பலமான காற்று. ஆம் சூறாவளி மீண்டும். உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு அனைவரும் அந்த ரத்னாலயத்துள் தஞ்சமடைந்தோம் . அது சிலவேளை உடைந்திருந் தால் அனைவரும் பரலோகம் போயிருப்போம்.

சரி ஒருவாறாக விடிந்தது. காலையில் பார்க்கு மிடமெல்லாம் மரம், தடி, தகரம் எமது விடுதிகள் கூரை தகர்ந்து வீழ்ந்தெல்லாம் காணப்பட்டது. காலை 8 மணியிருக் கும். பசி ஒருபுறம். இருப்பதை உண்டு விட்டு தூர செல்பவர்களை பஸ்ஸில் செல்லுமாறு பிறதர் உத்தரவிட்டார். சந்தோசத்தில் விடுதிக்குள் சென்றால் றங்குப் பெட்டிகள் அனைத்தும் சேதமா யிருந்தன. அப்போது நாம் வீட்டுக்கு இடையிடையே சென்றுவர பயன்படுத்தும் சீலைப் பைக்குள் ஒரு சில உடுப்பை எடுத்துக் கொண்டு பிரதான வீதிக்கு வந்து பஸ்ஸீக் காக காத்திருந்தோம். சுமார் 10 மணிவரை.

எம்முடன் பி.எஸ்.ஸி. பட்டதாரி ஆசிரியர் களான சி. கணேசமூர்த்தி (பிற்காலத்தில் கணக்காளராக இருந்து மரணித்தவர்) கே. கனகசூரியம் (விஞ்ஞான பாட ஆசிரியர்) அவர்களும் காத்திருந்ததையெண்ணி இன்றும் அறியாமையை நினைப் பதுண்டு. அனைவருக்கும் இந்தச் சூறாவளி முதல் அனுபவம் என்பதால் பஸ் வரும், போகலாம் என்று தப்புக் கணக்குப் போட்டதே அதற்குக்காரணம்.

இந்த இரு ஆசிரியர்களும் "பொறுங்கள்" எனக் கூறிவிட்டு சாந்தி தியேட்டர் பக்கம் போய்விட்டு திரும்பி வருகையில் சொன்னார்கள் "இந்தக் காலத்தில் பஸ் வராது. வீதியெல்லாம் மரம் தடிகள். ஆகவே நடந்து போவோம்" என்றனர். அப்போது நாம் 9ஆம் வகுப்பு. என்னசெய்வது நடக்க ஆரம்பித்தோம். சும்மா நடப்பதென்றால் பிரச்சினையில்லை. மரம் தடி கட்டைகளைக் கடந்து எட்டிக்கடந்து பயணிக்க வேண்டும். என்ன செய்வது? இடையிடையே இளநீர் வேண்டியளவு. வானம் மப்பும் மந்தாரமுமாய் இருந்தது. கல்லாற்றுப் பாலத் தால் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது. நேரம் 1 மணியிருக்கும். ஒருவாறாக கடக்கமுற்பட்ட வேளை எனது மைத்துனர் திரு. வே. இராஜநாயகம் (மட்டக்களப்பு மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர்) சைக்கிளை தூக்கிக்கொண்டு வருவதைக் கண்டேன்.

"எங்கே போக" என்று கேட்டேன். "உன்ர அக்கா நிர்மலாவைக் கூட்டிவர" என்றார். அப்போது தான் உணர்ந்தேன் "ஓம் நான் வரும்போது அவளை விட்டுவிட்டு வந்துவிட்டேன்" என்று. அவர் சிவாநந்தாவில் உயர்தரம் பயில்பவர். கல்லடியில் கலைமகள் வீதியில் டாக்டர் இளங்குமரனின் தந்தையார் அழகையா மற்றும் வி.பி டாக்டர் அகிலனின் குஞ்சம்மா அவர்களின் வீட்டிலிருந்து படித்தவர். சரி அவர்போய் அவளைக் கூட்டி வரட்டும் என்றுவிட்டு நாம் நடந்தோம். இருட்டிவிட்டது. பாண்டிருப்பில் சொர்ணத்தின் மருமகன் பாலனின் வீட்டில் தங்கி மறுநாள் காரைதீவு வந்து சேர்ந்தோம்.

என்னுடன் பதுளையைச் சேர்ந்த பாலசுப்பி ரமணியம் (தற்போது டாக்டர்) லுணுகலையைச் சேர்ந்த தியாகசுந்தரம் (தற்போது அதிபர்) ஆகிய இருவரும் எனது வீட்டில் சுமார் ஒருமாதகாலம் தங்கியிருந்து பஸ் ஓடத் தொடங்கிய பின்னரே சென்றனர். இதனை இன்றும் மறக்கமுடியாது.

இப்படி சிவாநந்தா கற்றுத் தந்த உறவுகள், பாடங்கள் அதிகம். பாடசாலையும் விடுதியும் எமது இரு கண்களாக இருந்தன. இன்னும் எத்தனையோ அனுபவங்கள். அமெரிக்க கல்வியியலறிஞர் கூறுவது போன்று "கல்வி என்பது அனுபவக் கற்கையே" என்பதை பின் நாட்களில் உணரக்கூடியதாயிருந்தது. சிவாநந்தா எமக்கும் ஒரு பெரும் முகவரியைத் தேடித்தந்தது என்றால் அது மிகையாகாது.

S.Sivalingkam,
Former Assistant Director of Education,
Kallady.

Origin of Cricket in Shivananda

Shivananda was founded in 1929, as a Ramakrishna Mission school by Swamy Vipulananda and named Shivananda Vidyalayam in honour of his Guru. In later became a government assisted school. The games that were played then, in the school were Volley ball, Foot ball and Local games like Thaachi, Kabadi etc,.The names of these local games may not have been heard by the current students.

The Government took over the assisted schools in the years 1961/62. Those days, schools like St.Michaels College, Methodist Central Collage and Hindu Collage were playing cricket. This game was becoming popular and local students were playing this game with tennis ball and bat improvised from coconut fronds. So students of Shivananda also felt that they start playing cricket in Shivananda. There were some students who had played cricket earlier, who with others, appealed to the teachers, saying Shivananda had a large playing field suitable for cricket, which other schools here did not have. At a meeting, the staff resolved to commence playing cricket in Shivananda. At that time there was no sports teacher to coach the game. As I had played cricket in school and college, I volunteered to coach

the game. I was given the responsibility of commencing and coaching the game. The first priority was to prepare the cricket playing pitch, in the centre of the large playing field, so that there will be enough space for boundary lines. In a month's time, the pitch was ready. A used roller was donated for rolling pitch.

In the meantime I went to colombo, and purchased all the equipment for playing cricket, suitable for under 17, 15-13 groups. A leather carry bag was also purchased to take materials for matches. Under 17 groups was to play on the matting pitch and the other two groups to play on surfaces prepared away from the pitch. Before commencing the Practice players were given, instructions on the rules of the game, which they have to abide by and on the importance of respecting the umpires and their decisions. Play practice commenced with seasoned bats. Bats were seasoned by students playing the game. In 1964, coaching commenced for the three groups, in batting, bowling, fielding, catching especially in the slip position. Those who had played cricket earlier helped the under 15 and under 13 groups. They had practiced for about three months, when Inter school cricket competition came up. We decided to compete. We did not fare well, except for the under 13 team which came third.

Subseqently, a cricket club from Kalmunai helped us with many practice games. In Kalmunai we played in the Fatima college grounds when they came here, we played in our grounds. Since Shivananda had hostel facilities, we entertained them for lunch and tea. Spectators who come to watch the matches and the teams, had to take shelter under the few trees at the edge of the grounds. So we urged the school administration to build the pavilion, since this game is played for nine hours in the sun. They willingly obliged and built a suitable and usable pavilion according to the plan we gave. This was a boom for all games. Now, Cricket in Shivananda has grown and new pavilion constructed with current needs. The annual Big-match called "Battle of the Gold" between Koneshwara Hindu College, Trincomalle and Shivananda is a good indication to show how Shivananda has grown in playing cricket and it was a mile stone in the cricket history of Eastern province. The Big-Match between two schools ceremonially was started in 1993.The cricket players of shivananda have been shining nationally and internationally.

சிவாநந்த வித்தியாலயம் குரு சிஷ்ய பாரம்பரியத்தில் உருவாகி வளர்ந்த கலாசாலையாகும். முத்தமிழ் முனி விபுலானந்தரது படைப்பு. தலைமைக் குருவாக அமர்ந்து சிறப்பானதோர் குரு பரம்பரையையும், சீடர் பரம்பரையையும், வளர்த்துவிட்ட பெருமை அடிகளாரைச் சார்ந்தது. அவர் காட்டிய வழியில் காலூன்றிச் செயற்பட்ட அதிபர்களினதும், ஆசிரியர்களினதும், இராமகிருஷ்ண சங்கத் துறவிகளினதும் சேவையினைப் பெற்ற சிறப்பு சிவாநந்த வித்தியாலயத்தின் முதுசமாகும். தமக்கென தனித்துவமான முத்திரை பதித்துக்கொண்டவர்கள் சிவாநந்த வித்தியாலயப் பழைய மாணவர்கள்.

கந்தையா தியாகராசா

உசாத்துணை: சிவாநந்தியன் செய்திப் பருவமடல். வெளியீடு: சிவாநந்தா பழைய மாணவர் சங்கம், 1999.

பேராசிரியர் **பாலசுந்தரம் இளையதம்பி**
தமிழ்த்துறைத தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழக கனடா வளாகம்.



சிவாநந்த வித்தியாலயத்தில் நான் பெற்ற கல்வியும் எனது அனுபவங்களும்

ஒருவர் தான் படித்த பாடசாலை என்று நினைத்தவுடன் தனது ஆசிரியர்கள், பாடசாலை நண்பர்கள் மற்றும் பாடசாலையில் நினைவகலா விடயங்கள் பற்றியே முதலில் தம் மனத்திரையில் காண்பார். அவ்வகையில் சிவானந்தா வித்தியாலயம் பற்றி என் நினைவுகளை 'சிவானந்தா பழைய மாணவர் சங்க வைர விழாச் சிறப்பு மலர் - 2018'இல் கட்டுரையாக வரைதல் பொருத்தமாகும். 1962ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதன் முதலாகச் சுவாமி விபுலாநந்தர் நிறுவிய சிவானந்தா வித்தியாலயத்திற் காலடி பதித்தேன். அவ்வேளையில் நான் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பலரும் பாராட்டும் வகையில் உயர்வேன் என்று கனவிலும் நினைத்திருக்கவில்லை. ஆனால் என்னை அந்த நிலைக்கு உயர்த்தியது சிவானந்தா வித்தியாலயம் என்னும் திருத்தலமே என்பதைப் பெருமையுடன் பதிவுசெய்துகொள்கின்றேன்.

காரைதீவிற் பிறந்து, அங்குள்ள இராமகிருஷ்ண மிஷன் ஆண்கள் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைத் தொடங்கி, கல்விப் பொதுத் தராதரப் பத்திரத் தேர்வில் ஏழு பாடங்களில் அதிசிறந்த தரத்தில் சித்தியடைந்திருந்தேன். எமது குடும்பத்தில் பிள்ளைகள் ஏழுபேர். தந்தையாருடன் சேர்ந்து மூத்த சகோதரர் இருவரும் விவசாயத்தி லீடுபட்டிருந்தனர். தந்தையார் எனக்கு உயர்கல்வி படிப்பிக்க வேண்டும் என்ற பேராசை கொண்டிருந்தார். நான் க. பொ. த. சாதாரண தரத் தேர்வில் நன்கு சித்தியடைந்தமை என் தந்தைக்கு மிக்க மகிழ்ச்சி. உயர்கல்விக்காக என்னைச் சிவானந்தா வித்தியாலத்திற் சேர்க்க உறுதிகொண்டார். சிவானந்தாவில் நான் கல்வியைத் தொடர்வதற்கு ஆலோசனை வழங்கி வழிகாட்டியவர்கள் எனது குரு சீ. தங்கராசா தலைமை ஆசிரியரும், எம் உறவினர் வெற்றிவேல் தலைமை ஆசிரியரும் ஆவர்.

சிவாநந்தா மாணவர் விடுதியில் தங்கிப் படிப்பது எனத் தீர்மானித்து விட்டோம். எனவே விடுதியில் தங்கியிருப்பதற்கும், பாடசாலைக்குச் செல்வதற்கும் தேவையான உடைகளும், தேவையான தமிழ்ப் புத்தகங்களும்

இரண்டு சூட்ஸ்கேசில் வைத்துவிட்டேன். புதிய ஆண்டுத் தொடக்கத்தில் தந்தையுடன் சிவானந்தாவுக்குச் சென்று, நேரே அதிபர் மதிப்புமிகு. க. கணபதிப்பிள்ளை அவர்களைச் சந்தித்தோம். காரைதீவு மாணவர் என்றதும் அவர் அகமகிழ்ச்சியடைந்தமையை என்னால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அக்கணமே எனக்குச் சிவானந்தாவை நன்கு பிடித்துவிட்டது. எங்களுடன் அதிபர் உரையாடிய விதம் எங்களுக்கு நம்பிக்கையையும் மகிழ்ச்சி யையும் அளித்தது. பாடசாலை அலுவலகத்தில் எனது சான்றிதழ்கள், மற்றும் முதற்பாடசாலை அறிக்கை எல்லாம் வாங்கிப் பார்த்ததும் என்னை க. பொ. த. உயார்தர முதலாம் ஆண்டு வகுப்பில் பதிவுசெய்தனர். அதன் பின்னர் நேரே பாடசாலை விடுதி அலுவலகத்திற்குச் சென்று, விடுதி மாணவனாக என்னைப் பதிந்து, இராமகிருஷ்ணா விடுதியிற் சேர்த்தனர். பின்னர் கல்லூரிக்கு வந்து வகுப்பிற் சேர்ந்து கொண்டேன்.

> **சிவானந்த வித்தியாலய என் குருநாதர்களாகிய பண்டிதர் வி. சீ. கந்தையா, திரு. க. தியாகராஜா, பூரண தியாகராஜக் குருக்கள் ஆகிய மூவரிடமும் பாடம் கற்று 1964இல் க.பொ.த. உயர்தரத் தேர்வு எழுதினேன்.**

முதல்நாள் வகுப்பில் நான் சந்தித்த முதல் ஆசிரியர் பண்டிதர். வித்துவான் வி. சீ. கந்தையா அவர்கள். அவரை முன்னரே நான் அறிவேன். எங்களது ஊர்க் கண்ணகி அம்மன் கோயில் சடங்கின்போது அவர் ஆற்றிய சொற்பொழிவைக் கேட்டிருக்கிறேன் என்று அவரிடம் கூறினேன். எங்கள் ஊர் காரைதீவு என்றதும் அவரும் மகிழ்ச்சி அடைந்தார். பொதுவாகக் காரைதீவு மாணவர் சாதனை வீரர் என்பது ஒரு புறமிருக்க, சுவாமி விபுலாநந்தர் அவதரித்த புண்ணிய பதியிலிருந்து வந்தேன் என்பதாலேயே அதிபரும், பண்டிதரும் மிக்க மகிழ்ச்சியடைந்தனர் என்பதைப் புரிந்து கொண்டேன்.

பண்டிதர் கந்தையா அவர்கள் பாஞ்சாலி சபதத்திற்கு உரையெழுதித் தான் வெளியிட்ட நூல் ஒன்றை அடுத்த நாள் வகுப்பில் எனக்கு அன்பளிப்புச் செய்ததை இன்றும் நன்றியுடன் நினைவிற் கொண்டுள்ளேன். அதனைத் தொடர்ந்து திரு. க. தியாகராஜா ஆசிரியர் வரலாற்றுப் பாடம் நடத்தினார். அவர் பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரி. அவரிடம் நான் படிக்கக் கிடைத்தது பெரும் பாக்கியமாகும்.

ஒவ்வொரு நாளும் முதற் பாடமாகச் சமஸ்கிருத வகுப்பு நடைபெறும். அண்ணாமலையிற் கல்வி கற்ற வித்துவசிரோண்மணி பூரண தியாகராஜக் குருக்கள் ஐயா அவர்களே அப்பாட ஆசிரியராவார். அந்த வகுப்பில்தான் முதன்முதல் சமஸ்கிருத எழுத்துக் கற்க ஆரம்பித்தேன். குருக்கள் ஐயா அவர்கள் ஆறுமாத காலத்தில் எனக்கு சமஸ்கிருதம் கற்பித்து, க. பொ.த.சா. தரத் தேர்வுக்கு என்னைத் தயார் பண்ணியதோடு, அத்தேர்வில் நான் விசேட சித்தியும் பெற்றேன். அது ஒரு சாதனையாகும். இச்சாதனை சமஸ்கிருத ஆசிரியரின் கற்பித்தல் திறனால் அடைந்த பெரும்பயனாகும். அதனைத் தொடர்ந்து அடுத்த 18 மாதங்களில் உயர்தரத் தேர்வுக்குரிய சமஸ்கிருத இலக்கியம், இலக்கணம், இலக்கிய வரலாறு ஆகிய பாடங்களைக் கற்பித்து, உயர்தரத் தேர்விலும் நான், சிறப்புச் சித்தியடையச் செய்த பெருமை குருக்கள் ஐயா அவர்களுக்கே உரியதாகும். குருக்கள் ஐயா அவர்கள் என்னைத் தனது உத்தம மாணவன் எனக் கருதியதோடு, என்னை அவ்வாறே ஏனையோருக்கும் அறிமுகம் செய்வார். அவர் தனது இறுதிக் காலத்தை மொன்றியல் முருகன் ஆலயத்துடன் இணைத்துக் கொண்டார். அங்கு அவரைச் சந்திக்கும் வாய்ப்புகள் எனக்குக் கிடைத்தன. அவர் ரொறன்ரோவுக்கு வருகைதரும் போதெல்லாம் அவரைநான் சந்தித்து உரையாடுவேன். ஐயா அவர்கள் மட்டக்களப்பில் இயற்கை எய்தியதன் நினைவாக, கனடா குருக்கள்மார் சங்கம் ஐயா அவர்களுக்கு நடத்திய அஞ்சலிக் கூட்டத்தில் அச்சங்கத்தினர் குருக்கள் ஐயா பற்றிச் சிறப்புரை

ஆற்ற என்னை அழைத்து உரையாற்றச் செய்தமை, அவருக்கு நான் செய்த நன்றிக் கடனாக அமைந்தது. எனக்கு உயர் கல்வி தந்த ஆசிரியர் மூவரும் இப்போது இவ்வுலகில் இல்லை. ஆனால் அவர்களது பெயர்களை என்னைப் போன்றோர் நினைவிற் கொண்டிருக்கும் வகையில் ஆசிரியர் மாணவர் உறவும் மரியாதையும் அமைந்திருந்தன. இவை யாவற்றுக்கும் அடிப்படையாக சிவாநந்தா அளித்த கல்விமுறையும், ஆசிரியர் மாணவர் நட்புறவும் போற்றுதற்குரியனவாகும்.

சிவாநந்த வித்தியாலய என் குருநாதர்களாகிய பண்டிதர் வி. சீ. கந்தையா, திரு. க. தியாகராஜா, பூரண தியாகராஜக் குருக்கள் ஆகிய மூவரிடமும் பாடம் கற்று 1964இல் க.பொ.த. உயர்தரத் தேர்வு எழுதினேன். அத்தேர்வில் மட்டக்களப்பு மாவட்டத் தில் மிகக் கூடிய புள்ளிகளைப் பெற்றதன் பயனாக எனக்கு Batticaloa Paddy Bank Scholarship நிதியுதவி பல்கலைக்கழகப் பட்டப் படிப்புக்குக் கிடைத் தமைக்கும் ஆசிரியர்களின் பயன்கருதா முயற்சியும், அவர்கள் அர்ப்பணிப்புடன் கல்வி போதித்ததன் பயனுமே காரணமாகும்.

சிவாநந்தா வித்தியாலயக் கல்வியால் உருவாக்கப்பட்ட நான், பேராதனைப் பல்கலைக் கழகத்தில் முதற்பிரிவில் பட்டம் பெற்ற உடனே, அப்பல்கலைக்கழகத்திலேயே உதவி விரிவுரையா ளரானேன். பின்னர் கொழும்புப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும் விரிவுரையாளராக, தமிழ்த்துறைத் தலைவராக, பேராசிரியராகப் பணியாற்றியுள்ளேன். பின்னர், ரொறன்ரோவில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் கனடா வளாகத்தில் ஆறு ஆண்டுகளும், அதனைத் தொடர்ந்து 2006 ஆம் ஆண்டிலிருந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தொலைதூரக்கல்வி வழங்கும் கனடா வளாகத்தில் தமிழ்த் துறைத்தலைவராக இளங்கலைமாணி, முதுகலைமாணி மாணவருக்குத் தமிழ் கற்பித்து வருகின்றேன். தமிழ் இலக்கியம், பண்பாடு, நாட்டார் வழக்கியல், புலம்பெயர் தமிழர் வரலாறு முதலான துறைகளில் 15 ஆராய்ச்சி நூல்கள் எழுதியுள்ளேன். அந் நூல் களுக்கு இலங்கை சாகித்திய மண்டலம், தமிழ்நாட்டு அரசின் தமிழ் ஆய்வுத்துறை, தமிழ்நாட்டு சேக்கிழார் ஆய்வு மையம், கனடா இலக்கியத் தோட்டம் ஆகிய அதிஉயர் நிறுவனங்கள் பரிசுகளும் விருதுகளும் வழங்கியுள்ளன. இத்தகு புலமையும் பாராட்டுக்களும் அடைவதற்கு என்னை ஆளாக்கியவர் சிவாநந்தா வித்தியாலய தமிழ் ஆசிரியர் அண்ணாமலைப்பல்கலைக்கழக வித்துவான் பட்டம் பெற்ற வி. சி. கந்தையா அவர்களே எனக் கூறுவதில் நான் பெருமை அடைகின்றேன்.

சிவாநந்தா வித்தியாலயத்தின் இன்னுமொரு சிறப்பு முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியதாகும். தினமும் பாடசாலை தொடங்குவதற்கு முன்பு, காலையில் பாடசாலை அலுவலக முன்றலில் மாணவர் ஒருங்கு கூடல் (Assembly) நடைபெறும். அதில் பாடசாலை கீதம் அனைவராலும் பாடப்படும். அதன்பின், அதிபர் கணபதிப்பிள்ளை அவர்களின் பல்துறைசார்ந்த உரை நாள்தோறும் இடம்பெறும். அப்போது ஒழுக்கம், தொண்டுள்ளம், சமூக-சமயப்பணி, பண்பாட்டுப் பேணல், ஒற்றுமை, எல்லோரிடமும் அன்பு செலுத்துதல், ஏற்றத்தாழ்வற்ற சமநோக்கு, மதப்பற்று, விஞ்ஞான உலகில் நடை பெறும் புதுமைகள் முதலான பல்வேறு விடயங்கள் பற்றிப் பேசுவார். அவரது போதனைகள் எங்களைச் சிந்திக்க வைத்தன. அவற்றின் மூலம் சமூக - சமய முன்னேற்றத்திற்காக தொண்டுப் பணி களில் ஈடுபடும் மனப் போக்கும், ஆற்றலும் அறிவும் பெற்றோம். என்னைப் பொறுத்த வரையில் அதிபர் அன்று எங்களுக்கு ஊட்டிய அறிவுப் போதனைகளின் மூலமே நான்

புலமையும் பாராட்டுக்களும் அடைவதற்கு என்னை ஆளாக்கியவர் சிவாநந்தா வித்தியாலய தமிழ் ஆசிரியர் அண்ணாமலைப்பல்கலைக்கழக வித்துவான் பட்டம் பெற்ற வி. சி. கந்தையா அவர்களே எனக் கூறுவதில் நான் பெருமை அடைகின்றேன்.

நன்னெறிப்பட்டேன் என்பதும், இன்று அவர் காட்டிய வழியே பல்வேறு அடிப்படையில் சமூக – சமயத் தொண்டுகளில் ஈடுபட்டு வருகின்றேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் பதிவுசெய்கின்றேன். கனேடிய அரசு இதுவரை மூன்று முறை (5ஆண்டு, 10ஆண்டு, 15 ஆண்டு) தொண்டர் சேவைக்கான விருதுகள் வழங்கி என்னைக் கௌரவித்துள்ளது என்பது சிவானந்தாவில் பெற்ற பொதுப்பணிப் பயிற்சியின் பயனேயாகும். கனடாவில் வாழும் சிவாநந்தா பழைய மாணவர்களின் நன்றியுணர்வு கலந்த உந்துதலால் 'சிவானந்தா பழைய மாணவர் சங்கம்' கனடாவில் அமைக்கப் பட்டுள்ளது. நான் இவ்வமைப்பின் பேராளர் ஆனேன். கிழக்கிலங்கை மாணவரின் கல்விக்கு நிதியுதவி அளித்து வருகிறோம். அதேபோன்று பெரும்பாலான சிவானந்த மாணவரும் ஏனையோரும் ஒன்று சேர்ந்து 'சுவாமி விபுலாந்தர் கலை மன்றம்' எனது தலைமையில் கனடாவில் 2003இல் அமைக்கப பட்டது. இம்மன்றம் கிழக்கிலங்கை மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு உதவி செய்து வருகின்றது. அத்துடன் கனடாவில் வாழும் இளையதலைமுறை யினருக்குத் தமிழ் அறிவும் சமயப் பண்பாட்டுணர்வும் ஏற்படத்தக்க வகையில் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம். 2003இல் இம்மன்றத்தின் முதலாம்ஆண்டு கலைவிழாவுக்கு முதன்மை விருந்தினராக எனது ஆசிரியரும், பின்னாள் சிவானந்தா வித்தியாலய அதிபரும், மட்டக்களப்பு மாநகரசபை முன்னாள் முதல்வருமாகிய திரு. க. தியாகராசா அவர்களையும், அப்போது மொன்றியலில் வாழ்ந்த எனது ஆசிரியராகிய பூரணதியாகராஜக்குருக்கள் ஐயா அவர்களைச் சிறப்பு விருந்தினராகவும் அழைத்து சிவானந்தாவுக்குப் பெருமை சேர்த்தோம்.

> **சுவாமி விபுலாநந்தரின் கனவை நனவாக்கிக் கொண்டிருக்கும் சிவாநந்தா வித்தியாலயம் மேலும் மேலும் வளர்ச்சி பெற்றுக் கல்விப் பணியில் உயர்நிலை அடைய வாழ்த்துகின்றேன்.**

சிவாநந்தாவில் என்னுடன் உயர்வகுப்பில் படித்தவர்களில் சி. புண்ணியமூர்த்தி, முகமட் இஸ்மாயில், இராதாகிருஷ்ணன், மகேஸ்வரலிங்கம், பாலசிங்கம் ஆகியோரது பெயர்களே நினைவில் உள்ளன. எங்கள் வகுப்பிலிருந்து நானும் புண்ணிய மூர்த்தியுமே பல்கலைக்கழக அனுமதிபெற்றுக் கொழும்புப் பல்கலைக்கழகத்திற்குச் சென்றோம். புண்ணியமூரத்தி பட்டம் பெற்று அரசாங்க சேவையில் சேர்ந்து, பின்னர் அரச நிர்வாக சேவைத் தேர்வுகளில் சித்தி எய்தி மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றிருக் கிறார். ஏனையோரது நிலைப்பாடு தெரியவில்லை. நான் பட்டங்கள் பெற்று, பேராதனை, கொழும்பு, யாழ்ப்பணம் ஆகிய இடங்களிலுள்ள பல்கலைக் கழகங்களில் பணியாற்றிய காலங்களில் இந்தியா, ருஷியா, அமெரிக்கா, இங்கிலாந்து முதலான நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களுக்குப் புலமைப் பரிசில்கள் பெற்று ஆய்வுகள் மேற்கொண்டு வந்தேன். சிவானந்தாவின் பழைய மாணவன் என்ற பெருமையுடன் அனைத்து இடங்களிலும் என்னை நான் அறிமுகம் செய்துகொள்வேன்.

சிவாநந்தா விடுதி வாழ்க்கையில் கற்றுக்கொண்ட வாழ்வியல் ஒழுங்குகள் இன்றும் என்னை நெறிப்படுத்துகின்றன. விடுதியின் நேர அட்டவணைப்படி காலை 5:00மணிக்கு மணி அடித்ததும் எல்லோரும் எழும்பி விடுதியின் உள்ளே யோகாசனம் செய்ய வேண்டும். அதன் பின்னர் எல்லோரும் நீராட வேண்டும். பின்னர் படிக்கும் மண்டபத்திற்குச் (Study Hall) சென்று ஒரு மணித்தியாலம் தங்களது பாடங்களைப் படிக்க வேண்டும். பின்னர் காலை உணவுக்காகக் "கமலாலயம்" என்றழைக்கப்படும் சாப்பாட்டு மண்டபத்திற்குச் செல்ல வேண்டும். பின்னர் விடுதிக்குச் சென்று பாடசாலைக்குரிய உடை

அணிந்து எல்லோரும் விடுதியிலிருந்து ஒழுங்கு வரிசையில் சென்று, பாடசாலை ஒருங்குகூடலில் வரிசையாக நிற்க வேண்டும். அதன் பின்னர் வகுப்புகளுக்குச் செல்வோம். காலை 5:00 மணியி லிருந்து 8:00 மணிவரை எல்லோரும் நேர அட்டவணைப்படி இயங்கிய பயிற்சியே எங்களது வாழ்க்கையிலும் ஒழுங்கைக் கடைப்பிடிக்க உதவிற்று என்று கூறுவேன்.

மாணவர் விடுதிகளுக்கு முகாமையாளராகப் பணியாற்றிய திருவாளர் சுப்பையா ஆசிரியர் அவர்களது அன்பும் ஆதரவும், கண்டிப்பும், அன்பான பேச்சும் எங்களை மிகவும் கவர்ந்தன. அதே வேளையில் ஒவ்வொரு மாணவரது ஒழுக்கத்திலும் கல்வியிலும் அவர் மிகக் கவனம் எடுத்தார் என்பதையும் குறிப்பிட வேண்டும். சிவானந்தா விடுதியில் சைவ உணவே வழங்கப்படும். ஆயினும் வாரத்தில் ஒருநாள் மீன் கறியும் பரிமாறப் படும். அந்நாட்களில் சிரேஷ்ட மாணவர் குறிப்பாக மீன்கறி பெறுவதில் தமது செல்வாக்கைக் காட்டுவார் கள். அப்போது எங்கள் வயதும் அப்படித்தானே.

ஞாயிறுக்கிழமை தோறும் சுவாமி விபுலாநந்தர் மணிமண்டபத்தில் கூட்டு வழிபாடும், அதன் பின்னர் சமய வகுப்புக்களும் நடைபெறும். சுவாமி நடராஜனந்தாஜீ அவர்களின் பணிப்பின்படி நானும் சமய வகுப்பு ஆசிரியராகச் சேவை செய்தேன். அதனால் சுவாமிகளுடன் தொடர்புகொள்ளவும், அடிக்கடி சந்திக்கவும் வாய்த்தமை பெரும் பாக்கியமே. பாடசாலை வருடாந்த வியாழாட்டுப் போட்டியில் நீளம் பாய்தலிலும் உயரம் பாய்தலிலும் பங்குபற்றியுள்ளேன். விளையாட்டுப் போட்டியில் விபுலாநந்தா இல்லத்தை அமைப்பதில் பெரிதும் பங்களிப்புச் செய்தமை நினைவில் உள்ளது.

பாடசாலை விடுமுறைக் காலத்தில் கல்லடி உப்போடையில் தங்கியிருந்தேன். அப்போது நண்பர்களுடன் துவிச்சக்கர வண்டியில் பாசிக்குடா வுக்குச் சென்று நீராடிவிட்டுத் திரும்பி வந்த பயணம் இன்றும் பசுமையான நினைவாக இருக்கிறது. விடுதியில் தங்கியிருந்த காலத்திற் கிழக்கு மாகாணத் தின் பல்வேறு கிராமங்களையும், மலையகத்தையும் சேர்ந்த பல மாணவரின் நட்புக் கிடைத்தது. சிவானந்தாவில் என்னுடன் சமகாலத்தில் கீழ்வகுப்புக் களிற் பயின்றவர்கள் பலர் நான் பேராதனை, கொழும்பு ஆகிய பல்கலைக்கழகங்களில் விரிவுரை யாளராகப் பணிபுரிந்தபோது அங்கு படிக்கவந்தனர். அவர்களுடன் பழகும் வாய்ப்பும் கிடைத்தது. கனடாவில் இயங்கும் சிவானந்தா பழைய மாணவர் சங்கம் சிவானந்தாவை எப்போதும் என் மனத்தில் நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறது.

சுவாமி விபுலாநந்தரின் கனவை நனவாக்கிக் கொண்டிருக்கும் சிவாநந்தா வித்தியாலயம் மேலும் மேலும் வளர்ச்சி பெற்றுக் கல்விப் பணியில் உயர்நிலை அடைய வாழ்த்துகின்றேன். எமது பாடசாலை வளர்ச்சியில் அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டுவரும் சிவாநந்தா பழைய மாணவர் சங்கம் தனது வைரவிழாவைச் சிறப்புறக் கொண்டாடும் வேளையில் வெளியிடும் சிறப்பு மலரில் எனது கட்டுரையும் இடம்பெறுவதை யிட்டுப் பேருவகை அடைகிறேன்.

"உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"

Today Shivananda stands supreme having imbibed her noble traditions initiated by her founder Swami Vipulananda and the past Sanniyasies of the Ramakrishna Mission, providing and admirable socio-educational environment transcending all parochial and petty barriers, distinctions and prejudices by way of religion, language or caste. In no small way has Shivananda Contributed to the awakening of the Eastern Province which had remained so-long as a cultural desert. Her real products are enjoying very high positions in every part of the world Inculcated with an undeniable sense of national responsibility, discipline, courage and self-confidence.

K.Thiyagarajah.

Reference: Golden Jubilee Souvenir, Published by Shivananda National School

தகவலுக்கான உரிமை

தற்போது உங்களுக்கும்!

அதை எவ்வாறு பயன்படுத்துவீர்கள்?

1. பொது அதிகாரசபைகளில் அதற்குரிய தகவல் அலுவலரை இனங்காணல்.

2. தகவலுக்கான எழுத்து மூலமான கோரிக்கை தகவல் அலுவலரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். தங்களால் எந்தளவு தகவல்களையும் கோர முடியும்.

3. தகவல் அலுவலரிடமிருந்து உங்கள் விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்டதற்கான பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளவும்.

4. தகவல் அலுவலர் தங்களுக்கு பற்றுச் சீட்டை வழங்கிய நாளிலிருந்து 14 வேலை நாட்களுக்குள் பதிலளிக்க கடமைப்பட்டுள்ளார்.

5. தகவல் வழங்குவதென தீர்மானம் மேற்கொள்ளப்பட்டால், அன்றைய தினத்திலிருந்து 14 வேலை நாட்களுக்குள் தகவல்களை உங்களுக்கு வழங்க வேண்டும். தகவல்களை வழங்குவதற்கு மறுக்கும் பட்சத்தில், அதற்கான காரணத்தையும் அவர் குறிப்பிட வேண்டும்.



6. வழங்கப்பட்ட தகவல் குறித்து நீங்கள் திருப்திகொள்ளவில்லையாயின் அதற்கென குறித்தொதுக்கப்பட்ட அதிகாரியிடம் அன்றைய தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் மேன்முறையீடு செய்ய முடியும்.

7. குறித்தொதுக்கப்பட்ட அந்த அதிகாரி தகவல்களை வழங்குவதற்கு மறுக்கும் பட்சத்தில் அவ்வாறு மறுக்கும் தினத்திலிருந்து இரண்டு மாதங்களுக்குள் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்ய முடியும்.



8. ஆணைக் குழுவின் தீர்மானம் குறித்தும் நீங்கள் திருப்திகொள்ளவில்லையாயின் அதற்கெதிராக தீர்ப்பளிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு மாதகாலத்திற்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உதவியையும் நாட முடியும்.



Deshamanya Al-haj A.L Ibralebbe
Rtd.Divisional Secretary
Addalaichenai.

A personality with great sense of humour

Mohamed Haniffa Mohomad Carrem was born on December 28, 1936 and was educated at the Shivananda Vidyalaya, (National School), Batticaloa. He was a self-motivated, proactive and enthusiastic person who performed his duties with utmost care and attention. He was known as a kind and friendly gentlemen with a large heart among the public.

He was boarded at the Kamalalayam Hall of the Shivananda Vidyalaya hostel. I had the privilege of associating with him for well over 20 years. I had always seen him calm and composed during any crises or unexpected situation.He was a pillar of strength to his family and during the final stage of his life, while knowing full well of his deteriorating condition; he never lost his composure and passed away peacefully.

He was a special-trained teacher of the Palaly Teacher College of Education from 1959 to 1960,having passed the G.C.E.(O/L) and G.C.E.(A/L) examinations creditably well. He was a sportsman who won several prizes at the annual sports Meet of the Shivananda Vidyalaya.

Late Carrem possessed a great sense of humour and was never without a smile; even during the darkest of hours, his presence shone a light upon everyone who knew him. He had brought much prestige to his college with his excellent work. His death is a great loss to all of us, particularly to Shivananda Vidyalaya.

Although he has parted from us, his name will be engraved in the hearts of all who knew him and in the institutions at which he worked. He secured a BA degree and a Diploma in Education at the University of Peradaniya. His spared no pains in working for the betterment of the underprivileged people of the area. He also took interest in the reorganization of his Alma mater's Past Students'Association.

Having Passed the Sri Lanka Educational Service (SLES) Examination, he was appointed the Deputy Education Director for the Mutur, Thampalakamam and Tincomalee areas from 1987 to 1994. He was also the Chairmen of Kinnniaya Pardheshiya Sabah from 1994 to 2000 and was later appointed Quazi Judge for the area from 2007 to 2010 by the Judicial service commission. Carrem was an admirer of Swami Vipulanantha and Swami Nadarajanandaji. He was also involved in organizing the death anniversary of Swami Nadarajanandaji at Shivananda Vidyalaya.

The demise of Mohamed Haniffa Mohomad Carrem of Ehuthar Hajiar street, Kinniya, occurred on the April 4 2018 and the janasa took place at the Kinniya burial ground on the same day ,around 8.00pm.

ஒருமுறை சோமன் தன் தோட்டத்தில் விளைந்த தேங்காய்களை சந்தையில் விற்று விட்டு, கிடைத்த பத்தாயிரம் ரூபாயுடன் தன்னுடைய மாட்டு வண்டியில் காட்டு வழியாக வீட்டுக்கு வரும் போது தனது பணப்பையைத் தொலைத்துவிட்டார்.

வீட்டுக்கு வந்ததும் வண்டியில் பணப் பையை தேடி பார்த்து கிடைக்காமல் புலம்பி தள்ளினார். மாட்டு வண்டி ஓட்டி வந்தவர் முதல் அனைவரையும் கேட்டு பார்த்து கிடைக்காமல் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தார். அப்போ அவரது மனைவியார் 'உங்க பணப்பையை கண்டுபிடித்து கொடுப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் கொடுக்கிறேன் என்று சொல்லுங்க, கண்டிப்பாக யாராவது கொண்டு வந்து கொடுப்பாங்க' என்றார்.

ஆகா இது நல்ல திட்டமாக இருக்கிறதே என்று நினைத்து அடுத்த நாளே ஊர் முழுவதும் தண்டோரா போட்டு சொல்லிவிட்டார். ஊரு மக்களும் பணப்பை கிடைத்தால் கொடுத்து சன்மானம் வாங்கலாம் என்று நினைத்தார்கள். அப்படி தேடி பார்த்தும் யாருக்கும் பணப்பை கிடைக்கவில்லை.

இந்த சம்பவம் நடந்து ஒரு வாரத்திற்கு பின்பு அருகில் இருந்த ஊரிலிருந்து அந்த ஊருக்கு ஒரு வழிப்போக்கர் வந்தார். அவர் பெயர் பூபாலன். மிகவும் நல்ல குணமுடையவர். அவர் அப்படி வரும் போது பாதையின் ஓரத்தில் காலில் ஏதோ மாட்டியதை கண்டார், அது ஒரு பை அதில் நிறைய பணமும் இருந்தது. அதை எடுத்தவுடன் பூபாலனுக்கு யாரோ பாவம், தன் பணப்பையை விட்டுவிட்டு போயிட்டாங்க, அப்படி தொலைத்தவர் மனம் எத்தனை வேதனைப்படுமோ, எனவே விரைவில் அவரை கண்டுபிடித்து கொடுத்துவிட வேண்டும் என்று ஊருக்கு விரைந்தார். அப்போது ஊருக்குள் சென்ற போது அங்கு இருந்த கடையில் விசாரித்தபோது கடைக்காரர் சோமனைப் பற்றி சொல்லி அவர் தான் தொலைத்தவர், நீங்க இதை கொடுத்தால், கண்டிப்பாக சன்மானம் கொடுப்பார் என்றார்.உடனே பூபாலனும் சோமன் வீட்டை தேடி பிடித்து சென்று பணப்பை கிடைத்த விபரத்தை சொன்னார். சோமனுக்கு சந்தோசம் தாங்கமுடியவில்லை. உடனே அந்தப் பணப்பையை வாங்கிக் கொண்டார், அதேநேரம் அவரது கெட்ட எண்ணமும் வெளிப்படத் தொடங்கியது. பணப்பை கிடைத்துவிட்டது, பணமும்சரியாக இருந்தது, இப்போ ஏன் இவனுக்கு சன்மானம் கொடுக்க வேண்டும். சன்மானம் கொடுக்காமல் தப்பிக்க என்ன செய்யலாம் என்று யோசித்தார் சோமன்.

கெட்ட மனம் கொண்ட சோமன் பூபாலனைப் பார்த்து 'நீ என்னை ஏமாற்றப் பார்க்கிறாய், நான் என்னுடைய பையில் வைர மோதிரம் ஒன்றையும் வைத்திருந்தேன், அது காணவில்லை. மரியாதையாக கொடுத்து விடு, உன்னை சும்மா விடமாட்டேன்' என்று கத்தினான்.

பூபாலனுக்கு ஒன்றுமே புரியவில்லை, ஒருவேளை இவர் சொன்னது போல் வைர மோதிரம் இருந்து தொலைந்து போயிருக்குமா, நாம் தான் எடுக்கவில்லையே இவரிடம் சன்மானம் வாங்குவதைவிட பிரச்சினையில் இருந்து தப்பிக்கலாம் என்று யோசித்தார். சோமனோ விடாமல் கத்தி ஆர்ப்பாட்டம் செய்தார். பூபாலன் பணப்பை கொண்டு வந்த செய்தியை ஊராருக்கு சொன்ன கடைக்காரர், கஞ்சப்பயல் சோமன் அப்படி என்னத்தான் பரிசு கொடுக்கப் போறான் என்று பார்ப்போம் என்று அனைவரையும் அழைத்து வந்தார். வந்த இடத்தில் பூபாலன் குற்றவாளி போல நிற்பதை கண்ட ஊரார் சோமனை சும்மா விடக்கூடாது, இந்த பிரச்சினையை மரியாதை ராமனிடம் தான் கொண்டு சென்று தீர்ப்பு கேட்க வேண்டும் என்று சொன்னார்கள்.ஆக மொத்தம் சோமன் ஏமாற்றுகிறான் என்பதை புரிந்துகொண்ட மரியாதை ராமன், சோமனுக்கு சரியான தண்டனை கொடுக்க நினைத்து இவ்வாறாக தீர்ப்பு கூறினார் 'சோமன் தொலைத்த பையில் பணமும், வைர மோதிரமும் இருந்தது என்று அவரே சொல்லியிருக்கிறார். இப்போது பூபாலன் கொண்டு வந்த பையில் பணம் மட்டுமே உள்ளது. ஆக இது சோமனின் பையே இல்லை, வேறு யாரோ தொலைத்த பை. அப்படி தொலைத்தவர் இதுவரை யாரும் புகார் கொடுக்கவில்லை, அவ்வாறு யாரும் புகார் கொடுக்காதவரை நம்ம ஊரு வழக்குப்படி கிடைத்த பணத்தில் 10 பங்கு அம்மன்கோயிலுக்குக் கொடுத்துவிட்டு, மீதியை எடுத்தவரே வைத்துக்கொள்ளலாம்.

ஆக பூபாலன் அந்த பணத்தை தன் சொந்த உபயோகத்துக்கு வைத்துக்கொள்ளலாம், சோமனின் பணம் மற்றும் வைர மோதிரம் கொண்ட பையை கண்டுபிடித்தவுடன் சோமனே சன்மானம் கொடுப்பார், சபை கலையலாம்.'

மரியாதை ராமன் தீர்ப்பு சொன்னதும் சோமனுக்கு இதயமே நின்று போனது போல் ஆகிவிட்டது.

பூபாலன் கிடைத்த பணத்தில் 10 சதவீதம் அம்மன் கோயிலுக்கு கொடுத்துவிட்டு, மீதியை தன் சொந்த ஊருக்கு கொண்டு சென்று தொழில் செய்து நலமாக வாழ்ந்து வந்தார்.

ஒரு காலத்தேவையின் குறியீடும் அதனைப் பிரதிபலித்த காலக் கண்ணாடியும்

நேர்கண்டவர் கலாநிதி **து.பிரதீபன்** நேர்காணல் இடம்பெற்ற நாள்: 15-07-2018
பி.ப.2.00- 5.00 மணி வரை இடம் : கல்லடி வதிவிடம்.

நேர்காணல் நுளைவு

சமகால சமூக, அறிவியல் நீரோட்டத்தில் தன்னை அர்ப்பணித்து, பார் ஆளாவிட்டாலும் பார் போற்றக்கூடிய பண்பின் சிகரமாக, அமைதியான ஆளுமையாளராக, புகழ்விரும்பாப் புலமையாளராக, சமகாலத்துக்கேற்ற சமூகத் தொண்டராக, தமிழ் வளர்க்கும் தமிழியலாளராக, ஆய்வுகளின் ஆசானாக, வினைத்திறன் மிக்க விமர்சகராக, எழுச்சிமிகு எழுத்தாளராக, இனியார்க்கெல்லாம் இனியவராக, சிவாநந்தாவால் சிகரந்தொட்டவராக, தன்நலம் கருதா தவசியாக எனப் பல நாமங்களுக்கும் சொந்தக் காரராக, மண்ணின் மைந்தராக இன்றும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் கறுப்பு நிலா காசுபதி ஐயாவின் சரிதத்தை எழுத்துக்களால் வடிப்பது முற்போக்கான சமூகத்திற்கு முன்மாதிரியாக இருக்கும் எனப் பலர் கூறியதைக் கேட்டுள்ளேன். ஆதலால் ஆவணத்திற்கான அருமையான அத்திவாரம் நமது வைரவிழா மலர்தான் என்பதை உணர்ந்து, ஐயாவை அணுகினேன். ஆழமறியாது காலை விட்டுவிட்டேனா?... என ஆச்சரியப்படும் வகையில் அமைந்தது கறுப்பு நிலாவின் காவியப் பயணம். "கறுப்பு நிலா" எனும் பெயரில் காவிய நாயகனை தனியான நூலாக ஆவணப்படுத்த வேண்டும் என்ற உள்ளத்து உணர்வோடு கலந்துரையாடல் களத்தை நோக்கி உங்களை அழைத்துச் செல்கிறேன்.

விருட்சமாகிய விதையின் பரிணாமம்

உள்ளூராட்சித் திணைக்களத்தில் 35 வருடங்களுக்கும் மேலாக பணியாற்றிய காசுபதி ஐயா, சனசமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தராக, மட்டக்களப்புப் பிராந்திய துணை உள்ளூராட்சி ஆணையாளராக, ஈச்சிலம்பற்று, ஆறுமுகத்தான் குடியிருப்பு மற்றும் நவகிரி நகர் உள்ளூராட்சி மன்றங்களின் விசேட ஆணையாளராக எனப் பல படிநிலைகளில் சேவையாற்றிவர். கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் நிதிப் பணிப்பாளராகவும்,மட்டக்களப்பு நகரமத்தியஸ்த சபை உறுப்பினராகவும் சேவையில் நிலைபெற்றவர். தனது அரச பதவிக்காலத்தில் கிழக்கு மாகாணம் முழுவதும் சனசமூக நிலையங்கள், பொது நூலகங்கள் பாலர் பாடசாலைகள், கலைக் கழகங்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்கள் உருவாக்கியும் முகாமைத்துவம் செய்தும் வந்தவர். 1954 இலிருந்து

பொதுப்பணிகளில் ஈடுபட்டு நூற்றுக்கும் மேற்பட்ட தொண்டு நிறுவனங்களில் பல்வேறு பதவிகளை வகித்து வந்தவர். கிழக்கு மாகாண சபையில் இலக்கிய வித்தகர் என்றும், மத்திய அரசின் இந்து கலாசாரத் திணைக்களத்தால் கலாபூஷணம் என்றும் நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதவான் என்றும் மற்றும் பல்வேறு பொது நிறுவனங்களால் கௌரவம் பெற்றவர்தான் இந்தக் கறுப்பு நிலா.

சிவானந்தாவின் தமிழ் மொழி மூல முதல் பட்டதாரியாக, எமது பழைய மாணவர் மன்றத்தின் செயலாளராக, ஆட்சிக்குழு உறுப்பினராக, பாடசாலை அபிவிருத்தி சங்க நிர்வாகசபை உறுப்பினராக என்று நீளும் சேவையின் நாயகனான பழைய மாணவச் சகோதரர் ஐயா காசுபதி அவர்களை நேர்காணலால் ஆவணப்படுத்தல் காலத்தின் தேவை என்பேன். நான் சிறுவயதில் இருந்தே இராமகிருஷ்ண மிஷனில் இருந்ததால் பாலரில் படித்த காலந்தொட்டு பல்கலை செல்லும் வரை காசுபதி ஐயாவின் சேவைப் பாங்கையும் இராமகிருஷ்ண மிஷனோடு அவருக்கிருந்த ஐக்கியத்தையும் நன்றாக அறிவேன். அதனால் அவரை நேர்காண்பதற்கு நான் பொருத்தமானவன் என்றே நம்புகின்றேன்.

பல நாமங்களுக்கும் சொந்தக் காரராக, மண்ணின் மைந்தராக இன்றும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் கறுப்பு நிலா காசுபதி ஐயாவின் சரிதத்தை எழுத்துக்களால் வடிப்பது முற்போக்கான சமூகத்திற்கு முன்மாதிரியாக இருக்கும்

கேள்வி:

சுவாமி ஜீவானானந்தாவினதும், சுவாமி அஜரத்மானந்தாவினதும் மற்றும் ஸ்ரீராம கிருஷ்ண மிஷன் துறவிகளுடனும் தொண்டராயிருந்து அங்கு வரும் போதெல்லாம் நான் உங்களைப் பார்த்திருக்கின்றேன். நீங்கள் சிவானந்தாவின் மூத்த மாணவர்களில் ஒருவராகவும் இருந்துள்ளதையும் அறிவேன். தங்களைப் பற்றியும் தங்களது சிவாநந்தா வாழ்வு பற்றியும் அதில் பெற்ற அனுபவங்களையும் கூறுங்கள்.

பதில்:

அன்னம்மா- காசுபதி தம்பதிகளின் கடைசிப் புதல்வனாக 1941 ஏப்ரல் 10ல் ஆரையம்பதியில் பிறந்தேன். சுவாமி விபுலானந்தரின் பிறந்த நாள் பற்றிய விமர்சனம் போல் எனக்கும் உள்ளது. நான் 1941 ஏப்ரல் 01ஆம் நாளில் பிறந்ததாக பதிவு கூறுகின்றது. அதனையே அரச பணிகளுக்குப் பயன்படுத்தி வருகின்றேன்.

"நம்மவர்கள் தமது பரம்பரை குறித்து எழுதத் தொடங்கினால் இது ஒரு புலவரிலோ அரசனிலோ தான் முடியும் என்று கிண்டலாக குறிப்பிட்டிருந்தார். எழுத்தாளர் ஒருவர் நம் ஒவ்வொருவரின் பரம்பரையிலும் புகழ்பெற்ற ஒரிருவர் இருந்திருக்கக்கூடும். அதே நேரத்தில் நம் முன்னோர்களில் ஒருவர் கொலைகாரனாகவோ, அல்லது கொள்ளைக்காரனாகவோ கூட இருந்திருக்கலாம். எவ்வாறிருந்தாலும் ஒருவர் தமது பரம்பரையைப் பற்றி தெரிந்து கொள்வது ஆர்வத்தைத் தூண்டுவதும் சுவையானதுமாகும். பரம்பரையைப் பற்றி ஆய்வு செய்யும் போது அரிய வரலாற்றுத் தகவல்களும் வெளி வருகின்றன. நமது மரபணுக்கள் உயிருள்ள வரலாற்று நூல் ஆகும். நமது முன்னோர்கள் தொலைவான இடங்களுக்கு குடி பெயர்ந்த வரலாற்றை நமது மரபணுக்கள் மூலமாகத் தெரிந்து கொள்ளலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள்" 27.08.2017ம் திகதி வீரகேசரியின் விண்மணி என்பவரால் எழுதப்பட்ட கட்டுரையிலிருந்து இது பெறப்பட்டது.

இம் மேற்கோளை நான் இவ்விடத்தில் குறிப்பிடக் காரணங்கள் இரண்டு. ஒன்று ஆரையம் பதியில் எனது குடி பரம்பரையைப் பார்த்தால் நான் மன்றுளாடி குடியைச் சேர்ந்தவன். கேரளத்து எழுத்தாளர் ஒருவர், M.G.R. இக்குடியில் பிறந்ததாக அவரது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும் நான் பிறந்து வளர்ந்து களிமண்ணால்

கட்டப்பட்டு ஓலையால் வேயப்பட்ட வீட்டில் வாழ்ந்து வந்த நிலையில் 1957 வெள்ளம் அதனைக் கரைத்து அடித்துச் சென்றுவிட்டது. இதனூடாக, கீழ் நிலை வருமானத்துக்குட்பட்ட சாதாரண குடும்பம் எங்களுடையது. புகழ் பாட அங்கு ஒன்றும் இருந்திருக்கவில்லை என்பதைக் கூற விளைகின்றேன். மற்றையது இலங்கையின் உள்நாட்டுப் போரால் புலம்பெயர்ந்த வெளிநாட்டுப் பழைய மாணவர்கள் அதிகம் நம்மவர் உள்ளனர். யுத்தத்திற்கு முன் புலம் பெயர்ந்தவர்கள் மேட்டுக்குடியினர். எவ்வாறாயினும் உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் நம்மவர்களின் ஆற்றலை வெளிக்கொணர்ந்து காலத்திற்கு காலம் இச்சபை அவர்களை கௌரவித்து மகிழ்விக்க வேண்டும் என்பது எனது விருப்பு. இளமையில் எனது தந்தை கடும் நோயுற்று புற்று நோயால் மரணித்து விட்டார். அண்ணாமார்கள் என்னைப் பல்கலைகழகம் வரை அனுப்பிப் படிப்பித்து பட்டதாரியாக்கி விட்டனர். இதுவே என்வாழ்வின் திருப்புமுனை இதற்கு அடிப்படையானது சிவானந்த வித்தியாலயம் என்ற மகிமை மிக்க மண்ணும் சுவாமி நடராஜானந்தரின் ஆசீர்வாதமுமே. இல்லாவிடில் எனது தொழிலும் வாழ்வும் திசைமாறி இருளாகியிருக்கும்.

கேள்வி :

நீங்கள் சிவாநந்தாவுக்கு எப்போது வந்தீர்கள்? அதன் நோக்கம் என்ன?

பதில் :

இது 1959இல் நிகழ்ந்தது. இதுவும் அக்காலக் கல்வியியல் வரலாற்றில் ஒரு துணுக்கு. நான் ஆரையம்பதியில் இராமகிருஷ்ண வித்தியாலயம், நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயம் மற்றும் அங்கு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் ஆரம்பக் கல்வியையும், இடை நிலைக் கல்வியை காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயத்திலும் பின் ஆரையம்பதி அரசினர் சிரேஷ்ட தமிழ்க்கலவன் பாடசாலையிலும் பெற்றுக் கொண்டேன். அக்கால மரபுப்படி உயர் பரீட்சைக்கான எனது அடுத்த தெரிவு அரசினர் ஆசிரிய கலாசாலைதான். இதற்கான உள்நுழைவுப் பரீட்சை எழுதுவதற்கு 18 வயதைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். வயதுக்காக ஒரு வருடம் காத்திருக்க வேண்டிய காரணத்தால் இந்த ஒரு வருட காலத்தில் சமூக சேவைகளிலும் தொண்டர் ஆசிரியர் சேவையிலும் பொழுதைக் கழித்தேன். ஆன போதிலும் கல்விக் கொள்கை புதிய சுற்று நிரூபங்களால் அரசினர் ஆசிரிய கலாசாலைக் கனவு கானல் நீராகிவிட்டது. நான் படித்து முடித்த எந்தப் பாடசாலையிலும் முறையான ஆங்கில ஆசிரியர் எனக்குக் கிடைக்க வில்லை. இது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. இந்நிலமையைச் சீர் செய்ய ஆசிரியத்துவத்திலிருந்த எனது அண்ணர் கனகரெத்தினம், மாமனார் தம்பாப்பிள்ளை முதலானோர் கூடித் தீர்மானித்து சிவாநந்தாவில் ஆங்கில மொழி படித்து மீண்டும் S.S.C. பரீட்சை எழுத வைக்கத் தீர்மானித்தனர்.

கேள்வி:

சிவாநந்தாவில் ஆங்கிலம் படிக்க வந்த நீங்கள் எப்படி தமிழ்மொழி மூலப் பட்டதாரியானீர்கள்?

பதில்:

இங்கே திருவருளும், குருவருளும் கூடிற்று என்பேன். அக்காலத்தில் எனது உறவுக்காரர் குஞ்சித் தம்பி மாஸ்டர் என்பவர் சுவாமி நடராஜானந்தாவின் அன்பர். இ.கி.மி பாடசாலையில் கற்பித்து வந்த ஆசிரியர். அவரை அணுகி என்னைச் சிவாநந்தாவில் சேர்க்க உதவி கேட்டனர். நான் சிவாநந்ததாவுக்கு செல்ல விருப்பியமை அறிந்த எனது நண்பர்கள் சிலரும் என்னுடன் இணைந்து கொண்டனர்.

« இளமையில் எனது தந்தை கடும் நோயுற்று புற்று நோயால் மரணித்து விட்டார். அண்ணாமார்கள் என்னைப் பல்கலைகழகம் வரை அனுப்பிப் படிப்பித்து பட்டதாரியாக்கிவிட்டனர். இதுவே என்வாழ்வின் திருப்புமுனை இதற்கு அடிப்படையானது சிவானந்த வித்தியாலயம் என்ற மகிமைமிக்க மண்ணும் சுவாமி நடராஜானந்தரின் ஆசீர்வாதமுமே. »

சுவாமி விபுலானந்தரின் நேர் மாணவரான பேராசிரியர்களான க.கணபதிப்பிள்ளை மற்றும் வி.செல்வநாயகம், க.கைலாசபதி, சு.வித்தியானந்தன் முதலான தமிழறிஞர்களிடம் கற்கும் பேறு கிடைத்தது. சிவானந்தாவின் முதல் தமிழ்மொழிப் பட்டதாரியாகும் பெரும் பேறு பெற்றேன்.

கல்லடி உப்போடையில் சுவாமி நடராஜானந்தா வாழ்ந்த கமலாலயம் இல்லத்தில் என்னை அழைத்துச் சென்று அவர் பாதத்தை நான் வணங்கியபோது அவர்கள் எனது தலையில் கை வைத்து ஆசீர்வதித்து விட்டார். அப்போது சிவானந்தாவுக்கு திரு.க.கணபதிப் பிள்ளை ஐயா அதிபராயிருந்தார். சுவாமி விபுலானந்தர் காலத்தில் அலுவலகமாயிருந்த பழைய கட்டிடத்தின் முகப்பில் எங்களுக்கு புதிய வகுப்பு ஆரம்பிக்கப் பட்டது. எங்களைப் புதினம் பார்க்க வந்த மாணவர்கள் கிழவன்கள் படிக்க வந்ததாக கூறிச் சிரித்தது நிழலாடுகிறது.

கணபதிப்பிள்ளை ஐயாவிடம் ஆங்கிலம் கற்கப் போய் அவர் எங்களுக்கு செய்த முதல் உபதேசம் ஆங்கிலத்தை எப்போதும் கற்றுக் கொள்ளலாம். (இன்று வரை அது எனக்குக் கைவரவில்லை) ஆனால் இப்போது இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி மூலப் பட்டப்படிப்பு ஆரம்பமாக உள்ளது அதற்கு மாணவர்களைச் சேர்க்க அறிவுறுத்தல் வந்துள்ளது. நீங்கள் H.S.C. வகுப்பில் படித்து பல்கலைக்கழகத்தில் நுழைவைப் பெற முடியும். நீங்கள் முதல் தொகுதி மாணவர்களாக இங்கு இருக்கலாம் என்று வழிகாட்டினார். பல்கலைக்கழகப் பட்டம் பற்றிய முன்னறிவு எதுவும் எனக்கு இருக்க வில்லை. ஆயினும் வேறு வழியின்றி அவ்வகுப்பில் இணைந்து கொண்டோம். நாங்கள் 18 மாதங்களில் பரீட்சைக்கு தயாரானோம். அர்ப்பணிப்புடன் கற்பித்த அமரர்களான நொச்சிமுனை ரூபசிங்கம் மாஸ்டர் (பிற்காலத்தில் இலங்கையின் புகழ் பெற்ற பல்கலைக்கழக நூலகரானவர்) பண்டிதர் வீசிகந்தையர், வியாக சிரோமணி தியாகராசா ஐயர் மூவரையும் நன்றியுடன் நினைவுகூர்ந்து பிராத்திக்கின்றேன்.

கொழும்பில்தான் பரீட்சை எழுதினோம். நாங்கள் சிவானந்தா என்பதால் கொழும்பு ஸ்ரீராமகிருஷ்ணமிஷனில் தங்குமிடம், உணவு வசதிகள் ஆகியன கிடைத்தன. இப்போதுள்ள விடுதிக் கட்டிடம் பூரணத்துவம் பெறாத நிலையில் அதற்குள்ளேயே தங்க வைக்கப் பட்டோம். இங்கு பரீட்சை எழுதியதில் நான் ஒருவனே தெரிவானேன். இது எனது கெட்டித் தனத்தால் என்று கூறமாட்டேன். ஏனெனில், என்னையும் விட அறிவாற்றல் கூடிய மாணவர்கள் என்னுடனிருந்தனர். விதி அல்லது அதிர்ஷ்டம் என்னை இலங்கை பல்கலைக்கழகம் பேராதனையில் தமிழ், பொருளியல், அரசியல், விஞ்ஞானம், வரலாறு ஆகிய பாடங்களில் சுவாமி விபுலானந்தரின் நேர் மாணவரான பேராசிரியர்களான க.கணபதிப்பிள்ளை மற்றும் வி.செல்வநாயகம், க.கைலாசபதி, சு.வித்தியானந்தன் முதலான தமிழறிஞர்களிடம் கற்கும் பேறு கிடைத்தது. சிவானந்தாவின் முதல் தமிழ்மொழிப் பட்டதாரியாகும் பெரும் பேறு பெற்றேன்.

வைத்திய கலாநிதி விவேகானந்தராசாவின் மூத்த சகோதரர் சிவானந்தராசா, சந்தானம், மூக்கையா, பழனித்தம்பி முதலானோர் முறையே விஞ்ஞானத் துறை, விவசாயத்துறை, வைத்தியத் துறையில் சேர்ந்ததும் இங்கு பதியப்பட வேண்டியதே.

கேள்வி:

சிவானந்த வித்தியாலயப் பணிகளில் உங்கள் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புப் பற்றிக் கூறுங்கள்.?

பதில்:

1980க்கு முன் இது மட்டுப்படுத்தப்பட்ட தாயிருந்தது. ஏனெனில் நான் ஆரையம்பதியிலும், திருகோணமலையிலும் சீவித்தது காரணம். எனினும் 1964இல் நான் பட்டதாரியாகி வெளிவந்ததும் சிவானந்தாவில் சிலகாலம் தொண்டர் ஆசிரியராக இருந்தேன். இலக்கிய கலாநிதி வி.சு.கிருபையா பண்டிதர் வெளிநாடு செல்ல வேண்டியிருந்ததால் அக்காலப் பகுதியில் அவர் கற்பித்த வகுப்புகளுக்கு நான் தமிழ் படிப்பித்ததுண்டு. இரு நேர் பாடசாலை என்பதால் பகலுணவு விடுதியில் எனக்கு இலவசமாகக் கிடைத்தது. அப்போது என்னிடம் கற்ற சிலர்

பிற்காலத்தில் நான் அவர்களுக்கு கற்பித்ததை நினைவூட்டி நன்றி தெரிவித்ததும் நினைவுக்கு வருகின்றது. இவ்வாறே நான் ஆரையம்பதி மகா வித்தியாலயம் மற்றும் இ.கி.மி. வித்தியாலயம் ஆகியவற்றில் தொண்டராசிரியராகவும் சேவையாற்றியதோடு கல்லடி உப்போடை ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் நடத்திய ஞாயிறு பாடசாலையின் ஆசிரியராகவும் சேவை செய்துள்ளேன். 1980க்கு பின் நான் கல்லடி உப்போடையில் குடியேறியதால் முழு வீச்சுடன் பாடசாலைப் பணிகளில் ஈடுபடலானேன். பழைய மாணவர் சங்க ஆரம்பகால உறுப்பினராகவும், ஆயுட்கால உறுபினராகவும் உள்ளேன். அதன் நிறைவேற்று சபை உறுப்பினராகவும், செயலாளராகவும் இருந்துள்ளேன். எனது மகன் இங்கு கல்வி கற்றதால் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினராகவும் இருந்துள்ளேன். சிவானந்தியன் சஞ்சிகை மற்றும் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் பாராட்டு நிகழ்வுகள், ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் அறப்பணிகள் என்று ஒரு நீண்ட பட்டியல் உள்ளது. இது அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட தொடர்பு.

கேள்வி:

உங்களது துணைவியார் திருமதி. விமலாவதி நடராஜா கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக புகழ்பெற்ற மாணவர்கள் பலரை உருவாக்கிய பௌதிகவியல் ஆசிரியையாக பேசிப் பாராட்டப்படுகின்றார். இது பற்றிய கருத்துக்களைக் கூற முடியுமா?

பதில்:

எனது மனைவி திருகோணமலை சென். மேரிஸ் பெண்கள் கல்லூரியில் முதன் முதல் உயர்தர விஞ்ஞானப் பிரிவு ஆரம்பித்தபோது அங்கு 1947ல் தொடங்கி பௌதிகவியல் ஆசிரியையாக இருந்து பலரை உருவாக்கியவர். நாங்கள் 1980இல் இடம் மாறிவந்த போது நாங்கள் குடியிருந்த வீட்டுக்கு அயலில் சிவாநந்தா அமைந்திருந்தது. அக்காலம் இதன் கல்வி நிலை சீராய் அமையவில்லை. சிவாநந்தாவின் முன்னணிப் பழைய மாணவர்களே தத்தம் பிள்ளைகளை சிவாநந்தாவுக்குச் சேர்க்க விரும்பாமல் நகரத்துக்கு நகர்த்திய காலம் அது.

இவ்வேளையில் எங்களுக்கு முன்னால் பல முன்னணிப் பாடசாலைகளும் அதன் அதிபர்கள் மற்றும் அறிமுகமானவர்களும் இருந்தனர். ஆயினும் நான் சிவாநந்தாவையே தெரிவு செய்தேன்.

அப்போது விஞ்ஞானக் கல்வி அதிகாரியாயிருந்த மூத்த அறிஞர் சோ.சிவலிங்கத்திடம் நான் விடயத்தைக் கூறி சிவாநந்தாவுக்கு மனைவிக்கும் நியமனம் பெற்றுத் தருமாறு கூறினேன். சிவலிங்கம் ஐயாவுக்கு என்னை நன்கு தெரியும். மனையாளின் திறமை தெரியாது. அவர் என்னிடம் "இப்போது சிவானந்தாவைக் கேட்கிறீர். அது சீராக்கப்பட வேண்டிய நிலையிலுள்ளது. ஊர் பிடிபட்டதும் ஓடமாட்டேன் என்று கூறினால் மட்டுமே நான் சம்மதிப்பேன்" என்று கூறினார். இதனை ஏற்றுக் கொண்டு எனது மனைவி தன்னால் இயன்றதைச் செய்து ஓய்வு பெறும் வரை சிவானந்தாவிலேயே பணியாற்றினார். இடையில் வந்த பதவி உயர்வை நிராகரித்துச் சொல்லமுடியாத இடையூறுகளைக் கடந்து விசாரணைகளுக்கு முகங்கொடுத்துச் சலிக்காது உழைத்த திருப்தி எங்களுக்கு உள்ளது.

நீண்ட காலம் வெளிவராதிருந்த இயற்கை – விஞ்ஞானச் சஞ்சிகையை வெளிக் கொணர்ந்து, நீர்த்தடாகம் கட்டிமுடித்து கிழக்குப் பல்கலை கழகத்துடன் இணைந்து அமரர் பேராசிரியர் ரவீந்திரநாத்தின் ஆலோசனை பெற்று ஆய்வு கூடத்தை தரம் உயர்த்தி பல்வேறு உட்கட்டு மானப் பணிகளையும் செய்து சிறந்த விஞ்ஞானப், பொறியியல், மருத்துவப் பட்டதாரிகளை உருவாக்கிய திருப்தி உள்ளது. இதற்கெல்லாம் பக்கபலமாக சிவாநந்திய பழைய மாணவர்கள் இருந்தனர். அமரர் எந்திரி ஜெயசிங்கம் என்றும் நினைவிலிருக்க வேண்டியவர். அவர் தந்த ஆய்வுகூட மேசைகள் காலத்தால் அழியாதவை.

1980க்கு பின் நான் கல்லடி உப்போடையில் குடியேறியதால் முழு வீச்சுடன் பாடசாலைப் பணிகளில் ஈடுபடலானேன். பழைய மாணவர் சங்க ஆரம்பகால உறுப்பினராகவும், ஆயுட்கால உறுபினராகவும் உள்ளேன்.

ஓய்வு பெறும்போது துணைவியாரை எமது பழைய மாணவர் மன்றம் விழாவெடுத்து நன்றி கூறியதும் பதியப்பட வேண்டியதே.

கேள்வி:

நீங்கள் மட்டக்களப்பில் மிகக் கூடிய நெருக்குதல்கள் உள்ள காலத்தில் வாழ்ந்துள்ளீர்கள். கடத்தல், கப்பம், குண்டுத்தாக்குதல் அச்சுறுத்தல், இடம்பெயர்வு எனத் துன்புற்றதை அறிவோம். இத்தகைய அழுத்தங்களுக்கு உட்பட்டவர்களும், உட்படாதவர்களும் வெளிநாடுகளில் அடைக்கலம் பெற்றபோது நீங்கள் மட்டும் ஏன் அதனைச் செய்யவில்லை?

பதில்:

ஸ்ரீராமகிருஷ்ண குருதேவரின் திருவருள், சிவானந்தாவின் நண்பர்கள் வட்டம் மற்றும் இம்மண்ணையும், மக்களையும் விட்டுப்போக மனமில்லாமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். சுனாமியும் எங்கள் வீட்டைத் தாக்கியது. அப்போதும் நாங்கள் ஊரை விட்டுப் போக மனமில்லாது போய்விட்டது. எனினும் ரிஷிகேஷம் முதல் கன்னியாகுமாரி வரை இந்தியாவிற்குப் பல தடவைகளும் லண்டன், அவுஸ்ரேலியா, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, கட்டார் எனப் பல நாடுகளுக்கும் எங்கள் உழைப்பால் சென்று வந்துள்ளோம். அழகிய நாடுகள். மனம் லயிக்கவில்லை.

கேள்வி:

இவ்வளவு நெருக்கடிகளையும் சுமந்து சேவை செய்த நீங்கள் இதற்கான சமூக அங்கீகரிப்பைப் பெற்றுள்ளீர்களா?

பதில்:

ஆம்.ஆரையம்பதியில் 1954இல் பரமன் சனசமூக நிலையம், இராம முன்னேற்றச் சங்கத்தின் இளம் உறுப்பினராகச் சேர்ந்தபோது சிவானந்தாவில் அக்காலக் கல்வி கற்ற ஆரையம்பதி மாணவர்கள் பலர் நூலகம் நடத்தி "தென்றல்" எனும் கையெழுத்துப் பத்திரிகையொன்றை வெளியிட்டனர். இதில் தொடங்கி இன்று வரை நீளுகிறது.

மேலும், நான் பிறந்து வளர்ந்த பாதைக்கு "காசுபதி நடராஜர் வீதி" என ஆரையம்பதி பிரதேச சபை 1997இல் வர்த்தமானி மூலம் அறிவித்தல் விடுத்தது. எனினும், இது நாகரிகமல்ல என்றும் நான் மரணிக்கும் வரை இதற்குப் பெயர்ப்பலகை நடக்கூடாது என்றும் வலியுறுத்தியதால் இன்று வரை அது பெயரிட்டுப் பகிரங்கப்படுத்தப் படாமலுள்ளது. இது பலருக்குத் தெரியாது. காலம் இதனைத் தீர்மானிக்கட்டும் என விட்டுள்ளேன்.

பல்வேறு அபிவிருத்திப் பணிகள் பாராட்டு நிகழ்வுகள், இராமகிருஷ்ண மிஷன் அறப்பணிகள் என்று ஒரு நீண்ட பட்டியல் உள்ளது. இது அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட தொடர்பு.

நான் ஓய்வு பெற்றபோது மட்டக்களப்பு கலை இலக்கியப் பேரவை 2002இல் மகாஜனக் கல்லூரியில் விழாவெடுத்து. "சேவையின் நாயகன்" – எனப்பட்டம் சூட்டி கைநூல் ஒன்றும் வெளியிட்டு வைத்தனர். மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலை வைரவிழாவில் 2007 ஆனி 29இல் "சமூகத் தண்பொழில்" எனப்பட்டம் வழங்கி கௌரவித்தனர். 2004இல் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு. யோகேஸ்வரன் தலைமையில் மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவை அறப்பணியாளர் என விருது வழங்கியது. 2013இல் கிழக்கு மாகாணசபை இலக்கியவித்தகர் எனும் கௌரவப் பட்டம் வழங்கியது. 2013இல் இலங்கை இந்து கலாச்சாரத் திணைக்களம் கலாபூசணம் விருது வழங்கிச் சிறப்பித்தது. சிவானந்த வித்தியாலய பழைய மாணவர்மன்றம் தனது 56வது வருடாந்த கூட்டத்தில் பாராட்டிக் கௌரவித்தது. பத்து வருடங்களுக்கு மேல் மத்தியஸ்த சபையில் உறுப்பினராக பணியாற்றியவர்கள் அலரிமாளிகைக்கு அழைக்கப் பட்டு மாண்புமிகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களால் பாராட்டப்பட்டதுடன், நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதவான் பட்டம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டது. இவற்றைவிட என்னைக் கௌரவப் படுத்திய பல அமைப்புக்களை நான் பட்டியலிட்டுக்கொண்டே போகலாம்.

கேள்வி:

நீங்கள் ஏதும் நூல்கள் வெளியீட்டுள்ளீர்களா?

பதில்:

இல்லை என்பதும் சுவையானதே. தனி நபர்கள், நிறுவனங்கள், ஆலயங்கள் முதலிய பல விடயங்களைப் பற்றிய வரலாற்றுத் தகவல்கள் தனித்தனி கட்டுரைகளாக பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. தொகுப்புக்களும் வெளி வந்துள்ளன. ஆசிரியர் பீடத்திலும் செயற்பட்டுள்ளேன். எனினும் நூலுருப் பெறாதது சோம்பலின் உச்சகட்டமாக இருக்கலாம். எனினும் காலம் கடந்துவிடவில்லை.

கேள்வி:

பன்முக ஆளுமைகளுடன் பல நிறுவனங் களில் நிறைவேற்றுப் பதவிகளில் இருந்துள்ளீர்கள். இராமகிருஷ்ண மிஷன் அறப்பணிகளில் துறவிக ளுடன் இணைந்து செயற்பட்டதும் அறிவோம். உங்களது எதிர்காலத் திட்டம் என்ன?

பதில்:

என்னிடம் உள்ள கட்டுரைகளை வகைப் படுத்தி நூலாக்க விருப்பம். ஆனால் விற்க விருப்ப மில்லை. அறப்பணி நிறுவனங்களுக்கே கொடுக்க எண்ணியிருக்கின்றேன். எவ்வாறாயினும் நான் எனது நூறாவது பிறந்த நாளை உங்களுடன் இணைந்து கொண்டாட விரும்புகின்றேன். இது சாத்தியப்படாவிட்டால் மேலே கூறியதும் கற்பனை யாகி விடும். இயற்கைச் சமன்பாட்டை மீற முடியாது.

கேள்வி:

எமது வித்தியாலயத்தைப் பற்றிய உங்கள் மனப் பதிவுகளை கூறமுடியுமா?

பதில்:

நமது மதம் எல்லோரையும் தன்னுள் அடக்கிக் கொள்கிறது. யாரையும் விலக்குவ தில்லை. ஜாதிகளும், சமுதாய அமைப்புக்களும் மதத்துடன் தொடர்புபட்டாற் போல தோன்றி னாலும் அவை தொடர்புடையன அல்ல. ஒரு நாடு என்ற வகையில் நம்மை இணைத்துக் காப்பதற்கு இந்த சமுதாய அமைப்புக்கள் தேவை. யாழ்ப்பாணத்தில் சுவாமி விவேகானந்தர் கூறிய கருத்து. இதிலிருந்தே சுவாமி விபுலானந்தர் சிவானந்தாவை உருவாக்கினார் என்றேன். கல்விக் கூடத்தின் வரலாற்றைப் பார்த்தால் இந்து, முஸ்லீம், கிறிஸ்தவம் எனப் பல இனமொழி மாணவர்களையும் இலங்கை மற்றும் இந்திய ஆசிரியர்களையும் சிவானந்தா உள்வாங்கி இருந்தது. இது அன்றைய காலத்தின் தேவையாக இருந்ததும் நோக்குதற்குரியது. அக்காலம் அதிபர் அம்பலவாணரை இடமாற்றக் கூடாது என்று சத்தியாக்கிரகம் இருந்த காலம் முதல் அதிபர்களாக இருந்தவர்கள் தங்களால் முடிந்ததைச் சாதித்துள்ளனர். இவர்களுடன் பயணித்த ஆசிரியர்கள் குருதேவரின் பாரம்பரியத்தை கடைப்பிடித்தவர்கள். காலத்திற்குக் காலம் இங்கு வருகை தந்த துறவிகளாலும் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள்.

இத் தலைமுறை இப்போது ஓய்வு பெற்றும் மரணித்தும் விட்டது. அக்காலம் ஓர் ஆன்மீகப் பாரம்பாரியம் ஓடிக்கொண்டிருந்த போதிலும் அதற்கு இடையூறு ஏற்படாத வகையில் ஓர் இடதுசாரி மாற்றுச் சிந்தனை வட்டமும் அங்கு உருவாகி இருந்ததைப் பதியாமலிருக்கமுடியவில்லை. எனினும் இவற்றையும் கடந்த, பண்பாட்டு பாரம்பரிய வீச்சுடன் செயற்பட்டிருந்தது. அரசு பாடசாலைகளை பொறுப் பேற்று, காலம் செல்லச் செல்ல தொழில் நிமித்தம் வந்தவர்கள் அதிகரித்து விட்டனர். இவர்களுக்கு இங்குள்ள நிலமையைப் பற்றிய முறைசார் வழிகாட்டல் இல்லாமல் போய்விட்டது. எனினும், இவைகள் எல்லாவற்றையும் பற்றிய முறையான விமர்சனமும் பரிகாரத் தேடலும் இருக்க வேண்டும்

கல்விக் கூடத்தின் வரலாற்றைப் பார்த்தால் இந்து, முஸ்லீம், கிறிஸ்தவம் எனப் பல இனமொழி மாணவர்களையும் இலங்கை மற்றும் இந்திய ஆசிரியர்களையும் சிவானந்தா உள்வாங்கி இருந்தது.

என நினைக்கின்றேன். சமகாலத் தலைமுறையில் தலையிடுவது பல்வேறு நெருக்கடிகளை உருவாக்கும். எனினும் இராமகிருஷ்ணமிஷன் துறவிகளினதும் பழைய மாணவ மன்றத்தின் ஆலோசனையும் பயனுள்ள விளைவுகளை ஏற்படுத்துவனவாய் அமையும். 1945இல் இலவசக் கல்வித் திட்டம் பல பரிமாணங்களைப் பெற்று சர்வதேச பாடசாலை களையும் தோற்றுவித்து விட்டது. இதற்கு ஈடுகொடுக் கும் புதிய யுக்திகளை கையாள வேண்டும். காலத்திற்குக் காலம் இங்கு கடமையில் இருந்த அதிபர்கள், ஆசிரியர்கள் சந்தித்த நெருக்கடிகளை அறிவேன். அவைகளைச் சாதுரிமாகச் சமாளித் தவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இவ் வித்தியாலயத்தின் பொற்காலமாக பெண் மாணவிகளை உயர்தர வகுப்பில் சேர்த்த தையே கூறுவேன். ஒரு முறை நிகழ்ந்த விளையாட்டுப் போட்டியில் பெண்களின் திறமையை கண்டு வியந்த முன்னாள் அதிபர் அமரர் க.கணபதிப்பிள்ளை ஐயா அருகிலிருந்த என்னிடம் சிவாநந்தாவில் பெண்களை சேர்க்கக் கூடாது என்ற நிலைப் பாட்டில் நான் நின்றது எவ்வளவு தவறு என நினைக்கின்றேன் என்று கூறியது நினைவிற்கு வருகிறது. இதனை முன்பே செய்திருக்க வேண்டும் என்று கூறியதை நினைத்துக் கொள் கின்றேன். பெண்களை சிவாநந்தா விலிருந்து நீக்கியதன் பிற்பாடு ஏற்பட்ட கல்விப் பின்னடைவு பற்றியும் நினைத்துக் கொள்கின்றேன்.

மேலும், தேசிய பாடசாலைகள் அதிகம் இல்லாத காலத்தில் சிவாநந்தாவை தேசிய பாடசாலை யாக தரம் உயர்த்த வேண்டுமென்று பழைய மாணவர்கள் சங்கம் கல்விமான்களுடன் கலந்துரை யாடலை நடத்தி ஆய்வு செய்ய முற்பட்டது. எனினும் சிறிது காலத்திற்குள் நாடு முழுவதும் தேசிய பாடசாலைகள் உருவாக்கப் பட்டதால் சிவாநந்தாவும் அதற்குள் உள்வாங்கப்பட இம் முயற்சி பெரிதும் உதவிற்று.

சிவாநந்தாவின் கல்வி வளர்ச்சிக்குச் சமாந்தரமாக சிவாநந்தியன் விளையாட்டுக் கழகம் இயங்கி வந்ததும் பதியப்பட வேண்டும். அதன் மூத்த வழிகாட்டியான திரு.G.பாஸ்கரன் இன்னும் இருக்கின்றார். இவ்வாறு பல்வேறு நிகழ்வுகளை நான் நேரில் கண்டிருக்கின்றேன். இவ்வித்தியாலயம் புதிய எழுச்சி பெற்று வீச்சுடன் செயற்பட அனைவரும் உதவவேண்டும். நானும் இயன்றதைச் செய்வேன்.

கேள்வி:

எமது பழைய மாணவர் மன்றத்தை பற்றிய நினைவுகளையும் நிலையையும் பற்றிக் கூறுங்கள்?

பதில்:

இது தொடங்கப்பட்ட ஆரம்ப காலத்தில் நான் இருக்கவில்லை. பட்டதாரியாகிய பின் 1964 இலிருந்து இணைந்து கொண்டேன். பழைய நண்பர்களைச் சந்திக்கும் நல்ல களமாக இருந்தது. காலப்போக்கில் காத்திரமான விமர்சனங்கள் எழத் தொடங்கின. வித்தியாலய அபிவிருத்தி பணிகளிலும் ஸ்ரீராம கிருஷ்ணமிஷன் அறப்பணிகளிலும் வலுவாக ஈடுபடத் தொடங்கியது. பழைய மாணவர்கள் அதிபராயிருந்ததால் அவர்களே தலைவர்களுமாயி

இவ்வித்தியாலயம் புதிய எழுச்சி பெற்று வீச்சுடன் செயற்பட அனைவரும் உதவவேண்டும். நானும் இயன்றதைச் செய்வேன்.

ருந்தனர். பின்பு உயர்நிலை அதிகாரிகளை உள்ளீர்த்துக் கொண்டு வலுவான கட்டமைப்பாகியது. கலகலப்பும் சலசலப்பும் நிறைந்த காலகட்டமும் இருந்தது. முஸ்லீம் சகோதரர்கள் தவறாது சமூக மளிப்பர். அவர்களுக்குரிய கௌரவம் எப்போதும் வழங்கப்பட்டது. இலங்கை புதிய கல்விக் கொள் கைகளை வகுக்கும் போது பழைய மாணவர்களின் கருத்துக்கள் பயனாயிருக்கும். அதற்கு மாவட்ட, மாகாண, தேசிய பழைய மாணவர் மன்றம் உருவாக்க நாம் முயற்சிக்க வேண்டும். பின் தங்கிய மாணவர் களின் குடும்பநிலை, உளவியல் பிரச்சினை போன்றன ஆய்வு செய்யப்பட்டு பரிகாரம் காண நிபுணத்துவக் குழு நிரந்தரமாக உருவாக்கப்பட்டு வழி காட்டப்பட

வேண்டும். புலம் பெயர்ந்த உறவுகளின் வழிகாட்டலையும் பெற்றுக் கொள்ள வேண்டும். இம் மன்றம் அரச கட்டுப்பாட்டுக்குள் உள்ளது என்பதும் நோக்கற்பாலது. கடந்து வந்த பாதையைப் படித்தால் புதிய பாதை அமைப்பது இன்றைய முகாமைத்துவத்துக்கும் இனி வருவோருக்கும் பயனாயிருக்கும்.

கேள்வி:

புதிய தலைமுறைக்கு நீங்கள் கூற விரும்புவது?

பதில்:

காலங் காலமாகக் கூறப்பட்டு வந்த கருத்துக்களுக்கு மேலாக என்னிடம் ஒன்றுமில்லை. எனினும் குருதேவர், அன்னையார், சுவாமி விவேகானந்தர் வரலாறுகளைப் படியுங்கள் அவைகளில் எல்லாம் உள்ளன.

"முதலில் பணியக் கற்றுக் கொள்ளுங்கள்,
ஆணையிடுகிற தகுதி தானே வரும்"

"எப்போதும் முதலில் வேலைக்காரனாயிருக்கக் கற்றுக் கொள்ளுங்கள். எஜமான் ஆகிற தகுதி தானே வரும்." -சுவாமி விவேகானந்தர்-

சிவாநந்தியர்கள் பலரை நான் அறிவேன். அவர்களில் ஆணையிடுகிறவர்களாகவும், எஜமானர்களாகவும் இருந்தவர்கள் இளமையில் பணிவுள்ளவர்களாகவும், வேலைக்காரர்களாகவும், இருந்து வளர்ந்தவர்களே. வாழும் சிலரை நான் பெயரிடாமல் மனதுள் நினைக்கின்றேன். நீங்களும் அவ்வாறே வளர்வீர்கள். காலம் உங்கள் வயப்படப் போகின்றது, மறக்காதீர்கள், பற்றிக் கொள்ளுங்கள்.

சிறுவனாய், மாணவனாய், பட்டதாரியாய், கலாநிதியாய் வளர்ந்து வந்து என்னை நேர்காண வந்த நீங்கள் நல்ல எடுத்துக்காட்டு வழிகாட்டி சிறந்த நூலகம்.

விடைபெறல்:

இறுதியாக வாழ்த்துதல்களுடன் ஐயாவிடம் இருந்து விடைபெற்றேன்.

மு.கணபதிப்பிள்ளை
'மூனாக்கானா',
ஆரையம்பதி.

விபுலாநந்தர் பிறந்தார்

நான்முகனும் நாலுதிசை திரும்பிப்பார்த்து
நயனங்கள் மூடிஐந்து புலனடக்கிக
தானாகத் தனக்குள்ளோர் நினைவினோடு
சாந்தமாய் அமர்ந்திருந்தார் தியானந்தன்னில்
ஏனென்ற காரணத்தை அறிந்து கொள்ள
எண்ணமுற்ற கலைமகளும் நாவைவிட்டு
தானாக இறங்கிவந்து கரங்கள் கூப்பி
தாழ்பணிந்து நான்முகனின் எதிரே நின்றாள்.

தன்னிலையில் விழித்துவிட்ட பிரமன்தானும்
தன் நாவை விட்டிறங்கி எதிரேநிற்கும்
பொன்மலராம் கையேந்தி நிற்குந்தேவி
பூமகளாம் கலைமகளை விழித்துப்பார்த்து
என்னெதிரே கையேந்தி நிற்பதென்ன?
என்னவளே! எனக்குரைப்பாய் என்று கேட்க
உன்னுடைய மௌனத்தின் காரணத்தை
உன்தேவி நானறிய சொல்லுமென்றாள்.

அன்றொருகால் பாரதத்தின் வடக்கும் தெற்கும்
அறிஞர் நிலை மாறிஉயர் தாழ்வுகொள்ள
தென்திசைக்கு அகத்தியனை அனுப்பி வைத்து
சீர்செய்த செயல்போலே சிறிலங்காவில்
இன்றுவட திசைஉயர்ந்து கிழக்குத்தாழ்ந்து
இருப்பதனால் அகத்தியன்போல் ஒருவனங்கே
சென்றுசமச் சீரடையச் செய்வதற்கு
சிறந்ததொரு தமிழ்மகனை அனுப்பவேண்டும்.

முத்தமிழ் பலமொழியும் முதிர்ந்தஞானம்
முத்திவரை கல்வியோடு சமயத்தொண்டு
இத்தனையும் கொண்டதொரு அறிஞன்தன்னை
இப்புவியில் நான்படைக்க எண்ணங்கொண்டேன்
உத்தமர்கள் பூவுலகில் குறைந்துவிட்டார்
உன்கலைகள் ஞானமெல்லாம் உவந்தேதந்தால்
இத்தினமே நான்படைப்பேன் இது என்நோக்கம்
இதற்குநீ துணைபுரிய வேண்டுமென்றான்.

எண்ணமதை சொல்லிவிட்டேன் எந்தன்தேவி
இப்படைப்பு எவ்வாறு அமையவேண்டும்
விண்ணவரும் போற்றுகின்ற இந்தஞானி
விரைவாக எம்மண்ணில் பிறக்கவேண்டும்
திண்ணமதாய் நீசொன்னால் சிறந்தநாளில்
தீயவரும் நல்லவரும் செறிந்துவாழும்
மண்ணுலகில் நான்படைப்பேன் மாதேகேளாய்
மங்கையர்கள் விரும்புவதை மறுப்பார்யாரே

கல்வியிலே சிறந்தவனாய் இருக்கவேண்டும்
காவியுடன் கலைவாழ்வு வாழவேண்டும்
சொல்லினிலே இளங்கோபோல் துலங்கவேண்டும்
தொண்டுசெய்ய துறவரத்தை விரும்பவேண்டும்
கல்லெடுத்த கைலாயம் இருந்து ஈழுக்
கரைவரையும் அவன்புகழே பரவவேண்டும்
வில்பொறித்த கொடியுடைய சேரநாட்டு
வீரர்கள்வாழ் நாட்டினிலே பிறக்கவேண்டும்

பலஇனமும் பலமொழியும் பலபண்பாடும்
பரவியுள்ள நாடுபல இருந்திட்டாலும்
நிலவதனை அணிந்தசிவன் தந்தகூத்தும்
நிகரற்ற மந்திரமும் நிலவும்நாடு
அலைகடலில் மலர்ந்துள்ள ஈழநாட்டில்
அவன்மட்டு மாநிலத்தில் தவழவேண்டும்
குலையாடுந் தென்னைமர நிழலில்நின்று
கூத்தாடித் தோழனுடன் மகிழவேண்டும்

விண்ணவனாம் நான்முகனும் திரும்பிப்பார்த்து
மேலான நால்வாயில் முறுவல்பூத்து
எண்ணரிய நாடுநகர் பலஇருந்தும்
இலங்கையிலே மட்டுநகர் தெரிந்ததேனோ?

பெண்களுமோர் எண்ணமதை மனதில்வைத்து
பேசிடுவார் செய்திடுவார் பெண்ணே! எந்தன்
கண்மணி உன் விருப்பம்போல் படைப்பேன், ஆனால்,
காரணத்தை நானறியச் சொல்லுமென்றான்.

சாலநிதிக் கோவலனின் கொலையால்கற்பின்
சக்திதனை உலகறியச் செய்தபெண்ணை
ஆலயங்கள் அமைத்ததிலே தெய்வமாக்கி
அகிலமதில் என்னினத்தை மதித்தபூமி
ஞாலமதில் எழுத்தறியாப் பெண்கள்பாட
நல்லிசையை மீனமைக்கும் நாடு என்றாள்
கோயிலில்லாப் பிரமனன்று செய்த அந்தக்
குற்றமதை நினைந்துதலை குனிந்தேநின்றான்

தன்னுடைய தேவியவள் விருப்பம்போல
தரணியிலோர் வித்தகனைப் படைக்கஎண்ணி
பன்மொழியும் முத்தமிழும் துறவும்பூணும்
பண்புடைய ஓர்விபுலா நந்தன்தன்னை
கன்னலொடு மாபலா தெங்குவாழை
கமுகுகளில் தேன்பொழியும் மட்டுநாட்டில்
கண்ணகியே அருள்பொழியும் காரைதீவில்
கண்ணம்மை வயிற்றினிலே பிறக்க வைத்தான்.

பெருமைக்குரிய சிவாநந்தா

ஓர் அவதார புருஷரின் நேர்ச்சீடரின் ஆசீர்வாதம் பெற்றது சிவாநந்தா வித்தியாலயம். சுவாமி விஞ்ஞானானந்தர் என்ற துறவறப் பெயர் கொண்ட இராமகிருஷ்ண பரமஹம்சரின் நேர்ச் சீடரே மட்டக்களப்புக்கு வருகை தந்து இவ் வித்தியாலயம் வளர்ச்சி பெற ஆசி வழங்கினார். இது நிகழ்ந்தது 1934ம் ஆண்டு ஜனவரி மாதம் 3ம் திகதி ஆகும். அன்றிலிருந்து இவ் வித்தியாலயம் பெருவளர்ச்சி காணத் தொடங்கியது. புகழ் பூத்த துறவியர் பரம்பரை யொன்றை இவ்வித்தியாலயம் தோற்றுவித்தது.

தம்பலகாமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சுவாமி சர்வாதித்தானந்தா, காரைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட சுவாமி நடராஜானந்தா, வலையிறவைப் பிறப்பிடமாகக் கொண்ட சுவாமி ஜீவனானந்தா, ஏறாவூரைப் பிறப்பிடமாகக் கொண்ட சுவாமி அஜராத்மானந்தா, போரதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட சுவாமி மாத்ருகானந்தா என அப் பட்டியல் நீளும். அவ்வாறே பேராசிரியர்கள் வரிசையில் திருமலையைச் சேர்ந்த பேராசிரியர் சண்முகதாஸ், காரைதீவைச் சேர்ந்த இ.பாலசுந்தரம்பிள்ளை, இக் கட்டுரையாளரான முனைக்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட மா.செல்வராசா எனப் பேராசிரியர்கள் வரிசை தொடரும். மேலும் நாசா போன்ற விண்வெளி ஆய்வு மையங்களில் பணிபுரிவோர், பல்வேறு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் விஞ்ஞானிகள், இலக்கிய கர்த்தாக்கள் என சிவாநந்தா உருவாக்கிய ஆளுமைகளின் பட்டியல் நீளும். பொது நிர்வாகத் துறையிலும் மத்திய வங்கியிலும் பணி யாற்றிய திரு சங்காரவேல் மற்றும் தங்கராசா போன்ற ஆளுமைகளையும் பட்டியலிடலாம்.

கற்ற பாடசாலையையும், பிறந்த மண்ணையும் மறந்திடாமல் பணியாற்றிவரும் கனடா வாழ் பாபு வசந்தகுமார், கோபால பிள்ளை துரைராஜசிங்கம், கே.குமரகுரு,திரு.ஏரம்பமூர்த்தி, சுவிஸ் வாழ் திரு.அழகு குணசீலன், மாணிக்கப்போடி குமாரசாமி போன்றோர் இன்றும் நமது பாடசாலையையும் மண்ணையும்

பேராசிரியர் மா.செல்வராஜா,
ஓய்வுநிலைப் பேராசிரியர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

மறவாது பணியாற்றி வருபவர்களாவர். மேற்குறிப் பிட்டோர் மூத்த தலைமுறையினர் எனக்கொண்டால் ஆயிரக்கணக்கான இளைய தலைமுறையினர் உலகு பூராவும் வாழ்ந்து, மண்ணிற்கும் பாடசாலைக்கும் பணியாற்றுவோர் தொகை எண்ணிலடங்கா. இவ்வளவு ஆளுமைகளும் இன்றும் பிரகாசித்துக் கொண்டிருப்பதற்குக் காரணம் விபுலானந்த அடிகளின் வேண்டுகோளிற்கிணங்க சுவாமி சிவாநந்தர் பணிப்பின்பேரில் பேலூர் மடத்திலிருந்து மட்டக்களப்பிற்கு வருகை தந்த சுவாமி விஞ்ஞானானந்தரின் ஆசீர்வாதமேயாகும். இவர் ஒரு பொறியியலாளர். அன்றியும் பேலூர் மடத்தில் அமைந்துள்ள இராமகிருஷ்ணரின் திருக்கோயிலைக் கட்டிய கட்டிடக் கலைஞரும் இவரே. இவர் சிவாநந்தாவில் அன்றிருந்த மாணவர்களை மட்டுமல்ல, சிவாநந்தாவிற்கு வரப்போகும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களையும் ஆசீர்வதித்தார் என்பதே உண்மை.

நான் சிவாநந்தாவில் மாணவனாக இருந்தபோது பழைய மாணவர் சங்கக் கூட்டங்களை அப்போது அதிபராகவிருந்த க.கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமை தாங்கி நடத்தியதை நான் அறிவேன். அப்போதெல்லாம் சிறுதொகையான பழைய மாணவர்களே வருகை தந்துள்ளதை நான் கண்டுள்ளேன். எனினும் அவர்கள் அனைவரும் இப்பிராந்தியத்தில் உயர் நிலையில் இருந்த ஆளுமைகளே என்பதை நான் அறிவேன். பிற்காலத்தில் இக்கட்டுரையாளர் அதிபராக இருந்த காலத்தில் (1984-1989) சில மாணவர் சங்கப் பொதுக் கூட்டங்களை தலைமைதாங்கி நடாத்தவேண்டியிருந்தது. கிழக்கு மாகாணம் மற்றும் ஏனைய பிராந்தியங்களென அனைத்துப் பிரதேசங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் வருகை தந்திருந்தமை இன்றும் எனது நினைவில் உள்ளது. இப்பொழுது பழைய மாணவர் திரு.மு.முருகவேள் தலைமையில் அறுபதாவது ஆண்டுவிழாவை கொண்டாடுவதற்கும், அதனை முன்னிட்டு வைரவிழா மலர் ஒன்று வெளியிடுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதையிட்டும் பெருமகிழ்ச்சியடைகின்றேன். விழா சிறப்புறவும் நமது மாணவர்கள் வானுயர்ந்து புகழ் பெறவும், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரை வேண்டி இக்குறிப்பை நிறைவு செய்கின்றேன்.

E.Kandasamy
Attorney-at-Law & N.P.,
Commissioner for Oths & Company Secretary.



My Life at Shivanada

I am from a small village at the time called Kurukalmadam. I stared my secondary education in the year 1948 at Shivananda after completing my 6th standard at my village school. I was admitted to Kamallayam, Hostel. Later I was at Retnalayam and then at Saradha Memorial Hall as senior student. There were about 80 students in the hostel from Muthur, Thopur, Potthuvil, Kiniya, Karaithivu, Palugamam, Pullumalai, Kokkadicholai, Kallar, Pankudavely, Lunugala, Valaichenai and other places. Mr.T.Kugathasan was the hostel warden. In 1951 Hostel was handed over to RKM Swamijees. The Students home was at Sivalayam. In the dormitory hall we were sleeping on the mats side with students from various places like Muthur and Kalmunaikury. The students from the hostel and students from students home meet daily at the congregation shrine in the School and Playground.

Mr.S.Ampalavanar B.sc Hons was the principal in 1948 and in 1952 Mr.S. Ragupath, M.A was transferred as principal to my alma mater and there was protest by the students and Public. I think for the first time in Sri Lanka, students were on a procession to the education office at Batticaloa. It was Mr.A.V.Mylvaganam who was the Director of Education. There was commotion for some time on this issue and Mr.S.Ragupathy came as Principal to my alma mater. Later Mr.K.Kanapathipillai, BA.FRGS became the principal and continued for sometime.

My alma mater was A grade school 1948 when I joined and later it was made National school in Batticaloa and the Eastern province. I was a

member of the OBA Sivandha Vidyalaya from 1972 and I was Secretary of the Association and later Vice President and I was fully involved in the Golden Jubilee Celebration.

In 1949 then Prime Minister Hon.D.S. Senanayaka was the chief guest and distributed the prizes at the prize giving. Later Suthanada Baradhy was chief guest and on another occasion Sir Kandaiah Vithiyanathan Defense Secretary was the chief guest for the prize giving celebration. In 1951, I was fortunate to gets a double promotion.

I remember with gratitude all my teachers including Mr.Embuldeniya and Mr.O.B. Wijayamuni De Silva.

I also remember my classmates Mr.Warnakula sooriya who was in the Police Department and Mr.B.A.Richard who was later RMP at Polgawela Hospital along with Mr.S. Pakiyaselvam of Kallady Uppodi, S.Poonusamy of Palugamam, Mr.G.Baskaran of Kallady Uppodai, Mr.M.Gananbaskaran of Karaithivu, Mr.M.M.Puvaneswaran of Arayampathy, Mr.V. Ganesamoorthy and V.Mahalingasivam of Kallady Uppodai, Mr.K.E. Kandasamy and Mr.T.Vevekandaraja, RMP of Palugamam, Mr.S. Krishnapillai and M.Nadarajah, RMP of Arayampathy, Mr.M.M.Careem, Assistant Director of Education, Mr.V.Sivanantham, Mr.M Warakulasoorim and B.A.Richard and Mr.A.Nadarajah of Valaichenai.

I am today in this position as Attorney-at-Law, Notary public, Sworn Translator, JPUM because of my alma mater and I owe so much for my alma mater throughout my life.

I am always proud to be a Shivanandian and always grateful for all success in my life to my alma mater Shivananda Vidyalaya.

LET IT GROW!

Reference: Golden Jubilee Souvenir, Published by Shivananda National School,1979

It titillates one's ego to think of and to recall one's associations with and institution which one had served for nearly a third of a century, and which one had either directed or misdirected. There have been, as far as I am concerned, happy reminiscences of Shivananda and unhappy ones too. But whether good or bad, pleasant or unpleasant, I had to treasure and cherish every one of them, since they have gained the status of full-fledged experiences. And experiences go a great way in making life worth living. It will have to be admitted that there is a germ of creativity in every one of our actions whether they be disruptive or constructive. And one is happy when one 'serves', for every moment of one's service to an institution is a sublime creative event. A moment of perfection which has gone into the fabric of one's being and becoming' process. What keeps one going, and what makes life a going concern is the true zest with which one serves.

In a person's endeavor to serve an institution many a blunder may have been committed; many a slip made; many a false step taken; many a fall sustained; but the ferment of creativity given every action a true force, a true aim and a direction, and a true sense of 'being and having been.' And once the service has been rendered it shall have been completely forgotten. 'Like a vine that has borne its fruit, like a horse that has run its race, like a hound that has hunted in the chase,' the man who serves should completely dissolve the pride of having served. If I can conspire to get that detached feeling, then, I should indeed be happy. It is virile thoughts that help to build virile institutions. And Shivananda is one such institution reared on the blood and the sweat of many an ochre-robed sadhu and many a selfless lay man. Shivananda has had the momentum of a good start, and hence it persists in moving forward from strength to strength. Let it grow!

K. Kanapathipillai

கட்டார் தேசத்தைக் களமாக்கி சிவாநந்தியர்களை வளப்படுத்தும் சீர்மிகு பாதையில் பயணிக்கும் செம்மல்

சீனித்தம்பி கந்தசாமி
விற்பனை முகவர்,
பிளாசா ஹொலாண்டி, கட்டார்.

கட்டுரையாளனின் பொழிப்பு

முத்தமிழ் வித்தகன் விபுலானந்தன் விதைத்திட்ட சிவாநந்தா எனும் புண்ணிய பூமியே, சிறப்பான வாழ்க்கைக்கு என்னை இன்றும் வழிப்படுத்திக் கொண்டிருக்கின்றது. எனது வாழ்வாதாரத் திற்கான அடிப்படை மூலம் சிவாநந்தா எனும் இணைப்பினால்தான் சாத்தியமானது என்பதை உவகையோடு உள்ளத்தால் உரைக்கிறேன். சிவாநந்தாவில் விளைந்த முத்துக்களில் ஒன்றான திருவாளர் பாலசுப் பிரமணியம் கெங்கேஸ்வரன் எனும் சிறப்பியல்போன் கொடுத்த கொடைதான் இன்று எனது வாழ்விற்கு ஆதாரமாக இருந்துகொண்டிருக்கின்றது என்பதை உரத்துக் கூற விளைகின்றேன். கருணையுள்ளத்தால் நூற்றுக்கும் மேற்பட்ட சிவாநந்தியர் களுக்கு கலங்கரை விளக்காகத் திகழ்ந்துகொண்டிக்கும் அந்தச் செம்மலின் வெற்றிக் கதை, வளரத்துடிக்கும் சிவாநந்தியர்களிற்கு ஓர் உந்துசக்தியை கொடுக்கும் என்பது எனது எண்ணம். சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தின் வைரவிழா மலரில் இது பிரசுரிக்கப்படுவது மிகவும் பொருத்தப்பாடான தருணம் என்பதால் எனது பேனாவைக் கையிலெடுத்தேன். எனதும் என்னைப் போன்ற பலரது வாழ்க்கையின், மறுமலர்சிக்கும் வாழ்வாதாரத்தை வலுச்சேர்ப் பதற்கும் காரணமான அந்தப் பெருந் தகை யாளனின் சீர்மிகு பாதையின் சிறப்பான பயணம் அனைவருக்கும் அரு மருந்தாய் அமையட்டும்.

சிறுவயதிலேயே சிகரந்தொடும் சிந்தனை

உலக வரலாறு என்பது உண்மையில் சாதித்தவர்களின் வரலாறாகவே பார்க்கப்படுகிறது. சாதித்தவர்களின் சரித்திரத்தைப் பார்க்கையில் சிறு பராயத்திலிருந்தே அவர்கள் சாதிக்கத் துடிக்கும் மனோ நிலையுடன் வளர்க்கப்பட்டார்கள் அல்லது வளர்ந்தார்கள் என்பதை வரலாறுகள் கூறுகின்றன. இதனையே திருவாளர் பா. கெங்கேஸ்வரனின் சிறுவயது வாழ்க்கையிலும் பார்க்கக் கூடியதாய் உள்ளது. கண்ணியம் மிக்க மனிதர்களை உருவாக்கிய கல்லடி-உப்போடை எனும் பழமையான ஊரில் 1975 ஆம் ஆண்டு யூன் மாதம் 12ம் திகதி பாலசுப்ரமணியத்திற்கும் லீலாவதிக்கும் மகனாகப் பிறந்த பண்பாளனே இவன். விவேகமும் வைராக்கியமும் நேர்மையும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற ஒப்புயர்வற்ற தாயின் பாசம், அந்தப் பாசத்தின் மூலம் வெளிப்பட்ட சிறந்த பிள்ளை வளர்ப்பு, அதன்மூலம் கொடுக்கப்பட்ட வளர்ச்சிப் படிமுறை ரகசியங்கள் மற்றும் வெற்றிக்கான தாயின் அறிவுரைகள் என்பன சிகரந்தொடும் சிந்தனைகளை இந்த சீராளனிடத்தில் வளர்த்தன.

இவை தவிர தாயிடம் இருந்து இயல்பாகவே ஊட்டப்பட்ட விவேகம், வைராக்கியம், நேர்மை மற்றும் இவையூடாக வளர்க்கப்பட்ட மனிதத்துவமும் இணைந்து இவனின் சாதனைப் பயணத்திற்கு அன்றே அடித்தளமிட்டன. ஐந்து சகோதரர்களையும் ஒரு சகோதரியையும் உடன் பிறப்புகளாகக் கொண்ட இவனுக்கு குடும்பத்துக் குள்ளேயே குழு வேலைத் திட்டமிடல் தன்மைகள் வளர்வதற்கு வழிகோலி விட்டன. சிறுபராயத்துச் சோதனைகள் நிறைந்த வாழ்க்கை சாதனைப் பயணத்திற்கான கதவினைத் திறப்பதற்கு இவனுக்கு வழி அமைத்துக் கொடுத்ததும் இங்கு நினைவு கூரப்படவேண்டியதே. "எல்லா வலிமையும் உனக்குள் ளேயே உள்ளது, உன்னால் எதனையும் சாதிக்க முடியும்" என்ற சுவாமி விவேகானந்தரின் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற சாதனையின் நாயகனாகவும் நான் இவனைப் பார்க்கின்றேன்.

மனிதத்துவ உருவாக்கத்தில் பாடசாலைகளின் பங்கு முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. இந்த மகத்துவத்தின் ஆணிவேர்கள் திருவாளர் பா.கெங்கேஸ்வரனின் வெற்றிப் பாதையிலும் ஊடுருவி இருப்பது அவருடைய நாவில் வெளிப்பட்ட கருத்துகள் மூலம் கட்டுரையாளரால் உணரப்பட்டது.

பள்ளிக் காலத்துப் படிப்பினைகளே சாதிக்கத் தூண்டிய வேர்கள்

பாமரனைப் பண்புள்ளவனாகவும் பண்புள்ள வனை மகானாகவும் உயர்த்துகின்ற தார்மீகப் பொறுப்பை பாடசாலைகள் கொண்டுள்ளன. மனிதத்துவ உருவாக்கத்தில் பாடசாலைகளின் பங்கு முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. இந்த மகத்துவத்தின் ஆணிவேர்கள் திருவாளர் பா.கெங்கேஸ்வரனின் வெற்றிப் பாதையிலும் ஊடுருவி இருப்பது அவருடைய நாவில் வெளிப்பட்ட கருத்துகள் மூலம் கட்டுரையாளரால் உணரப்பட்டது. குறிப்பாகச் சொல்லப்போனால் சவால்களைச் சமாளிப்பதற்கும் சந்தர்ப்பங்களை உருவாக்குவதற்கும் அடிப்படையாக அமைந்திருந்தது பள்ளிக் காலத்துப் படிப்பினைகள் என்பதையே கெங்கேஸ் அடிக்கடி கூறுவார். விவேகானந்தா பெண்கள் கல்லூரியில் ஆரம்பக் கல்வியினை பெற்றவர் சிவானந்தாவில் இரண்டாம் நிலைக் கல்வியினைப் பெற்றார். பாடசாலைக் கல்வி முற்றுப்பெற முன்பே சோதனையால் விளைந்த வேதனைகள் கெங்கேஸின் பயணப் பாதையில் தடைக்கற்களாய் குறுக்கிட்டன. ஆனாலும், குறுகிய காலத்தில் பாடசாலையில் புகட்டப்பட்ட படிப்பினைகள் அந்தச் செம்மலின் சிந்தனைகளை சிறகடித்துப் பறக்க வைக்கலாயின. சாரணர் இயக்கத்திலே இணைந்து பெற்ற ஆளுமைப் பண்புகள் அடி மனதில் உத்வேகத்தைக் கொடுக்க, அவ்வப்போது இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளின் சொற்பொழிவுகளால் மனதுள் உண்டாக்கம் பெற்ற புத்தெழுச்சியும் புதுச் சிந்தனையும் அவனது தடைகளற்ற பயணங்களுக்கு கவசங்களாயின. ஆசிரியர்களின் மேம்பாட்டுக் கருத்துக்களும் உற்சாகத்தையூட்டும் அறிவுரைகளும் ஆணிவேராக அடிமனதில் பதிந்து சிறந்த திட்டமிடல்களுக்கு கெங்கேஸை வழிநடத்தின. குறிப்பாக ஆசிரியர் கமலதாஸின் வழிநடத்தல் மற்றும் ஊக்கப் படுத்தும் கருத்துகள் இவனின் பயணப் பாதையில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு "எழுமின் விழுமின் கருதிய கருமம் கைகூடும்வரை நில்லாது உழைமின்" என்ற சுவாமி விவேகானந்தரின் வார்த்தையின் வழி தனது பயணத்திற்கு அர்த்தம் கொடுத்தவன். தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இவை மூன்றுமே வெற்றிக்கான வழிமுறைகள் என்ற கருத்தினை தாரக மந்திரமாக்கி வெற்றிக்கான பாதையினை வகுத்த வல்லாளன் என்றும் இவனைச் சொல்லலாம். இன்று கட்டார் தேசத்திலே இருக்கக்கூடிய அதிசிறந்த வணிக நிறுவனம் ஒன்றிற்கு முதன்மை மேலாளராக தன்னை உயர்த்தி அந்த உயர்வின் மூலம் எமது சமூகத்தில் இருக்கின்ற இளைஞர்களின் வாழ்வாதாரத்திற்கு வழிகாட்டிக் கொண்டிருக்கும் உயர் குணவாளனாக, சாதனையாளனாக எம்மவர் மனதில் இடம்பிடித்துள்ளான் இந்தச் செம்மல்.

நாடு கடந்த பயணமும் சாதனையின் மூலமும்

அது 1990 ம் ஆண்டு. நாட்டிலே நிலவிய அசாதாரணச் சூழல் பள்ளிப் படிப்பை இடைவிட்டே ஆகவேண்டும் எனும் ஒருவகை நிர்ப்பந்தம். அதுமட்டுமல்ல, சொந்த ஊரைவிட்டுப் போக வேண்டிய துர்ப்பாக்கிய நிலையையும் தான் ஏற்படுத்தியது. கொழும்பை நோக்கி நகர்ந்தது கெங்கேஸின் பயணம். கொழும்பிலே தொழிற்துறைக் கற்கைநெறி முடித்து 1993 வரை அன்றாடப் பிழைப் பிற்கான வேலை என நாட்கள் கடந்தன. நாட்டில் நிலவிய அப்போதைய சூழ்நிலை கொழும்பிலும் இவன் வாழ முடியாது என்ற நிர்ப்பந்தத்தை உருவாக்கியது. அதனால் கடல்கடந்த பயணத்தைப் பற்றிச் சிந்திக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. 1994 ஆம் ஆண்டு கட்டார் நாட்டினை நோக்கிப் பயணம் தொடர்ந்தது. கட்டாரிலே இருக்கின்ற பல்கலைக் கழகத்தில் வேலையும் பெற்றுக்கொண்டான் இந்தத் தயவாளன். சுமார் நான்கு வருடங்களாக அங்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறான். இக்கால கட்டத்தில் நடந்தவைகள்தான் இந்தச் சாதனையாளனின் பயணத்தில் மறுமலர்சிக்கான மூலத்தைக் கொடுத்தன என்பேன். "நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலம் மிக்க நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே" என்ற நன் மொழிக்கமைய 1995ம் ஆண்டு வில்லியம் ஜோர்ஜ் எனும் உயர் பண்பாளன் மற்றும் புலமையாளனை சந்திக்கும் வாய்ப்பு இவனுக்குக் கிடைத்தது. இச் சந்திப்பு அவனின் வாழ்க்கைக்கான திருப்பு முனையாகவும் அமைந்து விட்டது.

திருவாளர் பா.கெங்கேஸ்வரனின் ஒளிமயமான எதிர்காலத்தையும் சாதிக்கப் பிறந்தவர்களுக்கு இயல்பாகவே இருக்கக் கூடியதுமான துலங்கல்களைக் கண்ணுற்றான் வில்லியம் ஜோர்ஜ் எனும் வெள்ளையினத்துச் சாமர்த்தியன். கெங்கேஸ்வரனுக்கு நவீன சவால்களை எதிர்கொள்ளக்கூடிய யுக்திகள், நவீன முகாமைத்துவ நுட்பங்கள், சந்தைப்படுத்தல் முகாமைத்துவ தந்ரோபாயங்கள் மற்றும் முயற்சியாண்மையின் ரகசியங்கள் எனப் பல விடயங்களைக் கற்றுக்கொடுத்த தொழில்சார் ஆசானாக வில்லியம் ஜோர்ஜ் விளங்கினார். மொழிப் புலமை விருத்திக்காகவும் சந்தைப்படுத்தலில் நிபுணத்துவம் பெறுவதற்காகவும் நெதர்லாந்திற்குப் பயணமானான் சாதனையின் நாயகன். இதற்கான ஏற்பாட்டையும் வில்லியம் ஜோர்ஜ் அவர்களே ஏற்படுத்திக் கொடுத்தார். 1999 ஆம் ஆண்டில் இருந்து 2000 ஆம் ஆண்டு வரை சுமார் 06 மாத கால தீவிர கற்கையில் தன்னை ஈடுபடுத்தினான் பண்பாளனான கெங்கேஸ். இயல்புப் புலமை, அனுவப் புலமை, கற்றலால் வந்த புலமை இவற்றுடன் இணைந்த கடின உழைப்பு சீராளனை சிகரம் ஏற வைத்தது. தான் வேலை பார்த்த நிறுவனத்தின் லாப வீதத்தைக் குறுகிய காலத்தில் தனது தந்திரோபாய நகர்வுகள், சிறந்த திட்டமிடல்கள் மற்றும் கடின உழைப்பு மூலம் பல மடங்கு அதிகரித்து உயர் முகாமைத்துவத்தின் பார்வையை தன் பக்கம் திருப்பினான். செம்மலின் அதீத திறமையினையும் அர்ப்பணிப்பு மிக்க கடமையுணர்வினையும் கண்டு வியந்த உயர் முகாமைத்துவம் அவனை நிறைவேற்று அதிகாரம் கொண்ட பதவி நிலைக்கு உயர்த்தியது.

இவ்வேளையில்தான் இந்த நிறுவனத்தின் முகாமைத் துவப் பணிப்பாளராக இருந்துகொண்டிருக்கின்ற ஹன்ஸ் ஸ்டீனேவெல்ட் (Hans Steeneveld) நினைவு கூரப்பட வேண்டியவர். ஏனெனில் கெங்கேசின் திறமைக்கு அதீத அங்கீகாரம் கொடுத்து கெங்கேசை நிறுவனத்தின் அதியுயர் பதவி நிலைக்கு உயர்த்தியவர் அவர்தான். தனக்கு கிடைத்த அங்கீகாரத்தை ஏற்றுக்கொண்ட கெங்கேஸ் நிறுவனத்தை விஸ்தரிக்கும் தீவிர வேட்கையில் களமிறங்கினான். நிறுவனத்தின் கிளைகள் கட்டாரின் பல இடங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டன. சந்தைப் படுத்தலிலும் விற்பனையிலும் புதிய வியூகங்களை வகுத்தான் கெங்கேஸ்.

"எழுமின் விழுமின் கருதிய கருமம் கைகூடும்வரை நில்லாது உழைமின்" என்ற சுவாமி விவேகானந்தரின் வார்த்தையின் வழி தனது பயணத்திற்கு அர்த்தம் கொடுத்தவன். தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இவை மூன்றுமே வெற்றிக் கான வழிமுறைகள் என்ற கருத்தினை தாரக மந்திரமாக்கி வெற்றிக்கான பாதையினை வகுத்த வல்லாளன் என்றும் இவனைச் சொல்லலாம்.

மலர் விற்பனை மற்றும் இறக்குமதியில் நாட்டின் முதன்மை இடத்தை பிடித்து நிறுவனத்தை உயர்த்தினான். கட்டாரிலே மலர் இறக்குமதி மற்றும் மலர் விற்பனைச் சந்தையில் அதிக லாபம் ஈட்டும் முதன்மை நிறுவனமாக மாறக் காரண கர்த்தாவாக, கதாநாயகனாகத் திகழ்ந்தவன் இந்தச் சிவாநந்தியன். இன்று அந்த வணிக நிறுவனத்தின் பல பங்குகளைக் கூட தன்னகத்தே கொண்டுள்ளவனாக தன்னை வளர்த்து விட்டான் இந்தச் சாதனையாளன்.

> **கட்டாரில் உள்ள நூற்றுக்கணக்கான சிவாநந்தியர்கள் பாடசாலைக்கும் அதன் பழைய மாணவர் சங்கச் செயற்பாடுகளுக்கும் தோள்கொடுத்து உதவுவதற்குக் காரணமாய் அமைந்தவனும் இந்த மகத்துவங்களின் சொந்தக்காரனே.**

வேலையின்மைக்கு விடைகொடுக்க கட்டாரைக் களம் ஆக்கியமை

சமூகத்தில் பேசப்படும் சமகாலப் பிரச்சினைகளில் வேலையில்லாப் பிரச்சினை முதன்மை பெற்றதாய் விளங்குகின்றது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடு எனும் படிநிலையில் இலங்கையில் அதன் தாக்கம் பரவலாகவே பேசப்படுதிறது. மேலும், சமூக மத்தியில் பல்வேறுபட்ட பிரச்சினைகளை தோற்றுவிக்கின்ற முதன்மைக் காரணியாயும் இது அடையாளப்படுத்தப்பட்டுவிட்டது. இளைஞர்களிடத்தில் மேலோங்கிக் காணப்படும் தற்கொலை யுணர்வு, குடும்பத் தகராறு, நடத்தைப் பிறழ்வுகள் மற்றும் குடும்ப விரிசல் எனப் பல பிரச்சினைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலையின்மையின் விளைவு கலாசாரம், பாரம்பரியம், பண்பாடு என்ற அனைத்து நிலையிலும் ஊடுருவி முக்கியமான பேசுபொருளாக வளர்ந்துவிட்டது. அரசாங்கத்தாலும் அரசியல்வாதிகளாலும் நிவர்த்தி செய்ய முடியாத இந்தப் பாரிய பிரச்சினைக்குத் தனது தற்துணிவான முடிவினாலும் திறமை மூலம் கிடைத்த அங்கீகாரத்தாலும் தன் இயலுமைக்கேற்றாற்போல் தீர்வு கொடுத்துக்கொண்டிருக்கின்றான் திருவாளர் பா.கெங்கேஸ்வரன். கட்டார் தேசத்தைக் களமாகக் கொண்டு இலங்கையைச் சேர்ந்த சுமார் 300க்கும் மேற்பட்ட இளைஞர்களின் வாழ்வாதாரத்திற்கு வழி ஏற்படுத்தி அவர்களின் வாழ்வை வளப்படுத்தும் விந்தை மிகு செயலின் செயல் வீரனாக எம்மை வலம் வருகின்றான். 2003இல் சுமார் 50 ஊழியர்களை மாத்திரம் கொண்டதாய் இருந்த நிறுவனத்தை இன்று 500க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்டதாய் வளர்த்துவிட்ட வல்லவனாக திகழ்கின்றான். கெங்கேஸின் சாமர்த்தியம் மற்றும் அங்கீகாரத்தின் மூலம் சுமார் 90 வீதத்திற்கும் அதிகமான ஊழியர்கள் இலங்கையிலிருந்தே தேர்வுசெய்யப்பட்டனர்.

சிவாநந்தியர்களை வலுப்படுத்தி வளப்படுத்தும் சீர்மிகு பாதை

பல நாடுகளைச் சேர்ந்த ஊழியர்கள் வேலை பார்க்கும் நிறுவனமாக இருந்த போதிலும் தனது தாய் நாட்டின் மீதுள்ள தீராத பக்தியால் 90 வீதத்திற்கும் அதிகமான இலங்கைப் பிரஜைகளுக்கு வேலைவாய்பளித்துள்ளான் இந்தப் பண்பாளன். அதிலும் 65 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள். இது மண் பற்று நிறைந்த தன்மையை புடம்போட்டுக் காட்டுகின்றது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக சுமார் 150 ற்கும் மேற்பட்ட ஊழியர்கள் சிவாநந்தியர்களாக இருப்பது கெங்கேஸிற்கு பாடசாலை மீதுள்ள தீராத காதலைக் காட்டுகின்றது. சிவாநந்தியர்களுக்கே உரிய பண்பின் முன்னோடியாக இந்தப் பண்பாளனைப் பலரும் பார்ப்பது இதனால்தான் என அறுதியிட்டுக் கூறுவேன். அடிப்படை வசதிகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாது கஷ்டப்பட்ட என்னைப் போன்ற பல சிவாநந்தியர்கள், ஏனையோர் பார்த்து வியக்கும் வண்ணம் வளம்பெற்றுள்ளது இந்தப் புண்ணிய வானால்தான் என்பதையும் உள்ளத்தால் உரைப்பேன். ஆயிரத்திற்கும் அதிகமான சிவாநந்தியர்கள் சார் குடும்பங்கள் வாழ்வாதாரத்தாலும் பொருளாதாரத்தாலும் வளம் பெற்று நிற்கின்றன என்றால் அதற்கான காரண கர்த்தாவும் இந்தச் சிறப்புடையோனே. உற்சாகம் எனும் உரத்தையூட்டி, தன்னம்பிக்கை

எனும் உறுதியை உண்டுபண்ணி தூரநோக்குச் சிந்தனையுள்ளவர்களாக பலரை மாற்றிய பெருமையும் இவனைச் சாரும். கட்டாரில் உள்ள நூற்றுக்கணக்கான சிவாநந்தியர்கள் பாடசாலைக்கும் அதன் பழைய மாணவர் சங்கச் செயற்பாடுகளுக்கும் தோள்கொடுத்து உதவுவதற்குக் காரணமாய் அமைந்தவனும் இந்த மகத்துவங்களின் சொந்தக்காரனே. இவைகளுக்கு மேலாக, சமூக வலுவூட்டல் செயற்பாடுகளிலும் இவனது சேவை தொடர்ந்துகொண்டிருக்கின்றது. மட்டக்களப்பைச் சேர்ந்த சுமார் 400 க்கும் மேற்பட்ட பெண்களின் வாழ்வாதார உற்பத்திப் பொருட்களை மாதந்தோறும் கொள்வனவு செய்து அவர்களின் பொருளாதார ஈடேற்றத்திற்கு உதவும் கருணைவானாகவும் அவனைக் காண்கிறேன். இவ்வாறு தானும் வளர்ந்து தன் சமூகத்தையும் வளர்த்துக் கொண்டிருக்கும் ஓர் உன்னத மனிதனின் பயணம் சமகால இளைஞர்களுக்கு குறிப்பாக சிவாநந்தி யர்களுக்கு சிறந்த முன்னுதாரணத்தைக் கொடுக்கும் என்பது எனது எண்ணம். சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தின் வைரவிழா மலரில் இந்தச் சாதனையாளன் பற்றிய கட்டுரை வெளிவர சந்தர்பம் ஏற்படுத்திய சங்க உறுப் பினர் களுக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

ஒரு நாள் அரசவைக்கு துறவி ஒருவர் வந்தார். அரசன் அவரிடம், இந்த அளவுக்கு ஈடுபாடு உடைய அதிகாரிகளைப் பெற்ற அரசன் என்னைப்போல் வேறு யாரும் இருக்க இயலாது என்று கூறினான். துறவி புன்சிரிப்புடன், நீ சொல்வதை நான் நம்பவில்லை என்றார். அரசன், நீங்கள் வேண்டுமானால் அதைச் சோதித்துக்கொள்ளலாம் என்றான். சிறிய ஒரு சோதனை வைத்தார் துறவி – அரசனின் ஆயுளும் ஆட்சியும் பல்லாண்டுகள் நீடிப்பதற்கு, நான் பெரிய ஒரு வேள்வி செய்யப் போகிறேன். அதற்குத் தேவையான பாலுக்காக ஓர் அண்டா வைக்கப்படும். அதில் அதிகாரிகள் ஒவ்வொருவரும் இரவில் ஒரு குடம் பால் ஊற்ற வேண்டும் என்று துறவி கூறினார். அரசன் புன்முறுவலுடன், இதுதானா சோதனை? என்று இகழ்ச்சியாகக் கேட்டான்.

பின்னர் அரசன், அதிகாரிகளை அழைத்து நடக்க இருப்பதைக் கூறினான். அந்த யோசனைக்கு அதிகாரிகள் அனைவரும் தங்களின் மனபூர்வமான சம்மதத்தைத் தெரிவித்தனர். நள்ளிரவில் எல்லோரும் அந்த அண்டாவின் அருகில் சென்று, தங்கள் குடங்களில் இருந்ததை அதற்குள் ஊற்றினார்கள். மறுநாள் காலையில் பார்த்தபோது அண்டா நிறையத் தண்ணீர்தான் இருந்தது! திடுக்கிட்ட அரசன் அதிகாரிகளை அழைத்து விசாரித்தான். அப்போது, எல்லோரும் பாலைத்தான் ஊற்றப் போகிறார்கள். நான் ஒருவன் மட்டும் அதில் தண்ணீர் ஊற்றினால், அது மற்றவர்களுக்கு எப்படித் தெரியப்போகிறது? என்று ஒவ்வொருவரும் நினைத்து, எல்லோரும் தண்ணீரையே ஊற்றினார்கள் என்பது தெரிய வந்தது. துரதிர்ஷ்டவசமாக நம்மில் பலருக்கும் இதே எண்ணம்தான் இருக்கிறது. இந்தக் கதையில் வரும் அதிகாரிகள் செய்தது போலவே, நாமும் நம் பங்குக்கு உரிய வேலையைச் செய்து வருகிறோம். உலகத்தில் சமத்துவக் கருத்து நிறைந்திருக்கும்போது, நான் ஒருவன் மட்டும் கொண்டாடும் தனிச்சலுகை யாருக்குத் தெரியப் போகிறது? என்கிறார் ஒருவர். இப்படித்தான் பணக்காரர்களும் கொடுங்கோலர்களும் சொல்கிறார்கள்.

எல்லா மக்களையும் சமமாக நினைக்கும் ஞானத்தைப் பெறுவதற்கு நாம் முயற்சி செய்வோம்!

க.தியாகராஜா,
முன்னாள் அதிபர் (1990-1992),
சிவானந்தா வித்தியாலயம் (தேசிய பாடசாலை)

பாடசாலையில் பற்றும் மரியாதையும் மிக்கவர்கள் சிவானந்தியர்கள்

சிவானந்தா வித்தியாலயம் இந்து சமய விழுமியங்களை உயரிய நிலையில் கடைப்பிடித்தொழுகும் உன்னத வித்தியாலயமாக 1929 ஏப்பிரல் மாதம் 29ம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நற்செயல் புரிந்துவருகின்றது. இவ் வித்தியாலயத்தில் நாற்பது வருடங்களின் பின் 1969 இல் ஆசிரியராகக் கடமைபுரிய வாய்ப்புக்கிடைத்தது. ஆறு ஆண்டுகளுக்கு மேலாக பட்டதாரி உதவியாசிரியராகக் கடமைபுரிந்ததுடன் மூன்றாண்டுகள் கொத்தணி அதிபராகவும் கடமையாற்றிச் சேவைபுரிய முடிந்தது. இங்கு சர்வமதக் கோட்பாடுகளை மதிக்கும் பெருந்தன்மை யுடன் மாணவர் கற்றொழுகும் பான்மை வியக்கத்தக்கதாகவிருந்தது.

இவ் வித்தியாலயத்தில் நன்கு கற்ற மாணவர்கள் இவ்வித்தியாலயத்தின்பால் மிகுந்த பற்றும் மரியாதையும் மிக்கவராகத் திகழ்ந்தனர். இங்கு நடைபெறும் பழைய மாணவர் நிகழ்வுகளில் பெருவிருப்பத்தோடு கலந்துகொண்டு தங்களின் பங்களிப்பை மிகக் கண்ணியத்தோடு பின்பற்றும் தன்மை மிக வியக்கத்தக்கது. அவர்கள் உருவாக்கிய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த செயற்பாடுகளில் வித்தியாலயத்தையும் கற்பித்த ஆசிரியர்களையும் பெரிதும் போற்றி மகிழ்வதுடன் தங்களை ஆளாக்கிய இராமகிருஷ்ண சங்க சுவாமிகளையும் அன்போடு நேசித்துச் செயற்படுவது காணத்தக்க பெருமைமிக்கதாக அமையும். இத்தகைய சிறப்புமிக்க வித்தியாலயத்தில் நானும் சில செயற்பாடுகளைச் செய்ய முடிந்தது. நீண்டகாலமாக முயன்று கைகூடாத நிலையிலிருந்த சரஸ்வதி ஆலயத்தை சுவாமி ஜீவனானந்தஜீ மகராஜ் அவர்களின் வேண்டு கோளுக்கமைய அவரின் ஆசியுடனும் ஆசிரியர், நலன்விரும்பிகளின் உதவியுடனும் அமைக்க முடிந்ததுடன் பாடசாலைச் சுற்று மதிலையும் அமைத்தளிக்கவும் முடிந்தது.

இவ்வித்தியாலயத்தில் நன்கு கற்று உயர்நிலையிலுள்ள பழைய மாணவர்கள் தாங்கள் சென்ற வெளிநாடுகளில் எல்லாம் பழையமாணவர் சங்கக்கிளைகளை நிறுவி வித்தியாலயத்தைப் பெருமைப்படுத்துவதுடன் தாங்களும் மகிழ்வெய்துகின்றனர். இத்தகைய உயரிய பங்களிப்பைப் பெருவிருப்புடன் செய்வது வித்தியாலயத்திற்கு பலம்மிக்கதாகவுள்ளது. இவ்வாண்டு வித்தியாலய பழைய மாணவர் சங்கம் தனது அறுபதாவது ஆண்டு விழாவைக் கொண்டாடுமுகமாக வைரவிழா மலர் வெளியிடுவது பற்றி மனமகிழ்கின்றேன்.

உள்ளகத்துணர்வாய் உள்ள சிவாநந்தா

சிவாநந்த வித்தியாலய பழைய மாணவர் சங்கம் அதன் வைரவிழா காணும் இவ்வேளை, சிவாநந்த வித்தியாலயத்தில் பல வருடங்கள் கல்வியைத் தொடர முடியாவிடினும் ஒரு சில வருடங்கள் கற்கும் போது ஏற்பட்ட அனுபவங்களை எனது வாழ்வினோடு தொடர்புபடுத்தி எழுதுவதற்கு சந்தர்ப்பம் அளித்த இப்பழைய மாணவர் சங்கத்தினருக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து எனது கட்டுரையைத் தொடருகின்றேன்.

1958.10.26ந் திகதி பிறந்து ஆரம்பக்கல்வியை கல்லடி- உப்போடை விவேகானந்த வித்தியாலயத்தில் தொடங்கினேன். எனது கல்வி கற்கும் திறமைக்காக 3ம் தரத்திலிருந்து 5ம் தரத்திற்கு இரட்டை வகுப்பேற்றம் பெற்றுக் கற்று, சிவாநந்த வித்தியாலயத்திற்கு 6ம் தரத்திலிருந்து கல்வி கற்கச் சென்றேன். எனது எட்டாவது வயதில் தெய்வீகத்தாக்கம் ஏற்பட்டதினாலும், அதனால் ஏற்பட்ட சுகவீனத்தினாலும், பாடசாலையில் என்னை அம்மாள் என்று அழைத்துச் சக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் என்னைத் தனிமைப்படுத்தியதனாலும் எனது கல்வியைத் தொடர முடியாது போனது துரதிஸ்டமாகும்.

விவேகானந்த மகளிர் வித்தியாலயத்தில் அப்போது அதிபராக இருந்த கண்மணியக்கா, எமது வகுப்பாசிரியையாக இருந்து வந்த இராசலெட்சுமி அக்கா, ஏனைய ஆசிரியைகளான செல்லத்தங்கம், செல்லப்பாக்கியம், திருமஞ்சனம் மற்றும் ஏனய ஆசிரியைகள் எனது கல்வியில் மிகுந்த அக்கறையுடன் தட்டிக் கொடுத்து, பாராட்டி மேலும் கற்பதற்கு தூண்டிய நினைவுகள் இன்றும் மறக்கமுடியாதுள்ளன. பாடசாலைக்கு தென்புற வாசலருகில் நின்ற வில்வமரத்தின் கீழும், பாடசாலையினருகில் நின்ற தேத்தா மர நிழலிலும் இருந்து கல்வி கற்கும் பாக்கியம் கிட்டியதை நினைக்கும் தோறும் நெஞ்சம் இனிக்கின்றது.

இ. தேவதாஸ்,
வர்த்தகர்,
கல்லடி - உப்போடை, மட்டக்களப்பு

தெய்வீக உணர்வு வரப்பெற்ற எனக்கு பேச்சியம்பாள் என வாக்குத் திறக்கப்பட்டது. கந்தசுவாமி குருக்கள் முன்னிலைப்பட இந்தத் தெய்வீக நிகழ்வு நடைபெற்றது இன்றும் ஞாபகத்தில் உள்ளது. ஆலய நிர்வாகத் தலைவராக கந்தசாமி ஆசிரியர் இருந்தவேளை நாகமணிப் பூசாரியார் முன் னிலையில் தேவாதியாக தலைசுற்ற ஆரம்பித்தேன். இந்தத் தெய்வீக உணர்வு வரப்பெற்று இவ் வருடத் துடன் ஐம் பது வருடங் கள் பூர்த்தியாகியுள்ளன. நான் தொடர்ந்து கல்வியைக் கற்க முடியா விட்டாலும், எனது மூத்த மகள் விவேகானந்த வித்தியாலயத்தில் தரம் 01 முதல் உயர்தரம் வரை வகுப்பில் முதலாம் பிள்ளையாகவும், முதன்முதலில் இப்பாடசாலை யிலிருந்து வைத்தியப் பிரிவுக்கும் தெரிவு செய் யப் பட் ட முதல் மாணவியாகவும், மகன் சிவாநந்த வித்தியாலயத்தில் உயர்தரம் சித்தி பெற்று தற்போது வெளிநாட்டில் நல்ல வேலை வாய்ப்புடன் இருப்பது டன் மூன்றாவது மகள் பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளமையும் குறிப்பிட்டாகவேண்டிய னவாகும். இவற்றைவிட மிகவும் தகுதியான மருமக் களையும் பேரக் குழந்தைகளையும் எமக்கருளி என்னையும் ஒரு நற்பிரசையென மற்றவர்கள் மதிக்கும்படி செய்தது, அந்த பேச்சியம்பாளின் அருளும் சிவாநந்த வித் தியாலய அதிபர், ஆ சிரியர் களினதும், இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளின் ஆசீர்வாதமே என்பதை மறுக்க முடியாது.

சிவாநந்த வித்தியாலயத்தில் நான் கல்வி கற்ற காலத்தில் அதிபராக இருந்த அமரர் கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள் என்னில் தனிப்பற்றும், அன்பும் கொண்டு எனது கற்றலுக்கும் பின்னர் எனது தொழிலுக்கும் ஊக்கமளித்த ஒருவராவார்.

சிவாநந்த வித்தியாலயத்தில் நான் கல்வி கற்ற காலத்தில் அதிபராக இருந்த அமரர் கணபதிப் பிள்ளை ஐயா அவர்கள் என்னில் தனிப்பற்றும், அன்பும் கொண்டு எனது கற்றலுக்கும் பின்னர் எனது தொழிலுக்கும் ஊக்கமளித்த ஒருவராவார். அதேபோல் அப்போது கற்பித்த ஆசீரியர்களான கோதாஸ் மாஸ்டர், சிவநாதன், பழனித்தம்பி, விளையாட்டு ஆசிரியரான சர்மா மற்றும் அனைத்து ஆசிரியர்களும் என்னில் தனி அக்கறைகொண்டு என் முன்னேற்றத்திற்கு உறுதுணை புரிந்தவர் களாவார்கள். அவர்களின் வழிநடத்தலை இன்றும் மறக்கமுடியாதுள்ளது.

கோதாஸ் மாஸ்டருடனான மறக்க முடியாத சம்பவம் ஒன்றைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். அப்போது இரண்டு நேரப் பாடசாலை. ஒரு நாள் காலை நேரப் பாடசாலை முடிவுறும் வேளை என்னை கோதாஸ் மாஸ்டர் அழைத்துத் தனது பைசிக்கிளில் காற்று இருக்கின்றதா எனப் பார்த்து வரச் சொன்னார். அந்நேரம் எனக்கு பைசிக்கிள் பற்றிய எந்த விதமான அறிவும், அதன் தன்மையும் தெரியாது. நான் சென்று அவரின் பைசிக்கிளின் வால்கட்டையை பிடுங்கினேன். காற்று 'புஸ்' என்று வெளியேறியது. எனக்கு வால் கட்டையை எப்படிப் பூட்டுவதென்றும் தெரியாது. நான் போனதும் காற்று இருக்கிறதா என்று கேட்டார். நான் ஆமென்று தலையாட்டினேன். பின்னேர வகுப்பு ஆரம்பமாக நான் சாப்பிட்டுவிட்டுச் சென்றநேரம், தேவதாஸ் எழும்பு என்று ஆங்கிலத்தில் கூறி, நான் எழுந்து நின்றதும் பைசிக்கிளுக்கு காற்று பார்த்த நீயா என்று அதட்டிக் கேட்டு விட்டு எதுவும் பேசாது இருந்தார். அச்சம்பவம் மிகவும் சுவாரஸ்சியமானது.

நான் பாடசாலையை விட்டு விலகியிருந்த போது அந்நேரம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளை முகாமையாளராக இருந்த மாமாங்கம் அரசரெத்தினம் அவர்கள் செய்த உதவிகள் மறக்க முடியாதவை. அவர் என்னையும் தனது கிளைகளில் வில் கணக்குகளைக் கூட்டிச் சரிபார்த்து மறுநாள்

பணத்துடன் ஒப்படைக்கும் பொறுப்பை தந்து வந்தவர். தற்போது நான் கடை வைத்திருக்கும் இடம் எனது தாய் தந்தையருக்குச் சொந்தமாக இருந்தது. அக்காலத்தில் நெற்சந்தைப் படுத்தும் பகுதியினர் அதனை வாடகைக்கு எடுத்து நெற்களஞ்சியப் படுத்துமிடமாக செயற்படுத்தி வந்தனர். அவர்கள் அதனை வேறு இடத்திற்கு மாற்றியதும், அவ்விடத்தில் ஒரு மரக்கறிக் கடை வைக்கும் படியும் அதற்கான பணவசதியற்ற நிலையிலிருந்த எனக்கு ரூபா 60ஐ தந்தும், உடன் வந்து ரூபா 57.50 சதத்திற்கு சகல விதமான மரக்கறிகளையும் கொள்வனவு செய்து, கடை வைத்து வியாபாரம் செய்து இந் நிலைக்கு ஒரு முதலாளியாக உயர வித்திட்டவர் அரசரெத்தின மாவார். எனது முயற்சிக்கு உத்வேகம் கொடுத்தது, என்னைச் சரியான வழிக்குத் திசை திருப்பியதெல்லாம் அன்னை பேச்சியம்மபாளும், சிவாநந்த வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், சுவாமி நடராசானந்த ஜீ, சுவாமி ஜீவானந்த ஜீ முதலானோரின் ஆசீர்வாதமே என்பது உண்மையாகும். எனது அயராத முயற்சியினால் இன்று இந்நிலையடைந்துள்ளேன்.

இந்தியப் படையினர் இருந்த காலத்தில் என்னையும் சுற்றிவளைப்பின் போது கைதுசெய்து மட்டக்களப்பிற்கு கொண்டு சென்று தடுத்து வைத்ததைக் கேள்வியுற்ற சுவாமி ஜீவனானந்தஜீ அவர்கள் என்மேல் வைத்திருந்த பாசம் காரணமாக மட்டக்களப்பு முகாமிற்கு வந்து, இவர் ஒரு தேவாதியாக பேச்சியன்னையின் ஆலயத்தில் தொண்டு செய்பவர் மட்டுமன்றி இவர் ஒரு சிவாநந்தியன், அப்பா பாடசாலையில் கல்வி கற்ற உயர் குணங்களைக் கடைப்பிடிப்பவர் அவரைக் கைது செய்தது அந்தச் சிவாநந்த வித்தியாலயத்தையே அவமதிக்கும் செயலென இராணுவ தலைமை அதிகாரியாக இருந்த முத்தன்னா என்பவரிடம் கூறி உடனடியாக விடுதலைசெய்து என்னை வீட்டிற்கும் அழைத்து வந்து விட்டு சிவாநந்த வித்தியாலயத்திற்கே ஓர் உயர்ந்த அந்தஸ்த்தை ஏற்படுத்தியவர் சுவாமிஜீ. இதைவிட, 1978 கார்த்திகை 23ந் திகதி சூறாவளி வீசிய காலத்தில் இக்கிராம மக்கள் தங்கள் அன்றாட பாவனைக்கான பொருட்களை கொள்வனவு செய்ய முடியாது திண்டாடிய வேளையில் மிஷனுக்குச் சொந்தமான போட் உழவியத்திரத்தைத் தந்துதவி பொருட்களைக் கொண்டு வந்து மக்களின் சேவையே மகேசன் சேவையென செயலில்காட்டிய சுவாமி ஜீவனானந்தஜீ உண்மையில் ஒரு சமூக சேவகன் என்பதை நிறுவியது. இவ்வாறு பல விடயங்களைக் கூறிக்கொண்டே போகலாம்.

சிவாநந்த வித்தியாலய அதிபராக இருந்த கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள் நான் கல்வி கற்ற காலத்திலிருந்து கடமையிலிருந்து ஓய்வ பெறும் காலம் வரை என்னில் தனிக் கரிசனையுடைய வராகவும் அனைத்து கல்வி கற்கும் சிவாநந்த வித்தியாலய மாணவர்களினதும் கல்வி, ஒழுக்கம், உயர்வு என்பதில் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்ட ஒரு பெருந்தகை. அவர் அடிக்கடி ஒன்றுகூடலில் குறிப்பிடுவார் "இப்பாடசாலையில் துறவிகளின் ஆத்மீக சக்தியுள்ளது, அது இங்கு கற்கும் மாணவர்களை ஏதோ ஒருவழியில் உயர்த்தி விடும்" என்று கூறி கற்பதற்கு உற்சாகப்படுத்துவார். ஆங்கில ஆசிரியராக கடமையாற்றிய கோதாஸ் மாஸ்டர் எண்ணற்ற மாணவர்கள் ஆங்கிலக் கல்வியில் பாண்டியத்தியம் பெற்று நல்ல உயர்வான பதவிகளைச் செய்ய வழிவகுத்தவர். இங்கு கற்பித்த அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களை கல்வியில் சரியான வழிகாட்டல் மூலம் உயர்த்தியவர்கள் என்று கூறுவது மிகையாகாது. அப்போது எழுதுவினைஞராகக் கடமையாற்றிய தம்பிரெத்தினம் என்பவரும் மாணவர்கள் சரியான முறையில் கல்விகற்க பரீட்சை நேரத்தில் பரீட்சைக் கட்டணம் கட்டி பரீட்சையெடுக்க தன்னாலான உதவிகளை வறிய மாணவர்களுகுச் செய்த உத்தம தொண்டர் என்பதையும் குறிப்பிடுகின்றேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக விடுதிக்குப் பொறுப்பாயிருந்த சீனித்தம்பி விறதரைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். அவர் விடுதிமாணவர்களை ஒழுங்கான முறையில் கல்வி கற்பதற்கும் பாடங்களைப் படிக்க வைப்பதற்கும், நேரத்திற்குப் பாடசாலை செல்வதற்கும் வழிப்படுத்தியவர். ஒரு தியாக சிந்தனையோடு சேவை செய்தவர். இப்படிச் சிவாநந்த வித்தியாலயத்தில் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் அனைவரினதும் சேவை அமைந்திருந்ததினால் இப்பாடசாலை உயர் நிலையிடத்தைப் பெற்றுள்ளது.

சிவாநந்த விடுதியின் முதுகெலும்பு

திரு.செ.பிறேமானந்தன்,
கணக்காளர், அவுஸ்திரேலியா

சிவாநந்த மண்ணில் உருவானவர்கள் பலரின் நாவில் என்றென்றும் ஒலித்துக் கொண்டிருப்பது சிவாநந்த விடுதி வாழ்க்கை பற்றியதுதான். விடுதி என்பதும் நினைவுக்கு வருபவர் Brother என்று அழைக்கப்படும் சீனித்தம்பி ஐயா. விடுதி வாழ்க்கையோடு இணைந்தவராக எம்மையெல்லாம் வழிப்படுத்த தன்னை அர்பணித்துக் கொண்ட ஒரு பெரிய தியாகியாகவே நான் அவரைப் பார்கின்றேன். கடந்த நான்கு மாதங்களுக்கு முன் இலங்கை வந்திருந்த போது அவருடைய வீட்டில் அவரைப் பார்க்க நான் சென்றிருந்தேன். என்னைக் கண்டு மிகவும் சந்தோசப்பட்டார். உண்மையில் எனது உயர்வில் அவரது பங்களிப்பும் முக்கியமானது. எனது பாடசாலைக் காலத்தில் விடுதி வாழ்க்கை கொடுத்த அனுபவம், கற்றுக்கொண்ட விடயங்கள், நண்பர்கள் வட்டம், சாம்பாட்டிற்காக ஏங்கியமை, விளையாட்டு அனைத்தும் என்றென்றும் மறக்கமுடியாதுள்ள நிகழ்வுகள். அனைத்து அனுபவங்களும் எனது வாழ்க்கையில் இன்றும் செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருக்கின்றன.

இலங்கைத் தேசிய கல்விக் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டபோது இராமகிருஷ்ண மிஷனின் நிர்வாகத்தில் இருந்த பாடசாலையையும் மாணவர் விடுதியையும் அரசு பொறுப்பேறறுக் கொண்டது. திரு.க.கணபதிப்பிள்ளை அவர்கள் அதிபராக பொறுப்பேற்க திரு.சு.சுப்பையா அவர்கள் அப்போது விடுதி மேற்பார்வையாளராக இருந்ததாக கேள்விப் பட்டிருக்கின்றேன். அவ்வேளையிலேதான் சீனித்தம்பி Brother உம் உதவி மேற்பார்வையாளராக நியமிக்கப் பட்டார். அரசு பொறுப்பேற்றதிலிருந்து விடுதிவாழ்க்கையின் ஆரம்பம் முதலே பணியாற்றிய அனுபவம் வாய்ந்தவரே எங்கள் மதிப்பிற்குரிய Brother. அக்காலம் எனக்கும உண்மையில் ஒரு பொற்காலம் என்றே சொல்வேன்.

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு நான் அவரைப் பார்க்கச் சென்றபோது, அந்த நாள் விடுதிவாழ்க்கை பற்றிய பலவற்றை என்னுடன் பகிர்ந்துகொண்டார். அதிலிருந்து அன்றுவரை அறியாதிருந்த பல விடயங்கள் பற்றியும் அறியக்கூடியதாகவிருந்தது. அவருடைய கதைகளில் இருந்து அவர் எவ்வாறான தியாகங்களைச் செய்துள்ளார் என்பதையும் எண்ணிப் பார்க்கின்றேன். அக்காலத்தில் உதவி மேற்பார்வையாளராக, மாதாந்தச் சம்பளமாக ரூபா 50ஐப் பெற்றுக் கொண்டு

கடமையாற்றினார். தொடர்ந்து 1973ம் ஆண்டு விடுதி மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டு 2006ம் ஆண்டு யூன் மாதம் வரை கடமையாற்றி அவரின் விருப்பின்பேரில் இளைப் பாறினார். சுமார் நாற்பது வருடங்களுக்கு மேலாகத் தன்னை அர்பணித்து பல்லாயிரக்கணக்கான மாணவர்களை வளர்த்துவிட்ட தியாகிதான் எங்கள் Brother. எல்லாவற்றிற்கும் மேலாக, அவருடைய சேவைக்காலத்தில் இந்து மாணவர்களுடன் கிறிஸ்தவ, முஸ்லிம் மாணவர்களும் மலையகம் மற்றும் தூர இடங்களச் சேர்ந்த மாணவர்களும் தங்கியிருந்து கல்வி கற்ற இன்பமான சூழ்நிலை இன்றும் பலபேரால் பேசப்பட்டுக்கொண்டிருக்கின்றமை நாம் அறிந்ததே. 1978ம் ஆண்டு இடம்பெற்ற சூறாவளி, அதனைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை போன்ற இக்கட்டான காலப்பகுதிகளிலும் கூட விடுதியை விட்டு வெளியேறாமல் மாணவர்களின் பாதுகாப்புத் தொடர்பான பல பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து சிரமங்களைத் தாங்கிக் கொண்டு விடுதியைப் பராமரித்து வந்தமை இன்றும் என் நினைவில் பதிந்திருக்கிறது. போர்க்காலச் சூழலில் விடுதி மற்றும் விடுதியை அண்டிய பகுதிகளில் பல்வேறுபட்ட அசம்பாவிதங்கள் நடந்தன. அத்தகைய சூழ்நிலையிலும் எங்களுக்கு ஒரு சிறந்த கவசமாக இருந்தவர் என்றுதான் சொல்ல வேண்டும்.

1985ம் ஆண்டில் விடுதிக்கு முன்பாக இடம்பெற்ற வன்செயலின் போது Brother ஐ இராணுவத்தினர் விடுதிக் கிணற்றினுள் பலவந்தமாக தூக்கி வீசியதாகவும் எமது முன்னாள் மாணவர்கள் பேசக் கேள்விப்பட்டுள்ளேன். இவ்வாறான பல சவால்களுக்கு மத்தியில் தனது சிறந்த சேவையை ஆற்றிய Brother ஐ நூற்றுக்கணக்கான பல சிவானந்தியர்கள் இன்றும் அவர் வீடு தேடிச் சென்று சுகநலம் விசாரித்துச் செல்கின்றனர். இது அவருடைய சிறந்த பண்புமிக்க ஆளுமையையும் மாணவர்கள் உருவாவதற்கான சிறந்த வித்தாக விடுதியை வளமானதாக வைத்திருந்த அவரின் சிறப்பையுமே காட்டுகின்றன. உண்மையில் சிவானந்த விடுதியின் சிறந்த வித்து என்றே நான் அவரைக் கூறுவேன்.

பொ. ஆனந்தராஜா
முன்னாள் அதிபர் (1998- 2009)
சிவானந்தா வித்தியாலயம் (தேசிய பாடசாலை)

பழைய மாணவர்களின் தன்னலமற்ற சேவை

உன்னதமான உலகிற்குப் பொருத்தமான எதிர்கால சந்ததியினரைச் சிறந்த முறையில் சமூகத்திற்கு வழங்கும் நிறுவனமே பாடசாலையாகும். காலத்தின் தேவையை உணர்ந்து சமூகத்தின் நாகரீகம், பாரம்பரியம், கலாசாரம், விழுமியம் ஆகியவற்றைப் பேணிப்பாதுகாத்து வளமூட்டும் களமாக அமைகின்ற பாடசாலையே உயிர்ப்புடன் வாழும் பாடசாலையாகும்.

ஆன்மீக நாட்டமுள்ள சிறந்த பண்பாளர்களையும் அறிஞர்கள், கல்விமான்கள், சமூக சேவையாளர்கள் ஆகியோரையும் உருவாக்கி, பாடசாலையிலுள்ளும், பாடசாலைக்கு வெளியேயும் அர்ப்பணிப்புடன் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் சிவானந்த வித்தியாலய பழைய மாணவர்களின் தன்னலமற்ற சேவை ஏனைய பாடசாலைகளுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்வது கண்கூடு. சிவானந்த வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தை ஆரம்பித்து வைரவிழாவை இன்று வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார்கள் என்றால், சங்கத்தின் தோற்றம், அதன் வளர்ச்சி அர்ப்பணிப்பான சேவை, அவர்களுக் கிடையேயான நட்புணர்வு, மூத்த சகோதர்களுக்கான நன்மதிப்பு, தொடர்புகள் ஆகிய நற்குணங்களே காரணமாகும். அவற்றைப் போற்ற வேண்டியது நம் அனைவரது கடமையாகும்.

சிவானந்த வித்தியாலய பழைய மாணவர் சங்கம் தோற்றம் பெற்று வைர விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் இப்பாடசாலையில் கல்வி கற்ற, கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களின் நலனுக்காகப் பல்வேறு செயற்றிட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பது பாராட்டுக்குரியதாகும். அந்த வகையில் லண்டன், அவுஸ்திரேலியா, கனடா, விளையாட்டு கழகங்கள், பட்ட முன் மாணவர்கள் ஆகிய அமைப்புகள் பாராட்டப்பட வேண்டியவைகளாகும். பல பழைய மாணவர்கள் செயற்பட்டுக் கொண்டிருப்பது சிவானந்தாவிற்கு பெருமை சேர்ப்பதாக அமைகின்றது.

சிவானந்தாவில் கல்வி கற்ற மாணவர்கள் தாம் கல்வி கற்ற பாடசாலை அபிவிருத்திப் பணிகளுக்கு உதவுதல் மட்டுமன்றி, பாடசாலைச் சமூகத்திற்கும், அதற்கு வெளியேயும் சேவை செய்யும் மனப்பாங்கு கொண்டவர்களாகத் திகழ்வது இவ்வித்தியாலயத்தின் ஒப்பற்ற பெருமையைக் காட்டுகிறது. இது சிவானந்தியர்களுக்கு உரித்தான நற்பண்பாகும்.

மும்மூர்த்திகளின் அருளாசிகளும், சுவாமி ஜீவனானந்தஜீ, சுவாமி அஜராத்மானந்தஜீ மகராஜ் அவர்களினதும், சமூக சான்றோர்களினதும் நல்லாசிகளும் வைரவிழா கொண்டாடும் அங்கத்தவர்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என இறையன்புடன் வாழ்த்துகிறேன்.

அறிவின் சிகரம் சிவாநந்தா

திருவளர் கிழக்கின் செழிப்பில்
திகழ்ந்திடும் மட்டு மா நகரில்
கடல் அலை தவளும் கல்லடியில்
கவினூறும் எங்கள் சிவாநந்தா..!

விபுலானந்தன் என்னும் புலவன்
விதைத்த விருட்சம் சிவா நந்தா
விபுலானந்தம் என்பது அழகாகும்
விரிந்த அறிவே புகழாகும்.

அறிவியல், கல்வி, ஆன்மீகம்
அழகுடன் பண்பாட்டு இயலிசையும்
செறிவுறும் சிறந்த நல் வளமும்
செழிப்பது நமது நிலமாகும்.

அன்பு, கருணை, பொறுமை யென
அறிவினை ஊட்டும் அதிபருடன்
தர்மம், நீதி, நியாயமுடன்
தத்துவம் கூறும் ஆசான்கள்

கலாபூஷணம்
முத்துமாதவன்,
கலைஞர், கறுவாக்கேணி

தாய்மை, தூய்மை, வாய்மை யெனும்
வண்ண "மை" யுற்ற திருமாடம்
எளிமை,புதுமை,நேர்மையுடன்
இதயம் போற்றும் எழிற் கூடம்.

மனிதராய் மண்ணில் பிறந்தாலும்
அறிஞராய் இங்கே வளர்ந்தார்கள்
புனிதராய் என்றும் திகழ்பவர்கள்
புகழுடன் எங்கும் வாழ்வார்கள்.

மீன்கள் பாடிடும் நதியோடு
மெல்லத் தழுவிடும் கடலலையும்
மேகம் பொழிந்திடும் மழையோடு
பயிர்கள் விளையும் எளிலோடு

கற்றுத் தெளிந்தவர் பேரறிஞர்
கற்றுவருபவர் நல்லறிஞர்
கற்பவை கற்றுத் தருவதிலே
கற்றவர் பெருமை கொள்வாரே.

செல்லத்தம்பி இராமச்சந்திரன்
விரிவுரையாளர்
ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி, கொட்டகலை.

ஆளுமைகளை வளர்த்துவிட்ட அறிவாலயம் எங்கள் சிவாநந்தா

இக் கட்டுரை எமது சிவாநந்த வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் 60வது ஆண்டு விழாவையொட்டி எழுதப் படுகிறது. இதனை எழுதும் போது எனது மனப்பதிவுகள் எங்கள் கல்லூரி நாட்களை நோக்கி புரள்கின்றன. அத்தோடு மனதில் சந்தோசமும் உத்வேகமும் உணர்வு பூர்வமாக எழுகின்றன. இந்த ஆலயமே எங்களை வாழவைத்த தாய், தெய்வம், களம், வழிகாட்டி எல்லாமும் இந்த தாயினை நினைவுகூரும் போது பல பசுமையான சுகங்கள், மகிழ்வுகள் மனக் கண்ணிலும் இதயத்திலும் தோன்றுகின்றன. இவ்வேளை வாழும் எனது தெய்வங்களான தாய் தந்தை வரையும் நினைவுகூர்ந்து இக்கட்டுரையை சமர்ப்பிக்கின்றேன்.

இலங்கையில் உள்ள பிரபல்யமான பாடசாலைகளுள் கிழக்கு மாகாணத்தின்கண் குறிப்பாக மட்டக்களப்பில் மிகப் பிரபல்யமான பாடசாலையாக அன்றும் என்றும் சிவானந்தா தேசிய கல்லூரி தனக்கென ஒரு தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. அந்த வகையில் அதனுடைய வரலாறு, தனித்துவத்தை நோக்குவோமாயின் இக்கல்லூரி கிழக்கின் கல்வியொளி முத்தமிழ் வித்தகர் "பன்மையறிவுப்பகலவன்" தவத்திரு விபுலாநந்தர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இராமகிருஷ்ண பரமஹம்சரின் பிரதம சீடரான நரேந்திரர் எனும் இளமைப் பெயர் கொண்ட சுவாமி விவேகாநந்தரின் சக துறவியான சிவாநந்தரின் (இவரே

பண்டிதர் மயில்வாகனரை துறவியாக்கி விபுலாநந்தர் எனும் துறவி நாமத்தை தந்தவர்) பெயரை சுவாமி விபுலாநந்தர் தனது குருவின் ஞாபகமாக இப்பாட சாலைக்கு வைத்தார். 1926ல் அடிக்கல் நாட்டப்பட்டு 1929 ஏப்ரல் 29ல் ஆங்கில மொழி பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது.

சிவானந்தா தேசிய கல்லூரி ஆன்மீகம், இறையருள், ஆசிர்வாதம் பெற்ற ஒரு பாடசாலையாக விளங்கு கின்றது. ஏனெனில் புண்ணிய பூமியான இந்தியாவி லிருந்து வரும் பலதுறவிகள், பல்நாட்டு அறிஞர்கள், பெரியோர்களால் ஆசிர்வதிக்கப்பட்டுக் காணப்படு கின்றது. எங்கள் பாடசாலை தனக்கென சொந்தமாகப் பாரிய விளையாட்டு மைதானத்தையும் விடுதி வசதிகளையும் கொண்டதாகும். உயர்தரத்தில் மாத்திரம் பெண்கள் கற்கச் சந்தர்ப்பம் வழங்கப் பட்டது. இலங்கையில் பல்வேறு மாவட்டங்களிலுள்ள மாணவர்களும் குறிப்பாக கிழக்கு, மலையக மாணவர்கள் தங்கிக் கல்வி கற்றனர். அதிலும் விசேடமாக, மலையக மாணவர்களுக்கு விசேட ஏற்பாடாக இராமகிருஷ்ண மிஷன் இல்லத்தில் தங்கி கல்விகற்க வாய்ப்பளிக்கப்பட்டது. அவர்களில் சிலரை இங்கு குறிப்பிடலாம். மலையகத்தைச் சேர்ந்த திரு.சிதம்பரம் செங்கமலை (UNO, Chief Accountant , Financial Controller) மலையக முதற் பேராசிரியர் எஸ். சந்தானம் (கிழக்கு பல்கலைகழகத் தின் முன்னாள் துணைவேந்தர்), மலையகத்தின் பிரசித்திபெற்ற அதிபர்களுள் ஒருவரான அமரர். கிருஸ்ணன் (ஹைலன்ஸ் கல்லூரி).

இப் பாடசாலையில் கல்விகற்ற மாணவர்கள் கல்வி, விளையாட்டு, விஞ்ஞானம், கலை போன்ற துறைகளில் ஆளுமைமிக்க தலைவர்களாக பிரகா சித்துக் கொண்டிருக்கின்றனர். இங்கு சாதாரண கல்வி பெற்றவர் முதல் உயர்கல்வி, புலமைத்துவ கல்வி பெற்றவர் வரை மிகச்சிறந்த ஒழுக்க சீலர்களாக, பண்பாட்டையும் விழுமியங்களையும் வாழ்க்கையில் பின்பற்றுபவர்களாக விளங்குகின்றனர். அதற்குக் காரணம் இங்கு வழங்கப்பட்ட கல்வி அறிவிற்கு அப்பால் விழுமிய, ஒழுக்கப்பண்பாடு, ஆளுமை, தலைமைத்துவக் கல்வி ஆகியவற்றில் அதிமுக்கியத் துவம் அளித்ததாகும். இவை எங்கள் வாழ்வின் சவால்களையும் பிரச்சினைகளையும் எதிர்கொண்டு வெற்றிபெறச் செய்கின்றன.

"AIM AT EXCELENCE" என்ற சுவாமி விவேகாநந் தரின் வாக்கியத்தை மகுட வாசகமாகக் (MOTO) கொண்டது எங்கள் சிவானந்தா வித்தியாலயம் எனும் ஆலயம். எண்ணங்கள் அல்லது இலக்குகள் உயர்ந்தவை அல்லது மேன்மையானவையெனப் பொருள்படும். இவ்வாலயம் எங்கள் வாழ்க்கையின் வழிகாட்டி, சுவாசம், எங்கள் ஆத்மா.

சுவாமி விவேகாநந்தரின் வார்த்தைகளான ''வேதங்களோ, பைபிளோ, குரானோ இல்லாத ஒர் இடத்திற்கு மனித இனத்தை அழைத்துச்செல்ல விரும்புகிறேன். ஆனால் வேதங்கள், பைபிள், குரானை சமரசப்படுத்துவதன் மூலம் இது இடம்பெற வேண்டும்'' என்ற பல்லினத்துவத்தின் ஒருமைத் துவத்தை பேணும் பாடசாலையாக அன்று தொட்டு இன்று வரை அதன் இலக்கு தொடர்கின்றது. இனம், மதம், சாதி, வர்க்கப்பாகுபாட்டிற்கு அப்பால் சமத்துவம் (Equity), ஜனநாயக பண்பு என்ற உயர்ந்த பண்பாட்டு கலாசாரத்தை கொண்டது எங்கள் பாடசாலை. சங்ககால தமிழ்த் தத்துவவியலாளர் கனியன் பூங்குன்றனாரின் வாக்கு "யாதும் ஊரே யாவரும் கேளீர், அன்பே எங்கள் உலக தத்துவம்" எங்கள் சிவாநந்தா எனும் ஆலயத்தில் நடைமுறையில் காணப்படுகின்றது. இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்றுவரை தமிழ், இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் என்ற பேதங்களற்ற, அன்னியோன்னிய, ஆரோக்கியமான சகோதரத்துவத்தைக் கட்டியெழுப்பி இலங்கையின் தேசியக் கல்விக் குறிக்கோள்களை அடைந்த கல்லூரிகளுள் முதன்மையான கல்லூரியாக விளங்குகின்றது.

நோபல் பரிசு வென்ற வங்கக் கவிஞர் இரவீந்திரநாத் தாகூரின் கீதாஞ்சலி வரிகளான "Where the mind is without fear..." என்ற பாடலே எங்கள் கல்லூரி பிரார்த்தனைக் கீதமாகும். அதனை உச்சரிக்கும்போதெல்லாம் எங்கள் உடலிலும் குருதியிலும் சிவாநந்தா என்ற வேதம் ஒரு உத்வேகத்தை ஊட்டும். பாடசாலையின் நினைவுகளை யும், உணர்வு பூர்வமான பாடசாலை நாட்களையும், நம்பிக்கைகளையும், தேசிய கீதமாக உணர்த்தும், உற்சாகமாக்கும், நம்பிக்கையூட்டும்.

சுவாமி விபுலாநந்தரால் யாழ்.வண்ணை வைத்தீஸ்வரா கல்லூரி, திருமலை இந்துக் கல்லூரி,

மட்டு.சிவானந்தா தேசியக் கல்லூரி, காரைதீவு இராமக்கிருஸ்ண (சாரதா) மகளீர் வித்தியாலயம், மலையகத்தில் பதுளை லுணுகலை இராமகிருஷ்ணா வித் தியாலயம் என 26 பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் இன்றும் அகில இலங்கை, ரீதியில் மட்டுமன்றி சர்வதேசத்திலும் பெயர் குறிப்பிடக்கூடிய, தடம் பதித்து நிற்கும் இரு பாடசாலைகள் திருமலை இந்து கல்லூரி, மற்றும் மட்டு.சிவானந்தா தேசிய கல்லூரி என்பன வாகும். எங்கள் கல்லூரியின் முன்னாள் அதிபர் மதிப்புக்குரிய அமரர்.சு.கணபதிபிள்ளை அவர்கள் கலைமதி எனும் வெளியீட்டில் 1959 மார்ச் எழுதிய ஒரு ஆக்கத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் – ''குயிலோசை மறைந்து விட்டது, குழலோசை ஒடுங்கிவிட்டது ஆனால் விபுலாநந்தரின் உணர்ச்சி யோசையும் உற்சாகமும் சிவானந்தாவை விட்டு இன்றும் மறையவில்லை, மாமுனி இன்றும் சிவானந்தாவிற்கு புத்துணர்ச்சியூட்டிக் கொண்டு இருக்கிறார், இருப்பார்.'' மட்டக்களப்பு இராமகிருஸ்ண மிஷன் துறவிகளில் எமது கல்லூரியைத் தங்கள் கண்களைப் போல் காத்த வணக்கத்திற்குரிய சுவாமி நடராஜானந்தா மற்றும் சுவாமி ஜீவனானந்த மகராஜ் ஆகியோரை இந்நேரத்தில் நினைவுகூர்ந்து எங்கள் அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

நாணயத்தின் இரு பக்கங்களைப்போல் கல்வியின் இருபக்கங்களில் ஒன்று அறிவு மற்றையது ஒழுக்க விழுமியம். இங்கு கல்விகற்றவர்கள் கல்வியறிவிற்கு சமாந்தரமாக ஒழுக்க விழுமியங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கி அதனை வாழ்விலும் பின்பற்றுவர். மட்டு மாநகரில் மிகப் பிரபல்யமான பல பாடசாலைகள் இருக்கின்ற போதிலும் ஒழுக்கம், விளையாட்டு, இணைப்பாட விதானம் என்றால் சிவானந்தா எனப் பலர் பேச எங்கள் காதில் கேட்டு பெருமையடைந்துள்ளோம். பாடசாலையில் ஒவ்வொரு நாளும் பாடசாலை கீதத்துடன் தமிழ் மொழி வாழ்த்தையும் நாங்கள் பாடுவது எங்கள் தாய்மொழிக்கு நாங்கள் கொடுக்கும் மரியாதையாகும்.

பாடசாலை ஸ்தாபக தினம் முதல் குரு தினங்கள், எனப் பல தினங்களை அனுட்டிப்பதும் கலை இலக்கிய விழாக்களுடன் விளையாட்டுத் துறையிலும் எங்களுக்கென்று ஒரு இடத்தைத் தக்கவைத்தே வந்துள்ளோம். இங்கு கல்வி பயின்றவர்கள் பலர் இன்று வரை உயர்க்கல்வி, புலமைக்கல்வி பெற்று உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் உயர் பதவிகளில் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், விஞ்ஞானிகள், சட்டத்தரணிகள், கலாநிதிகள், நூலகர்கள், விரிவுரையாளர்கள், நிபுணத்துவமானவர்கள், கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள், சிவில்சேவையாளர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பரிணமித்து வருவது இப்பாடசாலைக்குப் பெருமையாகும். இதில் சிலரை இங்கு நினைவுகூரலாம் என எண்ணுகின்றேன். இலங்கை கொழும்புப் பல்கலைகழகக் கல்வி பீடத்தின் முதல் தமிழ் பேராசிரியர் ப.சந்திரசேகரம் (அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகளின் புலமையாளர்கள் பட்டியலில் இவருடைய பெயர் சேர்க்கப்பட்டுள்ளது), கொழும்பு தமிழ்ச் சங்கத்தினால் "சான்றோர்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட பேராசிரியர் கோணேசபிள்ளை, இங்கிலாந்திற்கான இலங்கைத் தூதுவர் திரு. சுந்தரமூர்த்தி, நாசாவில் கடமை புரியும் விஞ்ஞானி திரு.சி.சதாநந்தன், விஞ்ஞானி லோகநாதன், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதற் பதிவாளர் அமரர்.திரு.



பி சங்காரவேல் (1986) மற்றும் அவரைத் தொடர்ந்து டாக்டர் வே. சிவலிங்கம், திரு க. நடராஜமூர்த்தி ஆகியோரும் நிதியாளராக அமரர் திரு.கே.என். பிரேமச்சந்திரா, கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் வேந்தர் வேந்தரான பேராசிரியர் எஸ். சந்தானம் எனப் பட்டியல் நீண்டு செல்கின்றது.

1990களின் ஒரே காலப்பகுதியில் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தராக பேராசிரியர் சந்தானம், பதிவாளராக திரு. நடராஜமூர்த்தி, நிதியாளராக அமரர் திரு.கே.என்.பிரேமச்சந்திரா பதவி புரிந்து பல் கலைக் கழகத் தை வழிநடாத் தி எமது பாடசாலைக்கு இமாலயப் பெருமை சேர்த்தனர். அமரர்கள் திரு.கே.என்.பிரேமச்சந்திரா, பேராசிரியர் சந்தானம், பேராசிரியர் கே. தெட்சணாமூர்த்தி (Former Dean/Faculty of Agriculture) ஆகியோர் எனது

1990களின் ஒரே காலப்பகுதியில் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தராக பேராசிரியர் சந்தானம், பதிவாளராக திரு. நடராஜமூர்த்தி, நிதியாளராக அமரர் திரு. கே.என்.பிரேமச்சந்திரா பதவி புரிந்து பல்கலைக்கழகத்தை வழிநடாத்தி எமது பாடசாலைக்கு இமாலயப் பெருமை சேர்த்தனர்.

சித்தப்பாவின் பேரன்பிற்குரிய மாணவர்களாவர், எனது சித்தப்பா அமரர் வே.கணபதிபிள்ளை (S.L.A.S and S.L.E.A.S) எல்லோராலும் வி.கே என அழைக்கப்பட்டார். மட்டக்களப்பு மாவட்ட செயலக மற்றும் திணைக்கள உள்ளூர் தலைவர்களுள் (Local Heads) எங்கள் பழைய மாணவர்களே பலர் காணப்படுகின்றனர். மட்டகளப்பு அரசினர் போதனா வைத்தியசாலையிலும் பல வைத்தியர்களுடன் விசேட துறைசார் நிபுணத்துவ வைத்தியர்களான டாக்டர் வே. விவேகானந்தராஜா (தற்போதைய கிழக்கு பல்கலைகழக வேந்தர்) முதல் டாக்டர் எம்.அகிலன், டாக்டர் தெ.சுந்தரேசன், டாக்டர் எஸ்.பிரணவன், டாக்டர் .தமிழ்வாணன் , டாக்டர் பிஸ்ரீகரநாதன் எனும் பலருடன் தாதியர்களில் பலரும் எம்மவரே. மட்டக்களப்பின் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாவது பீடாதிபதியான திரு. நடராஜா போன்று உயர் அரச பதவிகளில் பலர் தடம்பதித்து இப்பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

அதேபோல் அமைச்சுக்களின் செயலாளர்கள், நீதிச்சேவை, பகிரங்க சேவை , இலங்கை நிர்வாக சேவை (S.L.A.S) , இலங்கை திட்டமிடல் சேவை (S.L.P.S) , இலங்கை கல்வி நிர்வாக சேவை (S.L.E.A.S), இலங்கை பொறியியலாளர் சேவை, கணக்காளர்கள், பல்கலைக்கழக நூலகர்கள், ஆணையாளர்கள், இலங்கை ஆசிரிய கல்வியலாளர் சேவை (S.L.T.E.S), இலங்கை அதிபர், ஆசிரிய சேவை, வங்கியாளாளர்கள், வெளிநாட்டு தூதுவர் சேவையாளர்கள், ஊடகவி யலாளர்கள், இலக்கியவாதிகள், கலைஞர்கள், தனியார் துறைகளில் உயர்பதவி வகிப்போர்கள் என நீண்டுகொண்டே செல்வதோடு ஆளுமை மிக்க அரசதலைவர்களையும் சமூகத்திற்கு உருவாக்கித் தந்துள்ளது எமது பாடசாலை. அதில் அமைச்சர் மர்கும் ஏ.ஆர்.மன்சூர் (முன்னாள் வர்த்தகத் துறை அமைச்சர்), அமைச்சர் மர்கும் அப்துல் மஜித் (முன்னாள் பிரதி தபால் தந்தி அமைச்சர்) , மர்கும்.மொஹைதீன் அப்துல் காதர் (முன்னாள் மீன்பிடி பிரதி அமைச்சர்), மர்கும் மூதூர் அப்துல் மஜித் (முன்னாள் கூட்டுறவு பிரதி அமைச்சர்), பாராளுமன்ற , மாகாணசபை, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பலரும் எங்கள் பாசாலையில் வளர்ந்தவர்களே. அத்துடன் தற்போதைய மட்டு மாநகர சபையின் முதல்வர் கௌரவ.தி.சரவணபவன் அவர்களும் முழுக்க முழுக்க எங்கள் கல்லூரியின் வித்தாகும்.

எங்கள் கல்லூரியின் முதல் அதிபர் மற்றும் முகாமையாளர் தவத்திரு. சுவாமி விபுலாநந்தர் முதற்கொண்டு பிரசித்தி பெற்ற அதிபர்களாக அமரர். திரு. அம்பலவாணர், திரு. இராமச்சந்திரா, திரு. க. கணபதிபிள்ளை, பண்டிதர் திரு. வி. சி.

கந்தையா, திரு. குணரத்தினம், திரு. தியாகராஜா போன்றோர் தங்கள் அளப்பரிய சேவைகளை வழங்கியுள்ளனர்.

நான் கல்வி பயின்ற காலத்தை சற்று நோக்குகின்றேன். அது 1978 முதல் 1986 வரைக்கிடையில் (1979–1981 யாழ் மத்திய கல்லூரியில் கல்வி பயின்றேன்) எங்களுக்கு கல்வி கற்பித்த ஆசான்களான ஆரையூர் திரு.சந்திரசேகரம், திரு.திருமதி பவளகாந்தன், திருமதி. சங்காரவேல், திருமதி. செல்வரெட்ணம், திரு. சிவபாதசுந்தரம், திரு. சுபேந்திரா, திரு. ரவீந்திரன், ஜனாப். பாருக், திருமதி. சுந்தரலிங்கம், திரு. பொன்னையா, திரு. சிவனேசன், திரு. சண்முகநாதன், திரு. சுந்தரலிங்கம் போன்றோர்களை மறக்க முடியுமா?

நான் க.பொத. உயர் தர விஞ்ஞானப்பிரிவில் 1983 கல்வி கற்ற வேளையில் எனது சகோதரர் செ. கிருஷ்ணபிள்ளை தற்போது கிழக்குப் பல்கலை கழக சிரேஷ்ட தொழிநுட்ப உத்தியோகஸ்தர், செ.மணிவண்ணன் (இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பிராந்திய பரிசோதகர்) இவர்களும் இங்கு கல்வி கற்றதை நினைவு கூருகின்றேன். அக்காலப்பகுதியில் ஏற்பட்ட இனக்கலவரமும் இடம்பெற்ற யுத்தமும் கல்வி கற்பதில் பல இடர்பாடுகளையும் பிரச்சினைகளையும் ஏற்படுத்தின. எனினும் 1983 காலப்பகுதியில் கணித மற்றும் விஞ்ஞான பிரிவுகளுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் அதி சிறந்த பிரபல்ய ஆசிரியர்கள் எமது பாடசாலையிலேயே கற்பித்துக் கொண்டிருந்தனர். அதனால் உயர்தரப் பிரிவில் அனேக மாணவர்கள் தேடி வந்து கல்வி கற்றனர். அவர்களில் திரு.குணரட்ணம் (தாவரவியல் குணம் சேர்) அவர்களே எனது வகுப்பாசிரியர். திருமதி. நடராஜா (பௌதீகவியல்), திரு. சி. யோகேந்திரன் (பௌதீகவியலும் தூயகணிதமும்), திரு.சதானந்தன் (விலங்கியல்), திருமதி.சாந்தி (இரசாயனவியல்), திரு. கிருபாகரன் (பிரயோக கணிதம்) என்போரைக்கூறலாம். அவர்களை இப்பாடசாலைக்குப் பெயர் பெற்றுக்கொடுப்பதில் அன்றைய அதிபர் அமரர். திரு. தியாகராஜாவின் பங்கு முதன்மையானது (பின்னாளில் இவர் மாகாண கல்வி செயலாளராகவும், கிழக்குப் பல்கலைக்கழக பேரவை உறுப்பினராகவும் கடமை புரிந்தார். இவ்வாசிரியர்கள் ஒவ்வொருவருமே நிபுணத்துவமான ஆசிரியர்கள் என்பதற்கு அப்பால் எங்களின் மீது அதிக அன்பும் அக்கறையும் கொண்ட நல்லாசிரியர்கள். எங்களின் தனிப்பட்ட வாழ்விலும் அக்கறை செலுத்தி உதவியவர்கள். அவர்கள் ஒவ்வொருவரையும் இவ்வேளையில் இக்கட்டுரை மூலமாக நன்றியுடன் நினைவு கூர்கின்றேன்.

சிவாநந்தா என்றால் வைத்தியர், பொறியியலாளர், விஞ்ஞான பட்டதாரிகளை உருவாக்கும் மிகப் பிரபல்யமான கணித, விஞ்ஞான கல்லூரியாக அக்கால கட்டத்தில் பெயர் பெற்றிருந்தது. இதற்கு நிகராக கலை வர்த்தக பிரிவுகளிலும் மிகச் சிறந்த ஆசிரியர்கள் பணியாற்றியதால் பல்கலைகழக மாணவர் தெரிவில் மட்டு மாவட்டத்தில் பிரதான இடம் வகித்த பாடசாலையாக எமது கல்லூரி விளங்கியது. இந்து நாகரீகம், தத்துவம், சமஸ்கிருதம் கற்பித்த ஆசிரியர் அமரர். திரு. தியாகராஜா சர்மா குருக்கள் அவர்கள் இன்றுவரை பலரறிந்த பிரபல்ய சிவாச்சாரியார் ஆவார். எங்கள் பிரிவிலும் ஏனைய பிரிவினருள் பலரும் தொடர்ந்து வந்த பிரிவினரும் பல்கலைக்கழக அனுமதி பெற்று உயர் பதவிகளையும் நிபுணத்துவமான சேவைகளையும் வழங்கி வருவது பெருமைக்குரியதாகும். என்னை மாணவத் தலைவனாக்கி பின்னர் 1985 ம் ஆண்டு இப்பாடசாலை

சிவாநந்தா என்றால் வைத்தியர், பொறியியலாளர், விஞ்ஞான பட்டதாரிகளை உருவாக்கும் மிகப் பிரபல்யமான கணித, விஞ்ஞான கல்லூரியாக அக்கால கட்டத்தில் பெயர் பெற்றிருந்தது. இதற்கு நிகராக கலை வர்த்தக பிரிவுகளிலும் மிகச் சிறந்த ஆசிரியர்கள் பணியாற்றியதால் பல்கலைகழக மாணவர் தெரிவில் மட்டு மாவட்டத்தில் பிரதான இடம் வகித்த பாடசாலையாக எமது கல்லூரி விளங்கியது.

யின் சிரேஷ்ட மாணவ தலைவனாக தெரிவுசெய்து, வளப்படுத்தி தலைமைத்துவ ஆளுமை மிக்க ஒருவனாக மாற்றியது இக்கல்லூரியே ஆகும். அதனாலேயே இக்கல்லூரியின் மீது அதீத அன்பும் அக்கறையும் நேசமும் பக்தியும் கொண்டவனாக காணப்படுகின்றேன். அதிலும் இலங்கையில் வழங்கப் பட்ட இலவசக் கல்வியை என்போன்றோருக்குப் பெற்றுத்தந்தது இக்கல்லூரியே ஆகும். எனவே எங்கள் கல்லூரித் தாயைப் போற்றி வணங்குகிறேன்.

நான் கல்வி கற்ற காலகட்டம் யுத்த காலமாக இருந்தாலும் விளையாட்டு துறையிலும் நாங்கள் சாதித்தோம். குறிப்பாக Hard Ball Cricket விளையாட்டை எங்கள் Batch தான் பிரபல்யபடுத்தியது. எங்கள் கிரிகெட் அணியின் தலைவரான திரு. சி. நிரஞ்ஞன் (தற்போது இவர் கிழக்கு பல்கலைக்கழக Computer programmer) அவர்களின் தலைமையில் புனித மைக்கல் கல்லூரி, மட்டக்களப்பு மத்திய கல்லூரி, உள்ளுர் கழகங்கள் என அனைத்து போட்டிகளிலும் வெற்றி ஈட்டினோம். சிவானந்தா என்றால் Hard Ball Cricket இற்குத் தனி இடம் உண்டு. இதேபோல் எங்கள் உதைபந்தாட்ட, கரப்பந்தாட்ட எல்லே அணிகளும் மெய்வல்லுனர் விளையாட்டுத்துறையும் மாவட்ட ரீதியில் சிறந்து விளங்கியது. எங்கள் விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு. பாஸ்கரன் (தற்போதைய மட்டு வலயக்கல்விப் பணிப்பாளர்). நான் கல்வியை முடித்து இளைஞர் சேவை உத்தியோகத்தராக 1987ல் தெரிவானேன் அதற்கு உதவியது கல்லூரியில் நான் வகித்த சிரேஷ்ட மாணவத்தலைவர் பொறுப்பாகும். என்னுடன் கல்வி கற்ற நண்பர்களில் சிலர் டாக்டர் து. உதயகுமார், பொறியியலாளர் சக்தியேஸ்வரன் , திரு. சபாநாதன் (PHI), ஜனாப். அன்வர்டீன் (ARM-HNB), ஜனாப். அன்ஸார் (AGM-PEPOLE'S BANK), திரு. ச. சுமன், திரு. சிவகுமார், திரு. இராஜகோபால், திரு. சந்திரகுமார், டாக்டர். சோபனா, திருமதி. ஜெயரஞ்சனி, திருமதி. சிவகாமி, திருமதி. மகாலட்சுமி குறிப்பிடத்தக்கவர்கள். தொடர்ந்து எமது கல்லூரியில் 1991-1992ல் விஞ்ஞான ஆசிரியராக கடமைபுரியும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. 1992ல் எமது சகோதர பாடசாலையான திருகோணமலை இந்து கல்லூரிக்கும் எமது கல்லூரிக்குமிடையில் CRICKET BIG MATCH (BATTLE OF GOLD) ஆரம்பித்தோம். அதற்கு அப்போதைய உடற்கல்வி ஆசிரியர் திரு.குருகுலசிங்கமும் அதிபராக இருந்த அமரர் கே.விஜயரட்ணமும், திரு.தில்லைநாதன் (உதவி ஆணையாளர் -கூட்டுறவு திணைக்களம் திருமலை) ஆகியோர் உறுதுணையாக இருந்து முதல் போட்டியை திருகோணமலையில் நடத்தியதை இங்கு ஞாபகப்படுத்துகிறேன். அதே போல் இக்காலப்பகுதியில் மட்டு மாவட்டத்தின் முதல் தேசிய பாடசாலையாக அப்போதைய ஜனாதிபதி மேன்மைதங்கிய ஆர்.பிரேமதாச அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டது குறிப்பிடத் தக்கது.

இப் பாடசாலையின் பரிசளிப்பு விழாக்களிலும் ஏனைய விழாக்களிலும் மிகப்பிரபல்யமான பலர் கலந்து சிறப்பித்ததையும் அதில் மிக முக்கியமாக இலங்கை பல்கலைக்கழகங்களின் வேந்தர் SIR. IVAR JENINGS என்பதை பெருமையுடன் நினைவு கூருகின்றேன். இன்று எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் லண்டன், கனடா,கட்டார், அஸ்திரேலியா எனப்பல இடங்களிலும் சிறப்பாக இயங்கி பாடசாலையின் வளர்ச்சியில் பல்வேறு வகைகளிலும் பங்காற்றுகின்றது. சிவாநந்த வித்தியாலத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் "சிவானந்தியன்" எனும் உணர்வுடன் எங்கிருந்தாலும் வலையமைப்பில் இயங்கி வருகின்றோம், அதுவே எங்கள் சக்தி.

இப்பாடசாலையின் காவல் தெய்வங்களாக எமது பாடசாலைக்கு நேரெதிராக பேச்சியம்மாளும் பிள்ளையாரும் அமர்ந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றனர். எனவே பல்வேறு சிறப்புக்களையும் மாண்புகளையும் கொண்ட இக்கல்லூரி மென்மேலும் வளரும், வளரவேண்டும். இதற்கு காரணமாக அமைந்த தவத்திரு சுவாமி விபுலானந்தர் இராமகிருஸ்ண மிஷன் துறவிகள், அன்றைய, இன்றைய அதிபர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள், காலத்திற்குக் காலம் இருந்துவரும் பழைய மாணவர் சங்கங்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் என அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன். எங்கள் தாய், உயிர், சுவாசம், வாழ்வு, வழிகாட்டி "சிவாநந்தா" என நினைவுகூர்வதோடு உலகம் உள்ளவரை அதன் புகழ் மேன்மேலும் வளர்ந்திட இறைவனைப் போற்றுகின்றேன்.

"ஆனந்தமான சிவானந்தா சாலையை வாழ்த்தி வணங்கிடுவோம்."

What is our college – shivananda
What is our colours – blue and yellow
We are shivanandian
We are proud to be shivanandian .

க.குருநாதன்
(முன்னாள் பழைய மாணவர் மன்றத் தலைவர்)
ஓய்வு நிலை காணி ஆணையாளர்.

பாடசாலையின் உயர்வுக்கு உரமாகும் பழைய மாணவர் மன்றம்

நாம் இன்னிலைக்கு உயர்வடைய உரமானவள் எம் அன்னை சிவாநந்த வித்தியாலயமே. பெற்றதாய் பத்துமாதம் சுமந்து எம்மைப் பெற்றெடுக்கிறாள், பத்துவருடங்களுக்கு மேலாக எமை தாங்கி, அறிவூட்டி முழுமனிதனாக பெற்றெடுப்பவள்தான் பாடசாலை. அந்தவகையில் பாடசாலையும் ஒரு தாய்தான். அவளை மறவாமல் அவளுக்கு தன்னாலான சேவைகள் செய்துகொண்டிருக்கும் பழைய மாணவர் மன்றமானது அறுபது ஆண்டுகளை அடைந்து இன்று வைரவிழாக் காணவுள்ளது. சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தின் இந்தப் பயணத்தில் தலைவராகவும் (2012-2013) செயலாளராகவும் (1995-2000) இருந்து பல சேவைகளை எமது குளாத்தின் மூலம் செய்து முடித்ததையிட்டு பெருமை கொள்கின்றேன். இக்காலகட்டத்தில் எமது அடிப்படை வசதிகளான பாடசாலைக் கட்டிடங்கள், விடுதிக்கட்டிடங்கள், மைதானவிஸ்தரிப்பு மற்றும் மாணவர் மேம்பாட்டிற்கான புதிய யுக்திகள் நடைமுறைப்படுத்தப் பட்டமை எனப் பல செயற்பாடுகள் செய்யமுடிந்தமையினையிட்டுப் பேருவகை கொள்கிறேன். இதனூடாக உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகள் கிடைத்தமையும் குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாது சிறந்த ஆழுமையுள்ள அதிபரை பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியில் கொண்டுவந்து, பாடசாலைக்குச் சிறந்த தலைமைத்துவத்தை ஏற்படுத்தியமை மற்றும் கிரிக்கட் விளையாட்டு கணிப்பு உபகரண அறை அமைத்தமை முதலான பணிகளும் குறிப்பிடத்தக்கவை. லண்டன்,கனடா,அவுஸ்ரேலியா முதலான நாடுகளில் வாழும் எமது பழைய மாணவாகள் அங்கே மன்றங்களை அமைத்து எமது தாயக மன்றத்துடன் இணைந்து நிதி உதவிகள், பொருளுதவிகளை வழங்கி ஊக்கப்படுத்தியமையை நன்றியுடன் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளேன். நாட்டின் அசாதாரண சூழலிலும் பல்வேறு சிரமங்கள் மத்தியிலும் சங்க மானது தனது கடமைகளை செய்யத் தயங்கவில்லை என்பதையும் குறிப்பிடுகின்றேன்.

சமகாலத் தேவைகளுக்கேற்றாற்போல் தற்போதைய பழைய மாணவர் மன்றமானது பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருக்கின்றமை பாராட்டபடவேண்டியதே. நவீன கல்விமுறைக்கு ஏற்ப்ப கணணிக் கட்டமைப்புடனான நவீன கற்கை நிலையம், எந்தப் பாடசாலையும் செய்திராத கல்விக் கண்காட்சியை பாடசாலையுடன் சேர்ந்து அரங்க கேற்றியமை சங்கத்தின் பயணத்தில் மைல்கற்களாகும். இவை தவிர மாணவர்களை ஊக்குவிப்பதற்காக வருடந்தோறும் பிரமாண்டமாக நடைபெற்றுவரும் சிவாநந்தியன் விருது விழா உண்மையில் சிறப்பு நாமத்தைச் சிவாநந்தியர்களுக்கு கொடுத்துள்ளதும் குறிப்பிடப்படவேண்டியதே.

இவை அனைத்தும் எமது அன்னை சிவாநந்த வித்தியாலயத்திற்கு நாம் நன்றியுடன் செய்யும் நற்பணியே. நாம் இன்னிலைக்கு உயர்வடைய உரமானவள் எம் அன்னை சிவாநந்த வித்தியாலயமே. அவளைப் போற்றி அறுபது வருட பழைய மாணவர் மன்ற வரலாற்றினை நினைத்துப் பார்க்கின்றேன். இன்றைய நாள் நேற்றைய நாளைவிட சிறப்பாக அமையட்டும் நாளைய நாள் இன்றைய நாளைவிட சிறப்பாக அமையட்டும் என வாழ்த்துகின்றேன்

சர்வமதக் கோட்பாட்டின் ஊற்றாக விளங்கும் சிவாநந்தா

வித்தகரின் சமத்துவப் போக்கு

யதா சித்தம் ததா வாசஹ, யதா வாசஹ ததா கிரியாம்
யதா கிறியாம் ததா சீலம், யதா சீலம் ததா சஹ ஜீவஹ
சித்தே, வாச்சி, கிரியாம், ஏகாணம், சஹ மஹாத்மநஹ

ஒருவர் எவ்வாறு நினைக்கின்றாரோ அதற்கேற்பவே வார்த்தைகள் வெளிவரும். வார்த்தைகளுக்கு ஏற்பவே செயல் அமையும். செயலுக் கேற்பவே ஒழுக்கம் அமையும் ஒழுக்கத்திற்கேற்பவே வாழ்க்கை அமையும்.

என்ற தத்துவத்திற்கேற்ப தனது நல்ல எண்ணத்தின்படி, ஈசன் உவக்கும் இன்மலர்கள் இவைதான் என எடுத்துக் கூறிய முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் அவர்கள் உருவாக்கியதே ஆனந்தமான சிவாநந்த சாலையாகும். திருகோணமலையில் இருந்த காலத்தில் இவரின் நெருங்கிய நண்பராக இருந்தவர் இந்திய முஸ்லிம் வியாபாரி இராவுத்தர் நெயினார் முகம்மது. விபுலானந்த சுவாமிகளின் கல்வி முயற்சிக்கு அள்ளி வழங்கிய முஸ்லிம்களில் இவர் முக்கியமானவர். இதே போல் இலங்கையில் முதல் முஸ்லிம் நிர்வாக சேவை உத்தியோகத்தராக விளங்கிய A.M.A.அஸீஸ் கல்முனைப் பகுதி அரச அதிபராக இருக்கும் போது விபுலானந்த சுவாமிகளுடன் மிக நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார். தான் இலங்கையிலிருந்து முதன் முதல் தமிழ்ப் பேராசிரியராக தமிழ்நாடு (இந்தியா) சென்றதன் பின் தமது அன்பு மாணவர்களில் ஒருவரான அல்லாமா டாக்டர் ம.மு.உவைஸ் அவர்கள் பேராசிரியராக செல்லும் அளவிற்கு பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்பித்தவர் இவராவார்.

சிவாநந்த வித்தியாலயத்தை அமைக்க மட்டக்களப்பு நகரத்தில் பலர் நிலம் அன்பளிப்புச் செய்ய முன்வந்த போதும் அங்கு அமைக்காது கிராமப்புற, வசதியற்ற வறுமையான மாணவர்களும், குறிப்பாக காத்தான்குடி முஸ்லிம் மாணவர்களும் ஆரையம்பதி, தாழங்குடா மீன்பிடி, கூலித்தொழிலாளர் பிள்ளைகளும் கால்நடையாக வந்தாவது கல்வி பெற வேண்டும் என்ற நன்னோக்கில் கல்லடி-

ஜனாப் மஹ்றூப் ஹரீம்,
ஓய்வுபெற்ற அதிபர்,
காத்தான்குடி

உப்போடையில் சிவாநந்த வித்தியாலயத்தையும் விடுதியையும் அமைத்தார் வித்தகர் விபுலானந்தர். சாதி, மத, இன, பேதம் எனும் எதுவுமே பாராது தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவர்கள் என்ற சமய வேறு பாடும் இல்லாது சகோதரத்துவத்துடன் சமாதானமாக கல்விபெற்று விடுதியில் வாழ்ந்த வரலாறு இலகுவில் மறக்கக் கூடியதல்ல. அதற்கான சிறந்த அடித்தளத்தை இட்டவர் வித்தகர்தான் என்பது நினைக்கற்பாலது.

விடுதிப் பொறுப்பாளர்களில் ஒருவராக இருந்த விபுலாநந்தர் இரவு 3 மணிக்கு 10 வயதுடைய என்னையும ஏனைய முஸ்லிம் மாணவர்களையும் தூக்கத்தைவிட்டு எழுப்பி, குளித்துச் சுத்தமாக வரும்படி கூறி, சுவையான உணவை அந்நள்ளிரவு நேரமளித்து முஸ்லிம் மாணவர்களாகிய நீங்கள் இன்று தொடக்கம் நோன்பு (உபவாசம்) அனுஸ்டிக்க வேண்டும் என்று கூறி, இதன் சட்ட ஒழுங்குகள், எப்படிப் பின்பற்ற வேண்டும் என்ற விளக்கங்களைக் கூறி முதன் முதல் என்னை நோன்பு நோற்கப் பழக்கியவர் சுவாமி விபுலானந்தரென்று சிவாநந்த வித்தியாலயப் பொன் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் அமைச்சர் சகோ. M.A. மஜீது அவர்கள் கூறிய கருத்து இன்று நினைவிருக்கிறது. இலங்கையின் பல பாகங்களிலும் ஏன் வெளிநாட்டிலும் கூட உயர் பதவி வகிக்கின்ற பல சமயத் தலைவர்களும் இக்கல்லூரியின் பழைய மாணவர் என்று கூறி அக்கல்லூரிக்கு பெருமை பெறுவதைவிட நான் ஒரு "சிவாநந்தியன்" என்று கூறிக்கொள்வதில் இங்கு கல்வி கற்ற அனைவரும் பெருமையடைகின்றனர்.

"யார் எச் சமயத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் அத்தனை பேரும் சமமாக, சமாதானமாக, சகோதர்களாக அவரவர் சமயத்தைப் பூரணமாகப் பின்பற்றி ஒழுக வேண்டும்" என்பதே இராமகிருஷ்ண மிஷன் சித்தாந்தமாகும். இதை அப்படியே அமுல்படுத்தும் ஓர் இடம்தான் ஆனந்தமான சிவாநந்த சாலையாகும்.

பொற்காலமான மாணவப் பருவம் :

1962 இல் க.பொத சாதாரண தரப் பரீட்சையை காத்தான் குடி ம.ம.வித்தியாலயத்திலிருந்து சித்தியடைந்து உயர்தரம் படிப்பதற்காக ஆனந்தமான சிவாநந்த சாலையில் சேர்ந்தேன். இரு நேரப் பாடசாலை. காலை 8 மணிக்கு முன் பாடசாலை வந்தால் பிப. 4 மணிக்கு பாடசாலை விட்டதும் மட்டக்களப்பு நூலகம், மாணவர் விடுதி என எல்லா இடங்களுக்கும் சென்று விட்டு பிற்பகல் 8 மணிக்குப் பின்பு தான் வீடு திரும்புவேன். கல்லூரியில் நடக்கும் சகல நிகழ்வுகளிலும் கலந்து கொள்வேன். ஒவ்வொரு வருடமும் விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா என்பன நடைபெறும். A/L இல் நான்கு பாடங்களிலும் 1962 இல் எனக்கே பரிசு கிடைத்தது மறக்க முடியாத நிகழ்ச்சி. மாணவர் மன்றத்தில் பேச்சு, விவாதம், கவியரங்கு, நாடகம் அனைத்திலும் பங்கு பற்றும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. எனது இரு முக்கிய நண்பர்கள் ராதாகிருஷ்ணன் (இந்து) அரியரெத்தினம் (கிறிஸ்தவம்) இருவருடனும் சகல சமய விழாக்களிலும் பங்குபற்றுவதோடு நாம் மூவரும் பள்ளிவாசல்களுக்கும் செல்வோம். ஒரு வருட காலமாக எனது வீட்டுக்கு வரும் இந்த இரு நண்பர்களும் இரு வேறு மதங்களைச் சேர்ந்தவர்கள் என்பது அவர்களுடன் நெருக்கமாக கதைத்திருக்கும் எனது தந்தை, மாமா ஆகியோருக்கே தெரியாது. இவ்வாறான நட்பும் சகோதரத்துவமும் அன்று இருந்ததை நினைவில்கொள்கிறேன். இன்று அதை எங்கே தொலைத்துவிட்டோம்?

மட்டக்களப்புத் தமிழக தீர்க்கதரிசிக் கவிஞர் புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை அவர்கள் 1950 இல் கூறியுள்ள கவிதையைப் போன்று

"இருதயத்தின் ஈரிதழ்போல் இங்கு இந்து முஸ்லிம்
ஒரு வயிற்றுப் பாலகர் போலுள்ளோம் – அரசியலில்
போரசை கொணடோர் பிரித்து நமை வேறாக்கி
ஆராயார் செய்வார் அழிவு"

ஒரு வயிற்றுப் பிறப்புக்களாக இருக்கும் இந்து, முஸ்லிம்களை அரசியல் பேராசை கொண்டோர் தமது இலாபத்திற்காக மொழி, , பிரதேச ரதீயாக கல்வியில், சமூக சேவையில் அரசியலில் வேறாக்கி, ஆராயாமல் அழிவை செய்வார்கள் என்று தீர்க்க தரிசனக் கருத்தைக் கூறியிருந்தார் என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும். இதனாலேயே இன்று மொழி, இன, பிரதேச, சமய வேறுபாடுகள் வந்துள்ளன என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

அதிபரிடம் கண்ட சர்வமதக் கோட்பாடு

அறிவாற்றல் மிக்க அதிபராக, ஆற்றல் வாய்ந்த அறிஞராக இனிய சுபாவத்துடன் இயல்பாக பழகுபவராக உண்மை, நேர்மையுடன் கடமை செய்பவராக எனது காலத்தில் இருந்தவர் அமரர் கணபதிப் பிள்ளை ஐயா அவர்கள். காலை 6.00 மணிக்கே கல்லூரிக்கு வந்து விடுவார். மரங்கள் நிறைந்த சோலையாக காட்சி தரும் கல்லூரியில் விழுந்து கிடக்கும் இலைகளை கூரான ஒரு கம்பிகனால் பொறுக்கிக் கொண்டு My dear, My dear என்று ஏனைய மாணவர்களையும் அழைத்துக் கொண்டு செயற்படும் இவரது செயலினால் அரை மணித்தியாலத்திற்குள்ளேயே அத்தனை இடமும் சுத்தமாகிவிடும்.

> **"யார் எச் சமயத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் அத்தனை பேரும் சமமாக, சமாதானமாக, சகோதர்களாக அவரவர் சமயத்தைப் பூரணமாகப் பின்பற்றி ஒழுக வேண்டும் என்பதே இராமகிருஷ்ண மிஷன் சித்தாந்தமாகும்"**

கல்லூரி நேரத்தில் அவருடைய காரியாலய வேலை செய்யாது ஏதோ ஒரு வகுப்பு மாணவர்களை அழைத்து இயற்கைச் சூழலில் மரத்தின் கீழே இருந்து மகிழ்ச்சிகரமான உரையாடலுடன் கல்வியூட்டுவார். 4.00 மணிக்கு பாடசாலை விட்டாலும் 6.00 வரை இருந்து காரியாலய வேலைகளைப் பார்த்து, விடுதி மேற்பார்வையை செய்து விட்டுத்தான் வீடு திரும்புவார். காலை நேர ஒன்றுகூடல் அறிவுப் பூங்காவாக, அமைதியாக ஆசிரியர்கள் மாணவர்களுக்கு தமிழிலும் ஆங்கிலத்திலும் அழகாக நடக்கும்.

எனது A/L 2ம் ஆண்டு தொடக்கத்திலே பலாலி ஆசிரிய கலாசாலை போட்டிப் பரீட்சையில் கணிதப் பிரிவிற்கு தெரிவு செய்யப்பட்டு ஆசிரிய நியமனம் வந்த போது, என்னைக் காத்தான்குடி அல்ஹிறா ஆரம்பப் பாடசாலைக்கு ஆசிரியராகப் போட வைத்து, அந்த அதிபருடன் கதைத்து 12.00 மணிக்கே ஆசிரியக் கடமை முடித்து மதிய உணவை வீட்டில் முடித்தபின் பிற்பகலில் மாணவராக கல்லூரிக்கு வரவழைத்து எனக்கு அவசியமான சமஸ்கிருதம், அரசியல், தமிழ் பாடங்களை பின்னேர நேர சூசியாக மாற்றி அளித்த அதிபரை எனது 1வது புத்தகமான "பரீட்சையில் சுலபமாக வெற்றி பெறுவது எப்படி?" என்ற நூல் வெறியீட்டு விழாவிற்கு 1967இல் அரசினர் கல்லூரி அதிபர் சின்னதுரையுடன் அழைத்துக் கொண்டு வந்து சிறப்புரையாற்ற வைத்தோடு, 22 வயது இளைஞனான எனக்குக் கிடைத்த ஆசீர்வாதத்தால் 20 புத்தகங்களை எழுதும் அளவிற்கு என்னை வளர்த்துக் கொண்டேன். இதில் அவரின் பங்கு முதன்மையானது. இவ்வாறான ஓர் அதிபரை இன்று காண முடியுமா?

பிராமண ஆசானின் உயர் உள்ளம்

1961 மே மாதத்தில் சிவானந்தாவில் சேர்ந்து முதல் நாள். A/L இற்கான 1வது பாடம் "சமஸ்கிருதம்" ஆகும். சமஸ்கிருத பாடத்திற்கான ஆசானாக இருந்தவர் வியாக சிரோன்மணி தியாகராஜா ஐயர் அவர்கள். சமஸ்கிருத வகுப்பில் மொத்தம் 14 மாணவர்கள். மாணவர்களில் ஒரே ஒரு முஸ்லிம் மாணவனாக என்னைக் கண்ட ஐயர் அவர்கள், "நீர் ஒரு முஸ்லிம். தமிழ், சரித்திரம், அரசியல் பாடங்கள் படிக்கலாம். சமஸ்கிருத பாடத்தில் திறமைச் சித்தி (C) இல்லாது எப்படி இந்தப் பாடத்தைப் படிக்கப் போகின்றாய்? 6ம் ஆண்டு தொடக்கம் சமஸ்கிருதத்தைப் படித்துவரும் இவர்களில் 4 மாணவர்கள் சாதாரண சித்தி அடைந்துள்ளனர். இவர்களுடன் சேர்ந்து நீரும் இவ்வருட டிசெம்பர் O/L பரீட்சையில் சித்தியெய்தாவிட்டால் எனது பாடம் எடுக்க முடியாது என்று கண்டிப்பாகக் கூறினார். மிகவும் கவலையடைந்த நான், இப்பாடத்தைப் படிப்பதற்காகவே விரும்பி இக்கல்லூரிக்கு வந்தேன். உங்கள் ஆசீர்வாதம் இருந்தால் நிச்சயம் நீங்கள் எதிர்பார்க்கும் சித்தியை அடைவேன் என்று கூறினேன்.

மறுநாள் வரும் போது சிலேற் பலகையுடனும் குச்சியுடனும் வருமாறு கூறி, எனக்குக் கற்பிக்கத் தொடங்கிய அவ்வாசிரியர் படிப்படியாக பாடசாலை விட்டதும் வீட்டுக்கு 4.00 மணிக்கு வருமாறு கூறி, பூஜை அறையில் அமரச் செய்து, சிற்றுண்டி வழங்கி அன்பும் ஆதரவுமாக, இலவசமாக உணர்ச்சியும் ஊக்கமும் மிக்கவராக எடுத்துக்காட்டுக்களுடன் எளிய நடையில் ஐயந்திரிபற கற்றுத்தந்த தன்மையை நான் எப்படி மறக்கமுடியும்? கல்லூரி பாடத்தில் அரைவாசியை கற்பித்துவிட்டு மிகுதி அரைவாசியைப் படிக்க மிகுந்த பணத்துடன் டியூசனுக்கு வா என்று "பீஸ் றேட்டாக மலிந்து விட்ட இக்கால கல்விக் கடையில் வறிய மாணவர் படிப்பது எங்கே? அரைச்சமும் ஊதியம் பெறாது அன்புடன் இலவசமாக கற்பித்த இந்த ஆசிரியரின் இனிய பண்பு எங்கே?

சமஸ்கிருத இலக்கியங்களில் ஆழ்ந்த புலமையுடைய அவ்வாசிரியர் பல்வேறு தலைப்புக்களில் கூறிய அறிவுரைகள் இத்தனை துறைகளிலும் சமஸ்கிருத இலக்கியக் கருத்துக்கள் உண்டா? இவ்வறிவுக் கருவூலங்களில் இருந்தமையால் தான் மேல் நாட்டவர் கூட தமது தத்துவ, உளநூல், சமூக கருத்துக்களை பெற்றுள்ளார்களா? என என்னைப் பிரமிக்க வைக்கிறது. உதராணமாக

ஆசார்யாத் பாதம் ஆதத்தே, பாதம் ஸ்வ பேதயாஹ
பாதம் பஹன்மசாரி பயஹ, பாதம் காலக் கிரமேணச

என்ற சுலோகத்தில் கூறியுள்ளவாறு ஒரு ஆசிரியர் 100% முழு முயற்சியுடன் (சகல துணைச் சாதனங்கள் உபகரணங்கள் விளக்கமுடன்) கற்பித்தால் மாத்திரமே மாணவர்கள் அவ்வாசிரியரிடமிருந்து ¼ பகுதி அறிவைப் பெறுவர். பெற்றவர், தன்னைச் சார்ந்த மாணவர்களுடன் கலந்துரையாடிப் படிப்பதால் கால்பகுதி அறிவைப் பெறுவர். மிகுதி கால் பகுதியை சிறிது காலத்தின் பின்பு தான் பெறுவர். எனவே ஆசிரியரின் முயற்சியை விட மாணவர் முயற்சி இரு மடங்காகும். ஆகவே மாணவரின் வெற்றியிலும் தோல்வியிலும் இருமடங்கு பங்கு பெறுவர் மாணவரே.

இவ்வாறான இவரது ஊக்கமான அறிவூட்டலால் 6 மாதம் படித்து அவ்வருட டிசெம்பர் பரீட்சைக்கு (1962) சமஸ்கிருதம், சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்களுடன் எனது வகுப்பிற்கு பக்கத்திலுள்ள O/L விஞ்ஞான வகுப்பு மாணவர்களின் குறிப்புக்களையும் படித்து கணிதம், பௌதீகம், இரசாயனம், தாவரவியல், விலங்கியல் ஆகிய விஞ்ஞான பாடங்களையும் எடுத்து நான்கு விசேட சித்தி (D) 4 திறமைச் சித்திகளுடனும் O/L பெறுபேற்றைப் பெற்றேன். திறமைச்சித்தி(C) எடுத்த பாடங்களில் முக்கியமாக சமஸ்கிருதமும் இடம் பெற்றது. இதனால் நான் அடைந்த மகிழ்ச்சியைவிட இப்பாடத்ததைக் கற்பித்த எனது ஆசிரியர் ஐயர் அவர்கள் அடைந்த மகிழ்ச்சி அபாரமானது. அனைத்து வகுப்புக்களுக்கும் என்னை அழைத்துச்சென்று அத்தனை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் என்னை அறிமுகப்படுத்தி அகமகிழ்ந்தார். தொடர்ந்து A/L வகுப்பில் எனக்கு கீதா உபதேசம், நளோபாக்கியானம், பகவத் கீதை, ருதுசம்ஹாரம், மகாகவி காளிதானின் மேகதூதம், சாகுந்தலம் போன்ற இலக்கியங்களிலும் வான்மீகியின் சமஸ்கிருத இராமாயணம் இவைகள் அனைத்திலும் உள்ள இலக்கிய இன்பங்களை கற்பித்த பாங்கு இன்று என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. "சமஸ்கிருதம்" "நன்றாகச் செய்யப்பட்டது" என்ற கருத்துள்ள இப்பாஷையில் இலக்கியத்தில் அமங்கலமாகக் குறிக்கும் எச்சொல்லும் இல்லை. இது எப்படி மங்கலமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது என்பதற்கு பல்வேறு உதாரணங்களைக் கூறுவார். கனடாவில் வாழ்ந்தவர் 20 வருடங்களின் பின் இலங்கை வந்த போது என் இல்லம் தேடி வந்து இனிய விடயங்களை உரையாடிய நிகழ்வு இன்றும் என்றும் நீங்காத நினைவாக என் உள்ளத்தில் நிழலாடிக் கொண்டு இருக்கின்றது.

சிவானந்தாவில் ஆசிரியராகக் கடமை :

1977 இல் அரசியல் காரணமாகப் பலரும் இடமாற்றப்பட்டனர். இந்நிலையில் எனக்கு இடமாற்றம் வரும் என்ற எதிர்பார்பினிடையே என்னைப் பாதுகாக்க அப்போது சிவானந்த வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய திரு.மு.தியாகராஜா அவர்கள் என்னை அக் கல்லூரிக்கு எடுப்பதாகக் கூறி எனது திட்டமிட்ட படியான 3வது அனைத்துலக இஸ்லாமிய் இலக்கிய மாநாட்டில் பேராளராகக் கலந்து ஆராச்சிக் கட்டுரை படிக்க

அனுப்பி வைத்தார். இந்திய வங்கக் கடலோரத்தில் சங்கத்தமிழ் ஒலித்த காயல் மாநகரில் நடைபெற்ற இவ் விழாவில் கலந்து கொண்டு திரும்பி வந்தபோது சிவாநந்த வித்தியாலயத்தில் விவேகானந்தர் நினைவு தின விழா நடைபெற்றுக்கொண்டிருந்தது. என்னையும் அன்புடன் இவ் விழாவில் வரவேற்பு சிறப்புரையாற்ற வைத்தார் அதிபர்.

ஆசிரியராக இங்கு கடமையைத் தொடர்ந்த எனக்கு சகல இன ஆசிரியர்கள், மாணவர்களின் அன்பும், ஆதரவும் கிடைத்தது. சுவாமி ஜீவானாநந்தாஜீ அவர்களின் அன்பும் பரிவும் என்னை மெய்சிலிர்க்க வைத்தது. வருடத்தில் 2 -3 விருந்தோம்பல் விபுலாநந்தர் – விவேகாநந்தர் – இராமகிருஷ்ணர் நினைவுதின விழாவில் இடம்பெற்றது. கணிதம் இஸ்லாம் ஆகிய பாடங்களைப் போதித்த எனக்கு A/L,O/L வகுப்பு மாணவர்கள் ஆசிரியர்களின்றி இருக்கும்போது அவர்களின் அழைப்பின் பேரில் அவ்வகுப்பு மாணவர்கள் கலந்துரையாடல்களில் கலந்துகொண்டு அம்மாணவர்களின் அன்புக்கு இலக்காகிவிடுவேன். இது எந்த அளவிற்கு என்னைக் காப்பாற்றியது என்றால் நான் இக்கல்லூரியிலிருந்து கணித ஆலோசகராக எடுபட்டு மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகள் பலவற்றுக்கும் செல்வேன். தமிழ் பாடசாலை மாணவர்களும் எனது வகுப்பை எதிர்பார்த்திருப்பர். பிற்காலத்தில் இம்மாணவார்களில் பலர் ஆயுத பாணிகளாக பல இயக்கங்களிலிருந்த போதும் என்னைக் கண்டதும் நான் அவர்களை அறியாத நிலையிலும் அவர்கள் என்னை அறிந்து வாகனத்தை விட்டிறங்கி "சலூட்" அளித்து மரியாதை செய்த நிகழ்வும், பயங்கரவாதப் பிரச்சினை உச்சநிலை பெற்றிருந்த காலத்தில் 15 வருடங்களாக எந்த ஒரு முஸ்லிமும் மண்டூர் பகுதிக்குப் போகப் பயந்திருந்த காலத்தில் "மட்டக்களப்புத் தமிழகத்தின் தீர்க்கதரிசிப் புலவரான புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் பிறந்தகமான இவ்வூரில் அவர் பெயரில் திறக்கப்பட்ட பாடசாலை விழாவிற்கு என்னையும் அழைத்துச் சிறப்புப் பேச்சாளராகப் பேசவைத்து, உபசரித்து, உணவளித்து அனுப்பிய மறக்கமுடியாத நிகழ்வுகள் அத்தனைக்கும் அடிப்படையாக அமைந்தது சிவாநந்த பாடசாலையின் உறவேயாகும்.

"தியாகராசா அதிபர் அவர்கள் கடமை செய்யும் போது கல்லூரி, விடுதி மாணவர்கள் ஜும்மாவிற்கும் ஏனைய தொழுகைகளுக்கும் செல்வதற்கான அனுமதி அளிக்கப்பட்டது. சிவாநந்தாக் கல்லூரிக்கு அண்மையிலுள்ள நொச்சிமுனையிலுள்ள பள்ளியில் ஜசம்மாத் தொடக்கப்பட்டது."

நான் சிவாநந்தாவில் ஆசிரியராக இருக்கும் போது தியாகராசா அதிபர் அவர்களை அடுத்து பண்டிதர் V.C.கந்தையா, திரு. குணரெட்ணம் ஆகியோர்களும் அதிபராக ஒருவர் பின் ஒருவராகக் கடமையாற்றினர். தியாகராசா அதிபர் அவர்கள் கடமை செய்யும் போது கல்லூரி, விடுதி மாணவர்கள் ஜும்மாவிற்கும் ஏனைய தொழுகைகளுக்கும் செல்வதற்கான அனுமதி அளிக்கப்பட்டது. சிவாநந்தா கல்லூரிக்கு அண்மையிலுள்ள நொச்சிமுனையிலுள்ள பள்ளியில் ஜசம்மாத் தொடக்கப்பட்டது.

1984 இல் நான் இக்கல்லூரியில் இணைக்கப்பட்ட ஆசிரியர்களில் ஒருவராக கணித சேவைக்கால ஆலோசகராகவும், எனது சக ஆசிரியர்களான திரு.சாமித்தம்பி (ஆங்கிலம்) திரு.S.தியாகராசா (சமூகவியல்) ஆகியோர் மட்டக்களப்பு பாடசாலைகளில் கடமையாற்றச் சென்றோம். எனினும் கல்லூரியில் இடம்பெறும் எந்த சிறிய, பெரிய விழாக்கள் கூட்டங்களாயினும் நாம் தவறாது அழைக்கப்பட்டு பங்கு பற்றுவோம். இவ்வாறான ஒரு குடும்ப உறவு சிவநந்த வித்தியாலய ஆசிரியர்களிடையே இருந்தது என்றும் நினைவு கூறத்தக்கது.

அதிபர், ஆசிரியர்களின் சகோதரத்துவம்

வடகிழக்கு கல்விச் செயலாளராக,

ஆசிரியராக நான் சிவாந்தாவில் கடமையாற்றும் போது அதிபராக, மாநகர மேயராக என் உள்ளத்தில் இருப்பவர் அமரர் தியாகராஜா அவர்கள். எனது A/L வகுப்பிற்கு வரலாறு, அரசியல் இரு பாடங்களை யும் இலாவகமாகக் கற்றுத்தந்தார். இரு பாடங்களிலுமே எப்போதும் முதல்புள்ளி எனக்கே கிடைத்தது. வருடாந்த பரிசளிப்பு விழாவில் இவரது நெறியாள்கை யில் அரங்கேற்றப்படும் தமிழ் நாடகம் அனைவ ரினதும் பாராட்டைப் பெறும்.

காலையும், மாலையும் நேர்த்தியான உடையணிந்து பாடம் படிப்பிப்பதிலும், பண்பிலும் அழகாகக் காட்சிதரும் இவரை எல்லா மாணவர்களும் "ஜெமினி கணேசன்" எனச் செல்லமாக அழைப்பர். அனைவரையும் "மகன் மகன்" என்ற அன்பு வார்த்தையால் அழைக்கும் இவரது வீட்டுக்கு நானும் எனது வலது, இடது பக்க நண்பர்களான ராதா (இந்து) அரியரெத்தினம் (கிறிஸ்து) மூவரும் சென்று அவர் வீட்டுப் பிள்ளைகள் போல அவ்வீட்டு சமயலறைக்குச் சென்று அவரது மனைவியை "அக்கா" என்ற அழகு வார்த்தையால் அழைத்து அலுமாரியில் உள்ள "நெல்லி" ரச போத்தலை எடுத்து நாமாக ஊற்றி கலந்து குடிப்போம். இவ்வாறான ஓர் அன்புப்பிணைப்பு ஆசிரியர் குடும்பத்தில் இருந்தது என்றும் எம்மால் மறக்கமுடியாது.

பண்டிதர் வீ.சி கந்தையா அதிபரை மறக்க முடியாது. இவர் சிவாநந்தாவில் ஆசிரியராகவும் கடமையாற்றியவர். இவரிடம் தமிழ் கற்ற ஒரு மாணவன் என்ற வகையில் பெருமைப்படுபவர்களில் நானும் ஒருவன். அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு, அனைத்துலக இஸ்லாமிய, இலக்கிய ஆராய்ச்சி கட்டுரை படிப்பதற்கு எனக்கு ஆலோசனை வழங்கி ஆசீர்வாதம் செய்து அனுப்பிய அவரை என் வரலாற்றில் என்றுமே மறக்க முடியாது. நான் இவரது மாணவராக இருக்கு போதுதான் இவரது சிறப்புக்குரிய நூல்களில் ஒன்றான, சாகித்திய மண்டலப் பரிசில் பெற்ற "மட்டக்களப்பு தமிழகம்" என்ற நூல் வெளியிடப்பட்டது. நாம் அனைவரும் மகிழ்ச்சிகரமாகக் கலந்து கொண்டோம்.

அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டை முதன்முதல் உருவாக்கிய ஸ்தாபகர் தனிநாயகம் அடிகள் இவ்வுலத்தைவிட்டு நீத்தபோது மட்டக் களப்பு தமிழகத்து நகர மண்டபத்தில் மாபெரும் அனுதாபக் கூட்டம் ஒன்று அரச அதிபர் திரு. அந்தோனிமுத்து அவர்கள் தலைமையில் இடம் பெற்றது. இதில் சிறப்புப் பேச்சாளர்களில் ஒருவராக பண்டிதர் V.C கந்தையா அதிபர் அவர்கள் அழைக்கப் பட்டிருந்தார். ஆனால் எதிர்பாராத விதமாக அவர் வாத நோயினால் பாதிக்கப்பட்டு பேச முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. இந்நிலையில் அவருக்குப் பதிலாக அவரது அன்பிற்குரிய மாணவர்களில் ஒருவரான என்னை அழைத்துப் பேச வைக்கும்படி கூறி எனக்குக் கடிதமும் அனுப்பியிருந்தார். இராமாயணத்துக்கு நிகராக சீறாப்புராணத்தை பாடிய உமறுப்புலவர் அவர்களை அவரது ஆசிரியரான கடிகைமுத்துப் புலவர் அன்று ஆசீர்வாதம் செய்து வடமொழிப் பாண்டித்தியம் பெற்ற பாவலன் வாலை வாருதியை வென்ற நிகழ்வும் அதன் மகிமையும் எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. அக்கூட்டத்தில் சிறப்பாக பேசிய என்னை மேடையிலே ஆனந்தக் கண்ணீர் மல்க கட்டித் தழுவிய அந்நிகழ்வு இன்றும் எனது மனக்கண் முன்னே நிழலாடுகிறது.

"அன்புள்ள தம்பிக்கு" என்ற எனது கவிதை நூலை முற்றாக வாசித்துவிட்டு ஆசியுரை அளித்த அன்னாரது கவிதை ஆற்றலை எண்ணிப் பார்க்கிறேன்.

உதாரணமாக "எனது அன்புள்ள தம்பிக்கு" நூலுக் கான வாழ்துரையில்.....

கணிதப் புலமை கரைகாணக்
கற்கும் எவரும் அறிக எனக்
கணித வரலா றென்றெழுதிக்
கற்றோர் புகழைத் தான் கொண்ட
மணிகாண் மஹ்றூப் கரீம் இளைஞர்
வளர்ச்சிக் கென்றே கவிதைசில
அணிசேர் தொண்டின் திறமிடங்க
"அன்புத் தம்பிக்கு" என அமைத்தான்.....

என்றவாறு செல்கிறது.

அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலையில் நான் பகுதிநேரக் கணித விரிவுரையாளராகக் கடமையாற்றிய போது அக் கலாசாலை பன்மொழி – பன்னூலாசிரியர் டாக்டர் மு.வ. அவர்களிலும் கணிதப் பேராசியரும், ஆசிரிய கலாசாலைகள் பணிப்பாளருமான Dr.K.சிவநாதன் அவர்களாலும்

பாராட்டப்பட்ட எனது “எண் வரலாறு” நூலை அச்சிட்டு வெளியிட்டது. இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலைக்கு (1972) அப்போதைய சிவாநந்த வித்தியாலய அதிபரும், மட்டுநகர் முதல்வருமான திரு.K.தியாகராசா அவர்கள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார். அத்துடன் அவ் ஆண்டு மட்டக்களப்பு வீரமுனிவர் முத்தமிழ் விழாவில் அவரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட நிகழ்வும் என்றும் என் வரலாற்றில் மறக்க முடியாத நிகழ்வுகளாகும்.

அதிபர் சேவைக்காக அழைப்பு

1995ல் காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயத் தேசியப் பாடசாலையில் கடமையபற்றிய பின் மட்டக்களப்பு கல்வித் திணைக்கள வளநிலையத்துடன் இணைக்கப்பட்டு, கணித செயற்றிட்ட ஆலோசகராகக் கடமையாற்றினேன். அத்துடன் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் கல்வி அமைச்சின் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுள் ஒருவனாக அதிபர்களுக்கான முகாமைத்துவ டிப்ளோமாப் பயிற்சிக்கு நியூ டெல்ஹி (இந்தியா) க்குச் சென்று வந்தேன்.

அப்போது சிவாநந்தா பாடசாலை அபிவிருத்திச் சங்க நிருவாகிகள், ஆசிரியர்கள் சிலருடன் சங்கைக்குரிய ஜீவானந்த சுவாமி அவர்கள் சிவாநந்த வித்தியாலத்திற்கு என்னை அதிபராக வந்து சேவையாற்றும்படி அழைத்த அந்நிகழ்வு என் வரலாற்றில் என்றுமே மறக்கமுடியாதது. ஆனாலும் நான் பெற்ற பயிற்சியின் பயனாக எனது ஊரில் முஸ்லிம் பெண்களின் கல்வி நிலையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த எண்ணிய நான் காத்தான்குடி மீராபாலிகா மகா வித்தியாலய பெண் பாடசாலையின் அதிபராகக் கடமையைப் பொறுப் பேற்று கல்வி வள அபிவிருத்தியில் பாரிய வளர்ச்சியை ஏற்படுத்தினேன். முதல் பெண் சட்டதரணி, முதல் பெண் வைத்தியர் ஆகியவற்றை ஆக்க உந்துசக்தியாகத் தொழிற்பட்டு வெற்றியடைந்தேன்.

சுவாமி ஜீவானந்தாஜீ அவர்கள் மறையுமட்டும் கூட்டங்களில் அதீத நட்பும், சகல சமய சமாதானக் கூட்டங்களில் பங்குபற்றும் சந்தர்ப்பங்களிலும் சிவாநந்தியானாக என்னைக் கௌரவித்து, சிவாநந்த பழைய மாணவர் சங்கத்தினால் சிவாநந்தியன் திரு.நடராசா அவர்களின் தலைமையில் என்னைக் கௌரவித்தது என் வரலாற்றில் என்றும் மறக்க முடியாத நிகழ்வுகளாகும். இவை அனைத்திற்கும் அடிப்படையாக அமைந்தது சிவாநந்தா எனும் புண்ணிய பூமிதான் என்ற நினைவுகளுடன் விடைபெறுகின்றேன்.

Dr.Prema Rajendra,
Australia

Proud to be a Shivananthian

Why am I so proud to be a Shivananthian? I asked myself this question several times and have concluded the following:

Having studied in Shivanandha College from 1983 till 1984, I was extremely blessed with great teachers who were very compassionate teachers. One such teacher was Mr Sadanandam, who taught me Zoology, which was the foundation which helped me understand the world, people and nature. From studying under him, I now understand the difference between a teacher and Guru. Although teachers guide us in academic learning, a Guru opens our eyes, helps us to grow as a person, find our potential and our path. A Guru has passion and love for teaching and constantly sacrifices; spending their time and energy in order for the success of his students. Likewise, I remember that Mr Sadanandam used to come home and talk to my father in length about what he had been teaching to us, how I was performing, my progress etc. Having moved to Australia, while attending parent-teacher interviews with my children I realised that this is what my Zoology teacher was doing 25 years ago, even though it was not expected of him nor heard of in our time. He made me realise that education is a team effort between students, teachers and parents and that such communication between parents and teachers matters. As a result of these efforts, I succeeded in getting into medicine and was in fact the first female student from Shivanandha college – despite being one of very few girls who studied Biology. For this, I thank all the Shivanandian teachers who helped me find my path and succeed.

வைரப் பூவே

வாசம் வீசுக வையம்!

க.முரளிதரன்,
(வில்லூரான்)
ஆசிரியர

ஞானியர் கால்பதித்த ஞானச் சோலையடா . இது
ஞாலமெங்கும் புகழ்பூத்த கல்விச் சாலையடா!
ஏணியாய்ப் பலரை இமயம் உயர்த்திடப் – பணி
இயற்றிப் பல்கலை புகட்டிய பழம்கூடமடா

பண்புடன் ஒழுக்கப் பாதைகள் வகுத்தே – நல்ல
பாடங்கள் புகட்டிய பழம்பெரும் பள்ளியடா
மாண்புடன் கற்றோர் மாணிக்கம் என்றே – இந்த
மாநிலம் போற்றச்செய்த மாபெரும் கூடமடா!

வித்தகன் விபுலன் வித்திட்ட கலைக்கூடமடா – நல்
வித்தைகள் விதைத்தே விளங்கிய மணிமாடமடா
எத்தனை ஆண்டுகள் கடப்பினும் இதயமடா! – அது
எங்களின் இருளைப் போக்கிய எழில்தீபமடா!

புண்ணிய பூமியிற் பூத்தபழம் பள்ளியடா – அது
பண்ணிய சேவையிற் பழுதே இல்லையடா!
கண்ணியம் கடமை கொண்ட ஆசான்கள் – தினம்
காட்டிய கருணையில் பூத்த கலைக்கோயிலடா!

கடலும் களப்பும் கண்டததன் எல்லையடா – தினம்
கருணை அம்மனின் காட்சியே ஆட்சியடா
உடலும் உள்ளமும் உன்னதம் ஆக்கிடவே – அது
உழைப்பால் உயர்ந்த உயர் கூடமடா!

அகிலம் எங்கினும் ஆங்கிலம் தமிழில் – பல
அறிஞர் மேதைகளை ஆக்கிய அறிவுக்கூடமடா
அகலாம் ஒளியை அகத்தினில் ஏற்றியே – நல்ல
ஆன்மீக நெறிகள் காட்டிய பாசக்கோயிலடா!

பேறாம் பழைய மாணவர் பிணைந்தே – ஆற்றிய
பெரும் பணியால் உயர்ந்தே இன்று
போற்றிடும் அகவை அறுபதைக் கண்டே – பூத்திடும்
புதுமலர் வைரப்பூவே வாசம்வீசுக வையகமெங்கும்

இவ்வித்தியாலயம் பத்து, பன்னிரண்டு மாணவர்களுடன் தோன்றிய காலத்தில், 1500க்கு மேற்பட்ட மாணவர்களுடன் இன்று வளர்ந்துள்ள நிலைக்கு வளரும் என்று யாரும் கனவு கூடக் கண்டிரார். அதற்கேற்ற உறுதியுடனும், மனத்திட்பத்துடனும் இதனை நிறுவினார் விபுலாநந்த அடிகளார்.

மாணவரது ஒழுக்கம், சமயப்பண்பு, நற்சீலம், உடலுறுதி, தமிழ்மொழி உணர்ச்சி என்பவற்றை இக் கலாலயத்தை கால்கோள் செய்யும்போதே அடிகளார் தம் மனத்தகத்தும் கருத்தூன்றினார்கள். அதன்படி, இங்குக் கற்று வெளியேறினோரிடத்து, சிவாநந்த வித்தியாலயம் என்ற முத்திரை பொறிக்கப்பெற்று மிளிர்வதை எங்கும் காணுகின்றோம். இக்கல்வி நிலையத்திலிருந்து, தமிழர், சோனகர், சிங்களவர் எனப்படும் மூன்று சமுதாயத்தைக் குழந்தைகளும் ஒன்றுபோற் கலந்து வாழ்ந்து, வளர்ந்து கற்று, வெளியேறினார்கள். இதனால் 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற மனப்பாங்கு இங்கே வளர்க்கப்பெற்று வந்தது.

வி.சீ. கந்தையா

உசாத்துணை: சிவாநந்த வித்தியாலய பொன்விழா மலர் வெளிமீடு: சிவாநந்த வித்தியாலயம் (தேசிய பாடசாலை),1979.

S. Ambalavaner,
Former Principal (1937-1954)
Reference: Golden Jubilee Souvenir, Published by Shivananda National School,1979.

Exatracted and Reproduced

Lest We forget

In the first place, let us not forget that this institution was founded as an educational instrument for the spiritualization of our understanding of life, to establish the validity of all religions, to effect the confluence of all creeds, castes and communities, to free the sleeping forces of the enslaved spirits and to manifest its grandeur in accordance with the life and teachings of Sri Ramakrishna, the Prophet of the new age.

In the second place, let us not forget that this institution bears the name of a disciple, most beloved of the Master, a man of love and boundless compassion, a man of God, a Great Soul, lovingly called the Mahapurush. It was Swami Shivananda who carried the torch of Dakshineshwar to Sri Lanka. It was with blessing of such an illumined soul that the foundation of this College was laid. Let us not forget, on this occasion to pay our humble and worshipful tribute to the sacred memory of Mahapurush Maharaj, whose name has adorned this institution.

Let us not forget, that in this grand monastic lineage of heroes, came our beloved Swami Vipulanandaji, a flame of power, wisdom, learning and saintliness. He was the real founder of this school. It was he, who under exceptionally difficult conditions, through boundless courage and immeasurable sacrifices, brought up this school during its formative and uncertain years that this institution would one day be a citadel of free learning and research, spiritual centre of a liberated, renascent flourishing and buoyant community. If but a small part of Vipulananda's vision, strength of character, love and devotion to his fellow beings, were alive in our midst today, we would face a glorious future.

Let us also not forget, that under the direction of the monks of the Ramakrishna Math, the growth of the Vidyalaya was unique and phenomenal. Dead knowledge was not its goal. The psychological foundations

for 'man making" were well and truly laid. The aim was to turn out men of character, capable of acting, judging and thinking independently. The teachers enjoyed extensive liberty in selecting what and how to teach. They taught in and atmosphere, completely free of force, fear or authority. Naturally the motivation was perfect and harmonious and the achievements were equally convincing. The school was looked up to as a model and the advice of its teachers was sought in all spheres of education.

It is my view that the need to run the school in complete accordance with the fundamental concepts, handed down to us by its founder is now greater than ever before. This responsibility rests on the shoulders of those who have taken over the reins of administration and control of the school. Let us hope that they would live up to that responsibility.

I can only invoke with all humility and devotion, the blessing of Sri Ramakrishna for the continued growth and prosperity of the institution and the ultimate fulfilment of its aims.

அமெரிக்காவில் சிகாகோ நகரத்தில் 1893-ஆம் ஆண்டு சர்வ சமயப் பேரவை நடைபெற்றது. அதில் உலகில் முக்கியத்துவம் வாய்ந்த எல்லா மதங்களையும் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்துகொண்டார்கள். இந்தப் பேரவை நிகழ்ச்சிகள் 1893 செப்டம்பர் 11-ஆம் தேதி முதல், 27-ஆம் தேதி வரை பதினேழு நாள்கள் நடைபெற்றன. பேரவை நிகழ்ச்சிகளில், சுவாமி விவேகானந்தர் இந்துமதத்தின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அதனால் அவர் இந்தியாவின் பெருமையை உலக அரங்கில் உயர்த்தினார். சுவாமி விவேகானந்தர் அமெரிக்கா செல்வதற்கு முன்பு சுமார் நாலரை ஆண்டுகள், இந்தியாவின் பல பகுதிகளுக்கும் திருத்தலப் பயணம் மேற்கொண்டிருந்தார். அவ்விதம் அவர் பயணம் செய்தபோது, ஒருமுறை அவருடன் சுவாமி அகண்டானந்தரும் இருந்தார். சுவாமி அகண்டானந்தர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடர்களில் ஒருவர்.

இருவரும் இமயமலையில் இருக்கும் அல்மோரா என்ற இடத்திற்கு நடந்து சென்றுகொண்டிருந்தார்கள். இருவரும் உணவு சாப்பிட்டு பல மணி நேரங்கள் ஆகியிருந்தது. அல்மோராவை அடைவதற்கு முன்பு, சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் முஸ்லிம்களின் இடுகாடு இருந்தது. அந்த இடத்தை அடைந்தபோது, பசி தாகம் காரணமாக விவேகானந்தருக்கு மிகுந்த களைப்பும் சோர்வும் ஏற்பட்டது. அதனால் அவரால் மேற்கொண்டு நடக்க முடியவில்லை. மயங்கிக் கீழே விழும் நிலைக்கு வந்துவிட்டார். எனவே அவரை அங்கேயே படுக்க வைத்துவிட்டு, பக்கத்தில் எங்காவது உணவோ, தண்ணீரோ கிடைக்குமா? என்று பார்ப்பதற்கு அகண்டானந்தர் சென்றார். அந்த இடுகாட்டில் ஜுல்பிகர் அலி என்ற முஸ்லிம் ஒருவர் வேலை செய்து வந்தார். அவர் இடுகாட்டிற்கு அருகில் ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தார். அவரிடம் அன்றைய தினம் உணவு என்று சொல்வதற்கு, ஒரே ஒரு வெள்ளரிக்காய் மட்டும்தான் இருந்தது. விவேகானந்தரின் மோசமான உடல் நிலை ஜுல்பிகர் அலிக்குப் புரிந்தது. எனவே அவர் ஓடிச் சென்று, தம்மிடமிருந்த வெள்ளரிக்காயை விவேகானந்தருக்குக் கொடுத்தார். மிகவும் பலவீனமாக இருந்த விவேகானந்தர், அதைத் தமது வாயில் வைக்கும்படி கேட்டுக்கொண்டார்.

அதற்கு ஜுல்பிகர் அலி, சுவாமிஜி, நான் ஒரு முஸ்லிம் ஆயிற்றே! என்றார். அதனால் என்ன! நாம் அனைவரும் சகோதரர்களே அல்லவா? என்று புன்முறுவலுடன் கேட்டார் விவேகானந்தர். முஸ்லிம் வெள்ளரிக்காயை விவேகானந்தர் வாயில் வைத்து சாப்பிடும்படி செய்தார். அதனால் விவேகானந்தரின் களைப்பு ஒரு சிறிது நீங்கியது. இதைப் பற்றி பிற்காலத்தில் விவேகானந்தர், அந்த முஸ்லிம் உண்மையிலேயே அப்போது என் உயிரைக் காப்பாற்றினார். அதுபோல் என் வாழ்நாளில் எப்போதும் நான் களைப்படைந்ததில்லை என்று கூறினார். பின்னர் விவேகானந்தர் இந்தியாவின் ஆன்மிகக் கருத்துகளை அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகளில் பிரச்சாரம் செய்து புகழ் பெற்றார். ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு அவர் மீண்டும் ஒருமுறை அல்மோராவிற்குச் சென்றார். அப்போது அல்மோராவில் விவேகானந்தரை ஊர்வலமாக அழைத்துச் சென்று, மிகவும் சிறந்த முறையில் வரவேற்பு அளித்தார்கள். அந்த நிகழ்ச்சியின்போது, ஜுல்பிகர் அலி ஓர் ஓரமாக நின்று விவேகானந்தரைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு விவேகானந்தரை இன்னார் என்று அடையாளம் தெரியவில்லை. ஆனால் விவேகானந்தர், ஜுல்பிகர் அலியைப் பார்த்தவுடன் அடையாளம் தெரிந்துகொண்டார். உடனே அவர் அங்கிருந்த மக்கள் கூட்டத்தையும் பரபரப்பையும் ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல் நேராக ஜுல்பிகர் அலியிடம் சென்று, அவரைக் கட்டியணைத்துக் கொண்டார். மேலும் விவேகானந்தர் அருகில் இருந்தவர்களிடம் ஜுல்பிகர் அலியைப் பற்றி நன்றியுணர்வுடன் கூறி, அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். மேலும் ஜுல்பிகருக்கு விவேகானந்தர் பணமும் கொடுத்தார்.

பேராசிரியர் மா.செல்வராஜா,
முன்னாள் அதிபர் (1984-1988),
சிவானந்த வித்தியாலயம் (தேசிய பாடசாலை).

சிறந்த பணிகளை ஆற்றும்

பழைய மாணவர் மன்றம்

1958ம் ஆண்டு ஆரம்பமான சிவானந்தா பழைய மாணவர் சங்கம் தனது அறுபதாவது ஆண்டில் வைர விழாவொன்றைக் கொண்டாடவிருப்பதைறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்

சிவானந்தா பழைய மாணவர்கள் துறைவிகளாகவும், விண்வெளி ஆராய்ச்சி நிறுவனப் பணியாளாகளாகவும், விஞ்ஞானிகளாகவும், சமூக விஞ்ஞானிகளாகவும், சமூக ஆர்வலர்களாகவும் பல்வேறு நாடுகளிலும் பணியாற்றிவருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இப்பழைய மாணவர் சங்கம் எந்தப்பிளைகளையும் தனது ஏழ்மை காரணமாக கல்வியை இழந்துவிடாது தொடர்ந்து முன்னேற வாய்ப்பளித்து வருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இச்சங்கம் தனது மனிதாபிமானப் பணிகளை மேலும் ஆர்வத்துடன் தொடர எனது வாழ்த்துக்கள். மேலும் இவ்வைர விழா உலகளாவிய எமது மாணவர்களுக்கு நல்ல செய்தியை எடுத்தியம்பும் சிறந்தவொரு மலரையும் வெளிக்கொண்டுவருவதில் வெற்றியடையவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

Deshamanya Alhaj-Meerasahib,
District President, St.John Ambulance,
Batticaloa District.

An exemplary man of the soil

Mr. AL.Ibralebbe was born on 15.07.1932 at Addalaichenai in the Ampara District. He received primary education at Addalaichenai National School obtained "A" Grade pass in 'Denham' Grade 5 scholarship examination and was selected to pursue education in the English medium at Shivananda Vidyalaya (National School), Batticaloa. He received double promotion from Grade 3 to Grade 5 for getting first place in 03 consecutive terminal examinations in 1944. He left Shivananda Vidyalaya having completed both the G.C.E (O/L) and G.C.E (A/L) examinations creditably well.

He cultivated personal friendships with Swami Vipulanandaji and Swami Nadarajanandaji during the period at Shivananda. Later he received appointment as an English Teacher in 1953 in compliance with a policy of the government. He was selected for a two year Diploma course in agriculture at Peradeniya Agriculture Institute (Gannoruwa). On completion of the Agricultural Diploma course, he was appointed as a Colonization Officer in the Galoya Valley Development project. (There are forty colonized villages in the left Bank of the Galoya River)

From there he was appointed as a Divisional Officer at the Agrarian Services Department Mr. MS. Perera (CCS) who was the Resident Manager of the Galoya Valley was responsible for his appointment in the Agrarian Services Department of which Mr. Perera became the 01st Commissioner General of the Department.

He succeeded in the Limited Open Competitive Examination held in 1980 for the Sri Lanka Administrative Service in the English medium and became first muslim to succeed in the SLAS examination from the Ampara District. He functioned as the Assistant Commissioner of Agrarian Service in Ampara, Batticaloa, Puttalam and Mannar districts during the period 1981 to 1986. He was appointed as the Assistant Government Agent

in Nintavur in 1986. In 1991 he was appointed as the Divisional Secretary at Nintavur Division. He also functioned as the Additional Govt. Agent for sometimes.

He retired from public service in 1993 having completed an unblemished record of 41 years service under the government. He also served as special commissioner Nintavur Pradeshiya Sabha for 05 years. Following retirement from government service. He was selected to serve as an Administrative Consultant in the South Eastern University of Sri Lanka where he also attended to Land matters and acquired about 62 acres of land for the extension and expansion of the growing University to install more faculties.

He also served as a Coordinating Secretary to former Minister of Trade and Commerce Mr. ARM. Mansoor. He also functioned as a personal Administrative Officer under Eastern Provincial Council Minister Mr. MS. Uthumalebbe until 29.02.2012.

For community service he rendered, he was selected as an Exemplary Citizen of the Addaichenai area by the Ministry of Social Service and was honored by the All Ceylon Justice of Peace Organization at Negombo town hall in 2002. He was also Honored with a Presidential Award for yeoman service rendered by him during the Tsunami disaster of December 2004.

An award was offered at the Addalaichenai divisional Cultural Festival in 2007 for all social services rendered by him. He was awarded the "Deshamanya" and "Deshakeerthi" titles at the Ratnapura town hall in 2010 presided over by Honorable John Seneviratne, Minister of Public Administration and Home Affairs. He was honored with the "Ratnadeepa" award at the National Award Festival organized by the Upcountry Art and Cultural Association in Kandy on 19.02.1992. He was fully dedicated to Community, serving now as President of Addalaichenai Masjithul Badur Mosque, as patron of Addalaichenai division 14 Rural Development Committee. He serves as all island Justice of Peace since 1992 and as a Sworn translator since 2010. He is one of the pillars of strength from Shivananda.

கல்லடி என்றால் சிவானந்த வித்தியாலய நினைவும், சிவானந்தா என்றால் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் நினைவும் இதயத்தே தோன்றி இறும்பூ தெய்த வைக்கும் உணர்வில் நான் நிற்கிறேன். அன்று பால்ய வயது. வீட்டில் இருந்த என் பாட்டனிடம் மஞ்சள் அங்கி அணிந்த ஓர் உருவம் சம்பாஷித்துக் கொண்டிருந்தது. பார்த்த நான் பயந்தேன். ஆயினும் என்னை அறியாத ஒரு சக்தி அவரின் அருகுக்கு என்னை அழைத்துச் சென்றது. என் முதுகைத் தடவிய சுவாமிஜி அவர்கள். என்னை அவரால் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பெறும் வித்தியாலயத்தில் மாணவனாகச் சேர்த்துக் கொண்டார். நெய்தலை மருவிய நிலப்பாங்கும், பசுமை குன்றிய சூழ்நிலையும் இருந்த போதிலும் அடிகளாரின் அன்பு, பண்பு, பாசம் எங்கள் மனநிறைவான வாழ்வுக்கு உதவியது. 'எல்லா மதத்தினரும் கூடுவோமே ஏகம் கடவுள் என்று பாடுவோமே' எனும் சமரச சன்மார்க்க நெறியில் மதத்தால் வேறுபடினும் மொழியால் ஒன்றித்த எங்கள் மத்தியில் இன, மத பேதங்கள் நீங்கி, யாவரும் ஓர் மானிடக் குடும்பமென மதிக்கத்தக்க மனப்பக்குவத்தை எமக்கேற்படுத்தியதென்றால் அது முத்தமிழ் வித்தகரின் தூய்மையான வாழ்வும், வழி நடத்தலும், சிவானந்த வித்தியாலய ஆசான்களின் அறிவுறுத்தல்களுமே.

ஜனாப் எம்.ஏ. அப்துல் மஜீத்

உசாத்துணை: சிவானந்த வித்தியாலய பொன்விழா மலர்
வெளியீடு: சிவானந்த வித்தியாலயம் (தேசிய பாடசாலை),1979.

மாபெரும் சக்தி

உங்களிற்கு தெரியுமா?

இலங்னை பிரஜையான உங்களிற்கு பொது / அரச நிறுவனங்களிடமுள்ள தகவல் ஒன்றினைப் பெறுவதற்கான அடிப்படை உரிமை உண்டு.

அதாவது, உங்கள் பொன்னான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட உங்கள் பிரதிகளின் செயற்பாடுகள் மற்றும் முடிவுகள் தொடர்பாக அனைத்து பொது அலுவல்களிடமிருந்தும் அறிந்து கொள்வதற்கு உங்களுக்கு உரிமையுண்டு.

மேலதிகமாக விளங்கப்படுத்துவதாயின்

- ✓ தகவலானது நீர், உணவு, காற்று போன்று இன்றியமையாததாகும்.
- ✓ பொது நிதியினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அரச அலுவலர்களின் முடிவுகளில் இருந்தே தகவல்கள் வழங்கப்படுகின்றன. ஆகவே தகவல்களைப் பெறும் உரிமையானது உங்களிற்கு உண்டு.
- ✓ தகவலானது மக்களின் நலனிற்காக பாதுகாக்கப்பட வேண்டும். ஆகவே அரச அலுவலர்கள் உங்களிடமிருந்து தகவல்களை மறைத்தல் கூடாது.



தகவல் எனப்படுவது யாது?

'அறிவே சக்தியாகும்' அந்த 'அறிவினை' நாம் தகவல்களின் மூலமே பெற முடியும். ஆகவே தகவல்களானது உங்களிற்கு உங்கள் அன்றாட நடவடிக்கைகளிற்கு அத்தியாவசியமாகும்.
இந்த தகவல்களை நாம் பல வடிவங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

பொது நிறுவனங்கள் / பகிரங்க அதிகார சபைகள் எனப்படுவது யாவை?

- » அமைச்சுக்கள்
- » அரச திணைக்களங்கள்
- » உள்ளூர் அதிகார சபைகள்
- » பொலிஸ்
- » நீதிமன்றங்களும் நியாய சபைகளும்
- » எழுத்து மூலமான சட்டத்தின்படையில் நிறுவப்பட்ட அல்லது பொது நிதியில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்கள்
- » அரச நிதி பெறும் உயர் கல்வி நிறுவனங்கள்.

தகவலிற்கான உரிமை ஏன் உங்களிற்கு அவசியமாகும்?

தகவல்களை பெறுதலானது உங்களது ஏனைய அடிப்படை உரிமைகளை பாதுகாக்க அவசியமான தொன்றாகும்.





எதனை உங்களால் கேட்க முடியும்?

ஏன் ஒரு சில மக்கள் மாத்திரமே நன்மையைப் பெறுகின்றார்கள்?

ஒரு சிலரை ஒரு வேலைக்கு தெரிவு செய்வதற்கு கையாளப்பட்ட அடிப்படை நியமங்கள் யாவை?

நேர்முகப் பரீட்சையில் நீங்கள் பெற்ற புள்ளிகள் எவ்வளவு?

உங்கள் குழந்தை பாடசாலைக்கு சேர்த்துக் கொள்ளப்படாமைக்கு காரணம் யாது?

மற்றும் உங்கள் நாளாந்த செயற்பாட்டிற்கு தேவையான தகவல்கள் அனைத்தும் தகவலிற்கான உரிமை மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

தகவலிற்கான உரிமை மூலமான நன்மைகள்

» நாளாந்த நடவடிக்கைகளில் ஏற்படும் சிக்கல்களை தீர்ப்பதற்கு
» நாட்டின் ஊழலை குறைக்க அல்லது ஒழிக்க
» ஊடக சுதந்திரம் மற்றும் பத்திரிகை சுதந்திரத்தை உறுதிசெய்ய
» நாட்டின் செலவுகளை குறைக்க
» நாட்டின் உயர்கொள்கைகளை கேள்விகேட்க
» நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலிற்காக
» உங்கள் தகவலிற்கான உரிமையை தெரிந்துகொள்வதற்கும் அதை பாதுகாப்பதற்கும்
» பொருளாதார வளர்ச்சிக்காக
» சிறந்த பொதுச் சேவையைப் பெறுவதற்காக

உலகம் முழுவதிலும் பல நாடுகள் தகவலுக்கான உரிமையை ஏற்றுக்கொண்டுள்ளன.

உதாரணம் : அவுஸ்திரேலியா, சீனா, தென்னாபிரிக்கா, தாய்லாந்து, இத்தாலி, இந்தியா

இந்தியர்கள் தகவலுக்காக உரிமையை எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்பதை காட்டுகின்றது.

நண்ணு என்பவர் சேரிப்பகுதியில் வசிக்கும் ஒரு தினக் கூலியாவார். அவர் தனது ரேஷன் அட்டையினை தொலைத்துவிட்டார். அவர் புதிய அட்டையைப் பெற சம்பந்தப்பட்ட திணைக்களத்தில் விண்ணப்பித்தார். அவர் அதனை சாதாரணமாக 10 நாட்களில் பெறக்கூடியதாக இருப்பினும் 3 மாதங்கள் கழிந்தும் அவரால் குறித்த அட்டையினை பெறமுடியவில்லை. ஆகவே சிவில் சமூக அமைப்புகளின் உதவியோடு நண்ணு தனது தகவலிற்கான உரிமையிக் கீழ் குறித்த அட்டை தொடர்பான தகவலிற்காக விண்ணப்பித்தார். அவர் தான் விண்ணப்பித்ததிகதியிலிருந்து செயற்பாட்டு அறிக்கை ஒன்றினை குறித்த அரச அதிகாரியிடம் அறிக்கை ஒன்றினை குறித்த அரச அதிகாரியிடம் கோரினார். அவ் அறிக்கையிலே அவரது விண்ணப்பத்தை குறித்த ஒழுங்கில் செயற்படுத்த தவறிய அதிகாரியின் பெயர், எவ்வகையான மற்றும் எப்போது அந்த அதிகாரியின் மீது குறித்த திணைக்களம் நடவடிக்கை எடுக்கும் மற்றும் எப்போது தனது ரேஷன் அட்டைய பெற முடியும் என்பவற்றை கோரியிருந்தார்.



தகவலிற்கான உனிமைக்கான விண்ணப்பத்தின் பின் அத்திணைக்களத்தின் உயர் அதிகாரி நண்ணுவின் ரேஷன் அட்டையை பெற்றுக்கொடுத்ததுடன் அவரை நல்ல முறையிலும் நடத்தினார்.

இறுதியில் அவர் தண்டனைகளிற்கு அஞ்சி நண்ணுவின் தகவலிற்கான கோரிக்கையை மீள பெறுமாறும் வேண்டிக் கொண்டார்.

பாடசாலைச் சிறுமியான கவிநயா தனது ஊரிற்கு ஏன் பஸ் சேவை வழங்கப்படவில்லை என சம்பந்தப்பட்ட அரச திணைக்களத்தில் வேண்டுகோள் விடுத்தாள். அவர்களது பதிலாக பஸ் சேவையானது இலாபமற்றதாக காணப்படுகின்றது என்பதே அமைந்தது. ஆனால் அந்த பஸ் சேவையானது இலாபம் தரக்கூடியது என பின்னர் தெரியவந்தது. அந்த சிறுமியின் கோரிக்கையின் பலனாக அந்த ஊரானது பஸ் சேவையினைப் பெற்றுக்கொண்டது.

Deshamanya Al-haj A.L Ibralebbe
Rtd.Divisional Secretary
Addalaichenai.

A great leader with clear vision

Namasivayam Pathmanathan was the first officer to gain entry into the Sri Lanka Administrative Service (SLAS) in the Batticaloa District, in 1967. He passed the open competitive examination conducted by the Examinations Commissioner General. He passed away on March 4, 2018.

Late Mr.Pathmanathan was a past student of Shivanadha Vidyalaya (National School) ,which has produced numerous SLAS Officers including I. At that time, Shivananda was the leading English Medium School in the District.

V.Thiyahalingam of Huskison Street, Trincomalee, was my classmate at Shivanadha Vidyalaya as well at the School of Agriculture, Peradeniya, where we completed our Diploma Course in the Agriculture, It is he who connected me to late Pathmanathan who invited me to serve at the Trincomalee Provincial Council Office When he was the first Chief Secretary to the Provincial Council of the North and East. Then the Chief Minister was Varatharaja Perumal.Thiyahalingam currently now working in London.
Late N.Pathmanathan had held a number of executive posts, such as Government Agent, Deputy District Secretariat, Secretary -Treasury, Budget Director of the Ministry of Finance and several other high-ranking positions with good human qualities. Lastly, he was appointed the Rehabilitation of Persons, Properties and Industries Authority (REPPIA) Chairman by the Minister of Prison Reforms, Rehabilitation and Resettlement.

Having passed the G.C.E.(O/L) and G.C.E.(A/L),he also served as a Teacher in English at St.Michael's College,Batticaloa until he entered the University of Peradeniya. He was a pillar of strength to all those who came met with. He was also the District Governor to rotary clubs in the Batticaloa District from 2002-2003.This loss leaves a void that could never be filled.

the G.C.E. (A/L) classes in Science and Mathematics at this school, as a result of which the number of students seeking admission to the University was considerably increased.

Having passed the Sri Lanka Educational Service examination, he was appointed as the Circuit Education Officer, at that time and thereafter was appointed as the Chief education Officer for Batticaloa District. From there he rose up to the ranks of District Director of Education, Batticaloa and then as provincial Director N.E. Province at Trincomalee. Later he was serving as the Secretary to the Ministry of Education, NEPC, Trincomalee until his retirement from public service.

After retirement from Public service he joined the Seva Lanka as one of the Directors, and lastly he was working as the Regional Commissioner of the Governor, North East Province in Kalmunai, and Batticaloa.

He was an admirer of Swami Vipulanandaji and Swami Nadarajanandaji. The Vipulananda Society in Canada invited him to be the Chief Guest and to make the key-note address on the occasion of the " Vipulananda Day" in July 2003. Infact he spent the whole month of July 2003 in Canada. He was also responsible for organizing the death anniversary of Swami Nadarajanandaji at ShivanandaVidyalaya, Batticaloa.

He passed away on 25.09.2003. His death is a great loss to all of us, particularly to Shivananda Vidyalaya which is his alma mater. Although he has parted from us his name will be engrowed in the hearts of all who knew him and in the institutions where he worked. His services can never be forgotten.



திருமதி. திலகவதி ஹரிதாஸ்
முன்னாள் அதிபர்
மட்/ விவேகானந்த மகளிர் கல்லூரி.

சிவானந்த வித்தியாலயத்தில் பெண்கள் கல்வியின் தொடக்கமும் முடிவும்

சிவானந்த வித்தியாலயம் கிழக்கிலங்கையின் முத்து எனவும், அறிவுப் பொக்கிஷம் எனவும், மணிமகுடம் எனவும் பல்வாறாக வர்ணிக்கப்படும் புகழ் பூத்த பாடசாலை ஆகும். இச் சிவானந்த வித்தியாலயம் ஆனது 1925ம் ஆண்டு சுவாமி விபுலானந்தர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை ஆகும். இதற்கு இவ்வூர் பிரமுகர்கள் பலர் நிதி மற்றும் நில உதவிகளைச் செய்திருந்தனர். அறிவும், அன்பும், ஆன்மீகமும், ஆங்கிலமும் ஒருங்கே இணைந்து ஊட்டப்பட்ட பாடசாலையாக சிவானந்தா காணப்பட்டது. மேலும் கூறுவதானால் இதனை ஓர் ஆலமரமாக உருவகிக்கலாம். ஏனெனில் ஆலமரம் பலவகையான உயிரினங்களுக்கு தங்கி வாழ்வதற்கு ஆதரவு அளிக்கின்றது. அதுமட்டு மல்லாது அதன் விழுதுகள் அவ் ஆலமரம் சாய்ந்து விடாது தாங்கி நிற்கின்றது. அவ் வாறான விழுதுகளாக அங்கு கல்வி கற்ற மாணவர்கள் காணப்படுகின்றார்கள். அவ்விழுதுகளாக ஆண் மாணவர்களும், பெண் மாணவிகளும் காணப்படுகின்றனர்.

சிவானந்த வித்தியாலயத்தில் பெண்கள் உயர்தரத்தில் கல்வி பயில்வது ஆரம்பிக்கப்பட்டதிற்கும், உயர் தரத் தில் பெண் கள் கல் வி பயில் வது

நிறுத்தப்பட்டதிற்கும் வரலாறு உண்டு. நான் இ.கி.மி. பெண்கள் பாடசாலையில் (தற்போதைய விவேகானந்தா மகளீர் கல்லூரி) 1975ம் ஆண்டு க.பொ.த. (சா/த) கல்வி கற்று சித்தி அடைந்த பின்னர் அங்கு உயர்தர வகுப்புக்கள் இல்லாத காரணத்தினால் தட்டச்சு சுருக்கெழுத்து பயில்வதற்காக கொமர்ஷல் கொலிஜ் சிற்கு சென்று விட்டேன். இதனை அறிந்த அப்போது விவேகானந்த வித்தியாலயத்தின் அதிபராக கடமையாற்றிய திருமதி. சு. சிவபாதசுந்திரம் அவர்கள் சிவாநந்த வித்தியாலயத்தில் அப்போது கடமையாற்றிய திரு. K. தியாகராஜா அவர்களுடனும் இராமகிருஷ்ணமிஷன் தலைவர் மட்டக்களப்பு ஸ்ரீமத் சுவாமி ஜீவானானந்தாஜீ மகராஜ் அவர்களுடனும் கலந்துரையாடி க.பொ.த. (உ/த) வகுப்பில் பெண்களும் கல்வி பயில்வதற்கு முடிவு எடுத்தார்கள். அதன் நிமிர்த்தம் முதலில் கலைப்பிரிவு வகுப்புக்கள் 1975ம் ஆண்டு ஆரம்பமானது. என்னிடம் அதிபர் சிவபாதசுந்திரம் அவர்கள் சிவாநந்த வித்தியாலயத்தில் பெண் மாணவிகள் கல்வி பயில்வதற்கு அனுமதி பெற்றுள்ளேன், நீ மூன்று நாட் கழித்து வரவேண்டும் எனக் கூறினார். அப்போது ஆண் பாடசாலையினுள் தனியே செல்ல பயந்த வேளையில், அவரே கூறினார் க.பொ.த.(உ/த) கற்பதற்காக வின்சன்ற் மகளிர் பாடசாலையில் உயர்தர கல்வி பயில்வதற்காக சென்ற செல்வி. அ. ஹம்சலா அவர்கள் பாதியிலேயே கல்வியை நிறுத்தி விட்டு வீட்டிலேயே இருக்கின்றார். அவரையும் அழைத்து வருமாறு கூறினார். அதன் நிமிர்த்தம் நானும் ஹம்சலா அவர்களும் எங்கள் அதிபர் மூலம் சிவாநந்த வித்தியாலயத்தில் கல்வி பயில்வதற்காக 10.06.1975 திகதி சேர்ந்தோம். அதன் பின் நேசலெட்சுமி தாமோதரம்பிள்ளை அவர்கள் சேர்ந்தார். அதனைத் தொடர்ந்து திருமதி. தேவநாயகி அருட்ஜோதி, திருமதி. கிருஷ்ணவேணி மனோராஜ் ஆகியோர் வந்து சேந்தனர். எங்களுடன் பத்மநாதன், கிருபாகரன் ஆகியோர் கல்வி பயின்றனர். எங்கள் வகுப்பறை பழைய அதிபர் காரியாலயத்திற்கு எதிராக எழுதுவினைஞர் மேசைக்கு முன்பாக இருந்தது.

1976ம் ஆண்டு உயர்தரத்திற்கான கலை, வர்த்தக, விஞ்ஞான, கணிதப் பிரிவுகள் அனைத்திலும் பெண்கள் கல்வி கற்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டது.

1976ம் ஆண்டு உயர்தரத்திற் கான கலை, வர்த்தக, விஞ்ஞான, கணிதப் பிரிவுகள் அனைத்திலும் பெண்கள் கல்வி கற்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டது. A/L கல்வி பயின்ற மாணவிகள் பலர் டாக்டராக, பொறியியலாளர்களாக, பிரதேச செயலாளர்களாக, ஆசிரியர்களாக, தாதி உத்தியோகத்தர்களாக, வங்கி உத்தியோகத்தர்களாக பல துறைகளில் பணிபுரிந்து வருகின்றனர். கல்வி பயின்ற பெண் மாணவிகளில் முதலாவது டாக்டரானவர் நமசிவாயம் பிறேமா (தற்போது அவுஸ்திரேலியாவில் பொதுவைத்திய நிபுணராக கடமைபுரியும் திருமதி பிறேமா ராஜேந்திரா) அவர்கள் ஆவார். அவர் பழைய மாணவர் மன்றம் உருவாக்கிய லேனிங் சென்றர் அமைப்பதற்கு ரூபா 2 லட்சத்தை அன்பளிப்பாக வழங்கியதோடு அதற்கு அடுத்த வருடமும் பராமரிப்புக்காக மீண்டும் ரூபா 2 லட்சத்தை வழங்கி தொடர்ச்சியாக தனது சேவையினைச் செய்து வருகின்றார்.

சிவாநந்த வித்தியாலயத்தில் கல்வி பயின்ற திருமதி. நேசலெட்சுமி துரைராஜசிங்கம் அவர்கள் மட்/ மகாஜனக்கல்லூரியில் தரம் 1 அதிபராகவும், இக் கட்டுரையாளரான திருமதி. திலகவதி ஹரிதாஸ் அவர்கள் மட்/ விவேகானந்த மகளிர் கல்லூரியில் தரம் 1 அதிபராகவும், திருமதி. அருள்ஜோதி அவர்கள் சக்தி வித்தியாலயத்தில் அதிபராகவும் கடமை புரிந்து தாங்கள் கல்வி பயின்ற சிவாநந்த



வித்தியாலயத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

சிவாநந்த வித்தியாலயத்தில் க.பொ.த. (உ/த) த்தில் பெண்கள் கல்வி பயில்வது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதிற்கும் ஒரு வரலாறு உண்டு. விவேகானந்த மகளிர் மகா வித்தியாலயத்தில் க. பொ.த. (உ/த) விஞ்ஞானப்பிரிவு 1999ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. விஞ்ஞான ஆய்வு கூடம் 2000ம் ஆண்டு திறக்கப்பட்டது. அப்பாடசாலையில் பெண் பிள்ளைகள் கல்வி பயில்வதற்கு கணிசமான தொகையினர் இருக்கவில்லை. அதேவேளை 2000 ஆம் ஆண்டு சிவாநந்த வித்தியாலயத்தில் தரம் 1 ஆரம்பிக்கப்பட்டது. தரம் 1 ல் கல்வி கற்பிப்பதற்கு பயிற்றப்பட்ட ஆசிரியர் இல்லாத நிலையில் அங்கு கல்வி பயின்ற பழைய மாணவியும் இடைநிலைப் பிரிவுகளுக்கு பாடங்களை கற்பித்து வந்த திருமதி. கோசலை மகேந்திரன் ஆசிரியை தரம் 1 வகுப்பாசிரி யரானார். இதில் 11 மாணவர்கள் மாத்திரமே கல்வி பயின்றனர். எனவே இம் மாணவர் தொகையினை அதிகரிக்க வேண்டிய தேவை உணரப்பட்டது. இதன்படி விவேகானந்த மகளிர் மகா வித்தியாலய உயர்தர விஞ்ஞானப் பிரிவில் மாணவிகளை அதிகரித்தல் மற்றும் சிவாநந்தா ஆரம்பப் பிரிவில் மாணவர் எண்ணிக்கையினை அதிகரித்தல் என்பவற்றிக்கு தகுந்த தந்திரோபாயங்களை உருவாக்குதல் என்பன இரு பாடசாலைகளிற்கும் அத்தியாவசியமானதாக உணரப்பட்டன. இதற்கு கொள்கை ரீதியிலான மாற்றங்களை மேற்கொள்ளும் பொருட்டு இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளின் வழிகாட்டலில் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு சில முடிவுகள் எடுக்கப்பட்டன. இதில் விவேகானந்தா மற்றும் சிவாநந்தா ஆகிய இரு பாடசாலைகளினதும் அதிபர்கள் மற்றும் பாடசாலை அமைப்புக்கள் பங்குகொண்டிருந்தன. ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தநீ மகராஜ் அவர்கள் இரு பாடசாலை அதிபர்கள், சமூகத்தாருடன் கலந்துரையாடி அதில், இனிமேல் சிவாநந்த வித்தியாலயத்தில் க.பொ.த. (உ/த) கல்வி கற்பதற்கு பெண் மாணவிகளைச் சேர்க்கக் கூடாது எனவும் அதேபோல் விவேகானந்த வித்தியாலயத்தில் இனிமேல் தரம் 1 ற்கு ஆண் மாணவர்களை அனுமதிக்கக் கூடாது எனவும் தீர்மானம் மேற்கொள் ளப்பட்டது. 1975ம் ஆண்டு தொடக்கம் 2000ம் ஆண்டு வரை 25 வருடங்கள் சிவாநந்த வித்தியா லயத்தில் பெண் மாணவிகள் கல்வி பயின்றனர். அதேபோல் சிவாநந்த வித்தியாலயத்தில் கல்வி கற்பித்த முதாலாவது பெண் ஆசிரியை திருமதி. மங்கயக்கரசி சிவலிங்கம் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

பழைய மாணவர் சங்கத்தில் பெண்களும் அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்டு செயற்குழு உறுப்பினர்களாக இருந்து செயற்பட்டு வருகின்றனர். ஆகவே ஆண்களுக்கு நிகராக இன்றும் கூட பாடசாலை பற்றுடன் பல பெண் மாணவிகள் இருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகக் காணப் படுகின்றது.

வெ.தவராஜா
(முன்னாள் பழைய மாணவர் மன்றத் தலைவர்)
சிரேஸ்ட உதவிச் செயலாளர், கல்வி அமைச்சு, கிழக்கு மாகாணம்.

பாடசாலை வளர்ச்சிக்கு உந்து சக்தியாகும் பழைய மாணவர் மன்றம்

ஒரு பாடசாலையினுடைய அபிவிருத்தி என்பது அப்பாடசாலை சார்ந்த பாடசாலைச் சமூகத்தினுடைய செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது. இப்பாடசாலைச் சமூக அமைப்புக்களிலே பழைய மாணவர் சங்கம் மிக முக்கியமானதும் தனித்தவ மானதுமாகும். ஏனெனில் தங்களுக்கான எவ்வித எதிர்பார்ப்புகளுமில்லாமல் தம்மை வளர்த்துவிட்ட பாடசாலையினுடைய வளர்ச்சிக்காக தம்மை அர்ப்பணிப்பவர்களே பழைய மாணவர்கள். ஒரு சிலர் விதிவிலக்காகவும் இருக்கலாம். அந்த வகையில் மக்களது உள்ளக் கமலத்தையே விரும்பிய தவத்திரு அடிகளார் சுவாமி விபுலாநந்தர் அவர்களினால் உருவாக்கப்பட்ட சிவாநந்தா தேசிய பாடசாலையினுடைய பழைய மாணவர் மன்றம் உருவாகி அறுபதாவது ஆண்டை நினைவுகூரும் முகமாக வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு செய்தியை வழங்குவதிலே ஐம்பத்தேழாவது மன்றத்தின் தலைவனாக செயற்பட்ட நான் மனமகிழ் வடைகின்றேன் நிகழ்வை ஒழுங்குபடுத்தி செயற்ப்பட்ட அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்

பழைய மாணவர் மன்றத்திலே தலைவராக இருப்பதிலே தற்பெரமை பேசிக் கொள்ளும் சிலருக்கு மத்தியில் சிவாநந்த வித்தியாலயத்தின் பழைய மாணவர் மன்றம் அதற்கப்பால் பாடசாலை யினுடைய, மாணவர்களுடைய, பாடசாலைசார் சமூகத்தினுடைய வளர்ச்சிப்பாதையிலே தம்மை இணைத்துக்கொண்டு செயற்பட்டு வருவது மனதுக்கு நிறைவைத் தருகின்றது. இதுவே காலத்தினுடைய தேவையும் கூட.

வரலாற்றுப் பெருமைமிக்க சிவாநந்த வித்தியாலயத்தினுடைய சேவை மிக அளப்பரியது. எமத நாடு ஆங்கிலேயரது ஆட்சியிலிருந்த வேளை கிறிஸ்தவ மிஷனறிகளினால் ஆங்கில மொழி மூலமான பாடசாலைகள் உருவாக்கப்பட்டு அவை சார்ந்த சமூகத்துக்கான கல்வி வசதிகளை வழங்கிய சந்தர்பத்திலேதான் சிவாநந்த வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு, இன மத வேறுபாடுகளுக்கப்பால் அனைவருக்கும் கல்வி எனும் நிலைப்பாட்டில் செயற்பட்டு, குறிப்பாக கிராமப்புற மாணவர்களுக்குக் கல்வி வசதியை வழங்க வேண்டும் எனும் குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாகச் சேவையாற்றிக் கொண்டுவருகின்றது. இச்சந்தர்ப்பத்திலே பழைய மாணவர் மன்றமும் பாடசாலை நிர்வாகத்துடன் இணைந்து செயற்படுவது நல்லதொரு நிலைப்பாடாகும். இது தொடர வேண்டும், தொடரும் எனும் நம்பிக்கை எனக்குள்ளது.

கற்றல் கற்ப்பித்தல் செயற்பாடானது அதிபர், ஆசிரியர், மாணவர்கள் சம்மந்தப்பட்ட செயற்பாடாக இருக்கின்ற அதேவேளை, அச் செயற்பாட்டில் சம்மந்தப்பட்டவர்களது ஈடுபாட்டையும் நல்ல மனப்பாங்கையும் ஊக்குவிப் பதிலேயே பழைய மாணவர் மன்றங்கள் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். பழைய மாணவர் மன்றம் பாடசாலை வளர்ச்சியினுடைய ஒரு உந்து சக்கிதே என்பதை விளங்கிக் கொண்டு செயற்படும் போதுதான் நல்லதொரு சூழ்நிலை உருவாகும். இதனை உணர்ந்தே சிவாநந்த வித்தியாலயத்தினுடைய பழைய மாணவர் மன்றம் செயற்பட்டு வருகின்றது. இச் செயற்ப்பாட்டைத் தொடர்கின்ற அறுபதாவது பழைய மாணவர் மன்றத்தினுடைய தலைவருக்கும் அவருக்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற குழுவினருக் கும் மீண்டும் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

க.மதிவண்ணன்,
பதிவாளர்,
தொழிநுட்பக் கல்லூரி, மட்டக்களப்பு

ஆன்மீக அனுபூதி பெற்ற சிவாநந்தாவும் ராமகிருஷ்ண மிஷனும்

ஓம் ஸ்தாபகாய ச தர்மஸ்ய சர்வ தர்ம ஸ்வரூபிணே
அவதார வரிஸ்டாய ஸ்ரீ ராமகிருஷ்ணாய தே நம:'
– சுவாமி விவேகானந்தர்

தமிழாக்கம்
"அறந்தனை நிறுவினை அனைத்தறன் வடிவினை
சிறந்தனை பிறந்தபல் பிறவியுள் இறைவ
ஸ்ரீ ராமகிருஷ்ணநின் இணைபதம் அடியேன்
பராவுவன் யாண்டும் படிமிசைப் பரிந்தே!'

நமது அடிப்படை

ஆம்! இன்று நாம் சிவாநந்த வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள். இந்த சிவாநந்த வித்தியாலயத்தின் ஸ்தாபகர் சுவாமி விபுலானந்தர். சுவாமி விபுலானந்தரோ சுவாமி சிவானந்தரிடம் சந்நியாசதீட்சை பெற்றவர். சுவாமி சிவானந்தர் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் நேரடிச் சீடர்களுள் ஒருவர். இந்த பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் யார் என்பதை விவரிப்பதே மேலுள்ள ஸ்லோகமும் அதன் தமிழாக்கமும். ஆக இந்தப் பாடசாலையில் இதுவரை கல்வி பயின்ற தற்போது பயில்கின்ற இனிமேல் பயிலப்போகின்ற அனைவரும் கூட இந்த ஆன்மீக அடித்தளத்திலேயே வேருன்றி நின்றோம், நிற்கின்றோம், நிற்கப்போகின்றோம் என்றால் அதை மறுக்கமுடியாது. இதுவே நமது அடிப்படையும்கூட.

தெய்வத் திருமுவர்

சனாதன தர்மத்தின் முழு உருவமாக விளங்கியவர் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர். வேதங்கள், ஆகமங்கள், புராண இதிகாசங்கள் ஆகியவற்றின் சாரமாக விளங்கியவர். மதங்களின் அடிப்படைத் தத்துவங்களை உள்ளபடி விளக்கிக் காட்டுவதற் கென்றே அவதாரம் எடுத்தவர். இவருடைய வாழ்க்கையை உள்ளபடி அறிந்துகொள்ளுதலும் உலக சமயங்களின் சாரத்தை அறிந்துகொள்ளுதலும் ஒன்றேயாம்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் பதி பத்தினியாக வாழ்ந்து முழு உலகிற்கும் அன்னையாக விளங்கியவர் தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியார். சங்க ஜனனி என்று சிறப்பிக்கப்பட்ட அன்னையார் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரது மறைவிற்குப் பின்னர் சுவாமி விவேகானந்தரால் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்திற்கு வழிகாட்டியாயும் நிலைபேறாயும் தாயன்புடன் கட்டிக்காத்து வந்தார். பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் ஆன்மீகச் செய்தியை முழு உலகிற்கும் பறைசாற்ற வந்தவரும் முதன்மைச் சீடரும் வேதாந்த சிங்கமாக அகில உலக சமயப் பேரவையில் ஆன்மீக முழக்கமிட்டு சனாதன தர்மத்தினை உலகறியச் செய்தவர் சுவாமி விவேகானந்தர்.

ஸ்ரீராமகிருஷ்ண இயக்கத்தின் கொள்கைகளும் விளக்கமும்

சுவாமி விவேகானந்தரால் ராமகிருஷ்ண இயக்கமானது 1897 மே மாதம் 1ம் திகதி ஆரம்பிக்கப் பட்டு 1898ல் தற்போதைய பேலூர் மடத்தில் நிரந்தரமாக நிறுவப்பட்டது. இவ்வாறு உருவாக்கிய போது அதற்கு கொள்கைகளையும், விதிமுறை களையும் வகுத்து உருவாக்கினார் சுவாமிஜி. இந்த இயக்கம் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் திருமேனியா கும். இந்த இயக்கம் ஒருமித்த குரலில் இடுகின்ற ஆணை அவரது ஆணையேயாகும். இந்த இயக்கத்தை நேசிப்பவர்கள் அவரையே நேசிக்கின்றார்கள். இதனை அவமதிப்பவர்கள் அவரையே அவமதிக் கின்றார்கள். இந்த நம்பிக்கையோடு இயக்கத்திற்குச் செய்யும் சேவை பகவானுக்குச் செய்வதாகின்றது.

துறவு என்பது வெறுமனே தியானம், தவத்திலீடுபடுவதல்ல. மாறாக மக்கள் சேவையே உண்மையான தவமாகும். பிரார்த்தனை என்பது பூசை, விழாக்கள் என்பதல்ல. ஜீவ சேவையே உண்மையான சிவபூசை என்றார். கருமங்களிலிருந்து விடுபடுதல் 'நிவிருத்தி'தான் துறவு என்ற கருத்திற்கு புதிய விளக்கம் கொடுத்தார் சுவாமிகள். அதாவது கருமங்களில் சுயநலத்தை விடுத்து தன்னலமற்ற கருமமாற்றலே துறவு என்றார். சேவை புரிதல் என்பது பற்றற்ற ஆனால் முழுமையான ஆன்மீக ஈடுபாட்டுடனானதாக இருக்கவேண்டும் என வகுத்தளித்தார் சுவாமிஜீ.

> துறவு என்பது வெறுமனே தியானம், தவத்திலீடுபடுவதல்ல. மாறாக மக்கள் சேவையே உண்மையான தவமாகும். பிரார்த்தனை என்பது பூசை, விழாக்கள் என்பதல்ல. ஜீவ சேவையே உண்மையான சிவபூசை என்றார்.

இலங்கையில் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன்

சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சொற் பொழிவின் பின்னர் இந்தியாவிற்குத் திரும்பும் வழியில் இலங்கைக்கான முதலாவது விஜயம் மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து மேலும் இரு தடவை என மூன்று தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். இதனைத்தொடர்ந்து இலங்கை ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் கொழும்பில் 1924ல்

ஆரம்பித்து முறைப்படி 1930களிலிருந்து செயற்படத் தொடங்கியது. 1929ல் சட்ட ரீதியான அங்கீகாரம் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்தது. சுவாமி விவேகானந்தரைத் தொடர்ந்து சுவாமி சிவானந்தர், சுவாமி சர்வானந்தா ஆகியோரின் இலங்கை விஜயங்களினாலும் கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷனின் பணிகள் மேலும் விரிவாக்கம்பெற்றன.

இலங்கையில் கல்விப்பணி

இலங்கையில் முதலாவது உத்தியோகபூர்வ கல்விப்பணி ஆரம்பிக்கப்பட்டது 1917ல் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயம் சுவாமி சர்வானந்தா அவர்களால் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து ஆகும். 1924ல் மட்டுநகரின் காரைதீவு தந்த தவஞானி முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் சந்நியாசம் பெற்று இலங்கை வந்ததும் இக்கல்விப்பணி மேலும் விரிவடையலாயிற்று. அக்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்துடனேயே அப்பகுதிகள் உள்ளடக்கப் பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அரசிட மிருந்து பொறுப்பேற்றதும், புதிதாக ஆரம்பித்ததும் அடங்கலாக மொத்தம் 26 பாடசாலைகள், அவற்றுள் 19 பாடசாலைகள் மட்டக்களப்பிலும், 02 யாழ்ப்பாணத் திலும், 03 திருகோணமலையிலும், 01 வவுனியாவிலும், லுணுகலயில் 01 பாடசாலையும் ஆகக் காணப்பட்டன.

அப்பாடசாலைகளின் விபரம் கீழ்க்காட்டப் பட்டவாறாகும்

1. யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலய சிரேஷ்ட இடைநிலை ஆங்கில கலவன் பாடசாலை.
2. யாழ்ப்பாணம் கொக்குவில் சிரேஷ்ட இடைநிலைத் தமிழ்க்கலவன் பாடசாலை.
3. திருகோணமலை இந்துக்கல்லூரி
4. திருகோணமலை ஆரம்ப தமிழ் ஆண்கள் பாடசாலை.
5. திருகோணமலை தம்பலகாமம் தமிழ்க்கலவன் பாடசாலை.
6. வவுனியா தாண்டிக்குளம் தமிழ்க்கலவன் பாடசாலை.
7. பதுளை லுணுகல கனிஷ்ட இடைநிலைப் பாடசாலை.

> **அக்கால மிஷனரிப் பாடசாலைகட்கு ஈடாக நமது பாரம்பரிய ஆன்மீக நெறி சார்ந்த குருகுலக் கல்விமுறையை மீண்டும் தோற்றுவித்தது எமது பாடசாலையில் மட்டுமே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.**

8. மட்டக்களப்பு அக்கரைப்பற்று சிரேஷ்ட இடைநிலைத் தமிழ்க்கலவன் பாடசாலை.
9. மட்டக்களப்பு காரைதீவு சிரேஷ்ட இடைநிலைத் தமிழ்க்கலவன் பாடசாலை.
10. மட்டக்களப்பு காரைதீவு கனிஷ்ட இடைநிலைத் தமிழ்க்கலவன் பாடசாலை.
11. மட்டக்களப்பு கல்முனை சிரேஷ்ட இடைநிலைத் தமிழ்க்கலவன் பாடசாலை.
12. மட்டக்களப்பு மண்டூர் சிரேஷ்ட இடைநிலை ஆண்கள் தமிழ்ப் பாடசாலை.
13. மட்டக்களப்பு மண்டூர் பெண்கள் தமிழ்ப் பாடசாலை.
14. மட்டக்களப்பு கழுதாவளை சிரேஷ்ட இடைநிலைத் தமிழ்க்கலவன் பாடசாலை.
15. மட்டக்களப்பு பழுகாமம் சிரேஷ்ட இடைநிலைத் தமிழ்க்கலவன் பாடசாலை.
16. மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை கனிஷ்ட இடைநிலைத் தமிழ்க்கலவன் பாடசாலை.
17. மட்டக்களப்பு ஆரையம்பதி சிரேஷ்ட இடைநிலைத் தமிழ்க்கலவன் பாடசாலை.

18. மட்டக்களப்பு ஈச்சந்தீவு கனிஷ்ட இடைநிலைத் தமிழ்க்கலவன் பாடசாலை.
19. மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிரேஷ்ட இடைநிலைத் தமிழ் பெண்கள் பாடசாலை.
20. மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலய வதிவிட சிரேஷ்ட இடைநிலை ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை.
21. மட்டக்களப்பு ஆனைப்பந்தி வதிவிட சிரேஷ்ட இடைநிலை பெண்கள் ஆங்கிலப் பாடசாலை.
22. மட்டக்களப்பு ஆனைப்பந்தி கனிஷ்ட இடைநிலைத் தமிழ்க்கலவன் பாடசாலை.
23. மட்டக்களப்பு சித்தாண்டி சிரேஷ்ட இடைநிலை தமிழ்க்கலவன் பாடசாலை.
24. மட்டக்களப்பு முறக்கொட்டான்சேனை கனிஷ்ட இடைநிலைத் தமிழ்க்கலவன் பாடசாலை.
25. மட்டக்களப்பு கரடித்தோட்டம் தமிழ்க்கலவன் பாடசாலை.
26. மட்டக்களப்பு வீரமுனை தமிழ்க்கலவன் பாடசாலை.

சிவானந்த வித்தியாலயம் - சுவாமி விபுலானந்தர்

'ஆனந்தமான சிவானந்த சாலை அன்புடன் வாழ்த்தி வணங்குதுமே.....

ராமகிருஷ்ண மணிமொழி வழியே சகல மதம் புகல் ஒன்றினையே

பராவி வளரும் நம் பல்கலை நிலையே பாரினில் ஓங்கிட வாழியவே

வாழ்க ! வாழ்க! வாழ்க! பாரினில் ஓங்கிட வாழியவே!'

நமது சிவானந்த வித்தியாலயத்திற்கு இப்பெயரை இட்டவர் முத்தமிழ் வித்தகர், முதுபெரும் துறவி சுவாமி விபுலானந்தர். மயில்வாகனனாரது ஆன்மீக வாழ்வின் குருவாகி சந்நியாச தீட்சை வழங்கியவர் பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் நேரடிச் சீடர்களுள் ஒருவரான சுவாமி சிவானந்தர். தனது குருவின் நாமத்தைச் சிறப்பிக்கவே சிவானந்த வித்தியாலயம் எனப் பெயர் சூட்டினார்.

யாழ்ப்பாணம் வண்ணார்ப்பண்ணை வெள்ளிக்கிழமை மடத்தில் 06.06.1926ல் 06 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட குருகுலமானது 26.11.1929ல் மட்டக்களப்பு கல்லடி உப்போடைக்கு மாற்றப்பட்டு இயங்கத் தொடங்கியது. சுவாமி விபுலானந்தர் தனது கலை இலக்கிய சாதனைகட்கு அப்பாற்பட்டு தான்பூண்ட ராமகிருஷ்ண சங்கத்தின் கொள்கைகளின்பால் தனது கவனத்தை செலுத்தியதன் விளைவே மேற்சொல்லப்பட்ட பாடசாலைகளின் கையேற்பும், தோற்றமுமாகும். அக்கால மிஷனரிப் பாடசாலைகட்கு ஈடாக நமது பாரம்பரிய ஆன்மீக நெறி சார்ந்த குருகுலக் கல்விமுறையை மீண்டும் தோற்றுவித்தது எமது பாடசாலையில் மட்டுமே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. துறவிகளின் சகவாசத்துடனும் மேற்பார்வையுடனும் வழிகாட்டு தலுடனும் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது முதல் அக்காலத்தில் கல்விகற்கும் பாக்கியம் பெற்ற ஒருசிலருடன் பழகக்கிடைத்த சந்தர்ப்பங்களில் அவர்கள் கூறும் கதைகளைக் கேட்கும்போதும், அத்தகையவர்கள் சிலரது கட்டுரைகளைப் படிக்கும் போதும் எம் உள்ளத்தில் தோன்றும் பக்தியும், ஆதங்கமும், பெருமையும் சொல்லிலடங்கா. நமது மண்செய்த பாக்கியமே பண்டிதர் மயில்வாகனார் ராமகிருஷ்ணமிஷனில் சேர்ந்து துறவுநெறிபூண்டதும் ஆன்மீகப்பணி புரிந்ததும் எனலாம். இல்லாதவிடத்து தமிழுக்கும் தமிழிலக்கியத்திற்கும் ஓர் பேரறிஞன் கிடைத்திருக்கக் கூடியிருப்பினும் இத்தகைய துறவுநெறிபூண்ட தூய்மையான ஆத்மஞானியை எம்மண் ஈன்றிருக்கச் சாத்தியமிருந்திருக்காது. 'உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது, கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது, நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது' என ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று தந்த அந்த பெருமானாரால் கண்ணை இமைகாப்பதுபோல் கட்டிக்காக்கப்பட்ட பாடசாலை இது. கண்டிப்பான ஒழுக்கவிதிமுறைகளுடன் தாயன்பை விஞ்சிய பராமரிப்புடன் ஆங்கில மொழிமூலக் கல்வி அமுதென ஊட்டப்பட்டது. அக்கால கல்விமுறையின் பேறாக கல்விமான்களும், ஒழுக்கசீலர்களும், சமூகத்தலைவர்களும் உருவாக்கப்பட்டனர் என்றால் அது மிகையாகாது.

'விபுலானந்தன் புகழ் பாடு – அந்த
வித்தகனால் வாழ்வு கண்டது நம்நாடு
தமிழிசை யாழுக்கோர் ஏடு – கொண்டு
தந்தவனை எண்ணி மனமே நீ பாடு!
காவியைப் பார்த்தவர் பலபேர் -அந்த

கல்வியை வளர்த்தவர் அவரின்றி யாரோ
தேவியைத் தொழுபவர் சிலபேர் - ஏழைச்
சிறுமியை வளர்த்தவர் அவரின்றி யாரோ !'

சுவாமி விஞ்ஞானாநந்தர் வருகையும் ஆசியும்

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் நேரடிச்சீடர்களுள் சுவாமி சிவானந்தர், சுவாமி விஞ்ஞானாநந்தர் ஆகியோரது அருளாசிகள் இப்பாடசாலைக்கு கிடைத்திருந்தது. இதில் சிறப்பாக 03.01.1934ல் சுவாமி விஞ்ஞானாநந்தரது மட்டக்களப்பு வருகையும் அவர் எமது பாடசாலைக்கு வழங்கிய ஆசியும் இன்றும் ஒரு மந்திர சக்தியாய் நம் பாடசாலையில் விளங்குகின்றது என இப்பாடசாலைக்கு வருகைதரும் இராமகிருஷ்ணமிஷன் துறவிகள் பெருமிதம் கொள்கின்றனர். அச்சம்பவம்பற்றிக் குறிப்பிடும்போது நமது வித்தியாலயத்தில் அப்போதிருந்த ஒரு மாமரத்தின்கீழ் சுவாமிகள் நின்றுகொண்டு பரவச நிலையில் 'இந்த நிறுவனம், இவ்வாறு வளரும்! இவ்வாறு வளரும்!! இவ்வாறு வளரும்!!! என்று தனது இரு கைகைளையும் அகல விரித்து மேலும் விரித்து மேலும் விரித்து ஆசி வழங்கினார் என்று அச்சம்பவத்தை நேரடியாகக் கண்டவர்கள் புளகாங்கிதத்துடன் கூறியிருந்தனர்.

சுவாமி விபுலானந்தர் மட்டுமின்றி அக்காலத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் மற்றும் சிவாநந்த வித்தியாலயம் ஆகியவற்றின் மேலாளர்களாயும் உதவியாளர்களாயும் விளங்கிய ஏனைய துறவிகளது ஆசியும் எமது வித்தியாலத்திற்குண்டு. சுவாமி நடராஜானந்தர் காரேறு மூதூராம் காரைதீவு எமது மண்ணுக்கு பெற்றுக்கொடுத்த இன்னோர் தவஞானி சுவாமி நடராஜானந்தர். இவர் சுவாமி விபுலானந்தரின் மருகர். சீனிவாசகம் என்ற பெயருடன் சிவானந்த வித்தியயாலயத்தின் விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றி பின்னர் துறவுபூண்டு சுவாமி நடராஜானந்தா என நாமம் பெற்றார். 1947 முதல் 1953 வரை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனால் நிர்வகிக்கப் பட்டுவந்த 26 பாடசாலைகளையும் சுவாமிகள் சிறப்பாக நிர்வகித்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. சிவாநந்த வித்தியாலயத்திற்கு அவ்வப்போது அதிபர்கள் மாற்றம் பெற்றிருந்தாலும் மேற்பார்வையும் நிர்வாகக்

> **சுவாமி ஜீவனானந்தாவின் சமாதிக்குப் பின்னர் இல்லத்தைப் பொறுப்பேற்ற சுவாமி அஜராத்மானந்தா அவர்களது காலத்திலும் இப்பாதை தடம்புரளாது கட்டிக்காக்கப்பட்டது.**

கட்டுப்பாடும் ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் துறவிகளிடமே காணப்பட்டது. சுவாமிகளது அயராத உழைப்பும் மாணவரில்லங்கள் மீதான பற்றுதலும் பற்றிக் கூற விளைந்தால் அது இக்கட்டுரையை ஓர் நூலாக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும். தொடர்ந்து 1960 ஒக்டோபரில் ராமகிருஷ்ணமிஷனால் நிர்வகிக்கப் பட்டுவந்த 26 பாடசாலைகளையும் அரசாங்கம் கையேற்கும்வரை பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நேரடி அருட்பார்வையின்கீழ் நமது பாடசாலை விளங்கிய பெரும்பேற்றுக் குரியவர்கள் நாம் என்பதை பெருமையுடன் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இவர்கள் மட்டுமன்றி 1960 வரை இப்பாடசாலையின் மேலாளர்களாக சுவாமி கூடஸ்தானந்தா, சுவாமி சர்வாதீதானந்தா, சுவாமி அவ்வையானந்தா ஆகியோரும் பணிபுரிந்துள்ளனர்.

அதுமட்டுமன்றி மட்டக்களப்பில் ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இங்கு வருகை தந்த சகல ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் துறவிகளதும் திருப்பாதங்கள் எமது பாடசாலையில் ஸ்பரிஷிக்கப்பட்டதுடன் அவர்களது நல்லாசிகளும் வழங்கப்பட்டன.

சுவாமி ஜீவனானந்தர்

மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் மற்றும் சிவாநந்த வித்தியாலயம் ஆகியவற்றின் வளரச்சியில் மிகக் காத்திரமான பங்கினை வகித்து

அண்மைக்காலம் வரை பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அடித்தொண்டனாகத் தன்னை நிலைப்படுத்திச் சென்றவர் சுவாமி ஜீவனானந்தா மட்டக்களப்பு வலையறவு தந்த மகானாவார். 16.03.1966 முதல் மட்டக்களப்பிற்கு நியமிக்கப்பட்ட சுவாமிகள் 16.03.1967ல் சுவாமி நடராஜானந்தாவினது சமாதிக்குப் பின்னர் 17.03.1967 முதல் மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனைப் பொறுப்பேற்றார். மட்டக்களப்பு மிஷனை பொருளாதார ரீதியிலும், உட்கட்டமைப்பு ரீதியிலும் வளப்படுத்திய அதேவேளை எமது சிவானந்த வித்தியாலயத்தின் ஒவ்வொருகட்ட வளர்ச்சியிலும் உந்துசக்தியாயும், ஆன்மீக வழிகாட்டியாயும் செயற்பட்டவர். சிவானந்த வித்தியாலயத்தில் நடைபெறும் எந்த நிகழ்வானாலும் சுவாமிகளின் பிரசன்னம் அங்கு தவிர்க்கப்படமுடியா ததாயும் மறுக்கப்படமுடியாததாயும் காணப்படும். சுவாமி ஜீவனானந்தாவின் பணிக்காலத்தில் அவருடன் இணைந்து செயற்பட்ட தவ சீலர்களான மூத்த துறவி சுவாமி இராஜேஸ்வரானந்தா, சுவாமி தத்பாஷானந்தா, சுவாமி ஞானமயானந்தா ஆகியோ ரும் நமது பாடசாலையின் வளர்ச்சியில் தமது எல்லையற்ற ஆசியையும் சேவையையும் வளங்கியவர்கள்.

சுவாமி ஜீவனானந்தாவின் சமாதிக்குப் பின்னர் இல்லத்தைப் பொறுப்பேற்ற சுவாமி அஜராத்மானந்தா அவர்களது காலத்திலும் இப்பாதை தடம்புரளாது கட்டிக்காக்கப்பட்டது. பின்னர் சுவாமி அஜராத்மானந்தா இறைபதம் எய்தியதைத் தொடர்ந்து ராமகிருஷ்ண மிஷன் மற்றும் சிவாநந்த வித்தியாலயத்திற்கிடையிலான உறவுகளில் தற்காலிகமாக சற்று தொய்வுநிலை ஏற்பட்டிருக்கின்ற மையைக் அவதானிக்கக் கூடியதாயுள்ளது. இது பாடசாலையின் கல்வி, ஆத்மீக ஒழுக்க விழுமியங்களிலும் தற்காலிகமான ஓர் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

பாதையில் உண்டான ஆன்மீக இடைவெளியும் பரிகாரமும்

சிவாநந்தாவிற்கும் மிஷனுக்கும் இடையில் சுமார் பத்து வருடங்களாக ஏற்பட்டுள்ள இடைவெளி பாடசாலையை பல்வேறு வகையிலும் தளர்வு நிலைக்குச் இட்டுச் சென்றுள்ளமை கண்கூடு. இது தற்காலிகமெனினும் இதனை ஆன்மீக ஆராதனையூடாக மட்டும்தான் எழுச்சியூட்டலாம் என்பது நிதர்சனமானது. ஒரு கோயிலில் உள்ள மூலமூர்த்தியின் தெய்வீக சக்தியை நிலைப்படுத்த அவ்வப்போது சங்காபிஷேகம், கும்பாபிஷேகம் என்பன மேற்கொள்ளப்பட்டு எவ்வாறு சக்தி நிலைப்படுத்தப் படுகின்றதோ அதேபோல் நமது ஆன்மீக ஒழுக்கப் பண்பாடுகளையும், விழுமியங்களையும் பாடசாலை சமூகத்திலும் அதற்கு வெளியிலும் விழிப்புறச் செய்யவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவார் 'ஒரு கோயிலில் தெய்வம் இருக்கவேண்டுமானால் ஒன்றில் அங்கு பூசை செய்யும் பூசகர் உண்மையான பக்தியுடையவராயிருத்தல் வேண்டும் அல்லது வழிபடும் மக்கள் உண்மையான பக்தியுடையவர்களாயிருத்தல் வேண்டும். இந்த இரண்டு தரப்பும் உண்மையற்றதாகும்போது அங்கு தெய்வத்திற்கு எந்தவொரு தேவைப்பாடும் இருக்காது. இப்போது மீண்டும் நமது ஆன்மீகத் தளத்தை வலுப்படுத்த வேண்டிய தேவையுள்ளதை அனைவரும் உணரத் தலைப்பட் டுள்ளனர். இதனைச் சீர்ப்படுத்த நமது முயற்சிகளை மேற்கொள்ளவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அந்தவகையில் கீழ்க்குறிப்பிடப்படும் அடிப்படைப் பணிகள் சார்ந்து சிந்திப்பதும் செயற்படுத்துவதும் அவசியமாகின்றது.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் உத்தியோகத்தர்களிடையே இத்தகைய நமது பண்பாட்டு மரபுகளை அவர்தம் உள்ளத்தில் ஆழப்பதித்து பண்பாடுமிக்க மாணவர் சமுதாயத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுதல் வேண்டும். பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியார், சுவாமி விவேகானந்தரது போதனைகளையும், வாழ்க்கை நெறிமுறைகளையும் பாடசாலையின் சகல தரப்பினருக்கும் நன்கு தெளிவுபடுத்தி அவர்களது நடைமுறைவாழ்வில் கடைப்பிடிக்கச் செய்தல். அவர்களது ஜயந்தி தினங்களையும் கொள்கைகளையும் நமது சொந்த நிகழ்வாக ஏற்று கொண்டாடுதல். சுவாமி விவேகானந்தரது கொள்கைகளையும் செய்திகளையும் சமுதாயத்திற்கு எடுத்துச் செல்லும் பணியை மேற்கொள்ளுதல்.

'பராவி வளரும் நம் பல்கலை நிலையே பாரினில் ஓங்கிட வாழ்த்துவமே'

ஜய் ஸ்ரீ ராமகிருஷ்ணாய நம.

M.Thanikaichelvam
University of Jaffna.



Being a Shivanandian....

When schools flourish, all flourishes. -Martin Luther

Just remember the first day at Shivananda Vidyalaya. Our first class was in the oldest building where the new Vivekananda block was built two years later. Adapting to a new school anthem and prayer was not too difficult. We were totally unaware about the vitality of the time we were going to spend there. But Shivananda with new lessons and new experiences started reconstructing me without my knowledge. I am blessed with everything, only because of Shivananda. What am I going to do for my school which gave me everything??? I'm not the Ekalaivan of the Mahabharata to give myself back to my gurus who made my every nerve work. But what if my school expects something from me, that I can do???

This is the time for us to work together as Shivanandians for Shivananda. The new office bearers of The Shivananda Past Pupils' Association plans to integrate all Shivanandians over the globe and to make it an international organization to support our Shivananda. What we are going to do is just to bring out the needs of the school to society and finding the solutions. Some of our dedicated members are ready to spend their time with the school society to assess the needs and possible solutions. Shivananda Vidyalaya has a very well trained and talented pool of teachers and a good principal. The PPA will support them to create students who can challenge the 21st century. Let us bring our hands together across the world to make our school proud.

With heart full of pride,

சோ.சிவலிங்கம்
ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர்.
கல்லடி.

ஆன்மீக ஒளியூட்டும் அழகிய ஆலயம்

சுவாமி விபுலானந்தரால் சிவானந்த வித்தியாலயம் ஸ்தாபிக்கப்பட்டது. இதனை ஸ்தாபிப்பதற்காக இப்பகுதியில் வாழ்ந்த பெருந்தகைகள் பாரிய உதவிகளை வழங்கியிருந்தனர். அந்தக் காலத்தில் இவ் வித்தியாலயம் ஸ்ரீ ராமகிருஷ்ணன் மிஷன் துறவிகளாலேயே நடாத்தப்பட்டு வந்தது. துறவிகள், மாணவர்கள் ஆகியோரின் பிரார்த்தனைக்காக இங்கு வழிபாட்டிடமும் அமைந்திருந்தது. இதையே வித்தியாலய மாணவர்களும் பிரார்த்தனைக்காக பயன்படுத்தி வந்தனர். அரசாங்கம் பாடசாலையைக் கைக்கொண்டபோது இவ்வழிபாட்டிடம் வித்தியாலய எல்லைக்குள்ளின்றி விடுபட்டு விட்டது. எனினும் வித்தியாலய மாணவர்கள் அவ் வழிபாட்டிடத்தையே தொடர்ந்து பயன்படுத்தியிருந்தனர். வித்தியாலயத்தின் வளர்ச்சி காரணமாக கட்டிடங்கள் அமைந்த வேளையில் வழிபாட்டிடத்திற்குச் செல்லும் வழி முற்றாக மூடப்பட்டது. ஆகவே வித்தியாலயத்துக்கு ஒரு வழிபாட்டிடத்தின் அவசியம் உணரப்பட்டது. வித்தியாலய

ஆசிரியர் சங்கக் கூட்டத்திலே இதன் தேவை பற்றி ஆலோசித்து சரஸ்வதிக்கான வழிபாட்டிடம் அமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப் பெற்றது. இத்தீர்மானம் பெற்றார் ஆசிரியர் சங்கத்தினாலும் ஏற்கப்பட்டு அலுவலகத்தின் அனுமதியும் பெற்றப்பட்டது.

இதற்கான நிதி திரட்டப்படும் வேளையிலே, அமரரான செல்லையா சுப்பிரமணியம் (தங்கவேல்) உடையார் அவர்கள். சரஸ்வதி விக்கிரகத்துக்கான செலவைத் தந்துதவ முன் வந்தார். அத்துடன் அவர், வித்தியாலய சமஸ்கிருத ஆசிரியர் வியாகரண சிரோமணி பூரண தியாகராஜக் குருக்கள் அவர்கள் மூலமாக திருகோணமலை ஆசாரியார் திரு. நல்லரெத்தினம் அவர்களுடன் தொடர்பு கொண்டு ஐம்பொன்னில் சிலை அமைய வேண்டுமென விரும்பினார். அவர் திருகோணமலை சென்றபோது அமரர் இராஜமாணிக்கம், அமரர் சிவநேசன். அமரர் கணபதிப்பிள்ளை திரு.பு.பாஸ்கரன், மற்றும் இக் கட்டுரையின் ஆசிரியரான திரு.சோ.சிவலிங்கம் ஆகியோர் அவருடன் சென்றனர். ஆசாரியரின் சுகயீனம் காரணமாகவும் வேறு தடங்கல்கள் காரணமாகவும் சிலை வடிக்கக் காலதாமதமாயிற்று. சிலை தயாரானதும் முதல் சென்ற குழுவில் இடம்பெற்ற அனைவரும் சென்று விக்கிரகத்தைக் கொண்டு வந்தனர். ஆலயத்துக்கான கட்டிடம், முதலில் கிழக்கு நோக்கிக் கட்டப்பட்டிருந்தது. என்ன காரணத்தாலோ அது முடிவுறாது காலம் கடந்து கொண்டே வந்தது. திரு. கணபதிப்பிள்ளை தியாகராசா வித்தியாலயத்தின் அதிபராக வந்தபின், ஆலயத்தின் நிலையத்தை வடக்கு முகமாக அமைத்து, மூலஸ்தான தூபி மற்றும் மண்டபத்துடன் கட்டடம் அமையப்பெற்றது. 1992ம் ஆண்டு பிரசோற்பத்தி வருடம் பங்குனித் திங்கள் ஐந்தாந் திகதி புதன்கிழமை (18.05.1992) பங்குனி உத்தர நந்நாளில், சுபவேளையில் கும்பாபி ஷேகம் நடைபெற்றது. கருணாகர மகேஸ்வரக் குருக்கள் கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தார்கள்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தரின் பிறந்த தின நூற்றாண்டினைக் கொண்டாடிய ஆண்டில் அவரால் ஸ்தாபிக்கப்பெற்ற சிவாநந்த வித்தியா லயத்தில் அவரின் வெள்ளை நிற மல்லிகையை நினைவூட்டும் சரஸ்வதியின் ஆலயக் கும்பாபிஷே கம் நடைபெற்றது சாலப் பொருத்தமானதாகும். இவ் விழாவினை, பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் வித்தகர்பால் அன்பு பூண்டவர்கள், வித்தியாலயத்தில் அன்பு கொண்டவர்கள், மற்றும் அன்பர்கள், தமிழ் கூறும் நல்லுலகத்தவர்கள் ஆகியோர் அறியும் வண்ணம் 18.03.1992 அன்று நமது அபிமான பத்திரிகையான வீரகேசரியில் ஒரு சிறப்புப் பக்கம் முழுவதிலும் இவ்நிகழ்வு பற்றி பிரசுரிக்கப்பட்டது. இந் நிகழ்வின் நினைவாக அம்பாறை மாவட்ட இந்து மாமன்றத்தால் பாமாலையும் வெளியிடப்பெற்றது.



ஆகுதலின் ஊழி

தியாகசேகரன் (திசேரா)
ஆசிரியர்

செடியின் நுனித்தண்டின் ஆட்டம் பாரந்தாங் கொணாமல் வளைந்து, ஆடி குலுங்கி பின்னோக்கி தள்ளப்பட்டதும் அதிலிருந்து ஏதோவொன்று தாவியது. அது பச்சையாய் தென்பட்டாலும் மரத்துடன் ஒட்டிக்கொண்டதும் மரப்பட்டையின் நிறத்துக்கு மாறி, மரப்பட்டையாகவே ஊர்ந்ததை அவள் கண்ணாடியினூடு படமாகச் சேகரித்துக் கொண்டாள்.

குழந்தைகள் இருக்கும் வீட்டில் பாலும், கொலோனும் கலந்த வாசனை சூழ்திருப்பது போல அவளது அறையில் புத்தகத்தின் மணம் நிரம்பியிருந்தது. அவளுக்கு புத்தகங்கள் எல்லாமே குழந்தைகளாகத் தெரிகின்றன என்றாள். குழந்தைகளிடம் இருக்கும் அற்புதமும், ஆனந்த மும், ஆற்றலும் புத்தகங்களால் மட்டுமே கொடுக்கப்பட முடியும் என்பது அவளது நம்பிக்கை.

வயரால் பின்னப்பட்ட சாய்வு நாற்காலி. அதன் முன்கால்களுடன் பிணைக்கப் பட்டிருந்த சட்டத்தைச் சுழற்றி காலை நீட்டி வைக்கக் கூடியவாறு சரிசெய்து நீட்டிப் படுத்திருந்தவளின் மார்பில் ஒரு குழந்தை விரிந்து குப்புறக் கிடந்தது. மூடியிருந்த கண்களுக்குள் காலடி ஓசையைக் கேட்டுக்கொண்டே நடந்தாள்.

மெல்லிய மஞ்சளில் மின்னிக் கொண்டிருந்த காட்டின் உச்சி மலை யொன்றில் நின்றவள், எல்லை வரை தெரிந்த காட்டின் விரிவைக் கண்களால் சுவைத்தாள். அவள் உடலில் மொய்த்துக் கொண்ட வண்ணத்துப்பூச்சிகள் அவளை காற்றில் மிதக்கச் செய்தன. இப்போது அவளால் நிலைக்குத்தாக காட்டிலுள்ள மரங்களைக் காணமுடிந்தது. அவளது காதுக்குள் சொல்லப்பட்டுக்கொண்டிருந்த காட்டின் சூத்திரமும், மனிதனின் வெட்டுமுகமும் செவிப் பறையில் ஒட்டியிருந்தன.

திடீரென எழுப்பப்பட்ட அந்த ஒலியால் காடே அதிர்ந்ததாக எண்ணினாள். அந்த ஒலி காற்றையும், இளமஞ்சள் வெயிலையும் கரைத்தது. காதுக்குள் சென்றுகொண்டிருந்த ஒலியிழைகள் அறுந்தன. குழந்தையைக் காணவில்லை.

அவளுக்கு பரபரப்பு எழுந்துகொள்ள கண்களைக் திறந்தாள். மீண்டும் அந்த ஒலி அவளை அதிரச்செய்தது. அது வாசற்கதவின் அழைப்பு மணிதான் என்பதை நிதானிக்க சில கணங்கள் சென்றன.

கதவைத் திறந்தாள். இளநீலநிற சேர்ட்டுடன் கொஞ்சம் கடுப்பேறிய முகத்துடன் ஒருத்தன் நின்றான். அவனை முன்னெப்போதும் கண்ட நினைவுகள் அவளுக்கு வரவில்லை. அவனது சட்டையின் மார்பில் பறக்கும் புறா, சொண்டில் கடிதமொன்றைக் கவ்வியபடம் சிவப்பு நூலால் பின்னப்பட்டிருந்தது.

"திருமதி சாந்தி நவனீதன்" அவள் தலைய சைத்தாள். ஒரு பார்சலை அவளிடம் கொடுத்தான். அது ஒரு குழந்தைதான் என்பதை முடிவெடுக்க அவளுக்கு நேரம் போகவில்லை. அவளிடம் தாளில் கையொப்பத்தை வாங்கிக்கொண்டு அவன் படிகளில் மறைந்தான்.

அனுப்புனரின் முகவரி அவளுக்குள் சிலிர்ப்பை உண்டாக்கியது. அந்த அற்புதம் நிறைந்த குழந்தையின் வரைபடம் அவள் கண்களின் திரையில் வந்தது. ஆர்வம் நிறைந்து கைகளுக்குள் உந்த அந்த தடித்த கபிலநிற போர்வையை மெதுவாக அகற்றினாள். முகப்புத்தகத்தில் பார்த்த முகம் கண்முன்னால் இழைவிட்டோடும் நிற இழைகளால் நிரம்பி அவளைச் சுருக்கியது.

மெற்லெமினேற் செய்யப்பட்டிருந்த அதன் முகத்தை தடவும்போது உள்ளிருந்த எழுத்துக்கள் குதூகலிக்கும் கூச்சத்தை உள்ளங்கைக்குள்ளால் உணர்ந்தாள்.

அந்த அற்புதம் நிறைந்த குழந்தையின் வரைபடம் அவள் கண்களின் திரையில் வந்தது. ஆர்வம் நிறைந்து கைகளுக்குள் உந்த அந்த தடித்த கபிலநிற போர்வையை மெதுவாக அகற்றினாள்.

இடதுகையால் அதைப்பற்றிக்கொண்டு சாய்மனைக்கதிரையின் முன்சட்டத்தை தள்ளி வழியேற்படுத்திக்கொண்டு உள்நுழைந்து சட்டத்தை மூடி சாய்ந்து காலைநீட்டிக்கொண்டாள்.

திறக்கப்பட்ட குழந்தை மெதுவாக இறங்கி எழுத்துக்களால் விரலைப்பற்றிக்கொண்டு நடந்து போனது. விருப்புடன் அவளும் குழந்தையின் இழுப்புடன் உடன்பட்டாள்.

திரு நவனீதன், வெசாக் தினமொன்றில் சுழன்று மின்னி ஒளிரும் நிறக்குமிழ்களைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு நாளில் நடைபெற்ற குண்டு வெடிப்பில் தப்பி, துப்பாக்கிச்சூடுபட்டு இறந்தான். அதுவரை அவளுக்குக் குழந்தைகளில்லை.- இன்று வரையும் கூட.

குழந்தைகளுடனான உலகம் அற்புதமானது. அறையில் நிரம்பிய குழந்தைகள் வீடு முழுவதும் பரந்தன. அவளிடமிருந்து தனிமை ஓடிப்போனது. அவள் பித்துப்பிடித்தவளாகவே பார்க்கப்பட்டாள். அடக்கப்பட்ட உணர்ச்சிகள் நரம்புடன் முறுக்கேறி பித்தம் கலங்கிப்போனவளாக நினைக்கப்பட்டாள். ஆனாலும் அவள் குழந்தைகளுடன் குதூகலமா யிருந்தாள். விரலில் இருந்து வரிகள் நழுவிவிடாத படிக்கு விரல் நகர்ந்தது.

இடது கையின் நடுவிரலில் சூட்டையும், பற்றியிருந்த கையின் நாடித்துடிப்பையும் உணர்ந்தாள்.

சூட்டுடன் விரலினூடு பரவிய வரிகள் அவளுக்கு அறிமுகஞ் செய்தபடி நெடுவீதியினூடு அழைத்துச் சென்றது.

தடம் ஒன்று இயந்திரமாகுதல் : கொள்ளை அழகுடனான வீதியையும், அடர்மரங்களையும் வாசித்தபடி நடந்தாள். அந்த நகரம் எந்த வித்தியாசத்தையும் காட்டவில்லை. மனிதர்கள் முகங்களில் வெள்ளைக் குழம்புகளைப் பூசியபடிக்கு வாசனை இழுபட நடந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் தோல்களில் வெயில் பட்டுத் தெறித்தது.

கோட் போட்டு டை கட்டியிருந்த இளங் கனவான், வேட்டி கட்டியிருந்த மனிதரை ஏளனமாய்ப் பார்த்து மூக்கைச் சுழித்துப் போனதைக் அவள் கண்டாள். மிகவேகமான நடை எல்லோரிடமும் இருந்தது. செக்கன் முள்ளை முந்திவிட அவர்களது ஓட்டநடை இருந்தது.

வாயில் குழிதோண்டும் ஆயுதத்துடன் பலர் திரிந்தார்கள். கம்பீரமாய் நின்ற அதிகாரியின் முன்னால் கைகட்டி நின்ற ஒருத்தன். -அவன் அடிக்கடி தலையைச் சொறிந்து கொண்டுமிருந்தான். அவன் உடலை நெளித்தும், புருவங்களை நடனமாட விட்டபடியும் யாருக்கோ குழியைத் தோண்டிக் கொண்டிருந்தான். அவன் தனக்கும் எங்காவது குழியைத் தோண்டிவைத்திருப்பான் என்பதை அறியாது அதிகாரியும் அவன் வெட்டுவதை ரசித்துக்கொண்டிருந்தான். அதிகாரிகள் ஒருத்தரைக் கொண்டு மற்றவர்க்கு குழி தோண்ட வைக்கும் ரகசியத்தைக் கற்றவர்கள் என்பதையறியாத அவனும் தோண்டிக்கொண்டே இருந்தான். குழியைத் தோண்டி அதன்மேல் கம்புகளை அடுக்கி இலை குழைகளால் மூடிவிட்டு அதன்மேல் வெள்ளை மணலை பரப்பி வைத்தான். அவன் நின்ற இடத்துக்கு நேர்மேலே இன்னொருத்தன் சிறியநூலால் பெரிய கல்லொன்றைத் தொங்கவிடும் முயற்சியில் இருந்தான்.

அந்த நகரின் மனிதர்களெல்லாம் விசித்திரமாக மாறி இருந்தார்கள். மற்றவர்களுக்காக தங்களை அலங்கரிப்பதில் மிகக் கவனமெடுத்து கண்ணாடி முன்னால் குந்தியிருந்தார்கள்.

நேரத்தை விரட்டியோடி நிம்மதியை விற்று பணமாக்கிய நோட்டுக்களில் காரொன்றை வாங்கி தூசுபடிய விட்டிருந்தார்கள்.

பசி சாக்காட்டிக்கொண்டிருந்த குழந்தையின் வயிற்றில் டயரை ஏற்றிச்சென்ற அவர்களின் பயணம் கேளிக்கை விடுதிகளில் முடிந்தது.

மூன்றாம் சந்திகளில் நின்ற சிறுவர்களும், இளைஞர்களும் ஓடிச்சென்று பாடப்புத்தகங்களுள் குதித்தார்கள். இராமபாணமாகி துளைத்து முன்னேறிக் கொண்டே இயந்திரமாகியதை அவள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

திருமதி சாந்தி நவனீதனுக்கு எரிச்சலும், கோபமும் உண்டாகிப்போயிருக்க வேண்டும். அவளிடமிருந்த குழந்தைகள் மீதான அன்புடன் கதைகள் சண்டையிட்டன. இடது கை நடுவிரலை உள்ளே வைத்து குழந்தையை மூடிப்பிடித்துக் கொண்டாள்.

தடம் இரண்டு வெள்ளையாடை ஆகுதல் : உயரக வெள்ளையாடையுடன் மலை உச்சியில் ஒருவன் நின்று கொண்டிருந்தான். அவனது மேற் சட்டைப் பைகளில் இரத்தம் கசிந்திருந்தது. நீண்ட குழாயொன்றை கைகளில் வைத்திருந்தவன், கீழே நின்றுகொண்டிருந்த ஒருத்தியின் பின்னால் தொங்கிக் கொண்டிருந்த கூடைக்குள் எரிருந்த அவளது உழைப்பை உறிஞ்சிக்கொண்டிருந்தான். மிஞ்சியதுடன் கீழிறங்கியவள் மகனுக்கு ரொட்டித் துண்டுகளை ஊட்டி வளர்த்தாள்.

திருமதி சாந்தி நவனீதன் நடுவிரலால் பக்கங்களைக் கடக்க சிறியவன் இளைஞனானான். குப்புறக்கிடந்து வலைகளுக்குள் புகுந்து ஓட்டைக் குள்ளால் தலையை நீடியவன் எதிர்கால உழைப்பைக் கணக்கிட்டு விட்டதாகவும், நோகாமல் நுங்கு தின்ன வெள்ளையாடைக்கு மாறுவதுதான் சிறந்தது, சிறப்பானது என்றான்.

அவனின் கண்களுக்குள் தெரிந்த ஆர்வம், அவள் இரு பக்கங்களைக் கடக்கையில் அவன் அவ்வாறே ஆகிப்போனான்.

அவனும் உயரக வெள்ளாடையுடன் கைகளில் குழாயுடன் மலையுச்சியில் நின்றான். அவனது தாய் இன்னமும் மிகுந்த களைப்புடன் படியிறங்கினாள்.

சாந்தி நவனீதன் கண்கலங்கிப் போனாள். அவள் உணர்வின் உச்சத்தில் நின்றாள். உணர்வை ஆயுதமாக்கிக் கொண்டு, ஆண்ட பரம்பரை- விதைக்கப்பட்டோம் - எழுக, எழுக என உணர்வு கொப்பளிக்க கூட்டங்கள் புறப்பட்டுக்கொண்டிருந்தன. வெள்ளையாடையும், அதன் கரைகளும் அரசியலைக் கரைத்து காற்றில் பரப்பியது. அதற்கு சாணமும்,

நீறும் பூசுவதற்கு தொண்டர்கள் குரலெழுப்பிக் கொண்டு போனார்கள்.

தடம் மூன்று வியாபாரம் ஆகுதல் :

பெரும் கேளிக்கைக் கொண்டாட்டங்களால் ஊர் நிரம்பியிருந்தது. வீதியோரங்களில் பல சிறுகடைகள் முளைத்திருந்தன. விதவிதமான வாசனைகளுடன் வீதி மிதந்தது.

தீவிர செயற்பாட்டுடன் பழக்கடைக்காரன் இயங்கிய பக்கத்தில் அவள் நிதானமானாள்.

மாம்பழச் சாக்கை பின்புறம் தூக்கிச் சென்றவன் அவற்றின் மேலால் மருந்தைத் தெளித்து முன்புறத்தட்டில் பரவினான்.

வாழைக்குலைகள் இரண்டை தூக்கிச்சென்று மருந்து கலக்கப்பட்ட பீப்பாவில் தோய்த்தெடுத்து தொங்கவிட்டான். அவளது நாசிக்குள் மருந்தின் மணம் உறுத்தியது. புறங்கையால் மூக்கைத் தேய்த்துக் கொண்டாள்.

அவள் பார்த்துக்கொண்டிருக்கும் போதே பழங்களில் மஞ்சள் உதித்து, மணம் கசிந்தது.

வீதியில் பம்பரம் சுற்றியும், ஊது குழல்களில் சத்தம் எழுப்பியும் வந்த சிறுவர்கள் மஞ்சளில் மயங்கி, சில்லறைக்கு பழம் பெற்றார்கள்.அவர்களின் வாய்க்குள் பழம் நழுவும்போது, அவர்களும் உலகைவிட்டு நழுவுவதை அவள் கண்டாள்.

அவளுக்கு எதிரே இடதுபுறம் இரண்டு கடை தள்ளியிருந்த பொரியல் வண்டிக்காரன் எண்ணெய் தெறித்து காற்றில் கரையுமாறு மரவள்ளிக் கிழங்குச் சீவலை கொதித்த எண்ணைத் தாச்சியினுள் அள்ளிப்போட்டான். கூடவே மூன்று பொலித்தீன் பைகளையும்.

திருமதி சாந்தி நவனீதன் தனக்குள் ஏதோ உருப்பெற்று முட்டி மோதிக்கொண்டிருப்பதை உணர்ந்தாள். அவள் முன்னர் கண்ட சிறுவர்கள் பொரியல் வண்டிக்காரனிடம் சீவலை அள்ளிக் கொண்டு ஓடியவர்கள் அதைக் கொறித்துக்கொண்டே மயங்கி விழுந்ததையும், அதே வேகத்தில் சிதைந்து வெள்ளைப்பளிங்குத் துகள்களானதையும் அவள் பார்த்து வியர்த்துப் போனாள்.

சாய்மனை கதிரையின் வயர்பின்னலூடு வியர்வை ஒழுகிட கிடந்தவள் முன்சட்டத்தை சடுதியாக நகர்த்தி கையிலிருந்த குழந்தையைத் தூக்கிப்போட்டாள். அருகிலிருந்த மெத்தையில் துள்ளி விரிந்து மூடுப்பட்டுக் கிடந்தது. அது சொன்ன பதகளிப்பான கதைகள் அவளுக்குள் முட்டிக் கிடந்தன. அவள் அவனை நினைவு கூர்ந்தாள். அவனது சொற்கள் அவளுக்குள்ளிருந்து மீண்டன.

ஆகுதலின் கதை :

குழந்தையின் தந்தைக்கு,

நீங்கள் அனுப்பியிருந்த குழந்தையின் பிரதி கைகளை பற்றி எனை அழைத்துக்கொண்டு போனது. அது வெறுப்பு நிறைந்த விரும்பிய பயணமாகத்தான் இருந்தது.

உண்மையில் என் முதுகுக்கு கண் முளைத்தது போல உணர்ந்தேன். இது மாதிரியான பொழுது இதற்கு முன்னர் கிட்டவில்லை. எனக்குள்ளேயே நான் நுழைந்து எனைத் தேடத் தொடங்கினேன். என்னிடம் நானே கேள்வி கேட்டேன்.

அப்போதுதான் ஆட்டிறைச்சிக் கடையின் பின் கோடியில் இரு நாய்களின் தலையை காகங்கள் கொத்திக்கொண்டிருந்த ஞாபகம் எனக்குள் நுழைந்தது.

நான் வெறுக்கப்பட்டதும், என் மீதான பார்வை கோணலாகியதும் ஒருபுள்ளியில் இருந்துதான் விரிந்தன என்பதை உறுதியிட்டுக் கொண்டேன். இன்னமும் நான் உண்மையைச் சொல்வதென்றால், கணவன் இறந்ததன்பின் தனிமைக்குள் தள்ளப்பட்ட நான், எனக்குள்ளிருந்த குதூகலத்தைத் தொலைத்தேன். இந்தக் குழந்தைகளின் மீதேறிப்பறந்தேன்.

வானுக்கும், கற்பனைக்கும் அலைக்கழித்த குழந்தைகளின் இயல்பில் நான் கொண்டாட்டத்தைக் கண்டேன்.

இது தான் எனை நிதானத்துக்கு கொண்டு வந்தது. என்னிலிருந்து திருடப்பட்ட இலட்சனைகளின் நினைவுகளை மீட்டது.

என் கால்கள் தரையில் படத்தொடங்கிற்று. பெருவிரலால் நிலத்தை அழுத்திவிட்டுத்தான் நடக்கிறேன்.

வாயில் மண்வெட்டியுடன் அலைபவர்களைக் கண்டுகொண்டேன். அக்குழிகளுள் விழுந்திடாத படிக்கு நிதானமாயிருப்பதைக் கற்றுக்கொள்வதற்கு கனவுகளுக்குள் நுழைந்தபடி வழிவகைகளைத் தேடிக்கொண்டிருக்கிறேன். இத்தனை அனுபவத்தைத் தந்த தங்களின் குழந்தைக்கு மெத்தப்பெரிய உபகாரம்.

திரு. தெ. இரவீந்திரமூர்த்தி
முன்னாள் அதிபர் (2010-2012)
சிவாநந்தா வித்தியாலயம் (தேசிய பாடசாலை)

உலகெலாம் புகழ் பரப்பும் சிவாநந்தியர்கள்

சிவாநந்தாவின் பழைய மாணவனாக, ஆசிரியராக, அதிபராக எனப் பல படிநிலைகளில் பாடசாலைத் தொடர்பினையுடைய நான், சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தின் அறுபதாவது ஆண்டு வைரவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

வித்தகன் விபுலானந்தன் சீரிய சிந்தனையில் உருவாகிய சிவாநந்த வித்தியாலயத்தில் கல்வி கற்று இலங்கையில் மாத்திரமல்ல கடல் கடந்த நாடுகளிலும் வாழும் சிவாநந்தியர்கள் சிறப்புற்று விளங்குவதுடன் சிவாநந்த வித்தியாலய பழைய மாணவர் மன்றங்களை நிறுவி அதனுடாக பற்பல உதவிகளையும் வழங்கி, வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் உரம் இட்டுச் செயற்படுவதை எண்ணி சிவாநந்தியன் என்ற வகையில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நான் பாடசாலை அதிபராக இருந்த காலத்தில் பழைய மாணவர் சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மேம்பாட்டு நடவடிக்கைகள் இன்றும் என் நினைவிலுள்ளன. அவர்களின் அர்பணிப்புடனான சேவைகள்தான் பாடசாலையின் வளர்சிப் பயணத்தைச் சாத்தியப்படுத்திக்கொண்டிருகிறது என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்துகின்றேன். ஏனைய பாடசாலைகளில் பழைய மாணவர் சங்கங்கள் இருப்பினும் ஒப்பீட்டளவில் சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடும் அர்பணிப்புள்ள சேவைப் பாங்கும் உன்னதமானதே. அந்தவகையில் நானும் ஒரு சிவாநந்தியனாக இருந்துகொண்டி ருப்பதையிட்டு பெருமைப்பட்டுக் கொள்கிறேன்.

இன்று உலகெல்லாம் புகழ் பரப்பிக் கொண்டிருகின்ற சிவாநந்தியர்கள், சிவாநந்த வித்தியாலய உயர்வுக்குப் பல வழிகளிலும் காரணர்களாக உள்ளனர். இவ்வாறு அரும்பணியாற்றி வரும் பழைய மாணவர் மன்றம் பல்வேறு பாதைகளைக் கடந்து இன்று அகவை அறுபதை கொண்டாடும் முகமாக வைரவிழா சிறப்பு மலர் வெளியிடுவது சாலப்பொருத்தமாக அமைகின்றது. மலர் சிறப்புற உழைத்த அனைவருக்கும் இறைவன் நல்லாசிகளை வழங்க வேண்டுமென மனமார வாழ்த்துகின்றேன்

சிவானந்த வளர்ச்சியின் ஆதாரமாக ஆன்மீக வழிப்படுத்தல்

ஆன்மீக மூலம்

ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்டு, ஆன்மீக உணர்வோடு, ஆன்மீகத் துறவியின் பெயரில், ஆன்மீக வழித்தோன்றலாய் வந்த சுவாமி விபுலாநந்தரால் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலையே சிவானந்த வித்தியாலயம். இதனடிப்படையில் ஆன்மீகத்தின் வேர்களே சிவானந்தாவிற்கான அடிப்படை என்பது நிரூபணமாகின்றது. சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயம், இலங்கையில் விவேகானந்த சபையின் ஆரம்பம், இராமகிருஷ்ண மிஷனின் வருகை மற்றும் அதன் கல்விக் கொள்கை, அதனூடாக வெளிப்பட்ட சுவாமி விபுலாநந்தர் மற்றும் அவருடைய கல்விச் சிந்தனை, பாடசாலைக்கு சுவாமி விபுலாநந்தர் தனது குருநாதரான சுவாமி சிவானந்தரின் பெயரை வைத்தமை, சுவாமி விஞ்ஞானானந்தரின் வருகை மற்றும் பாடசாலைக்கு அவரின் நேரடி ஆசீர்வாதம், தொடர்ச்சியாக இருந்துவரும் இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளின் ஆசீர்வாதம், சரஸ்வதி தேவிக்கென தனிக்கோயில் என அனைத்தும் சிவானந்தா ஆன்மீகத்தோடு பின்னிப்பிணைந்துள்ள தன்மையினைக் காட்டுகின்றன.

மூலாதாரமான சந்நியாச பரம்பரை

1929ம் ஆண்டு விபுலாநந்த அடிகளாரால் ஆரம்பிக்கப்பெற்ற கலைக்கோயிலாம் சிவானந்த வித்தியாலயம் இன்று பலவகையிலும் சிறந்து மேலோங்கி நிற்கின்றது. காலத்தின் இயற்கைச் சூழலில் குரு சிஷ்ய முறையில் வதிவிட வசதியுடன் மாணவர்கள் தங்கி வாழ்ந்து கற்கும் நிலையினை ஆக்கத்தக்கதாக இவ்வித்தியாலயம் அடிகளாரால் ஆரம்பிக்கப்பெற்றது. தாம் ஆரம்பித்த வித்தியாலயத்திலே ஆசிரியராக, அதிபராக முகாமையாளராக இருந்து வித்தியாலயத்தினை வளர்த்து வந்த சுவாமிகளது சேவை ஆன்மீகம் கலந்த வளர்ச்சிக்கு அன்றே வித்திட்டமை இன்றும் பாடசாலை

வே. யோகிதாஸ்,
அகில இலங்கை சமாதான நீதவான்
கல்லடி.

வளர்ச்சியில் பங்காற்றிக் கொண்டிருக்கின்றமை கவனிப்பிற்குரியது. சுவாமிகளின் சமாதியும் பாடசாலைச் சூழலில் அமையப்பெற்றது சிவாநந்த வித்தியாலத்திற்குக் கிடைத்துள்ள மாபெரும் ஆன்மீகப் பொக்கிஷம். சுவாமி விபுலாநந்தர் காலத்திலும் அவருக்குப் பிறகும் பல சுவாமிகள் முகாமையாளர்களாகவும், மிஷனின் பொறுப்பாளர்களாகவும் இருந்து சிவாந்தாவை பல வழிகளிலும் வளப்படுத்தினார்கள். இதில் எனது காலத்தில் சுவாமி நடராஜானந்தாஜியும், சுவாமி ஜீவனானந்தஜீயும் செய்த ஆன்மீகத் தொண்டு இன்றும் என் நினைவில் இருந்துகொண்டிருக்கின்றது. நான் மாணவனாக இருந்தது தொடக்கம் இன்றுவரை உள்ள அனுபவத்தில் அவர்களின் சேவையை ஓர் உயர்வான சேவையாகக் கருதுவதோடு, அவையே சிவாநந்தாவின் வளர்ச்சிக்கு மூலாதாரமாக இருந்தது என்பதையும் இக்கட்டுரையினூடு வெளிப்படுத்த விளைகின்றேன். மேலும், சிவாந்தாவில் மாணவராக இருந்து, இராமகிருஷ்ண மிஷன் துறவியர் சங்கத்தில் சேர்ந்து இராமகிருஷண்ண சங்கத்தினூடே தான் கற்ற பாடசாலைக்குச் சேவையாற்றியவர். இதைப் போன்று சிவாநந்தாவில் படித்து துறவியர் பரம்பரையின் மூலம் சேவையாற்றிக் கொண்டிருப்பவர்கள் பலர். என்றாலும், என்னுள் ஆழமான பாதிப்பை உண்டுபண்ணி இன்றும் நெஞ்சில் நிறைந்திருப்பவர் சுவாமி ஜீவனானந்தஜீ மஹராஜ் என்பதை வெளிப்படுத்துகின்றேன்.

> **சிவாநந்த வித்தியாலயமும் இராமகிருஷண மிஷனும் இணையற்ற இரண்டறக் கலந்த அமைப்புக்களாகத் தொழிற்பட உதவியவர் சுவாமிஜீ. சிவாநந்த வித்தியாலயத்தின் எந்தவொரு நிகழ்வும் வணக்கத்துக்குரிய சுவாமிஜீயின் வருகையும் ஆசீர்வாதமும் இல்லாது ஆரம்பமானது இல்லை.**

சிவாநந்த மண்ணில் சுவாமி ஜீவனாநந்தர்

ஸ்ரீமத் சுவாமி விபுலானந்த அடிகளின் வழித் தோன்றலாக மட்டு மண் ஈன்றெடுத்த மாபெரும் துறவி எங்கள் சுவாமி ஜீவனாநந்தாஜீ மகராஜ் அவர்கள். 1925ம் ஆண்டு ஆனி மாதம் இருபத்தி இரண்டாம் நாள் வரையறவுப் பகுதியிலே வாரித் தம்பி அழகம்மா தம்பதியினர் செய்த தவத்தால் அவனியில் அவதரித்தார். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சீவரெத்தினம், பதிவுப் பெயர் தம்பிப்பிள்ளை. இளமைப் பெயர் சீவரெத்தினம் எனும் நாமம் கொண்ட எங்கள் சுவாமிஜீ எட்டு ஆண்டுகள் சிவாநந்தாவில் கல்வி கற்றார். இவர் அமரர் அம்பலவாணர் அதிபரின் வழிகாட்டலில் வளர்ந்தவர். தனது இருபதாவது வயதில் 1945இல் கேம்பிரிஜ் பரீட்சைடயில் சித்தியடைந்த பின்னர் மட்டக்களப்பு ஆனைப்பந்தி வித்தியாலயத்திலும், சீர்புகழும் சிவாநந்த வித்தியாலயத்திலும் அறிவூட்டும் ஆங்கில ஆசிரியராய் பணி புரிந்தார். இக்காலத்தில் தான் ஸ்ரீமத் சுவாமி நடராஜானந்தா அவர்கள் இல்லப் பொறுப்பை ஏற்று நடத்திக்கொண்டிருந்தார். அந்தக் காலத்தில் சீவரெத்தினம் எனும் பெயர் தாங்கிய சுவாமி ஜீவனாநந்தா விடுதி மேற்பார்வையாளராகவும் ஆங்கில ஆசிரியராகவும் பணிபுரிந்தார். உயர்ந்த நிமிர்ந்த தோற்றம், நேரிய பார்வை ஏழைகளுக்கு உதவி புரியும் எண்ணம் கொண்ட அவர் 1958இல் சுவாமி விவேகானந்தரின் நேர்சீடரான சுவாமி விரஜானந்தரின் ஆசியின் அருளால் சன்னியாசம் பெற்று சுவாமி ஜீவனாந்தர் ஆனார்.

பற்றுதல் அற்றும் பயன் கருதாமலும் என் கடன் பணிசெய்து கிடப்பதே என்ற தாரக மந்திரத்திற்கு ஏற்ப அரை நூற்றாண்டுக்கு மேலாக இராம கிருஷ்ண மிஷனின் அறப்பணிகளை நிறைவேற்றி நிலைநிறுத்திய மகான். அவர் 1966ஆம் ஆண்டு கல்லடி - உப்போடை இராமகிருஷ்ண மிஷன் தலைவராக பொறுப்பேற்று ஏழைச்சிறார்களின் இன்னலைப் போக்க காலில் செருப்பு அணியாமல் மட்டக்களப்பில் உள்ள கடைகளில் மாதம் மாதம் 10 ஆம் திகதி ஏறி இறங்கி 1 ரூபாய் வீதம் நிதி

சேகரித்து பின் தங்கிய நிலையில் இருந்த மாணவர் இல்லத்தை உயர்ந்த நிலைக்கு உயர்த்திய உத்தமர். செல்வக் குடும்பத்தில் பிறந்த போதும் வாழ்க்கை வசதிகளை உதறித் தள்ளி விட்டு துறவை மேற்கொண்டு ஆத்மீகப்பணிக்குத் தன்னை அர்ப்பணித்த மகான்.

குழந்தைகளுக்கு அன்னையாவும், தந்தையாவும், ஆசானாகவும் வாழ்ந்தவர். சிவாநந்த வித்தியாலயத்தின் போசகராய், ஆன்மீக வழிகாட்டியாய் இருந்து எம் மாணவர்களை வழிப்படுத்தியவர். சிவாநந்த வித்தியாலயமும் இராமகிருஷ்ண மிஷனும் இணையற்ற இரண்டறக் கலந்த அமைப்புக்களாகத் தொழிற்பட உதவியவர் சுவாமிஜீ. சிவாநந்த வித்தியாலயத்தின் எந்தவொரு நிகழ்வும் வணக்கத்துக்குரிய சுவாமிஜீயின் வருகையும் ஆசீர்வாதமும் இல்லாது ஆரம்பமானது இல்லை. அவரது ஆசியுரையுடன் தான் அனைத்து நிகழ்வுகளும் ஆரம்பமாகும். ஸ்தாபகர் தினம், வருடாந்த பரிசளிப்பு விழா, இல்ல விளையாட்டுப் போட்டி, தெய்வத்திரு மூவர் நிகழ்வு, ஆசிரியர் தினம், சரஸ்வதிப் பூசை, பங்குனி உத்தர நிகழ்வுகள் என அனைத்திலும் தவறாது கலந்து கொண்டு ஆரம்பம் முதல் இறுதி வரையும் எம்முடன் அமர்ந்திருந்து நிகழ்வுகளை பார்த்து ரசித்து உரமூட்டி வழிகாட்டிய மகான்.

ஆயிரமாயிரம் மாணவர்களுக்கும், மக்களுக்கும் ஆத்மீகப் பாதையைக் காட்டியவர். மக்கள் சேவையே மகேசன் சேவை என்னும் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் கோட்பாட்டை நடைமுறையில் வாழ்ந்து காட்டியவர். இவரது பணியின் கீழ் வளர்ந்த சிவானந்த வித்தியாலயத்தில் பயின்ற பல மாணவர்கள் இன்று கல்விமான்களாகவும், கலைஞர்களாகவும், செல்வந்தர்களாகவும், வைத்தியர்களாகவும், உதவி புரியும் உத்தமர்களாகவும், இலங்கையில் மாத்திரமன்றி கடல் கடந்த நாடுகளிலும் பிரகாசிக்கின்றனர். இதற்கு எமது சுவாமியின் அரவணைப்பும், அன்பும், கட்டுப்பாடும் ஆன்மீக் வழிகாட்டலுமே காரணம் என்றால் மிகையாது.

எனக்குக் கிடைத்த ஆசிகள்

இவரிடம் காணப்பட்ட ஆத்மீக சக்தி மக்களை வெளியிடத்தில் இருந்து ஈர்க்கின்ற தன்மை நாமறிந்ததே. அன்பர்கள் விருந்தாளிகளாக வந்தால் மண் வாசனைக்கேற்ற உணவுகள் வழங்கி அவர்களைச் சந்தோசப்படுத்துவதில் தனி விருப்பம் காணுவார். சுவாமிகளின் விருந்தோம்பலுக்கு அமரத்துவம் அடைந்த எனது பாரியார் புனிதவதி சுவாமி கூறுகின்ற சிற்றுண்டிகளை பொறுப்புடன் செய்து கொடுக்க தயங்கமாட்டார். குருதேவரைத் தரிசிக்க, மிஷனுக்குப் போகும் அன்பர்கள் சில நாட்களாக போகாவிட்டால், சுவாமி கண்டதும் "என்ன மேன் இப்பக்கம் காணவில்லை? என்ன சுகமில்லையா?" என்று குசலம் விசாரிப்பார். அவருக்கு மிகுந்த ஞாபகசக்தி உண்டு. அன்பர்களுடனான தொடர்பாடலை சிறந்த முறையில் பேணினார்.

தற்பொழுது நாங்கள் வாழும் கல்லடியில் உள்ள 'வெண்ணிலா' இல்லத்துக்கு அடிக்கல் நாட்டி, ஆசீர்வாதம் வழங்கியதும் சுவாமிஜியேதான். இன்றும் அந்த ஆசிகள் என்னையும் எனது குடும்பத்தையும் வழிநடாத்திக் கொண்டிருக்கின்றது. மட்/மாந்தீவு தொழுநோயாளர் ஆஸ்பத்திரி சூழலில் முருகன் ஆலயம் உண்டு. வருடாந்தம் மிஷனால் திருவிழா செய்வது வழக்கம். சகல ஒழுங்குகளையும் செய்யும்படி என்னிடம் கேட்பார். நான் செல்வனே செய்து முடித்து வைப்பேன். அவர் பிறந்து வளர்ந்த ஊருக்கருகாமையில் உள்ள முருகன் ஆலயத்தை நிர்வகிப்பது சுவாமிக்கு பெரும் சந்தோசம். மேலும், காகிதம் போக்குவரத்துக்கு ஏதும் கடிதங்கள் 'ரைப்' பண்ண வேண்டுமெனில் என்னைக் கூப்பிடுவார் நானும் செல்வனே செய்து கொடுப்பேன். இவ்வாறு ஆன்மீகத்தின் அடிப்டையால் அமைந்த சுவாமிகள் சிவாநந்தா வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கு உயரியது. இந்த அடிப்படைகளில் ஆன்மீகமே சிவாநந்தாவிற்கு மூலம். எப்போது சிவாநந்தா ஆன்மீகப் பாதையினின்று விலகுகின்றதோ அப்போது அதன் வளர்ச்சியிலும் தளர்வு நிலையேற்படும். எனவே இராமகிருஷ்ண மிஷன் மற்றும் சுவாமிகளின் அறிவுரைகளினூடான செயற்பாடுகளே சிவாநந்தாவின் வளர்ச்சிக்கு வளம் சேர்க்கும் என்பதை அறிவுரையாய் கூறுகின்றேன். சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தின் வைரவிழா மலர் சிறந்த ஆவணமாக சிவாநந்த சமூகத்தைச் சென்றடையப் பிரார்த்திக்கின்றேன். மேலும், சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தின் வரலாற்றில் இந்த நூல்வெளியீடு முக்கியமான மைல்கல் என்று சொல்வதோடு, சந்தர்பத்தை ஏற்படுத்திக்கொடுத்த உறுப்பினர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

சிவாநந்தாவில்
பெற்ற உயர்கல்வியும்
பன்மொழித்திறனும்

1962 முதல் 1968 டிசம்பர் வரை சிவாநந்தாவில் கற்கும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. எனக்கு முன்னரே எனது தம்பி உட்பட 5 சகோதரர்களும் அங்கு கற்றிருந்தனர். அதனால் அங்கு நானும் கற்கவேண்டுமென்பது எனது தணியாத ஆசை. எனது தந்தையின் விருப்பம் நான் தொடர்ந்து கலைப் பிரிவில் உயர்தரம் பயின்று பல்கலைக்கழகம் செல்லவேண்டுமென்பதாகும். ஆனால் நான் கண்டிப்பாக ஆங்கில மொழி மூலம் சகோதரர்கள் போல் கற்க வேண்டுமெனப் பிடிவாதம் பிடித்துக் கற்றேன். 1964 டிசம்பரில் ஆங்கில மொழி மூலம் க.பொ.த. சாதாரண தரத்தில் 5 பாடங்களில் தேறினேன். அதில் ஆங்கிலத் தில் திறமைச் சித்தியும் உள்ளடங்கியிருந்தது. ஆனால் உயர்கல்வி கற்க அது போதுமானதாய் இருக்கவில்லை. இதனால் கல்வியை அத்தோடு நிறுத்த நினைத்தேன்.

மீண்டும் தந்தை கலைப்பிரிவில் உயர்தரம் கற்க அறிவுறுத்தினார். அதற்குச் சம்மதித்துக் கற்க ஆரம்பித்தேன். சமஸ்கிருதம், தமிழ், புவியியல், வரலாறு எனும் பாடங்கள் எனது தெரிவுகளாயின. முதற் தடவையிலேயே சமஸ்கிருதத்தில் அதி விசேட சித்தியும், தமிழில் விசேட சித்தியும், புவியியல் மற்றும் வரலாறு என்பவற்றில் திறமைச் சித்தியும் பெற்று பல்கலைக்கழகம் சென்று பட்டதாரியானேன்.

உயர்தரத்தில் வியாக சிரோமணி பூரண தியாகராஜக் குருக்கள் அருமை யாகக் கற்பித்த சமஸ்கிருத பாடமே ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளைத் திருத்தமாக உச்சரிக்கும் வல்லமையை எனக்குள் ஏற்படுத்தியது. இது பின்னாளில் தொழில்த் தேவைக்காகச் சிங்களத்தில் சித்திபெற உதவியது. இந்த வாய்ப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களில் அந்நாளில் இருக்கவில்லை. எனவே அது சிவாநந்தா எனக்களித்த பெரும்பேறெனக் கருதுகிறேன். அத்தோடு சமஸ்கிருதம், ஆங்கிலம், சிங்களம் என்பன ஒரே குடும்ப மொழிகள். அவற்றின் மொழியமைப்பு, உச்சரிப்பு என்பன ஒத்த விதத்தி லுள்ளன. அதுவே அம் மொழிகளில் சிறப்புத் தேர்ச்சி பெற உதவியது. இப்போது உயர்கல்வி பெறும் மாணவர்க்கு இவ்வாய்ப்பு கிடைப்பதில்லை. சமஸ்கிருதக் கல்வி தற்போது எமது பகுதிகளில் அருகிவிட்டது. வேத மொழியான அது எமது சமய விழுமியங் களை உணரவும் வழிவகுக்கும் என்பது எனது பணிவான கருத்தாகும்.

சச்சிதானந்தம்,
காரைதீவு

கோ. குகன்
விரிவுரையாளர், மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

தமிழ்ப் பனுவல்களின் பாயிரங்களும் யாழ் நூலின் பாயிரவியலும் : ஆராய்ச்சிப் பண்பு நோக்கிலான ஒப்பீடாய்வு

அறிமுகம் :

பழந்தமிழ் இலக்கிய, இலக்கணங்களின் பாயிரங்கள் ஆராய்ச்சிப் பண்பும் விமர்சனப் பண்பும் உடையவையாகும். குறித்த இலக்கிய, இலக்கணப் பனுவல்களை விளங்கிக்கொள்வதற்கு அவற்றுக்கமைந்த பாயிரங்கள் மிகவும் அவசியமானவை.

"ஆயிர முகத்தான் அகன்றதாயினும்
பாயிரமில்லது பனுவல் அன்றே"

என்று திருமந்திரம் குறிப்பிடுவதால் ஒரு பனுவலுக்குப் பாயிரம் அமைய வேண்டியதன் அவசியத்தை விளங்கிக்கொள்ளலாம். இதனால் நன்னூல் போன்ற இலக்கண நூல்களில் பாயிரம் அமைய வேண்டிய முறைமையை வரையறுப்பதற்கு இலக்கணங்களும் வகுக்கப்பட்டன.

சுவாமி விபுலாநந்தர் நவீன இலக்கியங்களும் நவீன ஆய்வு முறைகளும் தமிழுக்கு அறிமுகமாகிய காலத்தில் வாழ்ந்தவர். இதனால் அக்காலவுணர்வுக் காட்பட்டும் அதேநேரம் பழந்தமிழ் இலக்கியங்களில் பரிச்சயமும் ஈடுபாடும் உடையவராக விளங்கினார். இதனை அவருடைய இசையாராய்ச்சி நூலான யாழ் நூலை அடிப்படையாகக் கொண்டு தெளிந்து கொள்ளலாம். இந்நூல் ஏழு இயல்களைக் கொண்டுள்ளது. முதலாவது இயலாகப் "பாயிரவியல்" அமைகின்றது. இவ்வியலானது ஆய்வு நூலான யாழ் நூலுக்குத் தோற்றுவாயாக அமைகிறது. அதேவேளை பழந்தமிழ் இலக்கியப் பனுவல்களுக்கமைந்த பாயிரங்களின் பண்புகளையும் பெற்றுள்ளது. இந்நிலையில் யாழ் நூலின் பாயிரவியலை நோக்கி, அது பழந்தமிழ் இலக்கிய, இலக்கணப் பாயிர மரபை எந்தளவிற்கு உட்கொண்டிருக்கின்றது என்பதை எடுத்துக்காட்டுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

யாழ் நூலின் பாயிரவியல் :

கடவுள் வாழ்த்து :

கடவுள் வாழ்த்து என்பது பாயிரக் கூறுகளுள் ஒன்று. கடவுளை வணங்குவதன் நோக்கம் எடுத்துக்கொண்ட விடயம் இனிது முடிதற்பொருட்டே யாதலின் வாழ்த்துக்கள் எல்லாம் வேண்டுதல்களே என்று கருதலாம். சமணக் காப்பியங்களான சீவகசிந்தாமணியிலும் சூளாமணியிலும்தான் முதன்முதலாகச் சமயக் கடவுளர் வாழ்த்து இடம்பெறுகின்றது. யாழ் நூலின் கடவுள் வணக்கப் பகுதி மூத்த பிள்ளையார், இளைய பிள்ளையார், நிலங்கடந்த நெடுமுடியண்ணல், திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள், வெற்றிவேல் போர்க்கொற்றவை, திருவின் செல்வி, இசைமடந்தை ஆகிய ஏழு கடவுளர்களை வணங்கும் ஏழு பாடல்களைக் கொண்டது. இவ் வேழு பாடல்களின் ஆரம்பமும் முறையே உழை, இளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை ஆகிய ஏழு இசைநரம்புகளின் பெயர்களாக உள்ளன. அதேநேரம் நால்வகைச் செய்யுள் என்று அவர் குறிப்பிடும் முதனடை (01), வாரம் (03), கூடை (01), திரள் (02) ஆகியவற் றின் அமைப்பில் உள்ளன. இவ்வாறு பார்க்கும் போது யாழ் நூலின் கடவுள் வாழ்த்துப் பகுதி அந்நூலின் பொருளோடு ஒன்றி நிற்பதைக் காணலாம். ஒரு விதத்தில் விபுலாநந்தரின் வித்துவத்திறன் கடவுள் வாழ்த்துப் பகுதியில் வெளிப்படுகின்றது எனலாம்.

நூற்பொருள் :

கடவுள் வாழ்த்தைத் தொடர்ந்து பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் யாழில் இசை நரம்புகள் கட்டப்பட்ட ஒழுங்கு முறை தொடர்பாக ஓர் ஆராய்ச்சியை நிகழ்த்துகின்றார். இதற்குப் பண்டைய இலக்கியங்களில் யாழ் பற்றியுள்ள பாடலடிகளைத் துணையாகக்கொள்கிறார். அவற்றின்படி ஏழு இசை நரம்புகளும் நான்கு வகையான ஒழுங்கு முறையில் கட்டப்பட்டன என்று கூறுகின்றார்.

உழை, இளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் இளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை, உழை தாரம், உழை, குரல், இளி, துத்தம், விளரி, கைக்கிளை இசை நரம்புகள் எழுப்புகின்ற இயற்கையொலிகளை வடநூல் இசையாராய்ச்சியாளர் களின் சுர வரிசையோடு தொடர்புபடுத்தி அமைதி காணுகின்றார். அவ்வடிப்படையில் உழை, இளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை (நி,ச,ரி,க,ம,பத) என்பதே சரியான சுர வரிசை என்று பரிந்துரைக்கிறார். இந்த முடிவுக்கு அடிகளார் வருவதற்கு பண்டைய குரல் என்பதை "ம" என்ற மத்திம சுரமாக அடையாளம் கண்டதே காரணமாகும். மட்டக்களப்பு வாவியில் எழுகின்ற பாடும்மீன் இசை பற்றிய நீரரமகளிர் இன்னிசைப் பாடலின் ஒரு பகுதியையும் அக்கருத்தை உறுதிப்படுத்தும் பழந்தமிழ் இலக்கியச் செய்திகளையும் இதற்கு ஆதாரமாகக்கொள்கிறார். "யாழ்க் கருவியிலே இயைபுடைய நரம்புகள் பலவற்றை இசைத்தெழுப்புகின்ற பண் போன்ற இன்னிசையொலி ஒன்று ஈழநாட்டின் கிழக்குக் கரையிலுள்ள மட்டக்களப்பு வாவியினுள்ளே கேட்கப்படுகின்றது" (யாழ் நூல் – பாயிரவியல், ப. 06)

விபுலாநந்தரின் கருத்துப்படி மட்டக்களப்பு வாவியினுள்ளிருந்து எழுகின்ற இன்னிசையொலி என்பது உண்மை. அதை அவர் அனுபவித்து எழுதியிருக்கின்றார்.

"இளவேனிற் காலத்திலே நிறைமதி நாளாகிய பூரணை நாளிலும் அதற்கு முன்னும் பின்னுமுள்ள நாட்களிலும் வானம் களங்கமற்றிருக்கும் வேளையிலே, யாமப்பொழுதிலே, புளியந்தீவுக்கோட்டைக்கும் கல்லடிக்கும் இடையிலே, சிறுதோணியினைச் செலுத்திச் சென்று வாவி நடுவிலே ஆர்ப்பரவமின்றி அமைதி நிலையிலிருந்து உற்றுக் கேட்டால் நீரினுள்ளிருந் தெழுகின்ற அற்புதமாகிய இன்னிசையொலி செவிவழிப்புகுந்து உள்ளத்தை யுருக்கும். இத்தகைய அற்புத இசையொலியானது வட அமெரிக்கா நாட்டின் மேற்றிசையிலுள்ள கலிபோர்னியா (California) நாட்டிலும் ஈழத்து மட்டக்களப்பு நாட்டிலுமன்றிப் பிறிதெவ்விடத்திலும் கேட்கப்பட்டிலதென அறிஞர் கூறுவர்" (யாழ் நூல் – பாயிரவியல், ப. 07)

அவ்வோசை மீன் பாடுகின்ற ஓசை அல்ல என்று அவர் மறுக்கின்ற விதம் அறிவியல் பூர்வமானது.

"இலங்கைக்கு வரும் மேனாட்டார் இவ் விசையைச் செவிமடுப்பதற்காக மட்டக்களப்பிற்கு

வருவதுண்டு. இவ்விசை நீரினுள்ளிருந்தெழுவ தாதலின், நீர்வாழ் செந்தின் ஒலியாதல் வேண்டுமென எண்ணிப்போலும், அந்நிய நாட்டார் இதனைப் பாடும் மீன் (Singing fish) இசையென்பர். மீன்கள் நீரினுள் குதித்து ஆடுதலைக் கண்டோமேயன்றி, அவை மகிழ்ச்சியால் பாடுதலை யாண்டுங் கண்டிலோ மாதலின், அந்நிய நாட்டாரது உரையினை யாம் ஏற்றுக் கொள்ளமாட்டோம்" (யாழ் நூல் – பாயிரவியல், ப. 07)

அப்படியானால் அவ்வோசை எங்கிருந்து, எப்படி வருகிறது? அவ்வோசைக்கும் விபுலாநந்தர் பரிந்துரைக்கும் சுரவரிசை ஒழுங்கிற்கும் என்ன தொடர்பு?

"மணி, கடல், யானை, குழல், மேகம், வண்டு, தும்பி, சங்கு, பேரிகை, யாழ் எனக்கூறிய பத்துவகை நாதங்களுள்ளே சங்க நாதமானது முரற்சி, முழக்கம் என்று இரு வகைப்படுமென்று அறிஞர் கூறுவர். 'முந்நீர் வலம்புரி சோர்ந்தசைந்து வாய்முரன்று முழங்கியீன்ற மெய்ந் நீர்த் திருமுத்து' எனச் சீவகசிந்தாமணி ஓம்படைச் செய்யுளினுள்ளே இருவகை நாதமுங் கூறப்பட்டன. 'மோது முதுதிரை யான் மொத்துண்டு போந்தசைந்த முரல்வாய்ச் சங்கம்' எனச் சிலப்பதிகாரம் முரற்சியை மாத்திரம் கூறுகின்றது. இம்முரற்சியானது சங்கினது வளர்ச்சிக் கேற்ப நாதம் வேறுபட்டுத் தோன்றும். மட்டக்களப்பு வாவி கடலொடு கலப்பதாதலின், ஒரு வகைச் சங்கு வாழ்தற்கிடமாயிற்று. அளவில் சிறியவும் பெரியவு மான சங்குகள் இடையிட்டு முரல்வதனாலே ஏற்படும் ஓசையின் சேர்க்கை இசைத்தன்மை பெற்றுத் தோன்றுகிறது. அதெவ்வாறா யினும் கவிதை யுட் கூறப்பட்ட நீரர மகளிரது கிளையிற் பிறப்புமுறை இசைமரபிற்கு ஒத்ததேயாம்" (யாழ் நூல் – பாயிரவியல், பக். 9–10)

அக்கவிதை நீரரமகளிரின்னிசைப் பாடலாகும். அப்பாடலில் "ஐந்தாம் நரம்பின் அமைதியினை யானறிந்தேன்" என்றும் அது மத்திம சுரமென்றும் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு விபுலாநந்தர் குறிப்பிட்ட சுரவரிசை ஒழுங்கு ஏனைய இசையாராய்ச்சி யாளர்களின் சுர வரிசை ஒழுங்கிலிருந்து வேறுபட்டது. முக்கியமாக யாழ் நூல் எழுவதற்கு முப்பது ஆண்டுகளுக்கு முன் 1917 இல் ஆபிரகாம் பண்டிதர் எழுதிய "கருணாமிர்த சாகரம்" என்ற நூலில் சொல்லப்பட்ட சுரவரிசை ஒழுங்கிலிருந்து வேறுபட்டது. ஆபிரகாம் பண்டிதர் பற்றியோ அவருடைய இசையாராய்ச்சி பற்றியோ விபுலாநந்தர் அறியாமலிருந்திருக்க வாய்ப்பில்லை. இவ்விடயம் கவனத்திற்கொள்ளுதற் குரியது.

தவிர, நூலினுள் கூறப்படவிருக்கின்ற இசையோடு தொடர்புபட்ட மேலும் பல விடயங் களையும் குறிப்பிடுகின்றார்.

"நகையே அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று அப்பா லெட்டே மெய்ப்பாடென்ப" என்று எட்டு மெய்ப் பாடுகள் பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடு கின்றது. அவற்றோடு சமநிலையையும் சேர்த்து ஒன்பது மெய்ப்பாடுகள் பற்றித் தொல்காப்பியர் கூறுகின்றார்.

இசை நரம்புகள் நிற்கும் தானங்களை மெலிவு, சமன், வலிவு என்று மூன்றாக வகைப்படுத்திக் கூறுகின்றார்.

இசைத் துறையில் இன்று ஏற்றம், இறக்கம் என்ற சொல்லாட்சிகள் குறிப்பிடுகின்ற ஆரோசை, அமரோசை பற்றிக் கூறுகின்றார்.

முதனடை, வாரம், கூடை, திரள் என்ற நால்வகைச் செய்யுள் பற்றிக் கூறுகின்றார்.

தேவபாணி, பரிபாடல், மிடற்றுப்பாடல், கருவிப்பாடல், பாணர் வரன்முறை பற்றியெல்லாம் உள்ள பழந்தமிழ் இலக்கியச் செய்திகளைத் தருகின்றார். இவ்விடயங்கள் பற்றி நூலினுள் விரித்துரைக்கப்படும் என்ற செய்தியையும் பதிவு செய்கின்றார்.

யாழ் தெய்வத் தன்மையுடையது என்பதையும் அதேநேரம் யாழே ஒரு தெய்வம் என்பதையும் பழந்தமிழ் இலக்கிய ஆதாரங்களினூடாக எடுத்துக் காட்டுகின்றார். (யாழுக்குரிய தெய்வம் 'மாதங்கி' என்பதை நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணி உரையுட் கூறியுள்ளார்)

யாழ் தமிழ் நாட்டிலிருந்து பிற நாடுகளுக்குப் பரவிய வரன்முறை பற்றியும் குறிப்பிடுகின்றார்.

தொடர்ந்து நூல் தோன்றிய வரன் முறை பற்றிக் கூறுகின்றார். முக்கியமாக நூலெழுதுவோர் மரபின்படி தன்மைப் பன்மையில் எழுதாமல் தன்மை ஒருமையில் தான் எழுதுவதாகவும் பத்து வருடங்கள் இதற்காகத் தான் உழைத்ததாகவும் குறிப்பிடுகின்றார். தான் நிகழ்த்திய விரிவுரைக்

குறிப்புகள் தமிழ்ப்பொழில், செந்தமிழ் ஆகிய இதழ்களில் தான் எழுதிய கட்டுரைகள் மற்றும் தான் ஆற்றிய உரைகள் என்பன நூலின் கருப் பொருளாகியுள்ளதையும் கூறுகின்றார்.

தமிழ்ப் பனுவல்களின் பாயிரங்களும் யாழ் நூலின் பாயிரவியலும் :

பழந்தமிழ் இலக்கிய, இலக்கணங்களுக் கமைந்த பாயிரங்களை மூன்று வகைப்பாட்டுக்குள் அடக்கலாம்.

நூல் தோன்றிய காலத்துக்குப் பின் வேறொரு வரால் எழுதிச் சேர்க்கப்பட்ட பாயிரம் : அகநானூறு, பதிற்றுப்பத்து ஆகியவற்றின் பாயிரங்களும் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றின் பதிகங்க ளும் பிற்காலத்தில் எழுதப்பட்டவை என்பர். இதனால் அவை தருகின்ற தகவல்கள் தொடர்பாகப் பல ஐயப்பாடுகள் உள்ளன.

நூல் தோன்றிய காலத்திலேயே வேறொரு வரால் அதாவது நூலாசிரியரின் குரு, சீடன், ஒருசாலை மாணாக்கன் ஆகியோரால் எழுதப்பட்ட பாயிரம்: தொல்காப்பியத்துக்கமைந்த சிறப்புப் பாயிரம் இவ்வகையானது. இதனைத் தொல்காப்பியரின் பன்னிரு மாணவர்களில் ஒருவரான பனம்பாரனர் எழுதியுள்ளார்.

நூலாசிரியராலேயே எழுதப்பட்ட தற்சிறப்புப் **பாயிரம் :** திருக்குறளுக்கமைந்த பாயிரம் இவ்வகை யில் குறிப்பிடத்தக்கது. இது நூலின் பொதுப்பகுதியாக அமைவது. இதில் சாதாரண பாயிரத்தின் தன்மைகள் பெரும்பாலும் குறைவு.

“பருப்பொருட்டாகிய பாயிரம் கேட்டார்க்கு
நுண்பொருட்டாகிய நூலினிது விளங்கும்”

என்று இறையனார் அகப்பொருளுரை கூறுவதைப் போல அமைவது. யாழ் நூலின் பாயிரவியல் இத்தகையதே. பாயிரவியலில் உள்ள இசை தொடர்பான கருத்துக்களைத் தெளிவாக விளங்கிக்கொண்டாலேயன்றி ஏனைய ஆறு இயல்களையும் படிக்க முடியாது. அந்த வகையில் ஒரு ஆய்வின் அறிமுக அத்தியாயமாக முதலாவது அத்தியாயம் அமைவதைப் போல இசையாராய்ச்சி நூலான யாழ் நூலின் முதலாவது இயலான பாயிரவியல் அமைகின்றது.

ஓர் ஆய்வு, ஆய்வுப் பொருண்மை தொடர் பாகத் தனது காலத்தும் அதற்கு முன்னும் நிகழ்ந்த ஆய்வுகளைக் கருத்திற்கொள்ள வேண்டும். ஆனால் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல விபுலாநந்தரிடம் அவ்வணுகுமுறை இருக்கவில்லை என்று குறை கூறப்படுகின்றது. இங்குதான் “தற்சிறப்புப் பாயிரம்” என்பதன் இலக்கணத்தைத் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

“தோற்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான் தற் புகழ்தல் தகுதி அன்றே”

என்று நன்னூல் கூறுவதைப் போல தற்சிறப்புப் பாயிரத்தில் நூலாசிரியனது சிறப்போ, நூலினது சிறப்போ பேசப்படுவதில்லை. தெய்வ வணக்கமும் நூலினுள் வரும் பொருளுமே கூறப்படும். யாப்பருங்கல உரையில் குணசாகரர்,

“வணக்கம் அதிகாரம் என்றிரண்டும் சொல்லச்
சிறப்பென்னும் பாயிரமாம்”
“தெய்வ வணக்கமும் செயப்படுபொருளும்
எய்த உரைப்பது தற்சிறப்பாகும்”

என்னும் இரண்டு நூற்பாக்களைத் தற்சிறப்புப் பாயிர இலக்கணம் கூறுவதாக எடுத்துக் காட்டுகின்றார். தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களை நோக்கும் போது நூலாசிரியர் எவரும் தம்மை வியந்து கூறியதைக் காண முடியவில்லை. மாறாகத் தம்மை மிகவும் தாழ்த்திக் கூறிய அவையடக்கங்களையே காணக்கூடியதாகவுள்ளது (பாயிரவியலிலே அவை யடக்கப்பகுதி பெரிதாக அமையவில்லை யெனினும் அவையடக்கத்தின் இயல்பான போக்கிலே தன் சிறுமையினைக் குறிப்பிடுகின்றார்). ஆனால் தற்சிறப்புப் பாயிரத்துக்குப் புறனடை கூறும் நன்னூல் எந்தெந்த இடங்களில் தற்புகழ்ச்சி இடம்பெறலாம் என்பதைக் குறிப்பிடுகின்றது.

“தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தகும் புலவர்க்கே”

திருஞான சம்பந்தரின் திருக்கடைக் காப்புச் செய்யுட்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பத்து வருடங்களாக இசையாராய்ச்சியில் ஈடுபட்டி ருந்த சுவாமி விபுலாநந்தரின் ஆய்வு முடிவு சமகாலத்

தில் இசைத்துறையில் செல்வாக்குச் செலுத்திய இசையாராய்ச்சி யாளர்களின் கருத்துக்களோடு ஒத்துப்போக வில்லை. இதனால் தனது கருத்தை அழுத்தமாகவும் ஆதாரபூர்வமாகவும் முன்வைக்க வேண்டிய அவசியம் விபுலாநந் தருக்கு ஏற்பட்டுள்ளது. பொதுவாக, நடை முறையில் இருக்கின்ற ஒரு கருத்தை திடீரென்று மறுத்துரைப்பதால் ஆய்வுலகில் காரசாரமான கருத்துக்கள் முன்வைக்கப் படுவது வழமை. ஆய்வுக் கருத்தையன்றி ஆய்வாளர் மீது அவதூறு சொல்வது போன்ற ஆள்நிலைத் தாக்குதல்கள் நடப்பதுமுண்டு. இவை இயலாமையின் வெளிப் பாடுகளாக அமைபவை. தமிழாய்வுலகில் தமது ஆய்வு முடிவுகளை தயக்கமின்றி வெளிப் படுத்தி தாக்குதல்களுக்குள்ளான எஸ். வையாபுரிப் பிள்ளை போன்ற ஆய்வாளர்களின் வரலாறுகளும் உள்ளன. ஓர் ஆன்மீகவாதியான சுவாமி விபுலாநந்தர் ஆய்வுலகின் இத்தகைய ஆரோக்கியமற்ற சூழலை எதிர்கொள்வதற்கு நிச்சயமாக விரும்பியிருக்க மாட்டார். அதனாலோ என்னவோ "நூலெழுதுவோர் மரபின் வண்ணம் இதுவரையும் தன்மைப் பன்மை வழங்கியதனை நிறுத்திக் கொண்டு, தன்மை ஒருமையில் நின்று கூறும் இச்சின்மொழிகளுக்கும் அறிஞர் செவிசாய்த்தருள்வாராக" என்று பாயிரவி யலில் பதிவு செய்கிறார். "சின்மொழிகளுக்கும்" என்பதிலுள்ள "உம்" இடைச்சொல் தனது காலத்து இசையாராய்ச்சிகள் பற்றி விபுலாநந்தர் அறிந்திருந் ததையே சுட்டுகின்றது.

முடிவுரை :

பண்டைத் தமிழ் இலக்கிய, இலக்கணப் பரிச்சயத்தோடு இலக்கிய ஆக்க நெறிமுறைகளில் பாயிரங்கள் பெறும் முக்கியத்துவத்தையும் நன்கு விளங்கியே விபுலாநந்தர் யாழ் நூலின் பாயிரவியலை அமைத்துள்ளமை தெளிவாகின்றது. பழந்தமிழ் இலக்கிய, இலக்கணப் பனுவல்களின் தற்சிறப்புப் பாயிரமே யாழ் நூலின் பாயிரவியலாகும். கடவுள் வாழ்த்தும் நூற்பொருளும் மட்டுமே பாயிரவியலில் அமைந்திருப்பது இக்கருத்துக்குச் சான்றாகும். விபுலாநந்தரின் யாழ் நூற் பனுவலைத் தெளிவாக விளங்கிக்கொள்ளாமையால் அக்கருத்துக்களை ஏற்பதும் மறுப்பதுமான ஊகங்கள் முன்வைக்கப் படுகின்ற இக்காலத்தில் யாழ் நூல் பரிந்துரைக்கும் இசை பற்றிய கருத்துக்களை விபுலாநந்தர் பின்பற்றியுள்ள ஆய்வு முறைமை, அவருடைய பழந்தமிழ் இலக்கிய, இலக்கணப் பரிச்சயம், நேர்மை, துணிவு ஆகியவற்றின் பின்னணியிலேயே விளங்கிக்கொள்ள முடியும்.

உசாத்துணைகள்

சுப்பிரமணிய அய்யர், 1959, தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, சென்னை : அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்.

விபுலாநந்தர், 2003, யாழ்நூல் (திருத்தப்பட்ட மூன்றாம் பதிப்பு), திருநெல்வேலி, தமிழ்நாடு : யாதுமாகி பதிப்பகம்.



Dear Shivananda, Shivanandians !!

Coming to an end of a 29 years journey in Shivananda, I think I have something in my eye.... No, it's just a river of tears. Dear Shivanandians !, I've watched you learn and grow and change from day to day and generation to generation and I'm sure that I've done so much to guide your way. It's almost time to say GOODBYE but, not just yet, so please don't cry. What a wonderful journey it has been and here we are, so near to the end. You listened and learned, you worked so hard from then till now. You've come so far. There were bumps along the way, but we had fun most every day. Now I'll move on and start again. You'll have new goals and make new friendly teachers. Please know you'll always be a part of fond memories in my heart .

.

I know that I have taken you far, but not to the extreme end, cause I know you will find it ! I leave nothing to myself, its all with you. The greatest gift you all gave me is the smile every morning when I enter the school. I take this with all my pleasure the treasure of memories I gathered from my legend in Shivananda. Every dot of sand I have touched with blessings no doubt. I thank you Shivananda with all my heart. In return Shivananda had given me the utmost strength to face the most difficult challenges in my life ahead .

.

A last word, Dear Shivanandians, you made me successful through your performances and achievements. My journey with you may stop here, but for you, it is the way ahead to go. Be dedicated to work for your school, teachers, and the
society .

.

Wish you all the best !!

GOOD BYE

Loving Teacher ,
Mignonne

பொறியியலாளர் **செ. கதிர்காமநாதன்,**
சிரேஸ்ட விரிவுரையாளர்.
இலண்டன்.

சிவாநந்தாவைச் சிகரம் தொட வைத்த

புகழாளன்

கிழக்கிலங்கைக்கு மட்டுமல்ல, தமிழ்கூறும் நல்லுலகிற்கு உத்தம புருசர்களை வழங்கிய பெருமை காரைதீவு மண்ணுக்குச் சேரும். 'முத்தமிழ்வித்தகர்' சுவாமி விபுலானந்த அடிகள், 'சேவையின் சிகரம்' சுவாமி நடராஜானந்தாஜீ அவர்கள் வரிசையில் தோன்றிய மாமனிதர்தான் மட்டுநகர் கல்லடி சிவானந்தா வித்தியாலய முன்நாள் அதிபர் அமரர் க. கணபதிப்பிள்ளை அவர்கள்.

அதிகாலை வேளை, ஆசிரியர்களும், மாணவர்களும் பாடசாலைக்கு வரும் முன்பே பழையதொரு மோட்டார் வண்டியில் இருந்து தூய வெண்ணிற உடையுடன் அதிபர் வந்து இறங்குவார். மாலை ஆறு மணிக்குப் பின்னர்தான் பாடசாலையை விட்டுச் செல்வார். அவரைக் காரியாலயத்துக்குள் பார்ப்பது அரிது. வகுப்பறைகள், விடுதி, விளையாட்டரங்கம் என்று எப்பொழுதும் அலைந்த வண்ணம் இருப்பார். அன்னாரிடம் நாம் கற்றுக்கொண்ட பல விடயங்கள் உள்ளன. மிகவும் எளிமையானவர், சுத்தம் சுகாரத்தைப் பேணுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பவர். அவர் இருந்த வேளை சிவானந்த வித்தியாலயச் சுற்றாடலில் எந்தவொரு குப்பை கூழத்தையும் பார்க்க முடியாது. அவரும் குப்பைகளைப் பொறுக்கி எடுத்துவிடுவார், மாணவர்களையும் அந்தப் பழக்கத்துக்கு ஆட்படுத்தி விடுவார்.

வீட்டிலிருந்து 'பனம் விதைகள்' கொண்டுவரச்சொல்லி, பாடசாலையின் பின்புறமிருந்த விளையாட்டு மைதானத்தின் பின்னால் நடுவதற்கு ஒழுங்குசெய்தது எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றது. பிற்காலத்தில் அது மிகவும் பயனுள்ளதாக இருந்திருக்கும் என்பதில் ஐயம் இல்லை. கையில் எப்போதும் ஒரு பிரம்பு வைத்திருப்பார். ஆனால், அதற்கு வேலை இருக்காது. ராஜா, ராஜா என்றோ அல்லது Sona, Sona என்றோ மாணவர்களை மிகவும் அன்புடன் அழைப்பார். மகன், மகள், என அன்புடன் மாணவர்களுடன் பழகிய முதல் அதிபராக நான் அவரைக் கண்டேன். இறுதியில் பாடசாலையில் இருந்து அவர் இளைப்பாறும் வேளை வந்தது. பிரியாவிடையின் போது அவர் தேம்பித்தேம்பி அழுதது இன்னும் என் கண்முன்னே காட்சி தருகின்றது.

பல்துறைப் புலமையின் சொந்தக்காரன்

திரு. கணபதிப்பிள்ளை, திரு. ரூபசிங்கம் ஆகியோருடன் நானும் ஏறத்தாழ 1-2 வருட இடைவெளியில் சிவானந்த வித்தியாலயத்தில் ஆசிரியராகச் சேர்ந்திருந்தேன். கிடைத்த நேரங்களிலெல்லாம் நாம் ஒன்றாகவே இருப்போம். எனவே எம் மூவரையும் Three Musketteers (ஆங்கில கதை) என்று கூறுவார்கள். இருந்தும் வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டிகளில் மூன்று இல்லங்களுக்கும் பிரித்துப் பொறுப்பாசிரியராகப் போடப்படுவோம். அந்த வேளையில் மாத்திரம் எங்களிடையே ஆரோக்கியமான போட்டி இடம்பெறும். மற்றப்படி வித்தியாலய செயற்பாடுகளிலோ, சமூக முயற்சிகளிலோ சமய நிகழ்ச்சிகளிலோ நாம் மூவரும் ஒன்றாகவே செயற்படுவோம்.

இதை எழுதவிளையும் போது திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் எத்தனை அமரராகியவர்களுக்கு நினைவஞ்சலி எழுதியுள்ளார் என்ற நினைவு வந்தது. அது மாத்திரமல்ல, நினைவு வெளியீடுகளை அமைத்துத் தரும்படி கோரிய பொழுதெல்லாம் அவற்றை வடிவமைத்து பிழைத்திருத்திப் பிரசுரித்து உதவியுள்ளார். அவ்வாறு செய்யும் போது, அச்செழுத்துக்கான வகை, வடிவம், அளவு, சொல், வசனம், இடைவெளி மற்றும் குறியீடுகளில் மிகவும் கவனம் செலுத்துவார். மலர் வெளியிடும் வரை ஓய மாட்டார்.

இவ்வாறு பிழையற, அழகுற பந்திகள் வகுக்க, நிறுத்தல் குறியீடுகள் முதலியவற்றுடன் சொல்லாட்சி மிக்க ஆக்கங்களை எழுத, அவருடைய ஆசிரிய அனுபவம் உறுதுணையாக இருந்தது. ஆசிரியராக சிவானந்த வித்தியாலயத்தில் இணைந்து, கௌரவமான ஆசிரியத் தொழிலிற்குரிய பண்புகளுடன் அதிபர், சக ஆசிரியர்கள், மேற்பார்வையாளர்கள், மாணவர்கள் ஆகியவர்களுடன் நல்லுறவைப் பேணிப் பணியாற்றினார். மாணவர்களோடு ஆதரவாகவும் சகஜமாகவும் பழகியதால் மாணவர்களின் அன்பைப் பெற்றார். அவரை வீ. கே. என்றே வாஞ்சையுடன் பேசுவார்கள். அவர் ஆசிரியராக, கல்வி அதிகாரியாக, உதவி அதிபராக, பல பயிற்சி நிலையங்களில் போதனாசிரியராக கடமையாற்றிய காலத்திலும் கூட பொது மக்களுடனான அவருடைய உறவு சிறப்பாக இருந்தது. மாணவர்களின் பெற்றோர், சக ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர் களுடன் தானே அறிமுகமாகி சகஜமாகப் பேசும் உயர் மனித நேயப்

சோ.சிவலிங்கம்
ஓய்வுநிலை முன்னாள் ஆசிரியர்
சிவானந்த வித்தியாலயம் (தேசிய பாடசாலை)

பண்புள்ளவர். இப்பண்பினால் இவர் ஓய்வு பெற்ற பின்னும் தூர இடங்களிலிருந்து கூட பலர் வந்து அளவளாவிச் செல்வார்கள்.

திரு. கணபதிப் பிள்ளை அவர்களுக்கு இயல்பாகவே பல ஆற்றல்கள் இருந்தன. "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப் பழக்கம்' என்பதற் கிணங்க நன்றாக சித்திரம் வரைவார். சரளமாகப் பேசுவார். தலையெழுத்து வாய்க்கப்பெற்றது போன்று அழகான கையெழுத்திற்கும் சொந்தக்காரராக விருந்தார். இவரின் எழுத்துச் சாயலைப் பின்பற்றி எழுதப் பல மாணவர்கள் முயன்றுள்ளனர். சிவாநந்த வித்தியாலயத்தில் பொருட்காட்சி, பரிசளிப்பு விழா, சமய விழாச் சோடனைகள் போன்ற நிகழ்ச்சிகளில் இவரது கைவண்ணம் மற்றும் கையெழுத்துக்கள் மிளிரும். அலங்கார வளைவுகள், வாயில் கதவு வடிவமைப்பது போன்றவற்றில் இவரது ஆற்றல் பயன்பட்டுள்ளது. கல்லடியிலுள்ள பிள்ளையார் வேலாயுத சுவாமி கிருஸ்ணர், சந்திப்பிள்ளையார் ஆலயங்களின் முன்வாயில் கதவுகளின் கதவமைப் புக்கள் இவரால் வடிவமைக்கப்பட்டவை. இது போன்று பல இடங்களுக்கும் வடிவமைத்துக் கொடுத்துள்ளார்.

தலையெழுத்து வாய்க்கப்பெற்றது போன்று அழகான கையெழுத்திற்கும் சொந்தக்காரராக விருந்தார். இவரின் எழுத்துச் சாயலைப் பின்பற்றி எழுதப் பல மாணவர்கள் முயன்றுள்ளனர்.

சங்கீதத்தில் விருப்பம் உடையவர். அதிகமாக கர்நாடக இசையை விரும்பி ரசிப்பார். வானொலியில் ஒழுங்காக கேட்டு இன்புறுவார். இதற்காக சென்னை, திருச்சி வானொலிகள் வெளியிடும் நிகழ்ச்சி நிரல் வெளியீடுகளை வாங்கிக் கொள்வார். இதனால் அவர், பாடகர்கள், பாடல்கள் பக்க வாத்தியக்காரர்கள் பற்றி அறிந்திருப்பார். மார்கழி மாதம் நடைபெறும் சங்கீத விழா ஒளிபரப்புக்களைத் தவறாது கேட்டு ரசிப்பார். பாடசாலைகளிலும் மாணவர்களை சங்கீத நிகழ்ச்சிகள், போட்டிகள் ஆகியவற்றுக்குத் தயார் செய்யவும் பயிற்சி அளிக்கவும் இச்சங்கீத அனுபவம் உதவியது.

சமயத்திலும் தெய்வத்திலும் அதிக பற்றுக்கொண்டவர். ஆலய, சமய விழாக்களில் சரிசனையுடன் ஈடுபடுவார். சமய வகுப்புகளில் ஆசிரியராகப் பங்காற்றியுள்ளார். ராமகிருஷ்ண மிஷன் விபுலாநந்த மணி மண்டபத்தில் (1963-64) ஆண்டு முதல் நடைபெற்று வரும் சமய பாட வகுப்புகளில் பல ஆண்டுகள் சேவையாற்றியவர். அவர் பணிபுரிந்த பாடசாலைகளில் சமய ஒழுக்கத் துக்கு முக்கியத்துவம் கொடுப்பவர். மாணவர்களைச் சுற்றுலாப் பயணம் அழைத்துச் செல்லும்போது ஏதாவது பாடல் பெற்ற தலத்தையோ அல்லது பிரசித்தி பெற்ற ஆலயங்களையோ பயணத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வார். அவர் பிறந்து வாழ்ந்த சூழலில் உள்ள பேச்சியம்மன் ஆலயத்தில் மிகுந்த பக்தி கொண்டவர். சிவாநந்த வித்தியாலயத்தில் சரஸ்வதி கோயில் அமைப்பதில் முன்னின்றவர். அகில இலங்கை இந்து மாமன்றம் மட்டக்களப்புக் கல்லடி உப்போடையில் பன்னிரண்டாவது ஆண்டு விழா (23.04.1967) நடத்த அமைக்கப்பட்ட விழாக்குழுவில் முக்கிய பங்கு கொண்டார்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட இந்து மாமன்றம், அருள் நெறித் திருக்கூட்டம், சமூக சங்கங்கள், மற்றும் இலக்கியக் கலந்துரையாடல்களில் பங்கு கொண்டவர். எல்லோரிடமும் இனிமையாகவும் நட்புடனும் பழகும் சுபாவம் உள்ளவர். உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பேதமின்றிப் பழகுவார். தன்னா லான உதவிகளைச் செய்வார். சமுதாய முன்னேற் றத்திற்காக இயலுமான அளவு பங்கு கொண்டவர். இவற்றை மதிக்கும் வகையில் சமாதான நீதவானாக நியமனம் பெற்றார்.

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வான்புகுந்த திரு.கணபதிப்பிள்ளையின் நினைவு, அவரை அறிந்த எல்லோர் மனதிலும் நிலைக்கும் என்று நம்பலாம்.

திரு. K. மனோராஜ்
முன்னாள் அதிபர் (2012-2017)
சிவாநந்த வித்தியாலயம் (தேசிய பாடசாலை)

மங்காப் புகழ் படைத்த
சிவாநந்தாவின் விழுதுகள்

பல்வேறு துறவிகளால் ஆசீர்வதிக்கப்பட்ட இப்பாடசாலை யில் உருவான பழைய மாணவர் மன்றமானது, வைரவிழாக் காணும் இத்தருணத்தில் அதன் சிறப்பு மலருக்காக சில வார்த்தைகளை பகிர்ந்துகொள்வதில் பெருமையடைகின்றேன். நான் கடந்து வந்த பாதையின் ஒவ்வொரு கால கட்ட உயர்வுக்கும் சிவாநந்த வித்தியாலயம் எனக்கு உறுதுணையாக இருந்துள்ளது. "சிவாநந்தாவில் கல்வி கற்பவர்கள் சீர் பெறுவர்" என்ற கூற்றுக்கு அமைய எனது வாழ்வும் சீர் பெற்றுள்ளது என்பது மிகப் பெரிய உண்மை. ஏனெனில் நானும் இப்பாடசாலையின் பழைய மாணவனாக இருந்து இங்கு 301 ஆவது ஆசிரியராக இணைந்து பின்பு இங்கிருந்தே அதிபராக பதவி உயர்வு பெற்றுச் சென்று மீண்டும் 06.11.2012 இல் 24வது அதிபராகக் கடமையேற்று 2017 இல் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளேன். எமது வித்தியாலய பழைய மாணவர் மன்றமானது கடந்த 60 வருடங்களாக எமது பாடசாலையின் கல்வி, இணைப்பாடவிதானச் செயற்பாடு களுக்கும், பௌதீக வள மேம்பாட்டுக்கும் என பல்வேறு துறைகளில் தமது மேலான பங்களிப்பைச் செய்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணை செய்து கொண்டிருக்கிறது. இதன்மூலம் பல்வேறு மாணவர்கள் நன்மை அடைகின்றனர்.

சிவாநந்தியன் எனும் நாமத்தால் தங்களுக்கான சிறப்பு அங்கீகாரத்தைக் கொண்டுள்ள சங்கத்தின் வளர்ச்சியும் பாடசாலை அபிவிருத்திப் பாதையில் அவர்கள் பங்குகொள்ளும் விதமும் அவர்களின் நன்றியுணர்விற்குத்தக்க சான்றுகளாகின்றன. வைரவிழா ஆண்டைக் கடக்கவிருக்கும் சங்கத்தின் நகர்வு மேலும் பல பங்களிப்பு நடவடிக்கைகளுக்கான பாதைகளை உருவாக்கி சிவாநந்தாவின் அடுத்தகட்ட வளர்ச்சிப் பயணத்திற்கான உத்வேகத்தைக் கொடுக்கும் என்பதையும் என்னால் அறுதியிட்டுக் கூற முடியும். ஏனெனில் எடுத்த காரியம் எதுவாகினும் அதை வினைத்திறன் மிக்கதாக செய்து முடித்துள்ளார்களென்பதை கடந்த கால செயற்பாடுகள் நிரூபிக்கின்றன. உயர் நிலைகளில் இருந்தாலும் பாடசாலைக்கான சேவையென வரும்போது உண்மைத் தொண்டர்களாகவே அவர்கள் மாறிவிடுகின்றனர். இது நான் அதிபராக இருந்த காலத்தில் கண்ட நிதர்சனமான உண்மை. இவ்வாறு சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தின் அர்ப்பணிப்புள்ள பணிகளின் ஆழத்தைக் கூறிக் கொண்டே போகலாம். இலண்டன் அவுஸ்திரேலியா மற்றும் கனடா முதலான நாடுகளிலுள்ள பழைய மாணவர் சங்கங்களின் பங்களிப்பு மற்றும் பங்குபற்றுதல்களும் இவ்விடத்தில் நினைவு கொள்ளத்தக்கன.

60 வது அகவையினைக் கண்டுள்ள இப்பழைய மாணவர் மன்றமானது மென்மேலும் பல தசாப்தங்களைக் கடந்து பாடசாலைக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றேன். பாடசாலையின் மகுட வாக்கியமான "உன்னதத்தை நோக்கி" எனும் வாசகத்திற்கமைய சிவாநந்தா பழைய மாணவர் சங்கம் மென்மேலும் வளரட்டும்.

பொறியியலாளர்
எம்.மங்களேஸ்வரன்,
கல்வடி.

தற்காலத்தில் தொழில் முயற்சியாண்மையின் தேவைப்பாடு

இன்று உலகில் ஏற்பட்டுவரும் அபிவிருத்தி மற்றும் சனத்தொகைப் பெருக்கத்தின் விளைவாக மனிதனுடைய வாழ்வாதாரம் பாதிப்பிற்குள்ளாகி வரும் நிலையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. பொதுவாக இலங்கையை எடுத்துக்கொள்வோமானால் மக்கள், அரச தொழிலை தமது பிராதான வருமான மூலாதாரமாக நம்பி வரும் வழக்கம் உள்ளது. அதுமட்டு மல்லாது அரசதொழிலில் இருப்பதையே ஒரு கௌரவமாக பார்க்கும் மனப்பாங்கும் எம்மிடையே பரந்துள்ளது. இம் மனப்பாங்கானது மாறிவரும் உலக அபிவிருத்தியில் எதிர்கால சமுதாயத்தின் வாழ்வாதார அபிவிருத்திக்கு ஒரு சவாலாக உள்ளதை உணரக்கூடியதாக உள்ளது. எமது சமுதாயத்தில் படித்தவரிலிருந்து பாமரர் வரை தமது எதிர்கால சமுதாயம் ஒரு உயர் அரச தொழில் செய்பவராக வரவேண்டு மென்று கருதுகின்ற னர். ஆனால் எமது கல்விக் கொள்கைக்கு ஏற்ப உயர்கல்வியையோ அல்லது தொழில்சார் கல்வியையோ பெறுவதற்கு குறிப்பிட்ட சதவீதத்தினரே தகுதியுடைய வராகின்றனர். மீதி சதவீதத்தினர் வேறு மார்க்கங்களைச்

தெரிவுசெய்ய வேண்டிய நிர்ப்பந்த நிலையில் உள்ளனர். அத்துடன் இன்று அரச மற்றும் அரச சார்பற்ற பல தொழிற்பயிற்சி, தொழில் வழிகாட்டி நிறுவனங்கள் இவ்வாறான சமூகத்திற்கு தொழிற் பயிற்சிகளையும், தொழில் வழிகாட்டல்களையும் வழங்கி வருகின்றன. இதன் மூலம் பெற்ற பயிற்சியின் அடிப்படையில் ஒரு சாரார் அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் தொழில்பெறும் வாய்ப்பைப் பெறுகின்றனர். மற்றும் சிலர் சுய தொழில்களைப் புரிந்து தமது வாழ்வாதாரத்தை பூர்த்தி செய்கின்றனர்.

இன்று தங்களுடைய சொந்தக் காலிலே நின்று, சொந்தத் தொழிலைத் தொடங்குவதற்குப் பலர் பின்வாங்குகின்றனர். இதற்கான முக்கிய காரணம் முதலீடுகளுக்குத் தேவையான வளம் இல்லாமை, தன்னிச்சையாக இவ்வாறான தொழில் களைத் தொடங்குவதற்கு மனத் தைரியமில்லாமை, வியாபார தந்திரோபாயங்களைக் கையாள இயலாமை மற்றும் வியாபாரத்தில் ஏற்படும் போட்டித் தன்மை என்பன காரணிகளாக அமைகின்றன.

சிறந்த தொழில் முயற்சி உத்திகளைக் கையாளவேண்டியது இன்றியமையாதது. உலகில் இருக்கின்ற தேவைகளிற்கேற்ப தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதன் மூலமே வெற்றிகளைப் பெறக் கூடியதாக இருக்கும். இன்று உலகில் உயர்ந்து நிற்கும் தொழிலதிபர்களின் வெற்றிக்கான ரகசியங் களை தேடுவோமானால் அனுபமே அதற்கான சிறந்த காரணமாக மேலோங்கி நிற்கின்றது. மற்றும் தவறுகளில் இருந்து பாடங்களை கற்றுக் கொள்ள வேண்டிய தேவையும் உள்ளது. அதுவே வெற்றிக்கான அடிப்படையாயும் கருதப்படுகின்றன. பொறுப்புக் களை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு ஏற்பட வேண்டும். கடினமான தருணங்களே வாய்ப்புக்களை வழங்கும் எனும் கோட்பாட்டிற்கு ஏற்ப எமது செயற்பாடுகள் அமைய வேண்டும்.

இலங்கைப் பொருளாதார அபிவிருத்தியில் இன்று நிர்மாணத்துறை பிரதான பங்கை வகிக்கின்றது. அத்துடன் அது பெருவாரியான தொழில் வாய்ப்புக் களை வழங்கி நாட்டின் அபிவிருத்தியின் பங்காளி யாகத் திகழ்கின்றது. எமது எதிர்கால சமுதாயம் இவ்வாறான தொழில் முனைவர்களாக மாறவேண்டிய தேவைப்பாடும் உள்ளது. "கோழி மேய்த்தாலும் அரசாங்கத்தால் மேய்க்க வேண்டும்" எனும் அடிப்படை எண்ணக்கரு மறைய வேண்டும். இளம் சமுதாயத்தில் சுய முயற்சியாளர் எனும் கருத்து புகுத்தப்பட வேண்டும். எமது சமுதாயத்தின் அபிவி ருத்தியில் இதனூடாக நாங்கள் பங்களிப்புச் செய்ய வேண்டும். தொழில் முனைவோர்களாக ஒவ்வொரு வரும் தனித்துவமானவர்கள். அந்த வகையில் தனித்துவம் மிக்க ஒவ்வொரு தொழிலும் சமுதாய மேம்பாடு மற்றும் பொருளார மேம்பாட்டிற்கு வளம் சேர்க்கக் கூடியதாக மாற்றியமைக்கப்பட வேண்டும். இதுவே தற்கால சவால்களை எதிர்கொள்ள வழிவகுக்கும்.



த.அனந்தரூபன்,
முன்னைநாள் அதிபர் (2009-2010)
சிவாநந்தா வித்தியாலயம் (தேசிய பாடசாலை)

சிவாநந்தியனுக்கு எங்கு சென்றாலும் சிறப்பு

மட்டக்களப்பு சிவாநந்தா பழைய மாணவர் சங்கமானது 60ம் ஆண்டில் தடம்பதிக்கின்ற வேளையில் இவ் வித்தியாலயத்தின் முன்னைநாள் அதிபர் என்ற வகையிலும் பழைய மாணவன் எனும் வகையிலும் சில வார்த்தைகளைப் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். ஒரு மனிதனின் வாழ்க்கையிலே கல்வியினை வழங்கிவைக்கும் ஆலயத்திற்கென்று தனிச் சிறப்பு இருக்கின்றது. அந்த வகையில் எனது வாழ்வில் கல்வி ஒளியினை ஏற்றி என் வாழ்வினை சிறப்புறச் செய்த எனது வித்தியாலயத்திற்கு முதலில் நான் தலைவணங்குகின்றேன்.

"கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்பார்கள். இருந்தாலும் "சிவாநந்தியனுக்கு" எங்கு சென்றாலும் சிறப்பு என்பதனை நான் எனது வாழ்நாளில் அறிந்துகொண்டுள்ளேன். சீரிய வாழ்விற்கான சிறந்த பண்புகளையும், வாழ்க்கை விழுமியங்களையும் கல்வியுடன் சேர்த்து வழங்கி மனிதனை பூரணமாக்கும் பணியினை செவ்வனே நிறைவேற்றிய சிறப்பினை எமது வித்தியாலயம் தன்னகத்தே கொண்டுள்ளது. பழைய மாணவர் சங்கத்தின் இந்த அறுபது ஆண்டுகால ஓட்டத்தில் எமது பாடசாலைக்குப் பல வழிகளிலும் பங்காற்றி, பாரிய வளர்ச்சிக்குப் பாடுபட்ட சங்கத்தின் அர்ப்பணிப்பை தெட்டத்தெளிவாக எம்மால் அவதானிக்க முடிகின்றது. இராமக்கிருஸ்ண மிஷனின் கரிசனையும் வழிகாட்டலும் எமது வித்தியாலயத்தின் இந்த எழுச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருந்திருக்கின்றது. எனது பாடசாலைக் காலத்தில் எங்களுக்கு ஆன்மீக ஒளியேற்றிய ஸ்ரீமத் சுவாமி ஜீவானந்தஜீ மகராஜ் அவர்களை இந்த நேரத்தில் நினைவு கூரவேண்டிய கடப்பாடு எனக்கு உண்டு. ஆன்மீக அறிவுரைகள் மூலம் எங்களை சிறப்பான வாழ்க்கைக்கு வழிப்படுத்திய சுவாமிஜீ அவர்களை எமக்குக் காட்டியதும் இந்த வித்தியாலயமே. பல நல் ஆசான்களை எமக்களித்து, அவர்கள் மூலம் உன்னதமான மேன் மக்களை உருவாக்கி அவர்களை உலகறியச் செய்த எமது வித்தியாலயத்தின் வளர்ச்சியில் பங்காற்றிய அனைத்து பெரியோர்களையும் நன்றியுடனும், பெருமையுடனும் நினைவு கூருவதில் மனமகிழ்வு அடைகின்றேன்.

உலகின் அனைத்துப் பாகங்களிலும் சிவாநந்தாவின் பெயர் கூறுகின்ற சிவாநந்தியன்களை உருவாக்கிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் தனது வைரவிழாவினைச் சிறப்பாகக் கொண்டாட எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இந்த விழாவினை சிறப்பாக முன்னெடுத் திருக்கின்ற எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கத் தலைவர் உட்பட அனைத்து உறுப்பினர்களையும் நன்றியுடன் பாராட்டுவதோடு, இவ் விழாவானது சிறப்புறவேண்டி இறைவனை உளமாரப் பிரார்த்திக்கின்றேன்.

Thanihaichelvan Murugathas
Senior Lecturer,
University of Jaffna.



Electronic Noses or Artificial olfactory sensors: an introduction



Of the five major senses, smell and taste remain the last to be developed into easy-to-use real-time sensors or detectors. Science and technology have advanced hearing, vision and touch sensors enormously, and we can readily capture and transmit high definition images or even image a single molecule. We can detect sound from black holes millions of kilometres away, and touch sensitive components are now common place in phones and computers. However, there is no cost-effective device to accurately and sensitively detect either smell or taste.

An electronic sensor is a device which converts a physical quantity like sound light or motion into a measurable electrical current or potential. The source of taste and smell are chemical molecules. Detecting these molecules and converting them into an electrical signal is a challenging process. However biological olfaction is an efficient process to detect order and molecules. The modern day electronic olfactory and taste sensors partially using the biological olfaction system.

One approach to detect the odorant molecules is to exploit the incredible sense of smell exhibited by animals. Highly sensitive animal

noses are already widely used as detection methods in many different applications, with both insects and mammals used for drug-detection, biosecurity, search and rescue and in medical diagnostics. However, there are drawbacks to using animals, such as the cost and time associated with training and handling, the risk of both false positives and negatives, and environmental and behavioural variation. These can be overcame by incorporate their exquisite sense of smell in an electronic device.

Before going into the artificial olfactory systems it is essential to understand the biological olfactory system. The biological olfactory system is a unique and complicated system and it not completely understood. It is a relay of signals from nose to our brain. The important part in the biological olfaction is the first step which is converting the chemical molecules into an electrical signal to the brain. This conversion is performed by special proteins called odorant receptor (OR) proteins which are placed in the nose. The OR proteins generate a small electrical signal when they are binding to an odorant molecule. This electrical signal will initiate the signal relay towards the brain and it will be identified by the brain from multiple signals.

The OR proteins have unique properties. An OR protein can detect a particular combination of odorant molecules. In human olfactory system, we have about 400 different odorant receptors. At the same time the number of receptors are about 1700 in dogs. This is the reason for the ultra high ordering sensitivity of dogs. The selectivity of the odorant receptors can be explained by using the following figure. Consider arbitrary receptors named with numbers 1 to 5 and arbitrary odorant molecules named with alphabets A to F. Odorant receptor 1 respond to odorant molecules C and E while odorant receptor 4 respond to odorant molecules A, C, D and F. Hence, if the brain received signals from 1, 3 and 4 then the odorant molecule detected must be C.

Figure 1: Sensitivity diagram of multiple ORs



The state of art artificial olfactory systems made in laboratories are heavily rely on biological olfactory systems mainly on odorant receptors. By converting be small electromotive force generated in the OR proteins during odorant binding the necessary primary signals for the sensor is generated.

To detect these small electrical changes in the olden receptors carbon nanotubes being used. Carbon nanotubes are tiny tube like structurers which are made up of carbon atoms have diameter approximately 1 to 5 nanometres. Carbon nanotubes have lengths of up to millimetre range. Carbon nanotubes can be mainly divided into two different categories. CNTs with a single wall, the single-walled carbon nanotubes (SWNT) and with more than one wall which are classified as multi-walled carbon nanotubes (MWNTs). MWNTs are conducting materials like metals. But most of the single-walled carbon nanotubes are semiconducting materials. These semiconducting single-walled carbon nanotubes are highly sensitive to its immediate environment due to its smaller diameter. Especially the electrical conductivity of the semiconducting SWNTs are highly sensitive to any changes that occur in its surface region. The semiconducting carbon nanotubes are used as the transducers to detect the small changes in deodorant receptors.

Recent development in the biotechnology provide us facilities to extract the OR proteins from the animals and keep them alive (or active) in

atmospheric conditions. Most of the animal odorant receptors are encoded and their properties are studied. The artificial odorant sensors are made by immobilising the extracted OR proteins in the sidewalls of single-walled carbon nanotubes. The current through the protein immobilized carbon nanotubes modulated by the small electrical changes in the order and receptors. By measuring the change in the current through the carbon nanotube we can measure the presence of odorant molecules. Figure 2 (a) shows image of a protein anchored CNT and figure 2(a) shows the basic OR and CNT based artificial odorant sensor. The current through the CNT can be measured by applying a small voltage across the electrods.



Figure 2: (a) OR protein anchored CNT and (b) schematic of a complete OR protein immobilised CNT based sensor

The application of odorant sensors are immense. Real time detection of odorant molecules is a critical challenge in health and environmental monitoring as well as food safety and water quality. Recent works found that the odorant receptors can be used to detect the molecules emitted by cancer cells at very low concentrations. This will help us to detect the cancer at early stages and to plan the treatment.

The OR based olfactory sensors are still in the laboratory and polished for the commercial use. We can expect that our life style will be changed with the advanced odorant sensors in the near future.

References

Goldsmith B., et.al, 2011. Biomimetic chemical sensors using nano electronic readout of olfactory receptor proteins. ACS Nano 5, 5408–5416. https://doi.org/10.1021/nn200489j

Thanihaichelvan, M., et.al, 2018. Metallic-semiconducting junctions create sensing hot-spots in carbon nanotube FET aptasensors near percolation. Biosensors and Bioelectronics. https://doi.org/10.1016/J.BIOS.2018.09.021

"Your husband will love this fragrance. It smells like a new electronic gadget."

A Winning Formula towards Success

Sinnathamby Vijayapala
Vijay Consultancy Pvt.Ltd

Career Development is about navigating your journey through learning and work. The word "career" is defined as "a path or progress through life or history." Yet people often think about career as "a" or "one" occupation chosen for life. This just doesn't fit, either with the origins of the word or with the realities for the majority in the world of work today. We do not make "one perfect education choice" or find "one perfect job for life". We navigate options, make choices without perfect information, bounce back from disappointments and constantly learn from experience. We have multiple roles throughout our journeys. Some will be formal jobs; some will not. Though we cannot guarantee what will be around the next bend in our life journey, we can keep learning about ourselves and what we can and want to do. Navigating is about making the best choices you can on your journey so that you can live the kind of life you want for yourself, (WICD, 2014). Most of the students in Sri Lanka think, that if they fail in their G.C.E (O/L) or (A/L) exam, that will be end of their life. This negative attitude and/or perception creates many economic and social problems in the community and challenge for the labour market by the jobless youths. Nevertheless, our young students and parents never realize that there are many options available to reach their vision to become a professional and be a good citizen of the country. Now University Grans Commission has introduced 13 years compulsory education for all students and implementing 7 streams in G.C.E (A/L) such as Bio, Maths, Commerce, Arts, E-Tech, B-Tech and Vocational Streams. Even if a student got "F/W" result in all the 8 subjects in G.C.E (O/L), that student has an opportunity to do the 2 years advance level studies qualify for a University entrance, which option does not require the O/L result to proceed the advance level. Similarly many options are available in the public and private sector educational, vocational, technical institutes and colleges to become a professional in their career path. Therefore, it is important to plan their career in the adolescent age and this article will assist our parents and students to understand the importance of career development plan.

Education is the only source where you can get huge information

and knowledge and make a person smart. However, today in our world being smart in a society is not accounted as a successful person. Unless their education shines to set a good career for him or her. Therefore, besides education and teaching a child, another most important thing that must be taken into consideration is the career planning. Today's latest education system has been focusing only on the career. Therefore, we have to make sure that as a child grows up he or she must be brought into the Limelight of career.

"Career Development is the lifelong process of managing learning, work, leisure, and transitions in order to move toward a personally determined and evolving preferred future," (CSGCD, 2012).

Lifelong – career development is not summed up in a single decision. A simplistic view of career development would have a young person decide what to "be" and what education to pursue in order to achieve that – end of story. The real story, however, generally involves multiple chapters, with distinct goals, tasks, outcomes and transitions across the lifespan. In early childhood, career development is largely about exploration, developing a sense of self in the future and expanding horizons with respect to what that future self could encompass. Later in adolescence, career development is about exposure, experience, reflection and the development of personal/career management and employability skills. Throughout adulthood, those skills are refined, expanded and deployed to navigate an ever-changing labour market. The Blueprint for Life/Work Designs articulates the life/work competencies need to proactively manage their career development from kindergarten to adulthood.

Managing – career development will happen whether it is managed or not. The question is the extent to which you want to influence your career direction versus leaving it to chance. Current levels of youth unemployment and underemployment, job dissatisfaction and mental health claims in the workplace would suggest that leaving it to chance, more often than not, does not pan out.

Learning, work and transitions – career development is the mechanism by which learning (formal and informal), work (paid and unpaid) and the transitions between are navigated.

Preferred future – career development is about intentionality. Done well, it ensures that the decisions we make about learning and work are grounded in knowledge of self (personal interests, attributes, values and skills), and knowledge of educational/labour market realities (conditions, finances, prospects, entry requirements, progression and pathways). Done well, it ensures you are prepared for the realities of your choices, have the skills and supports to manage and, importantly, are clear about why the choice is right for you, fueling your motivation, focus and success. Career development also recognizes that both we and our labour market change over time. What we want and what is possible are not static. Whether we are employed with one company long term, pursue entrepreneurial ventures or piece together our living through multiple contract, project-based and portfolio work, we will need to adjust and adapt, re-conceive and re-create our careers. This demands vigilance and career management and employability skills.

Career planning plays a very important role in making a person superior. However, simply targeting for the goal without any proper talent is not a good idea. He or she must have proper indication, self-confident and right decision making for choosing the path of their career. A child alone cannot decide what is good or bad for himself when it comes to choosing his career option. A mentor/guide, like teachers or parent, must know the importance of career planning choice that will help their children to get on the right path. Career

planning is a very critical process, which you have to manage while you are learning and developing yourself. At this moment, you have to create so many valid strategies, which will help you to have success in future. Besides planning, you also have to look into yourself and understand your capacity first. You cannot expect yourself to be CEO of a Company in just one night. All depends on your hard work as well as the correct planning for your career. Just follow the list below and prepare yourself for your future.

Know yourself: The first thing you must do knows yourself. Every person has different skills, like or dislike, habits and values. So accordingly, you have to plan for your career and choose for the best one where you can give your best performance. You cannot randomly pick any career choice that will later leave you with regrets. In addition, all these skills and values cannot be developed by yourself you have to earn it, nurture it, and train to become skillful. In addition, once you recognize yourself in a skill that is coming from you then you can select the right career for yourself.

Finding the right career path: After you have recognized yourself knowing all your skills now it is time for you to select the right career for yourself. For example, if you are good at singing then you could become a good singer, if you are good in sports then you could be good athletes but the same person cannot have either the talents or skills. Alternatively, if you are good in science then you could become a successful scientist specifically. These are some of the high-level Career Point which you could have yourself in it. So just, you have to focus on your school and maintain them so that people will notice your talent and at the same time, you can apply your skill and deliver it to the world.

Making decisions: Well at some point, you might have confused that you have to tell in two or three fields. In this case, you have to make a decision and select your career that will give you satisfaction while doing the job. There is no low job in this world. Even a cobbler is worth same as other talents. Therefore, there is no shame in yourself and the thing, which you can do. Moreover, you have to focus on what you are doing and believe in yourself that one day you could success doing your favorite thing. It goes for business; you can start a business on any path that satisfies you in both mental and physical stage.

Let your actions speak for you: Now after you have chosen your job you must be faithful and deliver the job in a better way. Moreover, you must remember that getting a job is not enough you have to keep on mature your skill to perfection. If you wanted your job to be fruitful all the time then you must focus on maturing your skill.

Every individual has a different perception for career planning. For some, it is an avenue towards a better future, while for some it is entirely a source of future income. Whatever, be the individual perception of it, one has to understand that it is an essential tool for identifying the avenue towards its fulfillment. Below are the key advantages of career planning:

Targeting educational qualification – Apparently, it helps to achieve one's educational goal. It creates a secure path towards future and assists in becoming a better individual because good and relevant education enhances personality and lead towards desired future.

Set an aim in life – Pre-planning gives a clear picture of the prospects in the mind of students. It helps them discover the answer for a few questions like their field of interest and if it is fit to be taken

as a career goal. In short, it aids in determining the priorities in life.

A road to your dreams – Needless to mention, planning is a basis of achieving one's dream.

Skill analysis – It is a means to analyze individual's strengths and weaknesses and the areas that need augmentation. As it helps a person to reflect on his/her skills, it offers a clearer picture about their proficiency.

Ascertaining your inclination – Based on the field of your choice, expertise, and skills, you can get an idea of the kind of industry and role that appeals to you and should be your preferred territory to settle and move ahead.

Setting a time frame – It is a way to identify a committed time period to reach a milestone.

Fair income – Your chances to earn a decent income gets high because your career research offers you an idea of how much you should be earning.

Higher satisfaction – As you will be moving ahead with your choice of career, you tend to be more satisfied in life compared to your peers.

The importance of career planning cannot be overlooked in a life of a novice, as a spirit without any goal is meaningless. It initiates an individual to gain additional experience in the desired career and allows him to expand his network. Career planning is a road to self-evaluation that also offers room for adjustment according to changing phases in the personal circumstances.

Therefore, these are the importance of career planning in education. Every child fails to get a good job even after they graduate as because their career planning was not perfect. Right from the moment of childhood, there must be Good career planning thoughts there will have them in future. You have to target a goal which with your strong determination you must have the courage to achieve it. No matter how low the job it is, All That Matters is, you are on satisfaction.

Napoleon Hill said, "If you fail to plan, you can plan to fail", the phrase well justifies the importance of planning in every field of life. Hence, the importance of career planning in a life of a student is pivotal in determining the success in the desired career. No matter, whether you are aspiring to be a Doctor, Engineer, Writer, bookkeeper, sportsman, model, graphic designer, IT professional or a movie star, it is imperative to find out the way to achieve your aim in life.

Sincere gratitude

This article dedicated to all my Principals and teachers who taught me during my school days from 1982-90 and specially our G.C.E. (A/L) teachers of all 4 steams who created a big history during 1989/90 to produce many students for University entrance. My Special appreciations to my 1989/90 batch A/L Commerce teachers, Mr.S.Manoharan (Economics), Mrs.R.Ranjithamalar (Commerce), Late Ms.Sinnathamby (Accounts) and Late Mr.Thiagarajah Iyar (Hindu culture) who made me to obtain the best result in school and third rank in Batticaloa District.

Reference/Sources

Collection of many articles from web site and personal experience which made me to craft this article with the purpose of create awareness among our young Shivanandians and motivate them to plan their career path for sustainable career development.

சிவானந்தம் சிறீதரன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம்.

சமகால கல்வி முகாமைத்துவத்தில் பாடசாலை மட்ட அபிவிருத்திக்கான திட்டமிடல்

வெற்றிக்கு அடிப்படையாக திட்டமிடல்

நன்கு திட்டமிடப்பட்ட கருமங்களே நன்கு நிறைவேற்றப்படுகின்ற கருமங்களாகும். இதனடிப்படையில் நாம் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள சகல கருமங்களையும் திட்டமிட்டு செயற்படுத்துவது சிறந்த விடயமாகும். மேலும் "யார் திட்டமிடத் தவறுகிறார்களோ அவர்கள் தவறு விடுவதற்காகவே திட்டமிடுகிறார்கள்" என்பதற்கு ஏற்றாற் போல் எம் ஒவ்வெருவரிடமும் எந்த விடயத்திலும் திட்டம் என்ற ஒன்றை கொண்டிருப்பது அத்தியாவசியமானதாகும். இல்லாவிடின் நாம் தவறுகளை விடுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும். இதன் காரணமாக பல்வேறு தோல்விகளையும் சந்திக்க வேண்டி ஏற்படும். எமது தனிப்பட்ட வாழ்விலும் சரி, குடும்ப வாழ்விலும் சரி, பணியாற்றும் நிறுவனங்களிலும் சரி எமது கடமைகளை சரிவர நிறைவேற்றுவதன் ஊடாக எம்மால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளையும் சில குறிக்கோள்களையும் அடைந்து கொள்ளலாம்.

பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமிடல்

பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமிடலின் தேவைப்பாடுகளாக மாணவர் அடைவுமட்டம் பற்றி தர நிர்ணயங்களை உயர்த்துதல், கற்றல் - கற்பித்தலின் தரத்தை முன்னேற்றுதல், முன்னேற்றங்களை விபரித்தல், அறிமுகம் செய்யப்பட்ட மாற்றங்களின் கீழான நிலைமைகளை உருவாக்குதல், மாற்றத்தின் வேகத்தையும் தன்மையையும் கட்டுப்படுத்துததல், அதிபர், ஆசிரியர்களின் தன்னம்பின்கையை அதிகரித்தல், ஆளணியினரான ஆசிரியர்களின் தரத்தை மேம்படுத்துதல், அணியாக வேலை செய்யும் ஆற்றலையும் பகிர்ந்தளிக்கப்பட்ட தலைமைத்துவத்தையும் (ளுாயசநன டநயனநச ளாளி) மேம்படுத்துதல், வினைத்திறனையும் விளைதிறனையும் முன்னேற்றுதல், அளவிடக் கூடிய இலக்குகளையும் சவாலான

குறிக்கோள்களையும் கொண்டு தூரநோக்கினை அடையக்கூடியதொன்றாக மாற்றுதல், பெற்றார், ஆசிரிய ஆளனி, முகாமையாளர்கள் ஏனைய பங்குதாரர்களிடையே பங்குபற்றல் தன்மையை வலுப்படுத்துதல், முழுமைப் பாடசாலைச் சமூகத்திற்கு மான திசை, பகிரப்பட்ட நோக்கங்கள் என்பனவற்றின் மீதான உணர்வை வழங்குதல் போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

பாடசாலை திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப் படும் பேறுகளானது பாடசாலை திட்டச் செயன்முறை மற்றும் அதன் உற்பத்தி நடவடிக்கையானவை முன்னேற்றமடைந்த கல்விச் சேவையை வழங்குவதற் கும் மாணவர்களின் பொருத்தமான தேவைகளை வழங்குவதற்கும் உயர் தரமுள்ள கற்பித்தலையும், கற்றலையும் முன்னேற்றுவதன் ஊடாகவும், ஆசிரியர் களின் தொழில் வாண்மைத் தரத்தை வழிப்படுத்து வதன் ஊடாகவும் புத்தாக்க ரீதியான மற்றும் மாற்றத்து டனான விளைதிறன் உள்ள முகாமைத்துவத்தையும் வழங்குவதற்கும் ஒரு பாடசாலைத் திட்டமானது இயலுமை கொண்டதாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு பாடசாலையிலும் நடைமுறைப் படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்கள் அபிவிருத்தி செயன்முறைகளை கொண்டவையாக இருத்தல் வேண்டும். மேலும் பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டச் செயன்முறையானது நெகிழ்ச்சித் தன்மை கொண்டவையாக இருத்தல் வேண்டும். மாறாக அவை இறுக்கமானதாக இருத்தல் கூடாது.

ஒவ்வொரு பாடசாலைகளும் அவை அமைந் துள்ள இடம், சூழல், பெற்றார்களின் வாழ்வாதார நிலைமை, பொருளாதார நிலைமை, மாணவர்களி டையேயான வேறுபாடுகள் மற்றும் பாடசாலைகளின் தேவைப்பாடுகள் என்பன போன்றவை அடிப்படை யில் வேறு வேறானவையாகும். எனவே பாடசாலை அபிவிருத்தி திட்டங்கள் நிச்சயமாக வேறு வேறான வையாகத் தான் இருக்க வேண்டும்.

பாடசாலை அபிவிருத்தி திட்டங்களினூடாக பின்வருவனவற்றை முன்னேற்றமடையச் செய்யலாம்.

1. பாடசாலையின் விளைதிறன் - இது பாடசாலை சமூகத்தின் மிகத் தெளிவான தூர நோக்கின் ஊடாக பாடசாலை பற்றி எமக்கு அறியத்தரும்.
2. பாடசாலை முன்னேற்றமடைதல் - இது இப்பாடசாலையின் முன்னேற்றம், முன்னுரி மைகளை இனங்காணுதல் மற்றும் மேலான முன்னேற்றத்திற்கு திட்டத்தை தயார் செய்தல், முன்னேற்றம் பற்றிய மீள் பார்வை என்வன வற்றிற்கு ஒரு பாடசாலைச் சமூகத்திற்கு அவர்களுக்கான ஒரு ஒழுங்கு முறையான சுய மதீப்பீட்டுப்பொறிமுறையை வழங்குகின்றது.
3. தரமேம்பாடு – பிள்ளைகளின் தேவைகள் மற்றும் இயலுமைகள் என்பவற்றிற்கான தரமான கல்வியை வழங்குவதற்காக ஒரு பாடசாலையின் பிரதான பணியை நோக்கிய ஒரு வழிமுறையைக் காட்டுகிறது. அத்துடன் கூட்டான செயல்கள் மூலம் கற்றல் கற்பித்தலின் தரத்தை மேம்படுத்து கின்றது.
4. ஆளனி அபிவிருத்தி - இது கற்றல் கற்பித்தல் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களினதும் ஏனைய ஊழியர்களினதும் தொழில் வாண்மைத்துவ வகிபாகத்தினை மேம்படுத்துவதற்கு ஒரு பாடசாலை அபிவிருத்தி திட்டம் உதவுகிறது.
5. பங்குதாரர்களைக் கொண்டது – பாடசாலைச் சமூகத்தின் முதன்மைப் பிரிவினரான பெற்றார், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பாடசாலை முகாமைத்துவக்குழு உறுப்பினர்கள், நலன் விரும்பி கள், பாடசாலையை சூழவுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள், ஏனைய சங்கங்கள், மன்றங்கள், அமைப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கியது.
6. இருக்கின்ற வளங்களை விளைதிறன் உள்ள வகையில் பயன்படுத்தல் - முறையான ஒரு பாடசாலை அபிவிருத்தித் திட்டமானது குறித்த வளத்தேவைப் பாடுகளுக்கும், முன்னுரிமைப் படுத்தப்பட்ட தேவை களை அடைந்து கொள்வ தற்காகவும் இருக்கின்ற வளங்களை இலக்குக ளாகக் கொண்டு பயன்படுத்தல் வேண்டும்.
7. மாற்றத்தினை முகாமை செய்தல் - இங்கு அரிதாக ஏற்படும் புதிய மாற்றங்களுக்கு துலங்கும் வகையில் கொள்ளளவாற்றலை கட்டியெழுப்புதலும், உள்ளக ரீதியாக மாற்றங்

களை வழிப்படுத்துவதற்கும் கட்டுப்படுத்து வதற்கும் முடியுமாக இருத்தலும் பாடசாலை சமூகத்தின் மாற்றங்களை விளைதிறனுடன் முகாமை செய்வதற்கும் பாடசாலை அபிவிருத்தி திட்டம் உதவும்.

8. தேசிய கல்வி முறையமைப்பின் முன்னுரிமை களையும், நோக்கங்களின் மேம்பாட்டிற்கும் உறுதுணையாய் அமைதல் - பாடசாலை அபிவிருத்தி திட்டமானது தேசிய கல்வி முறைய மைப்பின் முன்மொழியப்பட்ட நோக்கங்களையும், தேசிய கல்வி முறையமைப்பின் முன்னுரிமைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு உதவியாக அமையும்.

பாடசாலை அபிவிருத்தி திட்டமிடல் செயன்முறைகளின் வேலைச் சட்டகம்

ஒரு திட்டமிடல் சுற்றினுடைய வேலைச் சட்டகத்தின் அடிப்படையானது, ஒரு மத்திய - பிரதான விடயத்தைக் கொண்டு சுழலும்.

அவ்முதன்மையானது (Core) பாடசாலையின் தூர நோக்கு (Vision), பணிக்கூற்று (Mission), மற்றும் அடிப்படை நோக்கங்கள் (Fundamental aims) என்பனவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.

திட்மிடல் கற்றலானது பிரதானமாக நான்கு முதன்மை நடவடிக்கைகளை (Key Operation) கொண்டதாக இருக்கும்.

மீள்பார்வை (Review), வடிவமைத்தல் (Design), அமுலாக்கம் செய்தல் (Implementation), மற்றும் மதிப்பீடு (Evaluation) என்பனவாகும்.

பாடசாலை அபிவிருத்தி திட்டமிடல் செயன்முறையின் அடிப்படை வேலைச்சட்டகம் பின்வரும் வரைபடம் மூலம் காட்டப்படுகிறது (Basic Framework of School Development Planning).

பாடசாலை மட்டத்தில் திட்டமிடல் குழுவின் தேவைப்பாடும் முக்கியத்துவமும்

இலங்கை கல்வியமைச்சின் சுற்று நிருப இலக்கம் 26/2018 என்பதற்கமைவாக "பாடசாலை மட்ட பண்புத்தர உறுதிப்பாட்டு முன்னேற்றம் மற்றும் கட்டமைப்பு அபிவிருத்திக்கான திட்டமிடலும் வளப்பகிர்வும்" என்பதனைக் கவனத்திற்கொண்டு



மத்திய காலத்திட்டம் வருடாந்த நடைமுறைப் படுத்தும் அல்லது அமுலாக்கும் திட்டம் வகுத்தல் என்பன பாடசாலை அபிவிருத்திக் குழுவொன்றின் கடமையாகும்.

இதற்காகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் (SDS) பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்வரும் பாடசாலையின் பங்குதாரர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவர்கள் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவில் (SDEC) ரூபா 600இலும் குறையாத அங்கத்துவப் பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொண்ட பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் அங்கத்தவர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

பாடசாலையின் பங்குதாரர்கள்



இலங்கைக் கல்வி முறைமைத் திட்டமிடலில் மேற்கொள்ளப்படவிருக்கும் மாற்றம்

எதிர்வரும் 1.1.2019 முதல் இலங்கையின் சகல பாடசாலைகளிலும் நடைமுறைக்கு வருகின்ற 26/2018 என்னும் இலக்கங் கொண்ட சுற்று நிருபத்தின் மூலம் (முன்னைய 7/2013 சுற்றறிக்கை

நடைமுறையில் இருக்காது.)பாடசாலை திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் பற்றிய சில அதிகாரங்கள் பாடசாலைகளுக்கு வழங்கப் பட்டுள்ளன.

பாடசாலை மட்ட தர உறுதிப்பாடு, முன்னேற்ற மற்றும் கட்டமைப்பான அபிவிருத் திக்காகத் திட்டமிடல், வளப்பங்கீடு, நிதியாக்கம், பாடசாலை மட்ட மேம்பாடு போன்றனவாகும்.

பாடசாலைத்திட்டத்தை தயாரிப்பதற்கு பல வகையான பங்குதாரர்களை கலந்துகொள்ளச் செய்வதன் மூலம் கிடைக்கும் பயன்கள் பின்வருமாறு

» கலந்துகொள்ளல் முகாமைத்துவ கலாசாரம் கட்டியெழுப்பப்படல்
» அதிகமானவர்களின் கருத்துக்கள் பெறப்பட்டு திட்டம் பரிபூரணமடைதல்
» பலவகையான தரிசனமுடையவர்கள் பாடசாலைப் பிரச்சினைகளை நோக்குவதற்கு வழிவகை செய்யப்படுதல்.
» ஆதிகமான தொகையினரின் பங்களிப்பு மற்றும் உதவிகள் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படல்.
» சமூகத்தில் தேவையுடையவர்களுடன் பாடசாலையை ஒழுங்கமைக்க முடியுமாக இருத்தல்.
✓ பாடசாலைகள் அங்குள்ள சமூகத்துக்குப் பொறுப்பாதல்
✓ கொள்கையை நிறைவேற்றிக் காட்டல்
✓ இந்த அனைத்து செயன்முறைகள் மூலமும் பாடசாலைகள் எதிர்பார்க்கும் நோக்கங்கள் நிறைவேற்றிக் கொள்ள முடியுமாக இருத்தல்

அந்தவகையில் பாடசாலை அபிவிருத்தி திட்டம் நடைமுறைப்படுத்தலுக்கு பின்வரும் திட்டமிடல் படிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

விளைதிறனுள்ள பாடசாலை அபிவிருத்தி திட்டத்திற்கான சில நியமங்கள்

1. மாணவர்களின் அடைவுகாணலும் முன்னேற்றங்களையும் முன்னேற்றுவதுடனான முன்னுரிமைகள் வெளிப்படுத்தப்படல்.
2. மாணவர் அடைவுகள் மற்றும் கற்றல் – கற்பித்தலின் தரம் பற்றியதான ஆதாரங்களை



அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமைகளைத் தீர்மானித்தல்.
3. மாணவர் அடைவின் தரங்களை முன்னேற்றக் கூடிய செயல்களை முன்னெடுத்தல்.
4. கற்றல் –கற்பித்தலின் தரத்தை மேம்படுத்தக்கூடிய செயல்களை முன்னெடுத்தல்.
5. பிள்ளைகளின் அடைவுகளும் முன்னேற்றங்களும் ஒரு கால அட்டவணைப்படி தொடராகக் கண்காணிக் கப்படல் வேண்டும்.
6. பாடசாலையின் தூரநோக்கு மற்றும் நோக்கங்கள் என்பவற்றை மேம்படுத்தக்கூடிய முன்னுரிமைப் படுத்தல்கள் இடம் பெறல்.
7. கூட்டான திட்டமிடல் செயன்முறை முன்னெடுக்கப்படல்.
8. ஓவ்வொருவரும் திட்டத்தினுடைய நோக்கங்களையும் அதுசார்பாக தாங்கள் கொண்டுள்ள வகிபாகங்களையும் விளங்கிக் கொள்ளல்.
9. அபிவிருத்திச் செயன்முறைகளுக்கு ஒன்றிணைந்த அமுல்படுத்தலையும், திட்டத்தின் முன்னேற்றத் தையும் கண்காணித்தல் வேண்டும்.
10. திட்டச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அனைவராலும் திட்டத்தின் தரமும், தராதரங்களும் அதனுடைய தாக்கமும் மதிப்பபீடு செய்யப்படல் வேண்டும்

எனவே பாடசாலை அபிவிருத்தி திட்டமிடலானது ஒரு கொண்டு செல்லப்படும் செயன்முறையாகும். இது பாடசாலை ஒரு சிக்கலான சமூகமாக கொண்டமைந்து தரத்தினை முன்னேற்றுவதும்

மாற்றத்தை முகாமை செய்வதும் ஆகிய இரட்டை மாற்றங்களை அடைந்து கொள்வதற்கு உதவும்.

அதேவேளை பாடசாலை திட்டமானது அங்கு நடைபெறும் செயன்முறையின் ஒரு உற்பத்தியாகும். இது பாடசாலையினுடைய செயற்பாடுகளை வழிப்படுத்துவதற்கும் பாடசாலை சுய மதிப்பின் கீழ் மேற்பார்வையும் கண்காணிப்பும் போன்றவற்றிற்கு வசதி ஏற்படுத்துவதற்கான ஒரு உசாத்துணை ஆவணமாக பங்காற்றுகின்றது.

உசாத்துணை நூல்கள்:

1. பாடசாலை மட்டத்திட்டமிடலுக்கான வழிகாட்டி (2015), கல்வியமைச்சு, இசுறுபாய.
2. கல்வித்திட்டமிடல் மொடியூல் (2011), தொலைக் கல்வி இயக்கம் , மகரகம.
3. சந்திரசேகரன் சோ., ஜெயராசா. சபா., (20110), கல்வித்திட்டமிடல், சேமமடு பதிப்பகம், கொழும்பு.
4. சின்னத்தம்பி மா., (2007), கல்வியின் பொருளியல், குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை
5. John W.Creswell, (2006), Educational Research (planning, conducting and Evaluation).
6. Alexander Frutschi M.C., Human Resources and economic growth, (1963),P.398
7. The World Bank, (1985), School Quality and Educational Outcomes in Rural Brazil, the World Bank Research programme, NewYork, P.16

ஓர் இளம் தாய் தெரு வழியாகச் சென்று கொண்டிருக்கிறாள். அவளைப் பார்த்து ஒரு நாய் குரைக்கிறது. அவள் பயந்து அருகிலுள்ள வீட்டில் தஞ்சம் புகுகிறாள். மறுநாள் அதே தாய் தன் குழந்தையுடன் சென்று கொண்டிருக்கிறாள். திடீரென ஒரு சிங்கம் அவள் குழந்தையின் மீது பாய்கிறது. அவள் அப்போது என்ன செய்வாள்? சிங்கத்தின் வாயில் தன்னை அர்ப்பணித்தாவது அவள் குழந்தையைக் காப்பாற்றுவாள் அல்லவா?

இவ்வுதாரணத்தைக் கூறி சுவாமி விவேகானந்தர் உண்மையான அன்பின் இலக்கணத்தை விளக்குகிறார்: அன்பு பயம் அறியாதது. பயத்திற்குக் காரணம் சுயநலநோக்கம் தான். சுயநலத்திற்கும், சிறுமைத்தனத்திற்கும் அடிமைப்படும் அளவிற்கு பயம் அதிகரிக்கிறது. தான் ஒன்றுக்கும் உதவாதவன் என்று ஒருவன் நினைப்பானேயானால் பயம் அவனைப் பற்றிக் கொள்வது நிச்சயம். தான் அற்பன் என்ற எண்ணம் குறையக் குறைய பயமும் குறையும். துளியளவு பயம் இருந்தால்கூட அங்கே அன்பு இருக்க முடியாது. அன்பும், பயமும் இணைந்து இருக்க முடியாதவை. கடவுளை நேசிப்பவன் அவரிடம் பயப்படக்கூடாது. பயத்தின் காரணமாக இறைவனை நேசிப்பவர்கள் மனிதர்களில் கடைப்பட்டவர்கள். பக்குவப்படாதவர்கள். தண்டனை கிடைக்கும் என்ற பயத்தினால் இவர்கள் இறைவனை வழிபடுகிறார்கள். இப்படி தண்டனைக்கு பயந்து இறைவனை வழிபடுவது, வழிபாடு என்பதையே தரம் தாழ்த்துவதாகும். அத்தகைய வழிபாடு சற்றும் பக்குவப்படாத தாழ்ந்தநிலை வழிபாடாகும். மனத்தில் பயம் இருக்கும்வரை அங்கே அன்பு எப்படி வர முடியும்? பயங்கள் அனைத்தையும் வெற்றி கொள்வது அல்லவா அன்பின் இயல்பு!...கடவுள் மீது நாம் கொள்கின்ற பயம் மதத்தின் துவக்கமே அவர்மீது கொள்ளும் அன்பே மதத்தின் முடிவு. இங்கு பயம் அனைத்தும் ஓடிவிட்டது. அன்பின் மூலம் வழிபாடு செய்வதே உண்மையான ஆன்மிக வழிபாடு. கடவுள் இரக்கமுள்ளவரா என்ற கேள்வியே இங்கு எழுவதில்லை. அவர் கடவுள், அவர் எனது அன்பர். அவர் எல்லாம் வல்லவரான சர்வ சக்தி வாய்ந்தவரா, ஓர் எல்லைக்கு உட்பட்டவரா, உட்படாதவரா என்ற கேள்விகளுக்கும் இங்கே இடமில்லை. அவர் நல்லது செய்தால் நல்லது. தீமை செய்தாலும் அதனால் என்ன? எல்லையற்ற அந்த அன்பைத் தவிர மற்ற எல்லா குணங்களும் மறைகின்றன...கடவுளே அன்பு, அன்பே கடவுள்...தெய்வீக அன்பாக மாறிவிடுவதுதான் உண்மையான வழிபாடு.அன்பின் உருவமாக எண்ணி அவரை வழிபடுங்கள். எல்லையற்ற அன்பு என்பதே அவரது பெயர். இது ஒன்றே அவரைப் பற்றிய விளக்கம்...தகப்பன் அல்லது தாய்க்குக் குழந்தையின்மீது உள்ள பாசம், கணவனுக்கு மனைவிமீதும், மனைவிக்குக் கணவன்மீதும் உள்ள காதல், நண்பர்களுக்கிடையே உள்ள நட்பு இவையனைத்தும் ஒன்றாகத் திரண்ட பேரன்பைக் கடவுள்மீது செலுத்தவேண்டும்...கடவுள்மீது நாம் அன்பு செலுத்த வேண்டிய முறை இதுவே: எனக்கு செல்வம் வேண்டாம், உடைமை வேண்டாம், கல்வி வேண்டாம், முக்தியும் வேண்டாம்...ஆனால் ஒன்றுமட்டும் அருள்வாய் நான் உன்னை நேசிக்கவேண்டும். அதுவும் அன்பிற்காக அன்பு செலுத்த அருள்வாய்...இறைமகிமை ஓங்கட்டும்! அன்பின் வடிவான அவன் புகழ் ஓங்கட்டும்!

மீண்டும் வசந்தம்

நேரம் மணி பி.ப 4.30 தனது அலுவலகக் கடமைகளை முடித்துக்கொண்டு அலுவலகத்திற்கு வெளியே வந்த சுகுமாரன், சக ஊழியன் ஒருவனது மோட்டார் சைக்கிளில் தொற்றிக்கொண்டு, தனது ஊர் வழியாகச் செல்லும் பஸ்சைப் பிடிக்க விரைந்தான். பஸ் நிலையத்தை அடைந்த அவன், இயக்க நிலையில் நின்றுகொண்டிருந்த பஸ்சினுள் ஏறி ஓர் இருக்கையில் அமர்ந்து கொண்டான். இருக்கையில் அமர்ந்து கொண்டே கையை மேலே உயர்த்தி, சோம்பல் முறித்தபடி தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான். பின், மெதுவாகப் பின்பக்கமாகத் தலையைத் திருப்பிப் பார்த்தான். அப்படிப் பார்த்தவன் திடுக்கிட்டபடி அவசர அவசரமாகத் தலையைத் திருப்பிக் கொண்டான். காரணம், பின்னால் நான்கு இருக்கைகள் தள்ளிப் பெரிய சிந்தனையில் ஈடுபட்டவளாக, பஸ்சிற்கு வெளியே வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள் இந்துஜா.

சுகுமாரனின் மனம் மிகுந்த ஆச்சரியத்தை அள்ளிக்கொண்டது. பின், அதை விடுத்துப் பலவாறாகச் சிந்திக்கத் தொடங்கியது. பாவம் இந்துஜா, நான்கு வருடங்களுக்கு முன்பு கண்டதைவிடச் சற்று மெலிந்திருந்தாள். அவளது முகத்தில் பழைய களை இல்லை. ஏதோ ஒரு வகையான ஏக்கம் அவளது முகத்திலே குடிகொண்டு இருந்ததுபோல் அவனுக்குத் தோன்றியது.
அதற்குக் காரணமாகத் தான் இருப்பதுதான்
என் பதையும் அவன்

வி. தங்கத்துரை (நாவலூர் நம்பி)
முன்னாள் அதிபர் நாவற்காடு

எண்ணினான். அதனால், அவன் பெரும் அசௌகரியத்திற்கும் சங்கடத்திற்கும் உள்ளானான். சுகுமாரன் பஸ்சினுள் ஏறியதை இந்துஜா கவனித்து விட்டாள். ஆயினும், கவனித்தும் கவனியாதது போலிருந்து, அவனது நடத்தைக் கோலங்களை அவதானித்துக் கொண்டிருந்தாள். இருந்தபோதிலும், சுகுமாரன் இதை அறிந்திருக்கவில்லை. அவள் தன்னைக் கண்டு கொள்ளவில்லை என்றே அவன் நம்பினான். பஸ்சும் தனது ஓட்டத்தைத் தொடங்கியது.

சுகுமாரனின் எண்ண அலைகள் பல வருடங்கள் முன்னோக்கி நகர ஆரம்பித்தன. தானும் இந்துஜாவும் ஒரே பாடசாலையில், உயர்தர வகுப்புக் கலைப்பிரிவில் ஒரே வகுப்பில் கல்வி கற்றமை, ஒத்த வயதும், அழகிய தோற்றங்களையும் கொண்ட இருவரும் படிக்கும்போதே பரஸ்பரம் காதல் வயப்பட்டு இருந்தமை. தொடர்ந்து இருவரும் ஒரே பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி, அங்கும் அந்தக் காதல் தொடர்ந்தமை, கம்பசில் வண்ணத்துப் பூச்சிகளாக இருவரும் சிறகடித்துப் பறந்தமை, இறுதிப் பரீட்சை முடிவடைந்து, இருவரும் பிரிவுத் துயரத்தை எண்ணி மிகுந் மனக்கஷ்டத்துடன் வெளியேறியமை, இருவருக்கும் ஏதாவது வேலை வாய்ப்புக்கள் கிடைத்ததும், அல்லது முதலில் சுகுமாரனுக்கு வேலை கிடைத்ததும் திருமணம் செய்ய நினைத்தமை முதலான பல சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக, ஒரு கோர்வை யாகச் சுகுமாரனின் மனக்கண்முன் வந்து அவனை அலைக்கழித்தன. இவ்வளவுக்கும் இந்துஜா மிக வசதியான குடும்பத்தைச் சேர்ந்த பெண். ஆயினும், சுகுமாரன் சாதாரண பொருளாதார வசதியைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவன். இந்த எண்ண அலைகளின் இறுதியில், தான் பஸ்சினுள் ஏறியதை இந்துஜா பார்த்திருக்க நியாயமில்லை என்ற எண்ணமும் அவன் மனதில் தோன்றியது. இருந்தாலும், ஏதோ ஒரு சந்தேகப்பொறி மனதை நெருட, தனது ஊருக்குச் செல்லும் எண்ணத்தைக் கைவிட்டு, இடைநடுவில் பஸ்சை நிறுத்தி இறங்கி நடக்கத் தொடங்கினான்.

அவ்வாறு அவன் நடந்து கொண்டிருக்கும் போது, மீண்டும் பழையபடி எண்ண அலைகள் அவனது மனதை ஆட்கொள்ள ஆரம்பித்தன. சுகுமாரன் கெம்பஸ் இறுதிப் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்றமை காரணமாகவும், அரச நிர்வாக சேவை போட்டிப் பரீட்சை ஒன்றில் திறம்படத் தேர்ச்சியடைந்தமை காரணமாகவும், அரச அலுவலகம் ஒன்றில் உதவித்திட்டமிடல் அதிகாரியாக இந்துஜாவுக்கு முன்பே உத்தியோகத்தைப் பெற்றுக் கொண்டான். தனக்கு முன்பாகவே சுகுமாரன் உத்தியோகம் பெற்றுக்கொண்டது இந்துஜாவுக்குப் பெரும் மகிழ்ச்சியையே கொடுத்தது. இதன் காரணமாக ஏற்கனவே, தாங்கள் பேசிக்கொண்டபடி தங்களது திருமணம் விரைவில் நடைபெறும் என்றே அவள் நம்பினாள். திருமண நாளை எதிர்பார்த்து அவள் மிகுந்த சந்தோசத்துடன் காலத்தைக் கடத்தினாள். சுகுமாரனுக்கு வேலை கிடைத்து ஆறு மாதங்களுக்குப் பிறகு, இந்துஜாவும் அரச பாடசாலை ஒன்றில் ஆசிரியையாக நியமனம் பெற்றாள்.

இந்துஜா மேலும் காத்திருக்க விரும்பவில்லை. இந்துஜாவும் அவளது பெற்றோரும் திருமணத்திற்காகச் சுகுமாரனை நெருக்க ஆரம்பித்தனர். ஆயினும், உடனடியாகத் திருமணம் செய்துகொள்ளச் சுகுமாரன் விரும்பவில்லை. தந்தை இல்லாத தனது குடும்பத்தின் பொருளாதார நிலைமை காரணமாகவும், தனது ஒரே தங்கையின் திருமணத்திற்குப் பிறகே தனது திருமணம் நடைபெற வேண்டும் என்றும் கூறி, சுகுமாரன் திருமணப் பேச்சைத் தட்டிக்கழித்தான். இது இந்துஜாவுக்குப் பெரும் ஏமாற்றத்தையே கொடுத்தது. அவளது மனம் மிகுந்த வேதனைக் குள்ளானது. தனக்காகத் தனது குடும்பத்தினர் சேர்த்து வைத்திருக்கும் பெரும் அளவிலான சொத்துக்களை, சுகுமாரன் தனது குடும்பத்தின் தேவைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றுகூட இந்துஜா, சுகுமாரனிடம் எடுத்துக் கூறியபோதிலும் அவன் அதற்குச் சம்மதிக்கவில்லை. மனைவி கொண்டு வரும் சீதனம், சொத்து முதலானவை மனைவிக்கே உரியன. அவற்றை எடுத்துத் தனது குடும்பத் தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்குத் தன்னால் முடியாது என்று கூறிச் சுகுமாரன் மறுத்துவிட்டான். இந்த இழுபறியின் முடிவில், தன்னைவிட நல்ல அழகான, வசதியான மாப்பிள்ளை ஒருவரைத் திருமணம் செய்துகொண்டு, இந்துஜா நன்றாக வாழ வேண்டும் என்று நண்பன் ஒருவனிடம்

கூறி அனுப்பியதோடு நில்லாமல், மலைநாட்டுப் பகுதிக்கு உத்தியோக இடமாற்றம் வாங்கிக் கொண்டும் சென்றுவிட்டான்.

அதன்பிற்பாடு தனது குடும்பத்தார் பேசிக் கொண்டு வந்த மாப்பிள்ளைமாரை எல்லாம் தடுத்து, மறுத்து ஒதுக்கி விட்டு, சுகுமாரனுக்காகவே இந்துஜா காத்திருந்தாள். மலைநாட்டில் உத்தியோகம் பார்த்தாலும், இந்துஜா பற்றிய விடயங்களை எல்லாம், தனது நண்பன் மூலம் சுகுமாரன் அறிந்தே இருந்தான். ஆயினும், அவனால் செய்யக்கூடியதாக எதுவுமே இருக்கவில்லை. அசோகவனத்துச் சீதையின் நிலை போன்று இந்துஜாவின் காத்திருப்புத் தொடர்ந்தது.

பஸ் தன்னை இறக்கிவிட்டு, வெகு தொலைவுக்கு நகர்ந்த பின்புதான் அவனது மனம் நிம்மதியடைந்தது. அந்த நிம்மதி யும அதிக நேரம் நீடிக்கவில்லை. தனக்குப் பின்னால் யாரோ தொடர்ந்து வருவது போன்ற சந்தேகம் ஏற்படவே, தனது நடையை நிறுத்தி மெதுவாகத் திரும்பிப் பார்த்தான். அது வேறு யாருமில்லை! இந்து ஜாவேதான்! சுகுமாரனின் நிலை விளாங்காயைத்தின்று விக்கினவன் கதை மாதிரி ஆயிற்று. அவனைக் கேலியாகப் பார்த்த இந்துஜா,

'என்ன மிஸ்டர் சுகுமாரன்!, பஸ்சினுள் இருந்த என்னைக் கண்டு பயந்து, உங்களது ஊருக்கும் செல்லா மல் இடைநடுவில் இறங்கி நடக்கிறீர்கள்? ஏன் இந்தப் பயம்?' என்று இந்துஜாவே முதலில் பேச்சை ஆரம்பித்தாள். இந்துஜாவைப் பார்த்த அதிர்ச்சியில் திகைத்துப்போய், அவளது முகத்தையே பார்த்துக்கொண்டிருந்த சுகுமாரன் அதிர்ச்சியிலிருந்து சற்று விடுபட்டு,

'இல்லை இந்து..... நான் சும்மாதான்..... ஒரு பிரண்டைப் பார்க்கத்தான் இறங்கினேன்' என்றான். ஏதோ பேச வேண்டுமென்பதற்காக. அவனது பேச்சுக் கிணற்றுக்குள் இருந்து பேசுவது போன்று குளற லாக வெளிவந்தது. மேலும், அவனது முகத்தில் அசடு வழிவதைக் கவனித்து, அதை ரசித்துக் கொண்டே இந்துஜா பேச்சைத் தொடர்ந்தாள்.

'ஓ! இந்து என்ற எனது சுருக்கப் பெயர் கூடத் தங்களுக்கு ஞாபகம் இருக்கிறதோ?' என்றாள் சற்றுக்காட்டாக, அடக்க முடியாத கோபத்தில் அவளது முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

'இல்லை இந்து.... நான் வந்து..' என்று பேசமுடியாமல் பேச்சை இழுத்தான் சுகுமாரன். அவனைப் பேசவிடாமல் தடுத்த இந்துஜா, 'அதுசரி..... நான்கு வருடங்களுக்கு முன்பு மலைநாட்டில் ஓடி ஒளித்த நீங்கள், திரும்பவும் எப்போது இங்கு வந்தீர்கள்?' என்று சற்று அதட்டலாகவே கேட்டாள். அவளுக்குக் கோபம் இன்னும் குறையவில்லை. அவனை எரித்து விடுவது போல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'போன மாதம் தான்....' என்றான் சுகுமாரன் சற்றுப் பயந்தபடி.... 'போன மாதம்.... ஒரு மாதத்திற்கு முன்பு. இவ்வளவு நாளும் ஓடி ஒளிந்தது போதா தென்று இப்பவும் ஓடி ஒளியவா பார்க்கிறீர்கள்?' என்றாள் இந்துஜா சற்று ஏளனமாக....

'ஏன் இந்து! நான் ஏன் ஓடி ஒளிய வேண்டும்? என்னுடைய முடிவைத்தான் நான் ஏற்கனவே கூறி விட்டேனே!' என்றான் சுகுமாரன் சற்றுத்

> **"இந்து நீ கேட்டபடியால்தான் அதை நான் ஞாபகப்படுத்தினேன். என்னை மன்னித்துவிடு இந்து....என்னை மன்னித்துவிடு இந்து...." என்று இரந்து கூறியபடி சுகுமாரன் அவளைப் பரிதாபமாகப் பார்த்தான். அவனது நிலை பெரும் சங்கடத்திற்குள்ளாகி இருந்தது.**

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு. 'தங்களது முடிவா? எந்த முடிவைக் கூறி விட்டீர்கள்? அது எனக்கு மறந்து விட்டது' என்றாள் இந்துஜா சற்றுக்குத் தலாக. பேச்சின் இடையே அவர்களுக்கிடையிலான இடைவெளி குறைந்து கொண்டே வந்தது. சுகுமாரனுக்குச் சற்றுத் தைரியம் வந்துவிட்டது அவன் இந்துஜாவைப் பார்த்து,

'இந்தக் குத்தல் பேச்சுக்கெல்லாம் தேவையே இல்லை இந்து. என்னைவிட நல்ல அழகான, வசதியான ஒரு மாப்பிள்ளையைத் திருமணம் செய்து கொண்டு நீ நன்றாக வாழவேண்டும் என்பது தான் எனது ஆசை.....' இந்தப் பேச்சைக்கேட்டு மிகவும் வெகுண்டாள் இந்துஜா, இவ்வளவு காலமும் அவன் தன்னை ஏமாற்றிக் கொண்டிருக்கிறான் என்ற எண்ணத்தால் ஏற்பட்ட விரக்தி ஒருபுறம், அத்துடன் இன்று பஸ்சில் தன்னைக் கண்டும் காணாதது போல் நடந்து கொண்டவிதம் மறுபுறம், ஓர் அன்னியப் பெண்ணிடம் பேசுவது போன்ற அவனது தொனி, காதலிப்பது ஒருவனை, அந்தக் காதலனே எதுவிதப் பொருத்தமான காரணமும் இல்லாமல், 'தன்னை விடுத்து வேறொருவரைத் திருமணம் செய்து கொள்' என்று கூறிய வார்த்தைகள் எல்லாம் சேர்ந்து அவளைப் பைத்தியக்காரியாக ஆக்கிவிட்டன. அவன் பேசி முடிக்கவில்லை, அவளது வலது கரம் அவனது இடது கன்னத்தில் இடியென இறங்கியது. எதிர்பாராத அவளது இந்தத் தாக்குதலால் பொறிகலங்கிப்போன சுகுமாரன் செய்வதறியாது விக்கித்து நின்றான். அவனது நிலை சொல்ல முடியாத குழப்பத்தில் இருந்தது. கன்னத்தில் விழுந்த அடியின் தாக்கம், சுகுமாரனை வெகுவாகப் பாதித்திருந்தது.

'யூ..... பொறுக்கி ராஸ்கல், நான் இன்னொரு வரைத் திருமணம் செய்து கொள்வதா? திருமணம் உனக்குத் தேவையில்லை என்று சொல்ல உனக்கு உரிமையிருக்கிறது. ஆனால் என்னை வேறொருவ ரோடு சேர்ந்து வாழச்சொல்ல உனக்கு என்ன உரிமை இருக்கிறது? காதலிப்பது ஒருவரை, கல்யாணம் பண்ணிக் கொள்வது இன்னொரு வரையாடா? இந்த நியாயத்தை எங்கிருந்தடா பெற்றுக்கொண்டாய்?' என்றுகூறிப் பெரிதாகச் சத்தமிட்டு அழுதாள் இந்துஜா. இந்துஜா ஓங்கி அடித்த அடியின் வலி ஒருபுறம் இருக்க, தான் கூறிய வார்த்தைகளின் விபரீதத் தன்மையின் பெறுமதி பற்றியும், அதன் தாக்கம் எப்படி இருந்திருக்கிறது என்பது பற்றியும் இப்போதுதான் சுகுமாரன் உணர்ந்தான். அதனால், அவளைச் சாந்தப்படுத்த எண்ணி,

'இந்து நீ கேட்ட படியால்தான் அதை நான் ஞாபகப்படுத்தினேன். என்னை மன்னித்துவிடு இந்து....என்னை மன்னித்துவிடு இந்து....' என்று இரந்து கூறியபடி சுகுமாரன் அவளைப் பரிதாபமாகப் பார்த்தான். அவனது நிலை பெரும் சங்கடத்திற்குள் ளாகி இருந்தது.

'ஸ்கவுண்றல்..... உனக்கு பைத்தியம் பிடித்து விட்டதாடா? நான் கேட்டால் நீ எதையும் கூறிவிடுவாயோ? விபரம் அறியாப் பருவத்திலிருந்தே உன்னைக் காதலித்தேன். நீயும் என் பின்னால் ஓடியோடி வந்து என்னைக் காதலித்தாய். இப்போது வேறொருவரைத் திருமணம் செய்யச் சொல்கிறாய். உனக்கு இதயமே இல்லையாடா சுகு? அப்படியானால் காதலுக்கு என்னடா அர்த்தம்?... என்னடா மரியாதை?' என்று கூறி அழுத அவள் அடக்க முடியாத கோபத் துடன் அவனை மீண்டும் முறைத்துப் பார்த்தாள். ஆவேசங்கொண்ட பத்திரகாளியின் தோற்றம் அவன் கண்முன் நிழலாடியது. நிலைமையின் பயங்கரத்தை, விபரீதத்தை அறிந்த சுகுமாரன், தனது இரு கரங்களாலும் தனது இரு கன்னங்களையும் பொத்திக் கொண்டான். மீண்டும் அவளைப் பரிதாபமாகப் பார்த்து நடுங்கினான். திரும்பவும் அடித்துவிடுவாளோ என்ற பயம்!

இடியோசை அதாவது சுகுமாரனின் கன்னத்தில் விழுந்த அடியோசை சற்றுப் பலமாக இருந்ததால், சிறிது தூரத்திலிருந்த பஸ் தரிப்பு நிலையத்தில் நின்று கொண்டிருந்த பலரும் இந்த வேடிக்கையைக் கணடு களித்ததோடு நிற்காமல், ஆண்கள் பலர் அவர்களை நெருங்கியும் வந்தார்கள்.

'இவன் இந்தப் பெண் மீது சேட்டை விட்டிருக்க வேண்டும். அதனால்தான் இவள் இவனை அறைந்திருக்கிறாள்' என்று முணுமுணுத் தவாறு, ஆண்களில் பலரும் 'ஈவ்ரீசிங்' என்ற சட்டக்கோலை ஆயுதமாகக்கொண்டு, தருமஅடி கொடுப்பதற்காக சுகுமாரனை நெருங்கினார்கள். சுகுமாரனின் நிலை பெரும் இக்கட்டுக்கு உள்ளாகியது. அவன் இந்துஜாவைப் பார்த்துப் பரிதாபமாக

விழித்தான். ஆண்கள் சுகுமாரனை நெருங்குவதைக் கண்டு இந்துஜாவுக்கு நிலைமையின் கொடூரம், விபரீதம் இப்போதுதான் புரிந்தது. ஆத்திரத்தில் அறிவிழந்து போனதால் ஏற்பட்டுவிட்ட நிலைமைக்காக இந்துஜா பெரிதும் கலவரப்பட்டு, இந்த இக்கட்டில் இருந்து தானே சுகுமாரனைக் காப்பாற்ற வேண்டுமென முடிவு செய்தாள். அதிபுத்தி சாலியான இந்துஜா நிலைமையைச் சரிசெய்ய வேண்டி, சுகுமாரனை நெருங்கி வந்தவர்களைப் பார்த்து,

'நில்லுங்கள்! மனைவி புருஷனை அடிப்பதில் லையா? புருஷன் மனைவியை அடிப்பதும், மனைவி புருஷனை அடிப்பதும் எங்கு நடக்க வில்லை? உங்களது வீடுகளில் இது நடக்கவில்லை என்று உங்களில் யாராவது கூறுங்கள் பார்க்கலாம். என் புருஷனை, மனைவியாகிய நான் ஆத்திரம் தாங்காமல் அடித்திருக்கிறேன். எங்களது குடும்பச் சண்டையில் தடையிட வேறு எவருக்கும் உரிமையில்லை. போங்கள் இவ்விடத்தை விட்டு, உடனடியாகப் போங்கள்' என்று இரைந்து சத்தமிட்டாள். சுகுமாரனை நெருங்கிய கூட்டம் ஒரு கணம் திகைத்து நின்றது. பின், எதையோ முணுமுணுத்தபடி அவ்விடத்தைவிட்டு அகன்றது. பெரிய களேபரம் நடக்க விருந்த சந்தர்ப்பம், இந்துஜா வின் சமயோசித புத்தியால் நடக்காமல் போனதுபற்றி சுகுமாரன் தனது மனதில் அவளைப் பெரிதும் மெச்சினான். அத்துடன் அவளை நன்றியுடன் பார்த்து,

'தாங்யூ இந்து.... சமயோசிதமாக நடந்து பெரிய கண்டத்திலிருந்து என்னைக் காப்பாற்றி விட்டாய், தாங் யூ இந்து..... தாங் யூ' என்று வாய் விட்டே கூறினான். சுயநினைவுக்கு வந்த இந்துஜா பெரிதும் மனம் வருந்தினாள். நடந்துவிட்ட தவறை எண்ணிக் கலவரம் அடைந்தாள். தனது அடியால் வீங்கிப்போன அவனது கன்னத்தைப் பார்த்தபடி, என்னை மன்னித்து விடுங்கள் சுகு..... மன்னித்து விடுங்கள். ஆத்திரத்தில் நான் என்னையே மறந்து விட்டேன். உங்களுக்காகவே உருகி, மருகி வாழ்ந்த நான், இன்று உங்களையே கைநீட்டி அடித்து விட்டேன். நான் பாவி.... நான் பெரிய பாவி.... ஆண்டவா! எனக்கு மன்னிப்பும் உண்டா?' என்றுகூறித் தேம்பித்தேம்பி அழுதாள். அவள் அழுவதைப் பார்க்க சுகுமாரனுக்குப் பெரும் பாவமாக இருந்தது. அவளை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று தெரியாமல் விழித்த சுகுமாரன், அவள் தன்னை மீண்டும் 'சுகு' என்ற செல்லப் பெயரால் அழைத்ததைப் பெரிதும் விரும்பினான், ரசித்தான். மேலும், அவள் தன்னை மனைவி என்று கூறியதுடன், புருஷன் என்று தன்னை அறிமுகப் படுத்தியதையும் எண்ணி உருகினான். அவனது உள்ளத்தில் இப்போது புதிய தெளிவு பிறந்தது. முகத்தில் கருணை தோன்றியது. அவன் அவளுக்காகப் பெரிதும் வருந்தினான். இந்நிலையில் இந்துஜா அவனை நோக்கி, 'நான் போகிறேன் சுகு. இனி எந்தச் சந்தர்ப்பத்திலும் உங்களது வாழ்க்கையில் நான் தலையிடமாட்டேன். அதற்காக நான் வேறொருவரைத் திருமணம் செய்யவும் மாட்டேன். எனது மனதிலே இருக்கும் உங்களைப் பற்றிய பசுமையான காதல்

"எங்களது குடும்பச் சண்டையில் தடையிட வேறு எவருக்கும் உரிமையில்லை. போங்கள் இவ்விடத்தை விட்டு, உடனடி யாகப் போங்கள்" என்று இரைந்து சத்தமிட்டாள்.



நினைவுகளை என் உடலில் உயிர் உள்ளவரை போற்றிப் பாதுகாப்பேன். இது சத்தியம்.... Good Bye RF.... Good Bye" என்றுகூறி இரு கரங்களாலும் முகத்தை மூடியவாறு கோவென்று கதறிய இந்துஜா, அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் தங்களை வேடிக்கை பார்ப்பதைக் கண்டு, அழுகையை நிறுத்தி, அவ்விடத்தை விட்டு நகரத் தொடங்கினாள்.

அவள் நடந்து போவதைப் பழைய காதலுடன் பார்த்து ரசித்த சுகுமாரன். 'இருந்தாலும், என் செல்லநாய்க் குட்டிக்கு இவ்வளவு கோபம் கூடாது' என்று உரக்கக் கூறினான். அந்த பேச்சு இந்துஜாவின் காதுகளில் மிகத் தெளிவாகக் கேட்டது. நடையைச் சற்று நிறுத்திய இந்துஜா அவன் பக்கம் திரும்பி, ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள்.

கெம்பசில் தன்னை 'எனது செல்ல நாயக்குட்டியே' என்று சுகுமாரன் விளிப்பது அவளது ஞாபகத்திற்கு வந்தது. தன்னைப் பார்த்து ஆச்சரியப்பட்டு நின்ற இந்துஜாவை நோக்கி, தனது இரண்டு கைகளையும் நீட்டி, அவனைக் கண் ஜாடையால் தன்னருகே அழைத்தான் சுகுமாரன்.

அவனை நோக்கி, தானும் தனது இரு கரங்களையும் விரித்து நீட்டியபடி ஓடி வந்தாள் இந்துஜா, இருவர் கைகளும் இறுக்கமாக இணைந்து கொண்டன. அத்துடன் இருவரது கண்களும் கண்ணீரைப் பெருக்கின. பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுவதில்லை என்ற நிலை அங்கு ஏற்பட்டது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி எதையும் பேசமுடியாமல் வாயடைத்து நின்றனர். பின் அந்தக் காதல் ஜோடி கைகோர்த்தபடி அவ்விடத்தை விட்டு நகர்ந்தது. வசந்தகாலத்தின் வருகையைக் குறிக்கும், இளந்தளிர்களில் பட்டுவரும் குளிர்ந்த, மாலைநேரத் தென்றல் காற்று இருவரது உடல்களையும் சிலிர்க்கச் செய்தது.

(யாவும் கற்பனை)



யுகத்தின் சுவடுகள்








விபுலாநந்த சுவாமிகள்
இயற்றிய
யாழ் நூல்
என்னும்
இசைத் தமிழ் நூல்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சை
சருவசித்து ஆண்டு - கலி ௫௰௪௯
15/-
1947


PRABUDDHA BHARATA
A MONTHLY JOURNAL
(STARTED IN 1896)
EDITORIAL OFFICE:
P.O. MAYAVATI
Via LOHAGHAT
Dt. ALMORA, (INDIA)
TEL. OFFICE: LOHAGHAT

No 4
1st January 1940.
To Kailasam
அன்புள்ள கைலாசம் அறிவது,


To await Arrival Garbyang P.O.
Srimath Swami Almora Dt.
Vipulanandaji Himalayas
N. India. 26/6/37


விபுலாநந்த சுவாமிகள்
இயற்றிய
யாழ் நூல்
என்னும்
இசைத் தமிழ் நூல்
1750

YĀḶ - NŪL

A treatise on Ancient Tamil Music

BY
SWAMI VIPULANANDA,
B SC (LONDON)
Professor and Head of the Dept of Tamil,
University of Ceylon, Colombo.

PUBLISHED BY
THE KARANTHAI TAMIL SANGAM,
TANJORE S INDIA
1947

கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சை
சர்வசித்து ஆண்டு - கலி ௫௰௪௯

விலை ரூ. 20

FIRST DAY COVER
AIR-MAIL.
SECOND CLASS.
FIRST DAY
1979.11.
COLOMBO
MRS. KAY DOWSON,
"LYNDALE",
4, RHEAST MOOAR CLOSE,
RAMSEY,
ISLE OF MAN.
ස්වාමී විපුලානන්ද
சுவாமி விபுலாநந்தர்
SWAMI VIPULANANDA

சுவாமி விபுலாநந்த அடிகளார்
பிறந்த இல்லம்

Proud to be a
Shivanandian

Project : Modern Learning Centre for A/L Students
Contribution of
Rs. 147,900.00
for Your Great Contribution
President & Members
Pupils' Association, Batticaloa - Sri

SHIVANANDIAN
AWARDS - 2016

ுக்கப்படக்கூடியது!
துக்காக நடப்போம்!
சேர்ந்து நடப்போம்!

2017 DECEMBER

சுவாமி விவேகானந்தரது கல்விச் சிந்தனைகளை நடைமுறைப்படுத்தும் நோக்கில், சுவாமி விபுலானந்தரால் தொடங்கப்பட்ட சிவாநந்த வித்தியாலயத்திற்கு ஒரு சிறந்த கல்விப் பாரம்பரியம் உள்ளது.
- சுவாமி ஆத்மகனானந்தர்

கீழைத்தேசம் அளிக்கும் ஆன்மீகத்தையும், மேலைத் தேசம் அளிக்கும் விஞ்ஞானத்தையும் ஒருங்கே இணைத்து கல்வியளிக்கும் ஸ்தாபனமாகத் திகழ்கின்றது சிவாநந்த வித்தியாலயம்.
- சுவாமி ஜீவனானந்தர்



ISBN 978-955-1824-47-1
9 789551 824471

சிவாநந்தயுகம் - வைரவிழா மலர்